Released by Maran's Dog ,Toronto, Canada

Released by Maran's Dog ,Toronto, Canada



PANDIT V. S. [illegible] AYYANGAR,
VIDVAN SIROMANI & R. B. VISHARAD,
PROFICIENT IN ORIENTAL LEARNING.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீராமாநுஜன் 73

வருடச்சந்தா ரூ. 5

Released by Maran's Dog ,Toronto, Canada

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம் 73

வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்,
தண்மையினாலு மித்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநன்ஞான முரைத்தவிராமாநுசனையுன்னும்
திண்மையல்லாலெனக்கில்லை * மற்றோர்நிலை தேர்ந்திடிலே.

P. B. அண்ணங்கராசாரியர்,
க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

1955 ஜனவரி 15 ஜயவருஷம்

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

ஸ்ரீராமாநுஜன் 73

—விசேஷமலர்—

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர்:
ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்

ஜய௵ 15—1—1955 தைமீ

ஸ்ரீ:

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசநஸபா

கார்யதர்சியின் விஜ்ஞாபனம்.

அன்பர்களே!, நமது ஸ்ரீராமாநுஜன்பத்ரிகைக்கு சென்ற டிஸம்பர் மாதத்தோடு ஆறாண்டு பூர்த்தியாகி இப்போது ஏழாமாண்டு தொடக்கமாகிறது. சென்ற ஆறு வருடங்களில் 72 பத்ரிகைகள் வெளிவந்திருக்கின்றன. எழுபத்திரண்டாவது பத்திரிகையானது 'த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்' என்னும் பெயருள்ளவொரு சிறந்த நூலின் வடிவமாக வெளிவந்தது. அப்பத்ரிகை (நெ. 72) சந்தாதாரர்கள் யாவர்க்குமே ஒருவர்க்கும்விடாமல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனல் '72 லக்கமுள்ள பத்ரிகை எமக்குக் கிடைக்கவில்லை' யென்று சிலர் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். மற்றுஞ்சிலர் 'இரண்டு மூன்றுமாதங்களாக ஸ்ரீராமாநுஜன் வருவதில்லையே, என்னகாரணம்?' என்றெழுதுகிறார்கள். அவர்களுக்கு விளக்கமாக இங்குத் தெரிவிக்கிறோம்.

சென்ற வருஷத்தில் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனத்தை ஸ்ரீராமாநுஜன் மூலமாக வெளியிடத் தொடங்கினோம். அதை ஒவ்வொரு காண்டமாக முடித்து வெளியிட வேணுமென்கிற ஆஸ்தையினல் இரண்டு பத்ரிகைகளும் மூன்று பத்ரிகைகளுமாகச் சேர்த்துச் சேர்த்து வெளியிட்டுக் கொண்டுவந்தோம். ஒரே பத்ரிகையில் ஒரு காண்டம் முடியாதாகையாலே அப்படி செய்துவந்தோம் அதனல் மேல்மாதங்களின் பத்ரிகைகளையும் முன்மாதங்களிலேயே முன்னடி வெளியிட நேரிட்டது. 71 லக்கமுள்ள பத்ரிகைவரையில் ஸுந்தரகாண்டம் வரைக்கும் (வசனம்) முடித்து முன்னமே வெளியிட்டுவிட்டோம்; அந்த ஸுந்தரகாண்டமுள்ள ஸஞ்சிகையானது க்ரமமாக நவம்பர்மாதத்தில் வெளிவரவேண்டியது. ஆனலும் அது ஸெப்டம்பர் மாதத்திலேயே வெளியிடப்பட்டுவிட்ட[illegible] டிஸம்பர் [illegible] ஸஞ்சிகையானது [illegible]

acharya.org

டோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வ க்ரந்தரூபமாய் அக்டோபர் மாதத்திலேயே வெளியிடப்பட்டுவிட்டது. ஆக, டிஸம்பர்மாதம் வரையில் வெளியாக வேண்டிய ஸஞ்சிகைகள் இரண்டு மாதங்களுக்கு முந்தியே வெளியிடப்பட்டுவிட்டன. இதை விவரமாக முன்பத்ரிகைகளிலேயே நாம் அறிவித்திருந்தும் சிலர் (அல்லது பலர்) அதை கவனிக்காமலே 'சில மாதங்களாக ஸ்ரீராமாநுஜன் வருவதில்லையே என்ன காரணம்?' என்று கேட்டு வருகிறார்கள். அவரவர்கள் 72 லக்கமுள்ள ஸஞ்சிகை வரையில் தங்களிடம் வந்திருக்கிறதா இல்லையா என்பதை கவனித்துப் பார்த்துக்கொள்வது. எந்த நம்பர் கிடைக்கவில்லையோ அதைக் குறிப்பிட்டு எழுதினால் உடனேயனுப்புவோம். 72 நெம்பர் ஸஞ்சிகை த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வமேயாதலால் அது கிடைக்கப்பெறாதவர்கள் தெரிவித்துக்கொண்டால் அதை யனுப்புவோம்.

மேல்மாதங்களின் ஸஞ்சிகைகளை முன் மாதங்களிலேயே முன்னாடியே வெளியிட்டனுப்பிவிடுவதனால் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு இடமுண்டாகிறதென்று தெரிந்துகொண்டோம். இனி அப்படிச் செய்யாமல் பழையபடியே மாதந்தோறும் நியதமான காலத்திலேயே ஸ்ரீராமாநுஜன் வெளியிடப்பட்டுவரும்.

ஏற்கெனவே வெளியிடப்பட்டுவருகிற வான்மீகி ராமாயணவசனத்தில் சுந்தரகாண்டம் வரைக்குமே வெளியிடப்பட்டிருப்பதால் மிச்சம்காண்டம் பாக்கிநிற்கிறது. இதைத் தனிப்புத்தகமாகவே முடித்து வெளியிடுவோம். யுத்த காண்டமும் உத்தர காண்டமும் அச்சாகியே வருகிறது. பலபேர்கள் 1952 ஆம்வருஷ முதற்கொண்டே சந்தா பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷத்து பாக்கி செலுத்த வேண்டியவர்களும் அனேகர். அன்னவர்கள் நடப்பு வருஷச் சந்தாவையும் சேர்த்து அனுப்ப வேண்டியது. அவர்களுக்கே ஸ்ரீராமாயணவசனம் நிச்சேஷமாக அனுப்பப்படும். .... *

இப்படிக்கு,

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா கார்யதர்சி.

—பேருளாளன் அறிவிப்பு—

பேருளாளன் என்னும் பெயரால் ஒரு பத்ரிகை பிரசுரம்செய்ய நேற்று ஜூலை மாதத்தில் ஆரம்பித்தோம். அப்பத்திரிகை காஞ்சீபுரவாஸிகளின் உபயோகத்திற்கு மாத்திரம் வெளியிடுவதென்று உத்தேசித்து ஆரம்பம் செய்யப்பட்டது. அதையறிந்த வெளியூரார்கள் பலரும் தங்களுக்கும் அனுப்பவேணுமென்று கோரினார்கள். அதை வெளியூர்களுக்குத் தனியாக அனுப்புவதானால் தபால்செலவு அதிகமாகுமென்று, அதையும் ஸ்ரீராமாநுஜனிலேயே சேர்த்துவிட நிச்சயித்தோம். அதைப்பற்றியே பேருளாளன் ஸம்பந்தமான வெளியீடு இப்போது இதில் சேர்ந்திருக்கிறது. இப்பத்திரிகை விசேஷமலராக வெளியிடப்பட்டது. ... *

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

VIDVAN, SIROMANI & R.
PROFICIENT IN ORIE...AL

acharya.org

மன்மதஹூ

சித்திரைமீ	1௳	14— 4—55	வியா	சித்திரைமாதப் பிறப்பு.
,,	5	18— 4—55	திங்கள்	உடையவருத்ஸவத் தொடக்கம்.
,,	6	19— 4—55	செவ்	க்ருஷ்ணபக்ஷ ஏகாதசி.
,,	9	22— 4—55	வெள்	அமாவாஸ்யை.
,,	10	23— 4—55	சனி	உடையவர் வெள்ளை சாத்துப்படி.
,,	11	24— 4—55	ஞாயி	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
,,	13	26— 4—55	செவ்	மதுரகவிகள் உத்ஸவாரம்பம்.
,,	14	27— 4—55	புதன்	உடையவர் சாத்துமுறை.
,,	15	28— 4—55	வியா	முதலியாண்டான்.
,,	17	30— 4—55	சனி	ஸ்ரீராமநவமி.
,,	19	2— 4—55	திங்கள்	சுக்ல. ஏகாதசி.
,,	21	4— 5—55	புதன்	தேவப்பெருமாள் திருவவதாரோத்ஸவம்.
,,	22	5— 5—55	வியா	மதுரகவிகள். அனந்தாழ்வான்.
,,	23	6— 5—55	வெள்	சித்ரா பௌர்ணமி.
,,	24	7— 5—55	சனி	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	25	8— 5—55	ஞாயி	தேவப்பெருமாள் தோட்டவுத்ஸவம்.
,,	28	11— 5—55	புதன்	மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்.
வைகாசிமீ	1௳	15— 5—55	ஞாயி	வைகாசிமாதப் பிறப்பு.
,,	4	18— 5—55	புதன்	க்ருஷ்ணபக்ஷ ஏகாதசி.
,,	5	19— 5—55	வியா	தேவப்பெருமாள் வஸந்தோத்ஸவாரம்பம்
,,	7	21— 5—55	சனி	அமாவாஸ்யை.
,,	8	22— 5—55	ஞாயி	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
,,	10	24— 5—55	செவ்	உடையவர் திருநக்ஷத்ரம்.
,,	11	25— 5—55	புதன்	தேவப்பெருமாள் வஸந்தோத்ஸவ ஸமாப்தி. நம்மாழ்வாருத்ஸவாரம்பம்.
,,	13	27— 5—55	வெள்	தேவப். கடைவெள்ளிக்கிழமை யுத்ஸவம்.
,,	19	2— 6—55	வியா	ஷ்ரீவைசாகோத்ஸவத்வஜாரோஹணம்
,,	20	3— 6—55	வெள்	நம்மாழ்வார் சாத்துமுறை.
,,	21	4— 6—55	சனி	தேவப். பெரியதிருவடியுத்ஸவம்; நம்மாழ்வார் இயற்பா சாத்துமுறை.
,,	24	7— 6—55	செவ்	மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம். தேவப்பெருமாள் யானைவாஹனம்.
,,	25	8— 6—55	புதன்	தேவப்பெருமாள் திருத்தேர்.
	27	10— 6—55	வெள்	[illegible]

மன்மத௵ ஆனி௴	1௳	15—6—55	புதன்	ஆனிமாதப் பிறப்பு.
,,	2	16—6—55	வியா	க்ருஷ்ண ஏகாதசி.
,,	4	18—6—55	சனி	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
,,	5	19—6—55	ஞாயி	அமாவாஸ்யை.
,,	7	21—6—55	செவ்	வடக்குத் திருவீதிப்பிள்ளையுத்ஸவாரம்பம்; உடையவர் திருநக்ஷத்ரம்.
,,	9	23—6—55	வியா	தே. கோடையுத்ஸவத் தொடக்கம்.
,,	15	29—6—55	புதன்	கோடையுத்ஸவம் ஸமாப்தி.
,,	16	30—6—55	வியா	ஆனிகருடன். பெரியாழ்வார். வடக்குத் திருவீதிப்பிள்ளை.
,,	17	1—7—55	வெள்	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	20	4—7—55	திங்கள்	மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்.
,,	23	7—7—55	வியா	தேவப்பெருமாள் ஜ்யேஷ்டாபிஷேகம்.
,,	30	14—7—55	வியா	திருவாடிப்பூரவுத்ஸவாரம்பம்.
,,	32	16—7—55	சனி	க்ருஷ்ண ஏகாதசி.
ஆடி௴	1௳	17—7—55	ஞாயி	ஆடிமாதப் பிறப்பு.
,,	3	19—7—55	செவ்	அமாவாஸ்யை.
,,	7	23—7—55	சனி	திருவாடிப்பூரம்.
,,	12	28—7—55	வியா	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	15	31—7—55	ஞாயி	மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்.
,,	18	3—8—55	புதன்	தேவப். ஆடிகருடன். ஆளவந்தார்.
,,	27	12—8—55	வெள்	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்
,,	29	14—8—55	ஞாயி	ஏகாதசி; உடையவர் திருநக்ஷத்ரம்.
,,	31	16—8—55	செவ்	பிரதிவாதிபயங்கரம் அண்ணா சாத்துமுறை
ஆவணி௴	1௳	17—8—55	புதன்	ஆவணிமாதப் பிறப்பு. அமாவாஸ்யை.
,,	8	24—8—55	புதன்	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	12	28—8—55	ஞாயி	மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்.
,,	13	29—8—55	திங்கள்	ஏகாதசி.
,,	15	31—8—55	புதன்	பெரியவாச்சான்பிள்ளை யுத்ஸவாரம்பம்.
,,	17	2—9—55	வெள்	தேவப்பெருமாள்பவித்ரோத்ஸவாரம்பம்.
,,	23	8—9—55	வியா	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்; தேவப். பூர்ணாஹுதி.
,,	24	9—9—55	வெள்	ஸ்ரீஜயந்தி. பெரியவாச்சான்பிள்ளை.
,,	25	10—9—55	சனி	தேவப்பெருமாள் உறியடி.
,,	26	11—9—55	ஞாயி	உடையவர் திருநக்ஷத்ரம்.
	27	12—9—55	திங்கள்	[illegible]

மன்மத வருஷ புரட்டாசி மீ	1௳	17— 9—55	சனி	புரட்டாசிமாதப் பிறப்பு.
,,	2	18— 9—55	ஞாயி	வேதாந்த தேசிகன் உத்ஸவாரம்பம்.
,,	5	21— 9—55	புதன்	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	8	24— 9—55	சனி	மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்.
,,	11	27— 9—55	செவ்	சுக்ல. ஏகாதசி ; வேதாந்த தேசிகன்.
,,	19	5—10—55	புதன்	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
,,	22	8—10—55	சனி	உடையவர் திருநக்ஷத்ரம்.
,,	26	12—10—55	புதன்	மணவாளமாமுனிகளுத்ஸவாரம்பம்.
,,	30	16—10—55	ஞாயி	பொய்கையாழ்வார், பிள்ளை லோகாசார்யர் உத்ஸவாரம்பம். நவராத்ரி தொடக்கம்.
ஐப்பசி மீ	1௳	18—10—55	செவ்	மாதப்பிறப்பு. நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	4	21—10—55	வெள்	மணவாளமாமுனிகள் சாத்துமுறை.
,,	8	25—10—55	செவ்	பொய்கையாழ்வார், பிள்ளைலோகாசார்யர் சாத்துமுறை.
,,	9	26—10—55	புதன்	பூதத்தாழ்வார் சாத்துமுறை.
,,	10	27—10—55	வியா	பேயாழ்வார் சாத்துமுறை; சுக். ஏகாதசி.
,,	16	2—11—55	புதன்	நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
,,	18	4—11—55	வெள்	உடையவர் திருநக்ஷத்ரம்.
,,	27	13—11—55	ஞாயி	தீபாவளி.
,,	28	14—11—55	திங்கள்	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
கார்த்திகை மீ	1௳	17—11—55	வியா	கார்த்திகைமாதப் பிறப்பு.
,,	4	20—11—55	ஞாயி	நம்பிள்ளை யுத்ஸவாரம்பம்.
,,	5	21—11—55	திங்கள்	திருமங்கையாழ்வாருத்ஸவாரம்பம்.
,,	10	26—11—55	சனி	கைசிக ஏகாதசி.
,,	12	28—11—55	திங்கள்	அருளாளப்பெருமாளெம்பெருமானர்.
,,	13	29—11—55	செவ்	திருமங்கையாழ்வார், நம்பிள்ளை. சந்திர க்ரஹணம்.
,,	26	12—12—55	திங்கள்	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.
,,	28	14—12—55	புதன்	அமாவாஸ்யை. ஸூர்யக்ரஹணம்.
,,	29	15—12—55	வியா	பகற்பத்து தொடக்கம். மணவாள மாமுனிகள் திருநக்ஷத்ரம்.
மார்கழி மீ	1௳	16—12—55	வெள்	தநுர்மாஸப் பிறப்பு.
,,	9	24—12—55	சனி	பகற்பத்து சாத்துமுறை.
,,	10	25—12—55	ஞாயி	வைகுண்ட ஏகாதசி. இராப்பத்து தொடக்கம்.
,,	20	3—1—56	செவ்	இராப்பத்து சாத்துமுறை.

acharya.org

ஸ்ரீமான் உபயவே.

சக்ரவர்த்தி வேங்கடாசாரியர்ஸ்வாமி, நெல்லூர்.

— :O: —

நெல்லூரென்று ஸுப்ரஸித்தமான நகரம் ஸ்ரீரங்க நாதன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கப்பெற்ற மகாநகரம். இவ்விடத்தில் [ஸ்டோன் ஹவுஸ்பேட்டையில்] வாழும் ஸ்ரீ உ. வே. சக்ரவர்த்தி வேங்கடாசார்யஸ்வாமியை நமது தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பலரும் பெருப்பாலும் அறிவர். இந்த ஸ்வாமி சிலகாலம் லௌகிக உத்யோகத்தில் அமர்ந்திருந்தபோதே திவ்யப்ரபந்தங்களை யதிகரித்தும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை யநுபவித்தும் பரமவைலக்ஷண்யம் ஸம்பாதித்தவர். "ரூபமேவாஸ்ய ஏதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" என்று வேதமோதினபடியே இவருடைய திருமேனித்தோற்றமே இவரது பரமஸாத்விகத்தன்மையையும் பரமவைலக்ஷண்யத்தை யும் நன்கு காட்டித்தரும்.

இந்த ஸ்வாமிக்கு நேற்று புரட்டாசிமீ ஆச்லேஷா நக்ஷத்திரத்தில் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் நெல்லூரில் வெகு சிறப்பாக நடந்தேறியது. அத்திருநன்னாளுக்கு முன்னதாக ஐந்துநாள் உபய வேத பாராயணங்கள் இதிஹாஸ புராண படனங்கள் ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய ஸ்ரீவசநபூஷணாதி பாராயணங்கள் வித்வான்களின் உபந்யாஸங்கள் இவை விசேஷமாக நடந்தன. ஸ்ரீவைஷ்ணவததீயாராதனமோ பரத் வாஜருடைய ஆதித்யத்தைத் தோற்பித்திருந்தது. அந்த ஸமயத்தில் குழுமி கூடியிருந்த ஸ்ரீவைஷ்ண வோத்தமர்களின் காட்சியை அடுத்த பக்கத்தில் வெளியாகும் திருவுருவப்படத்தில் ஸேவித்து மகிழ்வது.

உருவப்படத்தில் P. B. அண்ணங்கராசார்யருடைய வலது பக்கத்தில் வீற்றிருப்பவரே சக்ரவர்த்தி வேங்கடாசாரியர்.



acharya.org

ஸ்ரீரஸ்து:

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.



ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி மஹாவித்வான்

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யஸ்வாமிகளின்

ஸ்ரீஸூக்திரத்நநிதியான

ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸாரநிதி.

சென்னை தியாகராய நகரில் வாழும்

ஸ்ரீமான் ராவ்ஸாஹிப். S. ராகவையங்கார்

—தொகுத்து வெளியிட்டது—

ஸ்ரீமான் திருவரங்கம் திருமலைதாதாசாரியாருடைய ஸம்ப்ரதாயப்ரதீபச்சுவடிக்கு ப்ரத்யக்ஷரப்ரத்யாக்க்யானத்தை இந்த ஸாரநிதியிலும் இத்தோடு சேர்ந்து வெளிவருகின்ற ஸத்ஸம்ப்ரதாயபாஸ்கரக்ரந்தத்திலும் ப்ராமாணிகர்கள் அநுபவித்து ஆனந்திப்பது.

சென்னை வள்ளுவர் அச்சகத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

10—1—1955

கிடைக்குமிடம்:

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

இதன் விலை 2-8-0

ப. 1. தாதாசாருடைய ஸம்ப்ரதாய [illegible] ச் சுவடியானது சிறிதும் ஆராய்ச்சியில்லாமலே யெழுதப்பட்டதென்பதை ஸாரமாகத் தெரிவிக்கிறோமிங்கு.

1. மணவாளமாமுனிகளின் தனியனும் வாழி திருநாமங்களும் ராமாநுஜ தயாபாத்ரத் தனியனையும் அதைச்சேர்ந்த வாழி திருநாமத்தையும் பார்த்து அப்படியே இயற்றப்பட்டதென்று வாதிக்கிறாரிவர். இந்த வாதத்திற்கு முக்கியமான ஆதாரம் ஒன்று சொல்லுகிறார். தேசிகன் நூறு ஸம்வத்ஸரம் இந்நிலத்தில் ஜீவித்திருந்தபடியாலே அவரை நோக்கி 'இன்னுமொரு நூற்றாண்டிரும்' என்று சொன்னது தகும். ஒரு நூற்றாண்டு ஜீவித்திருந்தபடியால் இது போலவே இன்னும் மற்றொரு நூற்றாண்டும் ஜீவித்திருக்கும்படி ப்ரார்த்தித்தது பொருத்தமானது. மணவாளமாமுனிகள் 75 ஆண்டுகளுக்கு உட்பட்டகாலமே ஜீவித்திருந்தவராதலால் ஒரு நூற்றாண்டு ஜீவித்திராத அவரை நோக்கி 'இன்னமொரு நூற்றாண்டிரும்' என்று சொல்லுவதற்குப் பொருத்தம் அடியோடு கிடையாது; ''வேதாந்த தேசிகனே இன்னமொரு நூற்றாண்டிரும்'' என்று ஏற்கெனவேயிருந்த வாழி திருநாமத்தைப் பார்த்து அதற்குப் பிரதியாக இது செய்யப்பட்டதென்பது விளங்குகிறது என்றெழுதுகிறார். இதனால் தேசிகனுக்கு வாழி திருநாமம் தோன்றினதானது தேசிகன் நூறு பிராயம் ஜீவித்திருந்த பிறகே என்று இவருடைய ஸித்தாந்தமாகத் தேறுகிறது. நவீனர்கள் கல்பனை செய்திருக்கிற தேசிக சரித்திரங்களில், தேசிகனுடைய எண்பது வயதுக்கு முந்தியே அவருக்கு வாழிதிருநாமம் ஏற்பட்டு 'இன்னமொரு நூற்றாண்டிரும்' என்று சொல்லி முடித்ததாக ஒருவர் தப்பாமல் எழுதிவைத்திருக்கிறார்கள். இவருடைய அபிப்ராயத்தால் எழுபதிலும் எண்பதிலும் 'இன்னமொரு நூற்றாண்டிரும்' என்று சொல்லுவது அஸம்பாவிதமென்று தேறியிருக்கையாலே 'தேசிகனுக்குச் சொல்லப்பட்டு வருகிற வாழிதிருநாமம் அவருடைய ஜீவிதகாலத்தில் தோன்றியதன்று, பிற்பட்ட காலத்தில்தான் கல்பிக்கப்பட்டது' என்று இவரே நிலைநாட்டியதாக முடிந்தது. இதற்காக இவர் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால், தேசிக சரித்திரமெழுதி வைத்தவர்கள் தவறாக எழுதிவைத்தார்களென்று தாமே தமது கையால் எழுதித் தீரவேண்டும். இப்படிப்பட்ட அஸம்பத்த ப்ரலாபங்களே இவருடைய சுவடியில் மலிந்தவை.

2. முக்கியமாக இவர் ஒரு விஷயம் எழுதியிருக்கிறார்; அதையே தம் சுவடிக்கு உயிராக வைத்திருக்கிறார். அதாவது ஸ்ரீரங்கம் கோவில் அந்யாதீனமாயிருந்த காலத்தில் அந்த அந்யருடைய க்ருஹத்தில் நேர்ந்த ச்ராத்தத்தில் ஒரு பெரிய ஆசாரியர் தம்முடைய அந்தரங்க சிஷ்யரான வொருவரை ச்ராத்த போக்தாவாக இருக்கச் செய்து ''கோவில் திறவு கோலைக் கொடுத்தாலொழிய த்ருப்தோஸ்மியென்று சொல்லமாட்டேன்'' என்றிருக்கும்படி நியமிக்க, அவரும் அந்த நியமனப்படியே கோவில் திறவுகோலைப் பெற்றுக்கொண்டே த்ருப்தோஸ்மி சொல்லி ச்ராத்தபூர்த்தி செய்வித்து வந்தாரென்று ஐதிஹ்யமிருக்கையாலே இப்படி நிர்ப்பந்தத்தினாலேயே கோவிலை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு அதற்கு முன்னே வடகலையாயிருந்தவர்களையெல்லாம் தென்கலையாக்கினதாக விளங்குகிறபடியால் வடகலைதான் அநாதியென்று அறியலாம்-என்று இவரெழுதியிருக்கிறார். இதனால் ஸ்ரீ[illegible]நுஜர்காலந் தொடங்கியே கோவில்களெல்லாம் தென்கலையாக மாறுபடுத்தப்பட்டன[illegible]று இவர் தம் சுவடியினால் முடித்தாராயிற்று. இவரெழுதியிருக்கிற ச்ராத்த நிமந்த்ரண ஐதிஹ்யம் ஸத்யமானதே; ஸ்ரீராமாநுஜரே கூரத்தாழ்வானை நிமந்த்ரணத்திற்கனுப்பிக் கோவில் திறவுகோலை வரவழைத்துக் கோவிலை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டாரென்பது உபய கலையாருமிசைந்த ஐதிஹ்யம். இதற்குமேல் நாம் எழுத வேண்டியது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. நவீனர்களின் கோபமெல்லாம் ஸ்ரீராமாநுஜர்மேலேயே என்பது வெளிவந்துவிட்டது. இப்படிப்பட்ட சுவடிக்கு நாம் மறுப்பெழுத வேண்டியது முண்டோ? ஆயினும் இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான அஸம்பத்த ப்ரலாபங்கள் உலகுக்கு நன்கு தெரியும்படி ப்ரஸ்கரோதயமாகிறது

acharya.org

ஸ்ரீ:

ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதியில் நிரூபிக்கப்பட்டுள்ள விஷயங்களுக்கு அட்டவணை.

		பக்கம்
1.	ஸ்ரீலோகாசார்யவரவரமுநீந்த்ர ஸித்தாந்தத்தின் அடிப்படை.	2
2.	ஸக்ருத்ப்ரணமத்தைப்பற்றி...	4
3.	பகவத்க்ருபா நிர்ஹேதுகத்வம்	6
4.	ப்ரபத்தியின் அநுபாயத்வம்...	7
5.	சேதநலாபமீச்வரனுக்கேபேறு	10
6.	ஸ்வகதஸ்வீகார பரகதஸ்வீகாரங்களைப்பற்றி ...	13
7.	ப்ரபத்தியின் அபராத கோடி ப்ரவேசத்தைப்பற்றி ...	14
8.	உபாயாந்தரங்களின் ஸ்வரூப விருத்தத்வத்தைப்பற்றி ...	17
9.	விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றமென்பதுபற்றி ...	19
10.	கர்மாநுஷ்டானத்தைப்பற்றி.	20
11.	எம்பெருமானுடைய வ்யாப்தி.	22
”	அந்த வ்யாப்தியிலேயே பஹுமுகமான விவரணம் ...	26
12.	வாத்ஸல்யமாவது தோஷபோக்யத்வமென்பது பற்றி.	34
13.	தயையாவது பரது:க்கது:க்கித்வமென்பதுபற்றி ...	45
14.	பிராட்டியின்விஷயமான விசாரங்களுக்கு அவதாரிகை ...	49
15.	பிராட்டிக்குப்புருஷகாரத்வமே	51
16.	பிராட்டியின் ஜகத்காரணத்வ விமர்சம் ...	55
17.	பிராட்டியின் விபுத்வவிசாரம்.	57
18.	ஜாதியின் விநாசத்தைப்பற்றி.	59
19.	கைவல்யமோக்ஷத்தைப்பற்றி.	65
20.	ஏகாதசீச்ராத்தத்தைப்பற்றி...	67
21.	விதவாவபனத்தைப்பற்றி ...	67
22.	மந்த்ரஜபத்தைப்பற்றி ...	69
23.	அத்ருஷ்டார்த்த நடவடிக்கை.	70
*	இரண்டாம்பகுதிக்குமுன்னுரை	77
24.	தேசிக சரித்ர விமர்சம் ...	79
25.	ஷை சரித்திரத்தில் பூர்வாசார்ய தூஷணமே தலையானது ...	80
26.	நவீநர்கள் சொல்லுமர்த்தங்கள் தேசிக திவ்யஸூக்தி விருத்தமென்பது பற்றி ...	82
27.	வைபவப்ரகாசிகையிலுள்ள அபப்ரம்சங்களைப்பற்றி ...	86
28.	இதில் விசேஷக்குறிப்பு ...	88
29.	ஆசார்ய சம்புவின் பரிபூர்ண விஷய ஸங்க்ரஹம் ...	88
30.	நவீனர்களெழுதும் தேசிக சரித்ரத்தின் அபஹாஸ்யதை	90
31.	நிகமபரிமளத்தினுண்மை ...	91
32.	பாதுகாஸஹஸ்ராவதாரம்பற்றி	91
33.	தேசிகனும் ஸ்ரீரங்கவாஸிகளும்	93
34.	தேசிகனுண்மை ஸ்வரூபம் ...	94
35.	பெரியவாச்சான் பிள்ளை திவ்யஸ்ரீஸூக்திகளில்தேசிகனுடைய ப்ராவண்யம் ...	96
36.	திருமண்காப்பு விசாரம் ...	101

ஸத்ஸம்ப்ரதாயபாஸ்கர விஷயங்களினட்டவணை. (48 பக்கம் வரை)

		பக்கம்
1.	ப்ரதிபச்சுவடியின் அஜ்ஞாதவாஸம்—மருகாந்தாரே ...	1
2.	ப்ரதிபச்சுவடியின் பாஷாவைலக்ஷண்யம் ...	2
3.	ப்ரதீபரின் ஐந்து திருக்கோலம்	3
4.	ப்ரதீபரின் தேசிகபக்தி தத்வம் ...	4
5.	ஆக்கூர்வைணவர்களின் விபர்யய விநோதம் ...	6
6.	தூப்புல் தேசிகனுடைய பழையஸ்வரூபங்காட்டும் ப்ரதிக்ருதி.	7
7.	ப்ரதீபரின் அப்ராமாணிகத்வ நிதர்சநம்—அதிகரண ஸாராவளீஸூக்தி விபர்யயாத் ...	9

acharya.org

		பக்கம்
8.	திருச்சி கோபாலாசார்ய ஸ்வாமியின் ஆர்ஜவ ப்ரசம்ஸை	9,10
9.	ஸ்ரீமங்ஸ்ரீரங்கச்ரியமென்பதை ச்லோகமென்றதில் உபபத்தி.	11
10.	திருநறையூர்ச் செய்தி விசாரம்.	12
11.	திருநறையூர்ப் பாசுரத்தில் ப்ரதிபரின் பலவகை மருள்கள்.	12
12.	திருநறையூரில் தேசிகனுடைய உண்மைநிலை	13, 14
13.	ஷையூர் வ்யவஹாரவஸ்துஸ்திதி	15
14.	திருவுள்ளூரின் பழைய நிலைமை	16
15.	ஸ்ரீபெரும்பூதூர் ஸன்னிதித் தீர்ப்பின் ஸ்வாரஸ்யம்	17, 18
16.	திருநறையூர்ச்செய்தி நிகமனம்	18
17.	ஸ்ரீரங்க தேவஸ்தான வ்யவஹாரசோதனம்	19
18.	நவீனர்கள் ஸ்ரீரங்கத்தில் கலஹமாரம்பித்தது	20
19.	ஸ்ரீரங்கத்தில் முதன் முதலாக 1808ல் தீர்ப்பு ஏற்பட்டது	21
20.	ஸ்ரீரங்கத்தில்வடகலையாருடைய உள் எண்ணத்தையும் அதிகாரிகள் கண்டு பிடித்தது	21
21.	ஸ்ரீரங்கத்தில் பலவித தண்டனைகள் விதித்தது	22
22.	ஸ்ரீரங்கத்தில் தேசிகனுக்கு நூதனமாக வடகலை நாமமிட்டதற்கு ஆயிரம் ரூபா அபராதம்	22
23.	ஸ்ரீரங்கத்தில் கடைசியாக அர்ச்சக நமஸ்காரக் கேஸ்.	23
24.	ப்ரதிபரின் மனச்சாட்சியற்ற விதண்டைகள்	24
25.	ப்ரதிபக்ஷிகளில் எவராலும் மசைக்கவொண்ணாத மூன்று தத்துவங்கள்	25
26.	தூப்புல் தேசிகனுடைய ப்ராசீன நிலைமை தென்கலையே யென்றுப்ரதிபரிசைந்தது	26
27.	நவீனர்களது முன்னோர்களின் நிலைமையை மூதலித்தது	27
28.	தேவப் பெருமாள் ஸன்னிதியின் ப்ரஸ்தாவம்	28
29.	வயிற்றினுள்ளே யிருந்தது வெளிவந்து விட்டது	29
30.	நவீநர்களின் ப்ரபத்திக்குக் கோயிலில் தடை	29
31.	ஸ்ரீரங்கம் கோவிலைத் தென்கலையாக்கினது ஸ்ரீராமாநுஜரும் கூரத்தாழ்வானுமே யென்று ப்ரதிபர் உண்மை கண்டறிந்தது	30
32.	ஸ்ரீரங்கம் அரையர்களைப் பற்றின ஆராய்ச்சி	32
33.	அரையர்களின் அளவற்ற அதிசயங்கள்	33
34.	ப்ரதிபரின் வெற்றிக்கொடியும் தலைவிதியும்	34
35.	ப்ரதிபரின் தலைகால் தெரியாத பூர்வாசார்ய நிந்தை	34
36.	ஆழ்வார் திருநகரி தேசிகனுண்மை	35
37.	ஷை விஷயமாக ஸ்ரீபரகால ஸ்வாமியின் நியமனம்	35, 36
38.	தேசிகனுடைய புராதன வாழி திருநாமம்	36
39.	ப்ரதிபர் பெறும் பஹுமாநத்தில் மதுராந்தகர்க்குப் பங்கு.	37
40.	பரகாலமடகார்யஸ்தரின் தெளிவும் பரம சாந்தியும்	38
41.	திருநாராயண புரத்தில் பாத்ர விவாதத்தின் ஒழுங்கு	38
42.	ஷை விவாதத்தில் தேறின உண்மை	39,40
43.	பிறருடைய வாதத்தின் பரிஹாஸ்யநிலைமை	41
44.	வாத்ஸ்ய அஹோபிலார்யரின் அழுகையநுவாதம்	41
45.	கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளிலே	42
46.	வயமேவ, வயமேவ, வயமேவ. நாமே நாமே நாமே	43
47.	ப்ரதிபரின் ஸ்ரீபாஷ்யாதி ஸூக்தி வைதேசிகத்வம்	44
48.	"அத்ராஸ்தி பஹு அஸாமஞ்ஜஸ்யம்" தவிர வேறறியார்.	45

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அடியேனுடைய அறிவிப்பு.

ராவ்பஹதூர் ஸ்ரீ. ராகவையங்கார்; தியாகராயநகர், சென்னை.

ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் பல பாஷைகளிலும் பல துறைகளிலும் நூல்களை உபகரித்து வருகிருரென்பது யாவருமறிந்ததே. அவற்றைப் பெரும்பாலும் அடியேன் ஸேவிக்க பாக்யம் பெற்றிருக்கிறேன். ஸ்வாமியால் தெலுங்கு ஹிந்தி பாஷைகளிலும் பிரசுரிக்கப்படுகிற புத்தகங்களைப் பார்க்க அடியேனுக்கு அவகாசமில்லாவிட்டாலும் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் ஸ்வாமியால் பிரசுரம் செய்யப்படுகிற பத்ரிகைகளோ புத்தகங்களோ யாவும் அப்போதப்போது தவருமல் அடியேனுடைய அநுபவத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன; அடியேன் பரமாநந்த ஸந்தோஷத்துடனநுபவித்துக்கொண்டிருக்கிறேன்.

ஸ்வாமி பல துறைகளில் நூல்களை உபகரிப்பதாக முன்னம் தெரிவித்தேனல்லவா? அந்த துறைகளில் விவாதத்துறை என்பதும் ஒன்று. பிறர் வழி தவறி ஏதாவது எழுதியிருந்தால் ஸ்வாமி அதைப்பார்த்து வாளாவிருப்பவரல்லர். தகுந்த ப்ரமாண யுக்திகளைக்கொண்டு அதை உடனே கண்டித்து வெளியிட்டுவிட்டே திருக்கண்வளர்ந்தருள்வர். ஸ்வாமியின் வைபவங்களில் இது அநந்ய ஸாதாரணமாகக் காண்கிறது. இவ்வதிசயத்தில் ஈடுபட்டு இரண்டு மஹா புருஷர்கள் எழுதியிருப்பதை இதன் கீழ் உதாஹரிக்கிறேன்:

(1.) ஸ்ரீமான் உ. வே. S.R.S. ராகவையங்கார் ஸ்வாமி (புதுடில்லி) எழுதியிருக்கிருர்:—

"Sri P. B. Annangaracharya as Sri Vedanta Desikar has shown himself to be in his works like Satha Dushani, is a strong controversialist. But he will enter into a controversy only on important matters and again only when absolutely necessary, on such occasions he is never afraid to be hit hard nor does he hesitate to hit back with vigour and persistency and with arguments which will never fail to convince and carry the world with him."

(2.) சென்னை அட்வகேட் ஸ்ரீமான் D. ராமஸ்வாமி ஐயங்கார் எழுதியிருக்கிருர்:—

"Controversy had always a fascination and grip over the mind of Sri P. B. A. Swamy...............as can be expected, the Swamy's powerful personality has been the target for hostile and adverse criticism from several quarters, and must be said to his credit that he never felt vanquished in any verbal warfare, and would always have the last word on any subject.—there have been several such—in a very telling manner."

இவர்கள் ஆத்மவஞ்சனையில்லாமல் மனச்சாக்ஷியைக் கடவாது எழுதியிருப்பதற்கு நான் சந்தோஷிக்கிறேன். விவாதங்களில் தலையிட்டுக் கண்டனமாக எழுதும் நூல்களில் வெறுப்படைகிறவர்களும் சிலர் இருந்தாலும், விஷயங்களிலுள்ள உண்மையை உணர்ந்து கொள்ள இத்துறையில் அமையும் நூல்கள் மஹோபகாரகங்கள் என்னத்தட்டில்லை.

ஸ்ரீமத் P. B. A. ஸ்வாமியால் ஸம்ப்ரதாயார்த்த விசாரங்களில் சிறு சிறு நூல்கள் [illegible] பல புத்தகங்கள் [illegible] வெளியிடப்பட்டிருப்பதால் இவை பிறர் பலத்தவர்களுக்கும் [illegible] விடுவதால் [illegible] [illegible] [illegible]

acharya.org

யென்று ஆலோசித்திருக்கையில், ஸமீபகாலத்தில் ஸ்ரீமான் தேசிகதர்சநதுரந்தர, பண்டித ராஜ திருமலைதாதாசார்யரென்பவரால் வெளியிடப்பட்ட ஸம்ப்ரதாய ப்ரதீபமென்கிறவொரு புத்தகத்தைக் காண நேர்ந்தது. ஸ்ரீமத் P. B. A. ஸ்வாமியின் பலபல க்ரந்தங்களில் பூர்வபக்ஷமாக எழுதப்பட்டிருக்கின்ற விஷயங்களையே பெரும்பாலும் இதில் ஸித்தாந்தமாக வெளியிட்டிருப்பதோடு, சிறிதும் ஏலாத பல தவறான விஷயங்களையும் அவதூறான வம்புகளையும் எழுதி க்ரந்த பூரணம் செய்திருப்பதாகவே பல பெரியோர்கள் அபிப்ராயப்படுவதாகத் தெரிந்தது. இந்த ஸமயத்தில், அடியேனுக்கு வெகுகாலமாக இருந்த முன்சொன்ன மநோரதத்தை பூர்த்தி செய்துகொள்ளலாமென்று தோன்றி ஸ்ரீ ஸ்வாமியின் பலபல க்ரந்தங்களிலிருந்து அனேக விஷயங்களைத் திரட்டி ஒன்றுசேர்த்து ஒரு புத்தகமாக்கி அதிலேயே எல்லா விஷயங்களையும் எல்லாரும் கண்ணாடிபோல் காணும்படியாக்கவேண்டி ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸாரநிதி தொகுத்தேன்.

ஸ்வாமியினுடைய ஸகலக்ரந்தங்களிலுமுள்ள ஸகலார்த்தங்களும் இச்சிறு நூலில் அடங்கிவிட்டனவென்று எண்ணவும் சொல்லவும் முடியாது. உண்மையில் பெருங்கடல் போன்றவையான ஸ்வாமியின் க்ரந்தங்களிலிருந்து ஸகல விஷயங்களையும் தொகுப்பதென்பது அஸாத்யமே. ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு காரணார்த்தமாக அவதரித்ததன்றோ ஒவ்வொரு க்ரந்தமும். அப்படிப்பட்ட பல க்ரந்தங்களிலுள்ள இன்ப சுவைகளை ஒரே நூலில் தொகுப்பதென்பது எப்படி ஸாத்யமாகும்? ஆனாலும் இந்த தொகுப்பானது ஸாரக்ராஹிகளுக்குப் பெருதவி புரியுமென்றும், ஸம்ப்ரதாய ப்ரதீபமென்கிற நிந்தாக்ரந்தியைக் கண்டு கலங்குபவர்களுக்கு நல்ல தெளிவைப் பிறப்பிக்குமென்றும் திடமாகநம்புகிறேன்.

அடியேனுள்ளம் நிறைந்த மஹத்தான குதூஹலத்தினால் இது உலகுக்கெல்லாம் பயன்படவேண்டுமென்று கருதி உடனே அச்சிட்டு ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் ஸமர்ப்பித்துக்கொண்டேன். இதில் அவச்யமாக இன்னமும் சேர்க்கவேண்டிய விஷயங்களுக்கு ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளமே ப்ரமாணமென்றும் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

ப்ரஸ்தாவித்த ஸம்ப்ரதாயப்ரதீபமென்கிற புஸ்தகத்தை நாம் விமர்சித்துப் பார்த்ததில் அதில் இரண்டொரு விஷயங்கூட ப்ராமாணிகமாயிருக்குமென்று தோன்றவில்லை. அநாவச்யகமான ஆக்ரஹமே அதிகமாகக் காண்கிறது. மனப்பூர்வமாக அந்ருதங்களையும் அஸம்பத்தங்களையுமே எழுதவேணுமென்று த்ருடஸங்கல்பம் செய்து கொண்டு எழுதின புத்தகம் என்றே நிச்சயிக்கும்படியிருக்கின்றது. என் மனதில்பட்ட பல விஷயங்களுள் சிலவற்றைமாத்திரம் இங்கே சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். அரசாணிபாலை வேங்கடாத்வரியென்கிற மஹாகவி திருவாய்மொழியாயிரம் பாசுரங்களையும் ஸம்ஸ்க்ருத ச்லோகமாக மொழிபெயர்த்திருப்பதாக வெழுதி, அந்த ஆயிரம் ச்லோகங்களுள் * ஒருநாயகமாயென்கிற பாசுரத்திற்கு மொழிபெயர்ப்பான ஒரு ச்லோகம்மாத்திரம் கிடைப்பதாக உதாஹரிக்கிறார்—“ லோகம் புஷ்கல மேகநாயகதயா ” இத்யாதி. இவ்விடத்தில் தத்துவம் கேளுங்கள்; காஞ்சி ப்ராந்தத்தில் முஸர்பாக்கமென்கிற அக்ரஹாரம் திருப்புட்குழிக்கு ஸமீபத்திலுள்ளது. அங்கே அவதரித்த ஸ்ரீமத் வரத்தி பாஷ்யகாரர்ஸ்வாமி என்பவர் மிகவும் ப்ரஸித்தரான மிகச் சிறந்த வித்வான். அவர் திருவாய்மொழியாயிரத்தையும் ச்லோகமாகச் செய்தருளினார். தவிரவும் மணிவல்லீமாதவமென்றொரு நாடகமும் ஸாதித்தார். இது ஸங்கல்பஸூர்யோதயம் போன்றது. இதில் வருகிற ச்லோகங்களெல்லாம் திவ்யப்ரபந்த மொழிபெயர்ப்பான ச்லோகங்களே. மணிவல்லியென்பது ஆழ்வாராகிற பராங்குச நாயகியின் திருநாமம். திருவிருத்தத்தில் “ வண்பூமணிவல்லி [illegible] ” என்றிருப்பதை அநுஸரித்தது இந்த வ்யபதேசம். ஆழ்வார்க்கும் எம்பெருமானுக்குமுண்டான பரிமாற்றங்களை வெகு அழகாக விவரிப்பது இந்த மணிவல்லீமாதவம். [illegible] வருஷங்களுக்கு முன் அச்சிட ஆரம்பித்துச் சில பாரங்கள் அச்சிட்டு அபூர்ண

"क्षोणीमण्डलमद्वितीयकतया प्राक् पालयन्तिस्म ये ते कृष्णेन शुना प्रदष्टचरणाः प्रभ्रष्टभिक्षाघटाः । अस्मिन् जन्मनि सर्वलोकविदितं भिक्षामटन्ति स्वयं श्रीनारायणपादचिन्तनरता भो भोः ! समुज्जीवत ॥" என்று இந்த ஆநுபூர்வியாகக் காணப்படுகிறது. இதில் சில பதங்களை மாற்றியிருக்கிறது இவரெடுத்துக்காட்டுகிற ச்லோக ஸந்நிவேசத்தில். வேங்கடாத்வரிக்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்தி களில் ப்ராவண்யமிருந்தால் அதை வேறு காரணங்களைக் கொண்டு நிரூபிக்கலாம். அவர் திரு வாய்மொழியாயிரத்தை ச்லோகமாக்கியிருக்கிறாரென்பதும் இந்த ச்லோகம் அவருடையதென் பதும் அந்ருதமே. இது ப்ரம பரம்பரை என்றும் சொல்லலாம்.

தென்கலை ஸம்ப்ரதாயத்தில் ஆசார்யர் சிஷ்யர்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்தருளும் ஸமயத்தில், தாபம் (சக்ராங்கனம்) முதலிய ஐந்து ஸம்ஸ்காரங்களையும் செய்தான பிறகு சிஷ்யரை பகவத்ஸந்நிதிக்கு அழைத்துக்கொண்டுபோய் ப்ரபத்தியைச் செய்விக்கவேண்டிய தென்று தென்கலை ஸம்ப்ரதாயந்து ஸமாச்ரயணப்ரயோகத்திலெழுதப்பட்டிருப்பதை இவர் தாம் கண்டிருப்பதாக எழுதுகிறார். இதுவும் அந்ருதம். பஞ்சஸம்ஸ்காரத்தில் ஐந்தாவதாகச் சொல்லப்பட்ட யாகமென்பது "யஜ—தேவபூஜாயாம்" என்கிற தாதுபாடத்தின்படி பகவ தாராதனத்தைச் சொல்லுகிறது. அதில் அதிகாரமுடைய சிஷ்யர்களை தங்களுடைய க்ரு ஹார்ச்சையருகே கொண்டுபோய் திருவாராதன ப்ரயோகம் கற்பிப்பது உண்டு. அதை இவர் மாறுபடுத்தி யெழுதுகிறார். இது இவருடைய நெஞ்சறிந்த அந்ருதம்.

எறும்பியப்பா ஸாதித்த வரவரமுநிசதகத்தில் * "आचार्यत्वं तदधिकमिति ख्यात-माम्नायमुख्यैः एष श्रीमान् भजति भगवानीश्वरत्वं विहाय । मन्त्रं दाता वरवरमुने मन्त्ररत्नं त्वदीयं देवः श्रीमान् वरवरमुनिर्वर्तते देशिकत्वे ॥" என்றிருக்கிற ச்லோகத்தை யெடுத்து இவர் (பக்கம் 21-ல்) ஏதோ எழுதுகிறார்—இந்த ச்லோகத்திற்கு தாம் ஒரு அர்த்தம் எழுதி "இதுதான் இந்த ச்லோ கத்திற்கு அர்த்தம்; வேறுவிதமான அர்த்தம் ஒரு பண்டிதராலும் சொல்லமுடியாது. ஸ்ரீவர வரமுனிகளின் சிஷ்யவர்க்கத்தில் வரவரமுநியென்றே திருநாமமுடைய ஒரு சிஷ்யரிருந்தார்; அவர் செய்தது ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தனியன்—என்றுதான் இந்த ச்லோகத்தினால் ஸ்பஷ்ட மாகச் சொல்லப்படுகிறது. இவ்வுண்மையையறியாமல் ஜடர்கள் பொய்யான வொரு ஐதிஹ்யத்தைக் கல்பனை செய்திருக்கிறார்கள்" என்று கைபோனபோக்கில் எழுதியிருக்கிறார். வரவர முநிசதகத்திற்கு ஜீயர்நயினாரும், திருமழிசை அண்ணவப்பங்காரும் ஸாதித்த வியாக்கியானங்க ளிருக்கின்றன. அவற்றைக் காணகில்லாமல் இவர் "பண்டிதைரத்ர அந்யோர்த்தோ வக்தும் நைவ சக்யதே" என்கிறார். இவரெழுதியிருக்கிற அர்த்தத்தையே யுக்தமாகக்கொள்வோம். மணவாளமாமுனிகளின் திருவடி பணிந்த சிஷ்யர்களில் வரவரமுநியென்று ஒரு சிஷ்யரிருந்த தாக யாராவது எழுதியிருப்பதுண்டா? எங்கேனும் கேட்டதுண்டா? பட்டர் ஸ்ரீரங்கராஜஸ் தவத்தில் "ஸ்ரீரங்கநாதர் மந்திரம் திப்ர சேஷம் ஸ்ரீபூமீ தத்ரம்ய ஜாமாத்ருகர்ப்பம்" என்கிற ச்லோகத்தில் அழகிய மணவாளனை ஸ்ரீரங்கநாதனையே ரம்யஜாமாதாவென்கிறார். "வையம் தொழப்படும் முனியை" என்கிற திருநறையூர்ப்பாசுரத்திலும் "முனியே நான்முகனே முக்கண் ணப்பா" என்கிற பாசுரத்திலும் எம்பெருமானே முனியென்னப்படுகிறான். ஆக ரம்யஜாமாத்ரு முனியென்பதும் வரவரமுநியென்பதும் அழகிய மணவாளனையேயாயிற்று. இவனே மணவாள மாமுனிகளுக்கு சிஷ்யனும் உலகுக்கெல்லாம் ஆசார்யனும் ஆனான். இவரெழுதுகிற விவர ணத்திலிருந்தே இந்த உண்மைப் பொருள்தான் விளங்குகிறது. எதையும் இவர் விபரீதமாகவே ச்ரவிக்கிறார். ஸ்ரீஸ்வாமியினுடைய அரிய பெரிய வியாஸங்களினால் அவையெல்லாம் நிரஸ நம் பெறுமென் நம்புகிறேன்.

25-12-1951 இப்படிக்கு, தாஸன்.

acharya.org

ஸ்ரீ ரஸ்து.

ஸ்வாபிப்ராய ப்ரகாசநம்.

(ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர்.)

ஸஹ்ருதயஸார்வபௌமராயும் அடியேனுக்கு ஸௌஹ்ருந்மணியாயும் விளங்குகின்ற ஸ்ரீமதுபயவே. எஸ். ராகவையங்கார் ஸ்வாமியின் அறிவிப்பை வாசித்தவர்களுக்கு அடியேன் அதிகம் தெரிவிக்கவேண்டியதொன்றுமில்லை. இந்த ஸ்வாமி எடுத்துக்காட்டியுள்ள ஸம்ப்ரதாய ப்ரதீப மென்னும் புத்தகம் இரண்டு நாளைக்கு முன்னமே நமது பார்வைக்கு வந்தது. ஸ்ரீ உவே. (கோயமுத்தூர்) வேதவ்யாஸபட்டர் ஸ்வாமியின் ஸம்ப்ரதாய ப்ரதீப விமர்சமென்கிற விபாஸத்தையே அவதாரிகையாக வைத்து ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரனென்கிற நூலை யெழுதி முடித்து அச்சிடத் தொடங்கியான பிறகு, நம் ராகவையங்கார் ஸ்வாமியின் அப்ரயேயமான காரியம் அடியேனுக்குத் தெரியவந்தது. இவர் தொகுத்திருக்கிற ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதியென்னும் நூலில், இதுவரை அடியேனெழுதிய எல்லா க்ரந்தங்களிலுமுள்ள எல்லா விஷயங்களும் பூர்த்தியாகச் சேர்ந்துவிட்டனவென்று சொல்லமுடியாது. அந்த ஸ்வாமியே இதை எடுத்துக் கூறியுள்ளார். ஆனாலும் விவேகிகளுக்கு இவ்வளவு போதுமென்னலாம். இவ்வளவையும் ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு ஸம்ப்ரதாயப்ரதீபமென்று நவீந தூஷணச் சுவடியை வெளியிட்டவருடையவும், அவரையொத்த மற்றுஞ் சிலருடையவும் துர்வாதங்கள் கேவலம் பாமரப்ரதாரகமானவையென்பது நன்கு புலப்பட்டே தீரும். இதுகாறும் நாம் எழுதாத சில விஷயங்களையும், ஏற்கெனவே எழுதியிருக்கும் விவேகிகளின் கண்ணுக்கு விசேஷமாகப் புலப்படாமலிருக்கின்ற சில விஷயங்களையும் முக்கியமாக இந்நூலில் சேர்க்கவேண்டுமென்று தோன்றிற்று. இதம்பரமாகத் தற்போது எழுதப்பட்ட ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரக்ரந்தத்தில் ப்ரதீபகாரருக்குச் சொல்லவேண்டிய பதில்கள் யாவும் அடங்கியிருந்தாலும் மிக முக்கியமானவைகளை இங்கெடுத்து நிரூபிக்கிறேன்.

பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் வடகலையார் தென்கலையாரென்கிற வேற்றுமையுண்டானதில் பிரமாதமொன்றுமில்லை. இவர்களுக்குள் இரண்டு வகையான யுத்தங்கள் விளைந்ததுதான் மிகவும் சோசநீயம்: இரண்டுவகை என்னென்னில்; கோவில்களில் கேசாகேசி யொன்று; க்ரந்தமூலக வாத விவாதங்கள் மற்றொன்று. இவ்விரண்டு வகையான கலஹங்களும் எவ்விதமாக எந்த வகுப்பினரால் ஆரம்பமாயிற்றென்பதை மஹாமதிகள் முந்துற முன்னம் கண்டறியவேண்டும். உள்ளதை உள்ளபடி தெரிவிக்கிறோம் கேண்மின். நவீனர்களென்று வழங்கப்பட்டு வருகின்ற வொரு வகுப்பினர் வேதாந்த தேசிகரைத் தங்களுக்கு குருவாக இழுத்துப் போட்டுக்கொண்டதிலிருந்தே இவ்விரண்டுவித கலஹங்களும் அங்குரித்தன. ஆனால் இந்த வாசகங்களைக் காணும்போதே பிறர்களுக்கு ரோஷமும் த்வேஷமும் மிகமிகப் பொங்கிவளரும். அதனாலென்ன? நாம் தெரிவிக்கிறவிது ஸத்யமே யென்று ஸகலரும் விச்வஸிக்கும்படி விஷயமுணர்த்துகிறோமிங்கு.

வேதாந்த தேசிகர் அவதரித்துத் திருநாடலங்கரித்து இற்றைக்கு 585 வருஷங்களாகின்றன. அறுநூறு வருஷங்களுக்கு முற்பட்ட ஒரு ஆசார்யரது சரித்திரத்தை நாம் உள்ளபடி தெரிந்துகொள்ளவேணுமானால் புராதநமான வொரு நூலைக்கொண்டுதான் தெரிந்துகொள்ள முடியும். தேசிகருடைய சரித்திரத்தை நமக்கு உள்ளபடி தெரிவிக்கக்கூடிய பிராமாணிகமான நூல் எதுவென்று பார்க்குமளவில் "ஆசார்யசம்பூ" என்று வழங்கப்படுகிற வேதாந்தாசார்ய விஜயத்தையொன்றுதான் புராதனமும் ப்ராமாணிகமுமென்று கொள்ளத்தக்கதாயிருக்கிறது. அதில் தேசிக சரித்திரம் எவ்விதமாக எழுதப்பட்டிருக்கின்றதோ அவ்விதமாகவே இவர்கள் [illegible]

ஹாயனது சிறிதும் ஏற்றக் குறைவில்லாதபடி இந்த ஸம்ப்ரதாய ஸாரார்த்த நிதியில் [336-ஆம் பாரா முதல் 341-ஆம் பாராவரையில்] காணத்தக்கது. இந்த அளவான ப்ராமாணிக சரித்திரத்தை ப்ரசாரம் செய்வதோடு நின்றிருந்தார்களாகில் க்ரந்தச் சண்டைகளுக்கோ கோவில் சண்டைகளுக்கோ அவகாசலேசமுமிராது. இவர்கள் அந்த ப்ராமாணிக க்ரந்தத்தை ஒரு பதார்த்தமாகவே கொள்ளாமல் விச்வாமித்ர ஸ்ருஷ்டியாக அநாவச்யகமாய், பூர்வாசார்ய நிந்தைகள் மலிந்த சரித்திரங்களை ப்ரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

"ஆசார்யசம்புவில் அடியோடு காணாத இந்த அபத்த சரித்திரங்கள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?" என்று கேட்டால், தேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்திருந்த ப்ரஹ்ம தந்த்ரஸ்வாமி பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவமொன்று ஸாதித்திருந்தார்; அது லுப்தமாய்விட்டது. பிறகு மூன்றுவது ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி மூவாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் ஸாதித்தார். அதிலிருந்துதான் இந்த நிந்தாசரித்திரங்களை க்ரஹித்து ப்ரசாரம் செய்துவருகிறோமென்கிறார்கள். "கடல் மங்கலம் வீராச்சி" என்பவர் இயற்றியதென்று அன்று முதலாகவே அனைவராலும் சொல்லப்பட்டுவருகிற அந்த மூவாயிரப்படி அச்சிடப்பட்டுமிருக்கிறது. மைஸூர் பரகால மடாதிபதி ஸ்வாமியாலும் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த கல்பிதச் சுவடியின் கல்பிதத்வம் இவர்களுடைய கோஷ்டியிலேயே சிலாசாஸனம் செய்யப்பட்டிருக்கிறபடியைச் சிறிது கேண்மின்.

ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்வாமியுத்ஸவத்தில் ஆறுந்திருநாள் வெள்ளைசாத்துப்படியுத்ஸவம் என்று கொண்டாடப்பட்டுவருகிறது. "சிவாத் பரதரம் நாஸ்தி" என்றெழுதி அதில் எழுத்திட நிர்ப்பந்தித்த சோழனுடைய கொடுங்கோன்மையினால் கூரத்தாழ்வான் த்ரிதண்ட காஷாயங்களை யணிந்து ராஜஸபைக்கு எழுந்தருளினதாகவும், ஸ்வாமியெம்பெருமானார் வெள்ளைசாத்திக் கொண்டு வெளியேறினதாகவும் சொல்லப்படுகிற ஐதிஹ்யத்தையநுஸரித்து மேலே சொன்ன மஹோத்ஸவம் ஒரு நூறு வருஷங்களுக்கு உட்பட்ட காலத்தில் ஆரம்பமாகி நடந்துவருகிறது. இந்த வெள்ளைசாத்துப்படியுத்ஸவம் நடத்த ஆரம்பித்த காலம் காஞ்சீபுரம் தாதாசாரியர்கள் ஸ்ரீபெரும்பூதூர்ஸன்னிதியில் சிறந்த மரியாதைகளையநுபவித்துக்கொண்டிருந்த காலமானதால் அப்போது அவர்களில் தலைவராயிருந்த ஸ்ரீமத் திருப்புட்குழி அப்பாஸ்வாமி, தண்டரி பட்டப்பாதாதா சாரியர்ஸ்வாமி முதலான மஹான்கள் "இது சாஸ்த்ரவிருத்தமான நடத்தை; கூரத்தாழ்வான் த்ரிதண்டகாஷாயங்களையணிந்ததும் கிடையாது, பாஷ்யகாரர் வெள்ளைசாத்திக் கொண்டதும் கிடையாது; இது மிகவும் தவறான—நவீநகல்பிதமான ஐதிஹ்யம்; தென்கலையார்கள் விதைதிஹ்யஸஹஸ்ரவர்ணநத்திலே வல்லவர்களாகையாலே அவர்கள் கட்டினதே இந்த ஐதிஹ்யம்; இது புஸ்தகத்தோடு நில்லாமல் ஸன்னிதியிலும் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுகிறதென்றால் இது நமக்கு ஸஹ்யமேயன்று; அப்படி அசாஸ்த்ரீயமாக நடத்தப்படுகிற இந்த வெள்ளைசாத்துப்படியுத்ஸவத்தன்று வடகலையார் ஒருவரும் ஸ்வாமிதர்சநமே செய்யக்கூடாது; விசேஷித்து தாதாசார்யவம்சஸ்தர்கள் அன்று முழுவதும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸன்னிதியில் ஒரு மர்யாதைக்கும் போகாமல் உபவாஸமுமிருக்கவேண்டியது" என்று திட்டம் செய்தார்கள்: இப்படிக்கு பத்ரிகையும் அச்சிட்டார்கள்.

அப்போது, அந்த வெள்ளைசாத்துப்படி ஐதிஹ்யம் மிகவும் தப்பானது என்று வாக்வாத யுத்தங்களும் க்ரந்தச் சண்டைகளும் விசேஷமாக நடந்தன. "வடகலையார் மூவாயிரப்படி குருபரம்பரையென்று ஒன்று அச்சிட்டிருக்கிறார்களே, அதிலுங்கூட இந்த ஐதிஹ்யமிருப்பதால் இது கல்பிதமன்று" என்று தென்கலையார்கள் வாசிகமாகவும் க்ரந்த மூலமாகவும் வாதித்தார்கள். அப்போது ஸ்ரீமத் திருப்புட்குழியப்பாஸ்வாமியின் நியமனத்தினால் மஹாவித்வத் வரேண்யரான தண்டரி பட்டப்பாஸ்வாமி "ஐதிஹ்யதத்த்வம்" என்றொரு பத்ரிகையையெழுதி வெளியிட்டதில் மேலேசொன்ன மூவாயிரப்படி குருபரம்பரை "இது [illegible]

[illegible] ப்ராமாணிகம் என்று [illegible]

படிரக்ஷை'' என்கிற தென்னாசார்ய ஸூஷணச் சுவடியில் மேலே சொன்ன விஷயமெல்லாம் மிகவிரிவாக எழுதப்பட்டு அந்த மூவாயிரப்படி குருபரம்பரை நவீநகல்பிதமென்று கல்வெட்டாக்கப்பட்டிருக்கிறது. ''பாஷ்யகாரர் திருக்கோட்டியூர்நம்பியிடம் கேட்ட ரஹஸ்யார்த்தத்தை அங்கேயே கோபுரத்தின்மேலேறிப் பல பேர்களுக்கு வர்ஷித்தாரென்று தென்கலையார் எழுதிவைத்திருக்கிற ஐதிஹ்யமும் அசாஸ்த்ரீயம் ; * பத்ரேக்ஷிதோ வா வ்யர்த்தஸ் ஸ்யாத் யத்ருச் சாச்ருத ஏவ வா * என்கிற ப்ரமாணம் ஸர்வஜ்ஞரான பாஷ்யகாரருக்குத் தெரியாததன்றே; தெரிந்திருந்து ஒருகாலும் அப்படி அபாத்ரங்களிலே வர்ஷித்திருக்கமாட்டார். அப்படி வர்ஷித்ததாகச் சொல்லப்படுமைதிஹ்யம் விதைதிஹ்ய ஸஹஸ்ரத்தில் சேர்ந்ததே'' என்று எழுதிவிட்டு, ''இது வடகலையாருடைய மூவாயிரப்படி குருபரம்பரையிலுமிருக்கிறதேயென்று சிலர் எடுத்துக்காட்டுகிறார்கள் ; அதனால் ஒரு லாபமுமில்லை. அந்த மூவாயிரப்படி தென்கலையாரெழுதி வைத்த குருபரம்பரையைப் பார்த்து ஆவாபோத்வாபங்கள் பண்ணிக் காப்பியடித்ததாகையாலே அதுவும் தள்ளத்தகுந்ததே. இதுமாத்திரமன்று ; ஆழ்வார்களுடைய வைபவங்களிலும் அநேகம் அசாஸ்த்ரீயமான விஷயங்கள் தென்கலையாருடைய புத்தகங்களைப் பார்த்தே எழுதியிருப்பதால் அந்த மூவாயிரப்படி முழுமோசமானது; ப்ராமாணிக கோஷ்டியிற் பரிக்ராஹ்யமன்று—என்று கல்வெட்டாக எழுதி அச்சிட்டு உலகமெங்கும் பரவச்செய்திருக்கிறார்கள். ஆகவே, என்றைக்கோ செத்துப்போன புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு இந்த நவீநர்கள் பூர்வாசார்ய நிந்தாமயமாயும் அஸம்பத்த கதைகள் மலிந்ததாயுமிருக்கிற தேசிக சரித்திரத்தை ப்ரசாரம் செய்துகொண்டு வீண் கலஹத்தை வளர்த்திவருகிறார்கள்.

மேலே சொன்ன மூவாயிரப்படியில் மைஸூர் பரகால மடாதிபதி ஸ்வாமிகளின் பதிப்பில் மேலேவிவரித்தபடி ஸ்ரீமத் திருப்புட்குழி அப்பாஸ்வாமி முதலான மஹான்களால் தப்பான ஐதிஹ்மென்று தூஷிக்கட்பட்ட கதைகள் [பல பதிப்புகளிலும் ஏறி] விளங்கிக்கொண்டிருக்கின்றன. பக்கம் 88-ல் எம்பெருமானார் வைபவப்ரகரணத்தில்—

> ''பின்பு கூரத்தாழ்வான் நடாதூராழ்வான் முதலான முதலிகளோடே உடையவர் காலக்ஷேபம் செய்துகொண்டிருக்கிற காலத்தில் சோளராஜாவும் வித்வான்களை யழைத்து * சிவாத் பரதரம் நாஸ்தி யென்று எழுதச் சொல்லி தண்டிக்க, சிலர் அர்த்தகாமங்களடியாக எழுதிட்டார்கள் ; சிலர் அவனுக்கஞ்சி எழுதிட்டார்கள். இத்தனாலூரான் கண்டு எம்பெருமானார் எழுதிட்டாலன்றோ ப்ரயோஜநமுண்டாவது, இவர்களெழுதிட்டால் என்ன ப்ரயோஜநம்? என்ன, சோளனும் எம்பெருமானாரை யழைத்துக் கொண்டு வரும்படி சில மநுஷ்யரை அனுப்பிவிக்க, அவர்களும் அங்கேற வழைக்கப் போக, அந்த வ்ருத்தாந்தத்தை மாத்யாஹ்நிகஸ்நாநார்த்தமாகப் போகும்போது கேட்டு முதலியாண்டான் நீராடிவர, நடாதூராழ்வான் முன்னமே அந்த வ்ருத்தாந்தத்தை வந்து சொல்லக்கேட்டு நீரன்றோ ப்ரியபாகிநேயரென்று போரவுகந்து கூரத்தாழ்வான் உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளை தரித்துக்கொண்டு அந்த மநுஷ்யரோடே போக, பெரிய நம்பியும் கூட எழுந்தருளினார். பின்பு நடாதூராழ்வான் முதலியாண்டான் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலானவர்கள் 'தேவரீர் இங்கிருக்க வொண்ணாது' என்று உடையவருக்கு வெள்ளை சாத்தி மேல்நாட்டுக்கெழுந்தருளப்பண்ணிக் கொண்டு போக'' என்றிருக்கின்றது.

இவ்வளவோடும் நிற்கவில்லை. உடையவர் வெகுநாள்வரையில் வெள்ளை சாத்திக்கொண்டிருந்ததாகவும் பிறகு த்ரிதண்ட காஷாயாதிகளை ஸம்பாதித்து முன்பு போலே தரித்ததாகவும் (பக்கம் 89-ல்) எழுதப்பட்டிருக்கிறது.

அதிலேயே (பக்கம் 74-ல்)—திருக்கோட்டியூர் வ்ருத்தாந்தம்—

[illegible]

தாமொருவருமே சென்று நம்பி திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும்
'இவ்வர்த்தத்தை ஒருவருக்கும் சொலவேண்டா' வென்று நியமித்தருளி திருமந்
ரார்த்தத்தையும் சரமச்லோகார்த்தத்தையும் பரக்க ப்ரஸாதித்தருள, உடையவரும்
க்ருதார்த்தராய் அன்று மற்றுநாள் தெற்காழ்வான் திருவோலக்கத்தில் அந்த ரஹஸ்
யார்த்தத்தை எல்லாருக்கும் ப்ரஸாதித்தருள..........." என்றிருக்கிறது.

ஆரியர்காள்! நவீனர்களது கோஷ்டியில் ஆசார்யகம் செய்கிற சிஷ்டவரிஷ்டர்கள் இப்
படிப்பட்ட சரித்திரங்களை சாஸ்த்ரவிருத்தவாதிகளான தென்கலையார் கல்பித்த தப்பான
ஐதிஹ்யங்களென்று இற்றைக்கும் தூஷித்து வருகிறார்கள். அப்படிப்பட்ட தூஷணஸஞ்
சிகைகளை எவ்வளவும் எடுத்துக்காட்டுவோம். 'நம்முடைய ஸம்பிரதாயத்திற்கும் ஒரு குருபரம்
பராப்ரபாவமிருக்கவேணும்' என்று நினைத்த நவீனர்கள் தென்னாசார்ய ஸம்பிரதாயத்திலுள்ள
வைபவக்ரந்தங்களையே தஞ்சமாகப் பற்றவேண்டி வந்த தலைவிதியாலே அவற்றையே யெடுத்
துக்கொண்டு சிலவற்றைத் தள்ளியும் சிலவற்றைச் சேர்த்தும் அதிக்ராம்யமான வார்த்தைகளை
விசேஷமாகப் புகவிட்டும் மூவாயிரப்படி குருபரம்பராப்ரபாவமென்று ஒன்று வரைந்து இதை
க்ருதிய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி தலையிலே வைத்து அச்சிட்டுவிட்டார்கள். இப்படி
கல்பனை செய்து அச்சிட்டவர் மைஸூர் ஸ்ரீபரகாலஸ்வாமியிடம் வந்து "இந்த வைபவக்ரந்
தம் உங்கள் கூடஸ்தர் செய்தது ச்சே; இதை உங்கள் மடத்திலிருந்து வெளியிட வேண்
டாமா?" என்று சொல்ல, * "महिषस्सुषुवे वृषम्" (மஹிஷஸ் ஸுஷுவே வ்ருஷம்) என்ற
வுடனே * "बध्यतां दुह्यतां पयः" (பத்யதாம் துஹ்யதாம் பய:) என்று சொல்லுவார்க்குத்
தோள்தீண்டிகளாய், இதனுள் என்ன விஷயமிருக்கிறது? என்பதைக் கூட விமர்சி
யாமல 'இதற்காக ஆயிரம் ரூபாய்' என்று அநுக்ரஹித்து அபத்தகளஞ்சமாக அச்சிட்
டுச் செய்து உலகமெங்கும் பரவவிட்டாயிற்று. இப்படி 70, 80 வருஷங்களுக்கு மேலாக நடந்து
வருகிறது.

ஆழ்வாராசாரியர்களின் வைபவத்தை வெளியிடுவது இவர்களுக்கு உத்தேச்யமன்று;
தேசிக சரித்திரம்வெளியிட ஆவல் கொண்டார்கள். உண்மையில் அதுவும் முக்ய உத்தேச்ய
மன்று. தென்னாசாரியர்களை வாயார வையவேணுமென்று ஆசை கொண்டார்கள்; அதற்காக
தேசிகசரித்திரமெழுதுவதென்று கைவைத்தார்கள். அதைமாத்திரம் தனியாக எழுதி வெளி
யிட்டால் சுவைப்படாதென்று தோன்றிற்று. ஆழ்வாராசாரியர்களெல்லார்க்கும் வைபவ
மெழுதுவதாக அபிநயம் காட்டி, ஸ்வமதாநுகூலமின்னது, ஸ்வமதப்ரதிகூலமின்னது என்
பதைக்கூட விவேகியாமல் தென்னாசார்யக்ரந்தங்களிலுள்ளவைகளையே கூட்டியும் குறைத்து
மெழுதி முடித்து, ஜகத்ப்ரஸித்தமான ஆசார்யசம்பூ க்ரந்தத்தோடு சிறிதும் ஸம்பந்தமில்லாத
படி தம் மனம் போனபடியே தேசிக சரித்திரத்தை யெழுதிமுடித்து, அது புராதனமென்று
காட்ட த்ருதிய ஸ்வதந்த்ரர் தலையிலேற்றி, நாடு நகரமும் பரிஹஸிக்க நின்றிருக்கிறார்கள்.

தென்னாசார்ய ஸம்பிரதாயத்தில் மணவாளமாமுனிகள் வரையிலுமுள்ள ஆசாரியர்
களும், அவருடைய திருவடிகளான அஷ்டதிக்கஜாசாரியர்களும் எழுதிவைத்த க்ரந்தங்களுக்கே
ப்ராமாண்யமுள்ளதென்பது தென்னாசார்ய வகுப்பில் ஸர்வ ஸம்மதமான கொள்கை. இவ்
வாசார்ய வர்க்கத்தில் தோன்றியுள்ள க்ரந்தங்களுள் ஏதேனுமொன்றிலாவது தேசிகனைப்
பற்றியோ மற்றொரு ஆசார்யரைப்பற்றியோ குறைகூறுவதான வார்த்தை லவலேசமாவது
உண்டாவென்று மத்யஸ்த மஹான்கள் நோக்கவேணும். அஷ்டதிக்கஜாசார்யர்களுக்குப்
பிற்பட்டவரான பிள்ளைலோகஞ் சீயரும் பல க்ரந்தங்கள் எழுதியுள்ளார். அவற்றிலும்
இதராசார்ய தூஷணமாக ஓரெழுத்தும் காணக்கிடைக்காது. இந்த நவீனர்கள் கற்பனை செய்து
உலாவுகிற மூவாயிரப்படியானது உண்மையில் த்ருதீயப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமியால்
இயற்றப்பட்டதாய் புராதனமாயிருக்குமாகில் அதிலும் ஆசார்ய தூஷணை யென்பது அடியோடு
[illegible]

इदमत्रावधेयम् । மேலே குறித்த மூவாயிரப்படியில் (பக்கம் 196ல்) நயினாராசாரியர் வைபவமென்று எழுதிக்கொண்டு போகையில்—

" ப்ரதிவாதிபயங்கரமண்ணனும் கோயிலேற வெழுந்தருளி தேசிகரைத் திருவடி
தொழுது...ராமானுஜ ஸித்தாந்தத்தை தேசிக திவ்ய ஸூக்திகளாலே நிர்வஹித்துக்
கொண்டிருக்கிற காலத்தில் மணவாள மஹாமுனியும் சில சிஷ்யர்களோடே ஒரு மண்ட
பத்திலிருந்து கொண்டு பகவத்விஷய காலக்ஷேபம் பண்ணிக் கொண்டிருக்க, அவர்களில்
ஒருவருக்கும் ஸ்ரீ பாஷ்யாந்வயமில்லாமையாலே பிரதிவாதிபயங்கரமண்ணனிடத்திலே
ஸ்ரீ பாஷ்யாதிகளை அதிகரிக்கும்படி சிஷ்யர்களுக்கு நியமிக்க, அவர்களும் அப்படியே
அதிகரித்து மணவாள மாமுனிகளிடத்தில் தாங்கள் நாலாயிர ப்ரபந்தங்களை அதிகரிக்
கும்போது அண்ணனையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டிருக்க, சிலநாள் கழித்த
வாறே அவர்கள் ' நயினாரிடத்தில் கேட்ட அர்த்தம் ஆசார்யாள் திருவுள்ளத்துக்குப்
பொருந்தியிருக்குமோ. இவ்விடத்தில் சொல்லுகிற வர்த்தம் பொருந்தியிருக்குமோ
வென்று கேட்க, அண்ணனும் இரண்டும் இரண்டு யோஜனையாயிருக்குமென்[illegible] அவர்
களும் நயினாரிடத்தில் கேட்டது, தான் தோன்றியன்றோ, நம் மணவாளமாமுனிகள[illegible]த்தில்
கேட்டதன்றோ ஸம்ப்ரதாயாகதமாயிருப்பதென்ன, அண்ணனும் 'தேசிகருடைய திவ்ய
ஸூக்திகளில் விசேஷார்த்தங்களுண்டு. இவ்விடத்தில் விருத்தார்த்தங்களுண்டு'......
என்றருளிச் செய்ய, எறும்பியப்பா [illegible]னாரும் மிகவும் கோபித்துக்கொண்டு தேசிக
திவ்யஸூக்திகளையும் தேசிகரையும் அதிக்ஷேபித்து நம் மணவாளமாமுனிகளையே
பெரிய பெருமாள் உகந்தருளினாரென்று சொல்ல, அண்ணன் ஸஹியாமல் பரவசராய்',
இத்யாதிகளை கேட்பார்புடைப்பாரின்றி யதேஷ்டமாக எழுதி வைத்திருக்கிறது. இப்
படிப்பட்ட வசநசைலிகளை வாசிக்கும்போதே இது நவீநகல்பிதமேயென்று ஆக்ரஹிகளுங்
கூட அறிவர். பூருவர்கள் இப்படி ஒருகாலும் எழுதார்களன்றோ.

நயினாராசார்யருடைய வைபவத்திற்கு முன்னே தேசிகனுடைய வைபவமெழுதும்போதே
பிள்ளை லோகாசார்யர் அவருடைய திருத்தம்பியார் முதலான மஹாசார்யர்களை வலுவில் பிடித்
திழுத்து ஏதேதோ எழுதியிருக்கிறது. இப்படிப்பட்ட ஆச்சரியமான விஷயங்கள் மலிந்த
அந்த மூவாயிரப்படியானது நவீநகல்பிதமென்றும் அப்ராமாணிகமென்றும் திருப்புட்குழி
அப்பாள்வாமியாலும் தச்சிஷ்யர்களாலும் முடிவு கட்டப்பட்டிருப்பது அசைக்கமுடியாததான
பின்பு, இவர்கள் அந்த மூவாயிரப்படியை ப்ரமாணமென்று வாய்திறக்க வழியே கிடையாது.
ப்ரதீபச் சுவடிக்காரர் இனி என்ன சொல்லுவரென்னில், " யாரோ சிலர் ஏதோ காரணத்திற்
காக இந்த மூவாயிரப்படியை அப்ரமாணமென்று எழுதிவிட்டால் அதனால் எமக்கென்ன ?
திருப்புட்குழியப்பா சொல்லிவிட்டால் அது வேதவாக்கியமா என்ன ? நாங்கள் சிலர் மூவாயிரப்
படியை ப்ரமாணமாகவே தலைமேல் தாங்குகிறோம் " என்பர். ஸ்வஸம்ப்ரதாயஸ்தர்களான
பெரியார்கள் தப்பான ஐதிஹ்யமென்று தூஷித்த வெள்ளை சாத்துப்படி முதலான விஷயங்களை
யும் " ப்ராமாணிகமாகவே நாம் கொள்ளுகிறோம் " என்பர், எதற்காகவென்னில், இந்த மூவா
யிரப்படி அப்ரமாணமென்று முடிந்துவிட்டால் இவர் தம்முடைய ப்ரதீபச்சுவடிக்கு அதோ
கதி தவிர வேறில்லையே. பொய்யும் புளுகுமாய் அதிலே பொறித்த ஐதிஹ்யங்களைப் பற்றிக்
கொண்டன்றோ இவரும் பூர்வாசாரிய தூஷணைகளிலே தலைகால் தெரியாமல் தள்ளி விழுந்து
தாம்பாலைகளைப் பொழிகிறார். " ஓய் ! நீர் சொல்லுகிற தேசிக சரித்திரங்களுக்கு எது
ஆதாரம் ? " என்று ஒருவர் கேட்டால் வாயைத்திறக்க வழியுண்டா இவர்க்கு ? இனி மூவாயிரப்
[illegible] என்று [illegible] என்னபிராயப்[illegible]
[illegible] மாணமே [illegible]
[illegible]

நவீனர்கள் கோவில்களிலே வந்து புகுந்து பாத்திரச் சண்டைகளையும் திருமண் சண்டை
களையும் கிளப்பினபோது வாதவிவாத நூல்கள் பல தோன்றின. தென்னாசார்ய ப்ரபாவமென்
றும், ப்ரபாவதீபிகை யென்றும் கண்டனமென்றும் முண்டனமென்றும் மண்டனமென்றும்
இப்படி இரு கலையாரிடமிருந்தும் வாதப்ரதிவாத நூல்கள் பல தோன்றின. இந்த வெளியீடு
களில் அப்போது அப்ராஹ்மணர்களும் கலந்து கொண்டார்கள், அப்போதுதான் இவர்கள்
தரப்பிலிருந்து இந்த மூவாயிரப்படியை கடல்மங்கலம் வீராச்சி யென்பவர் எழுதி வெளியிட்டா
ரென்பது அப்போதே க்ரந்தங்களில் ஏறியிருக்கிறது. இவ்விஷயத்தை ஸாரமாகச் சில சொல்லி
முடிக்கிறேன். (1) மேலே சொன்ன மூவாயிரப்படி நூல்; (2) சோளங்கிபுரம் தொட்டயா
சாரியர் ஸ்வாமி செய்ததாகச் சொல்லப்படுகிற (ச்லோக ரூபமான) வைபவப்ரகாசிகை.
(3) ஆசார்யசம்பூ. ஆகிய இம் மூன்று நூல்கள்தான் தேசிக சரித்ரபரமாகக் காண்பவை.
இவற்றில் ஆசார்யசம்பு ஒன்றே பரமப்ராமாணிகமாயிருக்கச் செய்தேயும் அதில் இந்த நவீனர்
களுக்கு உத்தேச்யமான பூர்வாசார்ய நிந்தை அடியோடு இல்லாமையாலே அதை இவர்கள்
ஒரு புத்தகமாகவே மதிப்பதில்லை. மூவாயிரப்படியைப்பற்றிக் கீழே விரிவாகச் சொல்லி
யாயிற்று. இனிமேல் அது எங்கும் தலைகாட்டமாட்டாதென்பது திண்ணம். ச்லோகரூப
வைபவப்ரகாசிகையானது ஸம்ஸ்க்ருத பாஷையில் ஸ்வல்பப்ரவேசமுடையவொரு ஸாமாந்ய
புருஷனால்—நவீனச் சண்டைகளில் நன்கு தலையிட்டவனால் கல்பிக்கப்பட்டதென்பது சிலா
சாஸனம் செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கர நூலில் பரபக்ஷப்ரதி
க்ஷேபவிஸ்தரம் காணத்தக்கது. அந்த பாஸ்கரன் இந்த நிதியோடுகூடவே ஜ்வலிப்பதால்
தேடியலையவேண்டா; ஏடுகளைத்தள்ளி மேலே பார்க்கவேண்டுமத்தனை. பார்த்தால் அந்த
வைபவப்ரகாசிகாஸ்தோத்ரம் மூவாயிரப்படிக்குத் தம்பியே யென்பது யாவர்க்கும் திடமாகும்.

அந்த ஸ்தோத்ர நூல் ப்ராமாணிகமே யென்று கொண்டாலும், நவீனர்கள் பூர்வாசார்ய
நிந்தாமயமாகக் கல்பித்து வைத்திருக்கிற தேசிக சரித்திரமானது, காலைப் பிடிப் பிருண்டி
சண்டைக்கிழுப்பதற்காகவே யொழிய தேசிக வைபவம் கூற வந்ததன்று என்பது அனைவரும்
எளிதாக வறியக்கூடியதே. நாம் ராமாநுஜ தயாபாத்ரபத்ய சரித்திர நூல் எழுதி வெளி
யிட்டதானது தேசிகனுக்குக் குறை கூறுவதற்காகவோ, தேசிக பக்தர்களை நிந்திப்பதற்
காகவோ அன்று. தங்களை தேசிக பக்தர்களாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிற நவீனர்கள்
தாங்கள் எவ்விதமான ஏற்றங்களைப் பெற்றிருக்கிறார்களோ அந்த ஏற்றங்களை அபலாபம்
செய்வார் யாருமில்லை. 'அவை ஏற்றமல்ல' என்றாவது 'அந்த ஏற்றங்கள் தென்கலையார்
களுக்குமுண்டு' என்றாவது விவாதம் செய்யவருகிறோமல்லோம். வேதத்தை ஜடை கனம்
லக்ஷணம் வர்ணக்ரமம் முதலானவற்றோடும் ஓதுவது, வேதோக்த கருமங்களிலே அதிகச்ரத்தை
கொண்டிருப்பது, இரவில் நீராடினாலுங்கூட பன்னிரு திருநாமமணிந்து பவித்ரபாணிகளா
யிருப்பது, பஞ்சகச்சபரிதாகபரர்களா யிருப்பது, ஜபதபங்களிலே ஊன்றியிருப்பது......இப்
படிப்பட்ட பெருமைகள் இவ்வகுப்பினரிடத்திலே குடிகொண்டிருப்பதை நாமறியாதவர்களல்
லோம். அறிந்திருப்பதோடு மாத்திரமில்லை; அன்னவர்களிடத்திலே கௌரவாதிசயமும்
ஆதராதிசயமும் ஹார்தஸ்நேஹமுங்கொண்டு "ஐயமும் பிச்சையுமாந்தனையும் கைகாட்டி"
என்கிறபடியே யதாசக்தி ஸத்காரத்தை இளமையிலிருந்தே செய்து வருகிறோம். விசேஷமாக
தனம் படைத்திலோமாகிலும், இப்படிப்பட்ட வைதிகர்களை ஸத்கரிப்பதில் ஆஸ்தையுடை
யோம் யாம் என்பதை யறிந்து வைதிகர்களும் வித்வான்களும் நம்மிடம் ஸத்காரம்வேண்டி
அடிக்கடி யெழுந்தருள்வதும், அவர்களை நாம் பரமப்ரீதியோடு நமது பாடசாலையிலே வைத்து
ஆதரிப்பதும், ஸத்கரிப்பதும், அப்படி ஸத்காரம் பெறுமவர்களில் இந்த வகுப்பினரே முக்கால்
... உள்ளபடி விஜ்ஞாபிக்கப்படுகிறது. இது உலகமறிந்த ...

இப்படிப்பட்ட நமக்கு இவ்வகுப்பினரிடத்திலே த்வேஷமிருக்க அணுமாத்ரமும் அவகாசமில்லை. ப்ராமாணிகர்களாய் வாழ்ந்து வீறுபெறவேண்டிய இவர்களில் சிலர் ஏதோவொரு காலவிசேஷத்தில் வம்புச் சண்டைகளிலே தலையிட்டுக் கோட்டை பிடிக்கப் பார்த்தார்கள் பெரு முயற்சி செய்தார்கள். அம் முயற்சி பலனளிக்காததோடு விபரீத பலன்களையும் விளைவித்தது. அதுகண்டு 'அநாவச்யகமான இந்த அதிப்ரவ்ருத்தி நமக்குத் தகாது தகாது தகாது' என்று கை யொழிந்து விலகி வாழ்ந்தவர்கள் பலர். அப்படி வாழகில்லாதே 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்னுமாபோலே கோவில் சண்டைகள் தீர்ந்தும் க்ரந்தச் சண்டைகளைச் சிலர் வளர்த்திக்கொண்டு போகிறார்களந்தோ!

ரஸகனமானவொரு திவ்யஸூக்தி கேளுங்கள். காஞ்சீபுரத்தில் ராமாநுஜதயாபாத்ரம் சொல்ல ஆரம்பித்தபோது இந்த வகுப்பினர்க்கு நூறும் இருநூறுமாய் அபராதங்களும். 144 செக்ஷன் தடை யுத்தரவுகளும் மற்றும் பலவிதமான கிலேசங்களும் நேர்ந்தபோது இவர்களில் சிலர் ஜகத்விக்யாத வித்வத்வரேண்ய சிஷ்டஸார்வபௌமரான ஸ்ரீமத்திருப்புட்குழியப் பாஸ்வாமியின் திருவடிவாரத்திலே சென்று "ஸ்வாமீ! நம்முடைய ப்ரவ்ருத்தி ஒன்றுகூட கைகூடி வரவில்லையே, என் செய்வது!" என்று சொல்லி யழுதார்களாம்; அதற்கு அந்த ஸ்வாமி ஸாதித்த ஸ்ரீ ஸூக்தியாம்—'வீணாக ஏதுக்கு அழுகிறீர்கள்? நம்முடைய மடிஸஞ்சிக்கும் மஞ்சள் ஸ்ரீ சூர்ணத்துக்கும் என்ன ஆபத்து வந்துவிட்டது. இவற்றுக்கு 144 ஆர்டரோ அபராதமோ விழாதே; நம்முடைய செல்வம் நீங்காத செல்வமன்றோ; அதற்கு ஒருகாலும் ஒரு குறையும் ...ராது, போங்கள்" என்று ஸாதித்தாச்சுதாம். அதுகேட்டு, விவேகிகளாயிருப்பாரெல்லாரும் பழையபடியே மடிஸஞ்சிகளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டார்களாம்.

'இவர்களுக்கு உற்றவாழ்ச்சி இதுவே. ஆனால், இது உபயோகமற்றவாழ்ச்சி யென்றும் காசுக்கு முதவாத வாழ்ச்சி' யென்றும் இவர்களாகவே மருள்கொண்டு, நப்பாசைகொண்டு படாத பாடுகள் படுகிறார்கள். அஸம்பத்தங்களை யெழுதி அநபிஜ்ஞர்களை மயக்கப் பார்க்கிறார்கள். எத்தனையுகம் எத்தனை பேர்கள் கூடி எத்தனை புத்தகங்களெழுதினாலும் தத்வார்த்தமொன்றே குன்றிவிட்ட விளக்காக விளங்கி நிற்கும். ப்ராமாணிகார்த்தங்களைப் பரக்கத் தெரிந்துகொள்ள வேணுமென்னும் வாஞ்சையுடையார்க்கு இவர்கள்மஹோபகாரம் செய்து வைக்கிறார்களென்று இவர்கள் திறத்து க்ருதஜ்ஞதாநுஸந்தானம் செய்வதே ஸத்புருஷர்களுக்கு ப்ராப்தம். இந்த மஹோபகாரகர்களால் அவதரிப்பிக்கப்பட்ட இந்த நிதியையும் பர்ஸ்வரனையும் பரிபூர்ணாநுபவம் செய்யவல்லார்க்குக் குறையொன்றுமில்லை.

"ப்ரஹ்மஸ்ருஷ்டி காலந்தொட்டுப் பரம்பரையாகத் தென்கலையா யிருந்தவர்கள் இந்த நூற்றாண்டிலே வடகலையாக மாறிவிட்டார்கள்" என்றெடுத்துக்காட்டி "இதனால் வடகலை மதந்தான் சிறந்ததென்று அறியலாம்" என்று ஒருபக்கத்திலே யெழுதுவதும், "அநாதிகாலமாக வடகலையா யிருந்தவர்களை ராமாநுஜரும் கூரத்தாழ்வானும் நிர்ப்பந்தப்படுத்தித் தெகலையாக மாற்றிவிட்டார்கள்; ஆகவே தென்கலை ஸம்பிரதாயம் நிர்ப்பந்தத்தினாலேயே பெருக்கடிக்கப்பட்டது" என்று மற்றொரு பக்கத்திலே யெழுதுவதுமாய் இப்படிப்பட்ட அஸங்கத ப்ரலபிதங்களாலேயே ப்ரதிபச்சுவடி பூரிக்கப் பட்டிருக்கிறதென்பதை நன்கு நோக்கினால், உன்மத்தரேயிவர் என்று அனைவருமறிவர்.

... ...

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஜகதாசார்யஸிம்ஹாஸநாதிபதி. மஹாவித்வாந்.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்

பலபல நூல்களினின்று தொகுக்கப்பட்ட

உபயவேதாந்தரஹஸ்யார்த்தங்கள் நிரம்பிய

ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸாரநிதி.

॥ श्रीः ॥

श्रीकाञ्चीवादिभीकृद्गुरुकुलतिलकैः श्रीमदण्णङ्गरार्यैः
स्वीयेषु ग्रन्थवृन्देष्वनवधि लिखितान् आगमान्तद्वयार्थान् ।
एकत्र न्यस्य सर्वान् विबुधसमुदयान् हर्षयेयं समन्तात्
इत्यौत्सुक्येन दिव्यां कृतिमतिमधुरां प्रापयेऽद्य प्रकाशम् ॥

लोकाचार्यवरोपयन्तृयमिराडाचार्यवर्यादृताः
अर्था एव शठारिलक्ष्मणमुनिश्रीकूरनाथादिभिः ।
स्वग्रन्थेषु समादृता इति यथा प्रामाणिकाः पण्डिताः
जानीयुर्विशदं तथा कृतिरियं संदर्शयिष्यत्यहो ॥

acharya.org

[முன்பக்கத்திலுள்ள மூன்று ச்லோகங்களின் தாத்பர்யஸாரம்.]

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தமது பலபல நூல்
களில் எல்லையில்லாதபடி யெழுதி யிருக்கின்ற உபயவேதாந்த ரஹஸ்யார்த்தங்களை [பல நூல்
களில் சிரமப்பட்டுக் காணவேண்டாதபடி] ஒரே நூலில் திரட்டிவைத்தால் விவேகிகள் எளி
தாக வாசித்து உண்மையுணர்ந்து மகிழக் கூடுமென்னுமவாவினால் அந்த ரீதியில் இப்போது
இந்நூல் வெளியிடப்படுகிறது. பிள்ளைலோகாசாரியராலும் மணவாள மாமுனிகளாலும்
வெளியிடப்பட்ட அர்த்தவிசேஷங்களே நம்மாழ்வார் எம்பெருமானார் கூரத்தாழ்வான்
முதலானோருடைய திவ்யஸூக்திகளிலுள்ளவை யென்னுமிடத்தை ப்ராமாணிகர்கள் விளக்க
மாகத் தெரிந்துகொள்ளும்படி இந்நூல் விவரித்துக் காட்டும். நவீந வைஷ்ணவர்களென்று
அறுதியிடப்பட்ட வகுப்பினரால் சொல்லப்படும் அர்த்தங்களெல்லாம் தவறானவை யென்பது
இந் நூலினால் நன்கு தேறும். [நவீனர்களென்பது இன்னாரென்னுமிடம் மேலே
விவரிக்கப்படும்.]

1. ஸ்ரீலோகாசார்ய ஸ்ரீவரவரமுநீந்த்ர ஸித்தாந்தத்தின் அடிப்படையைப்பற்றி.

1. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ஒரு திறவுகோலும், தென்னாசார்ய ஸித்தாந்
தத்திற்கு ஒரு திறவுகோலும் முக்கியமாகத் தெரிந்துகொள்ளத்தக்கவை. சரீராத்மபாவம் என்
பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத் திறவுகோல். 'ஸர்வேச்வரன் ஸகல சேதநா சேதநங்களையும்
சரீரமாகக் கொண்டவன்' என்கிற உண்மையைச் செவ்வனே தெரிந்துகொள்ளும் வேதாந்திக்கு
ஸகல உபநிஷத் வாக்யங்களும் எளிதாக அந்வயித்துவிடும், ஒன்றிலும் ஒரு அவத்யமும்
தோன்றமாட்டாது—என்பது சீரியதோர் கொள்கை. இதை நன்கு தெரிந்துகொண்ட வித்வான்
முன்னிலையில் எந்த மதாந்தரஸ்தனும் பங்கமடைந்தே தீர்வன் என்கிறார் ஸ்ரீ வேதாந்ததேசிகன்
* யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் * இத்யாதியான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ச்லோகத்தினால்.

"यद्येतं यतिसार्वभौमकथितं विद्यादविद्यातमःप्रत्यूषं प्रतितन्त्रमन्तिमयुगे कश्चिद्विपश्चित्तमः ।
तत्रैकत्र झटित्युपैति विलयं तत्तन्मतस्थापनाहेवाकप्रथमानहैतुककथाकल्लोलकोलाहलः ॥"

என்கிற அந்த ச்லோகரத்நம் விசிஷ்டாத்வைதிகளுக்கு நித்யாநுஸந்தேயமாகக் கடவது.

2. அதுபோல, ப்ரக்ருதத்தில் "எந்த விதத்திலும் எம்பெருமானுடைய பெருமையி
லேயே முழுநோக்கு" என்பதே தென்னாசார்ய ஸித்தாந்தத்தின் ஸாரம் என்று தெரிந்து
கொள்ளவேண்டும். இதுவே இந்த ஸம்பிரதாயத்திற்குத் திறவுகோல். இதர ஸம்ப்ரதாயங்
களில் சேதநனுக்கே ஆதிக்யம் தெரியவரும். இந்த ஸம்ப்ரதாயத்தில் அப்படியன்றிக்கே
ஸர்வேச்வரனுக்கே ஸர்வாத்மநா ஆதிக்யம் தெரியவரும். இதனை நன்கு தெளிவிக்கின்றேன்.
இந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஒருதடவை நமஸ்காரம் செய்வதென்றும் பிறர் பலதடவை நமஸ்காரம்
செய்வதென்றும் காண்கின்றது. பகவானை நமஸ்கரிப்பதென்பது மிகச் சிறந்ததொரு காரியமே.
இதனை ஒருதடவைக்குப் பலதடவையாகச் செய்தால் நல்லதல்லவென்று யாரேனும் நினைக்க
முடியுமோ? நமஸ்கரிப்பவனுடைய கரணக்ராமமும் க்ருதார்த்தமாய், நமஸ்கரிக்கப்படுபவனான
எம்பெருமானுடைய திருவுள்ளமும் ஸுப்ரஸந்நமாவதற்கு உறுப்பான காரியமன்றோ இது.
அப்படியிருக்க, ஒருதடவைதான் நமஸ்காரம் செய்ய வேணுமென்று ஒரு விரதமாகக் கொண்
டிருக்கவேண்டிய அவசியம் என்ன? என்று ஒவ்வொரு விவேகிக்கும் இந்த சங்கை தோன்றும்.

3. இங்குத் தென்னாசார்யர்களின் திருவுள்ளம் கேண்மின். நம்மைப் பார்த்தால் நமஸ்
எத்தனை தடவை நமஸ்கரித்தாலும் போராது. எம்பெருமானைப் பார்த்தால் ஒரு தடவை நமஸ்
கரிப்பதும் மிகையாகும். அப்பெருமான் கீதை முதலியவற்றில் தன்னை அல்ப ஸந்துஷ்டனாகச்
சொல்லிக்கொள்ளுகிறான். * பத்ரம் புஷ்பம் பலம் தோயம் * இத்யாதிகள்
மொழிகளாகக் காண்கி

அவனுடைய பெருமையைப் பேசுமிடத்து *தொழுது மாமலர் நீர்சுடர் தூப்
[illegible]மென்னுமிது மிகையாதலின் * என்றும், *தொழக்கருதுவதே துணிவது சூதே
[illegible] புடைகளிலே அருளிச்செய்கிறார்கள்.

"भूयिष्ठां ते नमउक्तिं विधेम" * (பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம) என்கி
[illegible] வாக்யத்திற்கு "தே பூயிஷ்டாம் நம உக்திம் விதேம" என்று அந்வயம் காட்டி 'ந
[illegible]றும் சொல்லுவதும் எம்பெருமான் திவுருள்ளத்தாலே மிகக் கனத்ததாகும்' என்
[illegible]கள் அர்த்தம் செய்தருளுகிறார்கள். பட்டர் * அஞ்ஜலிபரம் வஹதே * என்கிறார். நா
[illegible] செய்துவிட்டாலும் அது அத்தலைக்குப் பெரிய பளுவாகத் தோன்றுமென்பன
[illegible]மென்றார். ஆகவே ஸ்வாராதனன [ஆராதனைக்கு எளியனன] எம்பெருமா
[illegible] நாம் பலகால் விழுந்தெழுந்தால் அவன் திருவுள்ளம் என்னுகுமோ ? 'நம்மையு
[illegible]களைப்போலே நினைத்துவிட்டார்கள் போலும்!' என்று அவன் திருவுள்ள
[illegible]மோ என்னவோவென்று அஞ்சி, "ஆராதனைக்கெளியன்" என்கிற அவனுடை
[illegible] குறைவு வாராதபடி நடந்து கொள்வோமென்றே நமஸ்காரத்தில் [illegible]
[illegible] வில்லை.

[illegible] ஸக்ருத் ப்ரணும விஷயத்தில் சாஸ்த்ர ஸரணியில் தெரிவிக்கவேண்டி
[illegible]ண்டு; அவை மேலே தெரிவிக்கப்பெறும். தென்னுசார்ய ஸம்பிரதா
[illegible] அடிப்படையின்மீது நிற்கிறதென்பதை மூதலிக்கவே இவ்விஷயம் மூந்
[illegible]படுகிறது. நாம் சேதநராகப் பிறந்திருக்கிற வாசிக்கு ஏதோ சைதந்ய கா
[illegible] செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்; இது கார்யகரமேயன்று, அவன் [illegible]
[illegible]மே கார்யகரம்; அது நம்முடைய ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமடிய
[illegible]; ஆகிஞ்சந்யத்துக்கு எதிராக அதிக ப்ரவ்ருத்திகளைக் காட்டினோமாகில் ந
[illegible]ஷ்டாநம் செய்கிறோமாகத் திருவுள்ளம்பற்றி எம்பெருமான் கைவாங்கி நி
[illegible] அவன் உதாஸீநனகைக்கு நாம் அவகாசம் கொடுக்கலாகாது.

[illegible]யாநுஷ்டானங்கள் செய்யும்படி அவனே சாஸ்த்ரங்களில் விதித்திருக்
[illegible]றை யதேஷ்டமாக நாம் செய்தாலென்ன ? செய்யவேண்டியதுதானே என்று பி
[illegible] தென்னுசார்யர்கள் அங்ஙனம் நினைப்பவர்களல்லர். *நெறிகாட்டி நீக்குதியோ
[illegible]வார் அருளிச்செய்தபடி, தன்னைவிட்டு நீக்குவதற்காக (நம்மை நன்கு சோதி
[illegible] காட்டின வழிகளிலே நாம் கிடந்து துவளலாகாது; *காம்பறத்தலைசிரை,
[illegible] யிருந்து வாழுஞ் சோம்பரை யுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே* எ
[illegible]பாடியாழ்வாரருளிச் செய்தபடி திண்ணிதான அத்யவஸாயங் கொண்டி
[illegible] — என்கிற உறுதி தென்னுசார்யர்களின் கருவிலேயே ஊறிக்கிடப்பதாகும்.

[illegible]ன்னையினுடைய திவ்ய ஸூக்திகளிலே இரண்டொன்றை இங்கெடுத்
[illegible]த்தை நெஞ்சில் பதிய வைக்கின்றேன். திருவாய்மொழியில் *பத்துடைய
[illegible] பிறர்களுக்கு அரிய வித்தகன்* என்ற விடத்து ஈட்டில் — "நம்முடையவர்
[illegible] உபாயமாகப் பற்றுநிற்க, அல்லாதார் அசேதந க்ரியாகலாபங்களைப் ப
[illegible]ற துர்யோதனன் நிலை" என்றுள்ளது. இதனுல் நம்முடையவர்கள்படி
[illegible]யும் அறியத்தக்கது. மேலே அந்தப் பதிகத்திற்கு அடுத்த பதிகத்
[illegible]ழைத்தாள் திருவடியின் தகவினுக்கு * என்ற விடத்து ஈட்டில் — "தே
[illegible]ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்
[illegible]யருளிச்செய்யும்படி" என்றுள்ளது. இந்த ஸ்ரீஸூக்தியை நன்கு [illegible]
[illegible] எம்பெருமானிடத்தில் அறுவிடுகிற ப்ரகரணம் இது. [illegible]
[illegible]த்திருக்கிறிரென்று கேளுங்கோரென்று இங்கே [illegible]

ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்வது- எம்பெருமானுடைய க்ருபைக்கு ப்ரதிபந்தகம் எ
ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. இப்படி யருளிச்செய்திருக்கிற நம்பிள்ளை பகவத்ஸந்நிதி
ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்திருக்கமாட்டாரா? செய்திலர் என்றால் இதை யாரேனும்
நம்பமுடியுமா? அது சாஸ்த்ரார்த்தந்தானாகுமா? எதற்காக இங்ஙனே நம்பிள்ளை யருளிச்செய்
தார்? என்று விவேகிகள் விமர்சிக்கவேண்டுமன்றோ? விமர்சித்தால், அதிகப்ரவ்ருத்தி அவத்ய
மென்றதாகத் தேறும்.

8. சிறிய திருமடலில், "செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்குத் தான் பின்னும்
நேராதனவொன்று நேர்ந்தாள்" என்றவிடத்துப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான
ஸ்ரீஸூக்தியையும் சேர்த்து முன்னேகாட்டிய நம்பிள்ளை ஸ்ரீஸூக்திக்கு அர்த்தம் செய்யுமள
வில் தென்னாசார்யர்களின் திருவுள்ளம் நன்கு புலப்படும். உபாயகோடியில் எள்ளளவும் அந்வயி
யாமல் ஸ்வரூபத்தளவிலே நிற்கும்படி சில செய்வதே உற்றது; எதையேனும் அதிகப்படி
யாகச்செய்தால் அது உபாயகோடியிலே அந்வயித்து ஆகிஞ்சந்யத்தைக் குலைத்து எம்பெருமா
னுடைய திருவருளுக்கு இடையூறாக நிற்குங்கொல்! என்கிற அதிசங்கை இவர்களுக்கு உள்ள
தென்னுமிடம் விளங்காநின்றது. எந்த விஷயத்திலும் சாஸ்த்ரங்கள் ஒரு வழியையே காட்ட
மாட்டா; பல வழிகளையும் காட்டி நிற்கும். ஒவ்வொரு அதிகாரிகள் ஒவ்வொரு வழியைப்பற்றி
நிற்பது ஸஹஜம். ... ...

2. ஸக்ருத்ப்ரணமத்தைப்பற்றி.

9. கீழே விவரித்தபடி ஸத் ஸம்ப்ரதாயத்தில் ஒரு தடவை நமஸ்கரிப்ப தென்றுள்
ளது. 'பலமுறை நமஸ்காரம் செய்வதனால் ப்ரத்யவாய முண்டோ? நமஸ்காரம் என்பது
நல்ல காரியமேயொழிய கெட்ட காரியமன்றே. பகவத் பாகவத விஷயங்களில் ஒரு தடவைக்குப்
பல தடவையாக நமஸ்கரிப்பதனால் ஸ்வரூபம் நிறம்பெறுமே யல்லது கெட்டுப்போய் விடாதே.
ஆகவே ஒரு தடவையே நமஸ்கரிக்க வேணுமென்று ஒரு நிபந்தனை கொள்ளவேண்டுமோ? பல
தடவை நமஸ்கரிக்கக் கூடாதென்று சாஸ்த்ரம் மறுக்குமோ? அப்படி சாஸ்த்ரம் மறுத்திருப்ப
தாகவும் தெரியவில்லையே. தேஹத்தில் சக்தியற்றவர்கள் ஒரு தடவையோ அரை தடவையோ
நமஸ்கரிக்கட்டும்; சக்தியும் உத்ஸாஹமுமுள்ளவர்கள் பலமுறை நமஸ்கரித்தால் அதைக்
குற்றமாகக் கொள்ளும்படி ஒரு ஸம்ப்ரதாயம் இருக்கத்தகுமோ?' என்றிங்ஙனே சங்கைகள்
தோன்றக் கூடியவையுள. இதில் நம் ஆசாரியர்களின் திருவுள்ளத்தை விளங்கவுரைக்கிறோம்
கேண்மின். எந்த விஷயத்திலும் சாஸ்த்ரங்களின் போக்கு உச்சாவசமாயிருக்கும். "மறைப்
பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து" என்னுமா போலே நூற்கடலை நன்கு
கடைந்து நுண்பொருள்களைக் கடைப்பிடித்துப் பரமாசாரியர்கள் காட்டியருளின அனுஷ்டா
னமே பரம சாஸ்த்ரம். ஸக்ருத் ப்ரணம விஷயத்தில் என்ன நுண்பொருள் காணலாகும்?
என்னில்; கேண்மின். நமஸ்காரத்தின் ப்ரயோஜனம் என்ன? என்பதை முந்துற முன்னம்
விமர்சிப்போம். * नन्तृनन्तव्यभावोऽयं न प्रयोजनपूर्वकः। नीचोच्चयोस्स्वभावोऽयं नन्तृनन्तव्यतात्मकः॥ *
என்று அஹிர்புத்ந்யஸம்ஹிதையிலுள்ள வசனத்தை தேசிகன் முதலானோர்களும் எடுத்துக்
காட்டியுள்ளார்கள். பெரியாரைக் கண்டால் சிறியார், தங்களுடைய சிறுமைக்கும் எதிர்த்
தலையின் பெருமைக்கும் ப்ரதர்சகமாக நமஸ்காரம் செய்யவேணு மென்றது. வேறொரு ப்ர
யோஜனமும் இதற்கில்லை யென்றும் சொல்லிற்று. ஒருகால் தொழுத மாத்திரத்தினால்ஸ்வநிகர்
ஷமும் பரோத்கர்ஷமும் ப்ரதர்சிதமாயிற்று. பலகால் தொழவேணு மென்கிற நிர்ப்பந்தத்திற்கு
ப்ரஸக்தியில்லை.

10. சாஸ்த்ரங்களில், ஒற்றைக் கையால் நமஸ்கரிப்பது அபசாரம், ஒரு ப்ரதக்ஷிணம்
...ண்ணுவதை அபசாரம் என்று சொல்லியிருப்பது போல ஒருமுறை நமஸ்கரிப்பது அபசா[ரம்]
...ன்று சொல்லப்படவில்லை. * एकेन पाणिना यस्तु प्रणमेत्पुरुषोत्तमम्। न्याय्यस्तस्य करच्छेद...
...विदुः॥ ... * एकहस्तप्रणामश्च एक... [illegible]

11. ஸ்ரீ பரதாழ்வான் இருச்சித்திரகூடத் தேறச்சென்று பெருமாளுடைய பாதுகை
களைப் பெற்றுக்கொண்டு மீண்டுவரும் வழியில் பரத்வாஜாச்ரமத்திலே யிறங்கிப் பாதுகா
ப்ராப்தியை விஜ்ஞாபித்துவிட்டு மஹர்ஷிபக்கல் விடைபெற்றுக்கொள்ள வேண்டி அவரை
நமஸ்கரித்துப் ப்ரதக்ஷிணஞ் செய்து புறப்பட்டானென்பதை ஸ்ரீ ராமாயணத்தில் அயோத்யா
காண்டத்தில் நூற்றுப் பதின் மூன்றும் ஸர்க்கத்தில் 18, 19 ச்லோகங்களில் சொல்லும்
போது, * आमन्त्रयितुमारेभे चरणावुपगृह्य च । ततः प्रदक्षिणं कृत्वा भरद्वाजं पुनःपुनः * [பரதாழ்வான்
பரத்வாஜரை நமஸ்கரித்து விட்டுப் பலமுறை பிரதக்ஷிணஞ் செய்தான்] என்று சொல்லப்பட்
டுள்ளது. அவ்விடத்து வியாக்கியானஞ் செய்த கோவிந்தராஜர் "நமஸ்காரம் ஒரு முறை
செய்கிற ஸம்பிரதாயமும், ப்ரதக்ஷிணம் பலமுறை செய்கிற ஸம்பிரதாயமும் இவ்விடத்தில்
நன்கு வெளியிடப் பட்டதாயிற்று" என்று பொருள்பட ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதி யிருப்
பதை அனைவரும் காண்கிறோம்.

12. எம்பெருமானார் ஸ்ரீ வைகுண்ட கத்யத்தில் * प्रणम्य उत्थायोत्थाय पुनःपुनः प्रणम्य *
[தொழுது எழுந்தெழுந்து மீண்டும் மீண்டும் தொழுது] என்றருளிச் செய்திருக்கும் விஷயத்
தில் தெளிவு பிறப்பிக்கிறோம். இங்கு "ப்ரணம்ய உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய"
என்றது ஓரிடத்திலேயே இருந்துகொண்டு பலமுறை நமஸ்கரிப்பதைச் சொல்லுவதன்று.
அந்த வாக்கியத்திற்கு முன்னே "दूरादेव - தூராதேவ" என்றருளிச் செய்திருப்பதனால்,
எம்பெருமானைக் கிட்டுமளவும் காலால் நடந்து செல்லாமல் தெண்டனிட்டுக்கொண்டே வழி
யைக் கடந்து ஸ்ரீமந் நாராயணனை அணுகுவதாகவே அங்குப் பொருள்படும். இக்காலத்தில்
இந் நிலத்தில் அஸக்ருத்ப்ரணமகர்த்தாக்கள் செய்வது போன்ற செயல் அங்கு விவக்ஷிதமன்று.
தெண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டே போய் வழியைக்கடந்து எம்பெருமானைக் கிட்டினபிறகு
அங்கு ஒரே தடவை நமஸ்கரிப்பதென்னுமது அவ்விடத்திலேயே அடுத்தபடியாகச் சொல்லப்
பட்டிருக்கிறது. "याचमानः प्रणम्य आत्मानं भगवते निवेदयेत्—யாசமாந: ப்ரணம்ய ஆத்மாநம்
பகவதே நிவேயேத்" என்று அந்த வாக்யஸமாப்தியுள்ளது காண்க. இங்ஙனல்லாமல் ஓரிடத்
திலேயே நின்றுகொண்டு பலமுறை தொழுவதைத்தான் "உத்தாயோத்தாய புந:புந: ப்ரணம்ய"
என்கிற வாக்கியம் சொல்லுகிறதென்று கொண்டாலும் குறையொன்றுமில்லை. * न शास्त्रं नैव
क्रमः—ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:* என்கிற ரீதியிலே நூல்வரம்புக்கு அடங்காத அவ்வியூதி
யிலே நிகழுமது கொண்டு என்ன ஸாதிக்கலாகும்? இந் நிலத்தில் நம்பூருவாசார்யர்களின்
அநுஷ்டானம் ஸக்ருத் ப்ரணமமே யென்பதை அந்த எம்பெருமானார் தாமே ஸ்பஷ்டமாகக்
காட்டியுள்ளபடி பாரீர். அவ்வாசிரியர் திருவாராதனக்ரம மருளிச் செய்கிற நித்யக்ரந்தத்தில்—
"आराधनाभिमुखो भवेति मूलमन्त्रेण प्रार्थ्य मूलमन्त्रेण दण्डवत्प्रणम्य उत्थाय स्वागतं निवेद्य पाद्यादि-
धनसमाप्ति सान्निध्ययाचनं कुर्यात्" என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தமிறே. இது கொண்டு
ஸ்ரீ வைகுண்டகத்ய ஸ்ரீஸூக்தியின் பொருளை நாம் விவரித்தபடியே தெளிய ப்ராப்தம்.

13. ஸ்தோத்ர ரத்நத்தில் இருபத்தோராம் ச்லோகத்தில் 'நமோ நம; நமோ நம:' என்று
பலகால் அருளிச் செய்திருப்பதை ஸமந்வயப் படுத்தத் திருவுள்ளம் பற்றிய தேசிகர் அவ்
விடத்து ஸ்தோத்ர பாஷ்யத்தில், * प्रशंसायां प्रतिज्ञायां प्रलपे तर्जनेऽपि च । भये च विजये चैव
पौनःपुन्यमलंकृतिः * என்கிறவொரு ச்லோகத்தை யெடுத்துக் காட்டியுள்ளார். இந்த ச்லோகத்
தின் பொருளை விவேகிகள் விமர்சிக்கவேண்டும். ஸ்தோத்ரம் செய்தல், ப்ரதிஜ்ஞை செய்தல்,
அழுதல், வெருட்டுதல், அச்சந்தோற்றச் சொல்லுதல், வெற்றி தோற்றச்சொல்லுதல் முதலிய
ஸந்தர்ப்பங்களில் ஒருசொல்லையே அடுத்தடுத்துச் சொல்வதானது ஒருவகையான அலங்கார
மாகும் என்பது இந்த ச்லோகத்தின் பொருள். உலகத்தில் இதை நாம் நன்றாகக் காண்கிறோம்.
'பாம்பு பாம்பு பாம்பு' என்று பலமுறை சொன்னாலும் உள்ளது ஒரு பாம்பே யல்லது பல
[illegible] பல்லாயிரக்கணக்கில் பலகோடி

தற்கு என்ன அர்த்தமோ அந்த அர்த்தமேயன்றோ தேறுவது. அப்படியே, * தொழுது தொழுது * என்று எத்தனை பர்யாயம் சொன்னாலும் அலங்காரமேயாகுமென்று தேசிகர் தாமே ஸ்பஷ்டமாக நிர்ணயித்தான பின்பு நமக்கென்ன ச்ரமமுள்ளது.

14. இவ்விஷயத்தில் இனிதாக வொன்று கேளீர். பல முறை நமஸ்கரிப்பதை ஆசாரத்தில் தூஷணஞ் சொல்வதோ வெறுப்புக்கொள்ளுவதோ விவேகிகளுக்கு உரியதன்று. அது நல்லகாரியமேயல்லது கெட்டகாரியமன்று. அதிகாராநுகுணமாக அதுவும் சாஸ்த்ரார்த்தமாகும். ஸ்ரீவைஷ்ணவஸதாசார்ய பரம்பரையில் ஸக்ருத் ப்ரணாமாநுஷ்டானம் நிகழ்ந்து வருவதற்குண்டான உபபத்திகளை நிரூபித்தோமத்தனை. அதிகாராநுரூபமாக அநுஷ்டான பேதங்கள் எங்குமுண்டாகையாலே, பிறருடைய அதிகாரம் வேறுபட்டதாகி அதற்கிணங்கின அநுஷ்டானம் நிகழ்ந்துவாரா நின்றதென்றால் இதில் பிணக்கு என்? இரண்டு படியாகவுமுள்ள சாஸ்த்ரார்த்தங்களை இருவகை வகுப்பினரையுங் கொண்டு எம்பெருமான் அநுஷ்டிப்பித்துப் போருகிறானென்பதே ப்ராமாணிகர்கள் கொண்ட துணிபு. ... ...

3. பகவத்க்ருபை நிர்ஹேதுகமென்பதுபற்றி.

பகவத்க்ருபை நிர்ஹேதுகமா? ஸஹேதுகமா? என்பது ஒரு விசாரம். ஸஹேதுகமென்று நவீநர்களின் வாதம். நிர்ஹேதுகமென்பது தேசிகனுட்பட ஸகலாசார்ய ஸித்தாந்தம்.

15. நமது நற்குண நற்செய்கைகள் காரணமாக எம்பெருமானுடைய திருவருள் தோன்றுகின்றதென்று ஒப்புக்கொண்டால் ஸஹேதுகம் என்றதாகும். அப்படியல்லாமல் அது தோன்றுகின்றதென்று ஒப்புக்கொண்டால் நிர்ஹேதுகம் என்றதாகும். பகவத்க்ருபை தோன்றுகின்றதென்று எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? அப்படி தோன்றுவதானால் எல்லார் விஷயத்திலும் தோன்றலாமே. அருளுக்கு இலக்காகாதார் ஒருநாளும் ஒருவரும் இல்லாதபடியன்றோ இருக்கவேண்டும். அப்படி காணாமையாலும், சில காலவிசேஷங்களை சில அதிகாரிகள்மீது மாத்திரம் அருள் தோன்றக் காண்கையாலும் அப்போது ஒரு ஹேதுவை முன்னிட்டுத் தோன்றினதாகவே கொள்ளவேணும். ஆகவே அருள் ஸஹேதுகமே யல்லது நிர்ஹேதுகமென்கைக்கு ஔசித்யமில்லை என்று சங்கிக்கக்கூடும். இங்கு உண்மையென்னவென்றால் :—

16. அவனது மிகக் கனத்த அருளுக்கு ஹேதுவாக நம்மிடத்தில் என்ன சரக்கு உள்ளதென்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு அணுமாத்திரம் கிடைக்கக்கூடும். விஷயப்ரவணராய் காம் வேசிகளைப் பின் தொடர்ந்து அடிக்கடி கோவில்களிலே நுழைந்து புறப்பட நேரும். முடைய வயலில் பட்டி மேய்ந்த பசுவை அடிப்பதாகத் துரத்திக்கொண்டுபோம்போது அது ஒரு கோவிலை ப்ரதக்ஷிணஞ் செய்துகொண்டு ஓடுகிற வளவிலே அதை விடமாட்டாத ஆக்ரஹத்தாலே நாமும் அக்கோவிலை வலஞ் செய்து போகக்கூடும். சிசுபாலாதிகளைப் போலே நிந்தை செய்வதற்காக அடிக்கடி பகவானுடைய நாமங்களைச் சொல்லக்கூடும். இவ்விதமாகச் சில ஸுக்ருத விசேஷங்கள் காரணமாக எம்பெருமானருள் நம்மீது தோன்றிற்றென்றால் இதைக் கொண்டு ஸஹேதுகமென்று சொல்லிவிடலாமோ? கொடிய தண்டனைக்குரிய பாவங்களையன்றோ நாம் செய்திருப்பது. இதில் அதிஸ்வல்பமான ஸுக்ருதம் கலந்திருப்பதுகொண்டு எம்பெருமான் அருள் செய்தானென்றால் அநுக்ரஹோந்முகனான அவன் திருவுள்ளத்தால் ஸஹேதுகமானால் ஆகலாம். "எங்கன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" "என்னுணர்வினுள்ளேயிருத்தினேன் அதுவுமவன தின்னருளே" "வெறிதேயருள் செய்வர்" என்றிவை போலும் பாசுரங்களை யநுஸந்திக்கப் பிறந்த நம் சினைவால் நிர்ஹேதுகமேயாகக் கடவது.

17. நம்மிடத்தில் சில ஆத்ம குணங்கள் இருந்தாலுங்கூட அவற்றை அஸத்கல்பமாக நினைத்து * அமர்யாத: க்ஷுத்ர: சலமதிரஸூயாப்ரஸவபூ: * "அவிலாத தீவினைகளைத்தனை செய்தனன் கொல்" * பாவமே செய்து பாவியானேன் * என்று அநுஸந்திக்க வேண்டியதாகையாலே பகவத்க்ருபைக்கு உபாயமாக ...

...ஸித்திக்கவும் ப்ராப்தமாகையாலே நிர்ஹேதுக மென்கிற ஸித்தாந்தமே நிலை நிற்கும். ' எம்பெருமானருளாகிற மிகச் சிறந்த பலனுக்கு இந்த ஹேதுக்கள் ஸத்ருசமன்று ' என்று சொல்ல ...மே தவிர, நிர்ஹேதுகமென்றே சொல்லிவிடலாகுமோ? என்று ஆக்ஷேபங்கள் விளைவ...டு. அறிவுடையார் அங்ஙனமேதான் சொல்லா நின்றார்கள்.

18. திருவாய்மொழியில் முதற்பத்தில் பத்தாந் திருவாய்மொழியில் எம்பெருமா...னுடைய நிர்ஹேதுக கருணையை ஆழ்வார் அநுபவித்து ஈடுபடுவதாக நன்கு விளங்குகின்றது. ...தேசிகனும் அவ்விடத்திற்கு * அவ்யாஜோதாரபாவாத் * என்றுதான் ச்லோகமிட்டருளினார்.

19. ஸ்ரீவசநபூஷணம் நான்காவது ப்ரகரணம் ஆரம்பம்— " த்ரிபாத் விபூதியிலே ...பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க....... என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் ...அடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்...தாய் என்னுமா போலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு...... ஐந்ம பரம்பரைகள் ...தோறும் யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்...துக்கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும் " என்று ஆச்சரிய...மான சூர்ணிகையொன்றில் எம்பெருமானுடைய விஷயீகாரத்தின் பரிசு வெகு அழகாக நிரூபிக்...கப்பட்டுள்ளது. இந்த ஸ்ரீஸூக்தியின் சுவடறிந்த தேசிகன் இப்பொருளை அப்படியே அமைய வைத்துப் பரமபத ஸோபாநத்தில் பணிப்பதாவது. " அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்ய புத்தி ... ஸுக்ருத விசேஷங்களை வ்யாஜமாகக் கொண்டு விசேஷ கடாக்ஷம்பண்ணி " என்று.

20. இவ்விஷயத்தில் ஸாரமாகச் சொல்லுவதாவது—எம்பெருமானை வசீகரிப்பதற்கு உபாயமாக சாஸ்த்ரங்களில் கர்மஜ்ஞான பக்தி ப்ரபத்திகள் கூறப்பட்டுள்ளனவென்பது ப்ரஸித்தம். சேதநர்களை ரக்ஷித்தருள்வதில் இயற்கையாகவே ருசியுடையனான எம்பெருமான் * ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே * என்கிறபடியே இத்தலையில் சிறிது எதிர்பார்க்கிறானென்று சொல்லிவைத்தது ஒரு பக்கத்தில். எம்பெருமானுடைய திருவாக்கைப் பார்த்தாலோ * நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந * என்று காண்கிறது ;—" நான் புருஷகாரத்தைக்கொண்டும் கடாக்ஷிப்ப தில்லை, வேறு எந்த ஹேதுவை யிட்டும் கடாக்ஷிப்பதில்லை ; என்றைக்கோ வொருநாள் யாரோ வொரு அதிகாரியை என் இச்சையினாலேயே நான் கடாக்ஷிப்பேன் " என்பது மேலே காட்டின ச்லோகத்தின் பொருள். இங்ஙனம் பேசுகின்ற எம்பெருமானது திருவருளை ஸஹேதுகமென்று நினைக்க நாமார்? நம்மக்கல் கைம்முதல் கொண்டே எம்பெருமான் நம்மைக் காத்தருள்கின்றா னென்று கொள்வது ஹேயமாகும். * மருவித்தொழும் மனமே தந்தாய் * * என்னைத் தீ மனங் கெடுத்தாய் * என்கிற அநுஸந்தானம் அக்ருத்ரிமமாகக்கடவது. ... ...

4. ப்ரபத்தி அநுபாயமென்பதுபற்றி.

ப்ரபத்தி உபாயமா அன்றா என்பது ஒரு விசாரம். உபாயமென்பர் நவீனர் ; உபாயமன்றென்பர் தேசிகாதிகள். கீழே பகவத் க்ருபையின் நிர்ஹேதுகத்வ நிரூபணம் பண்ணினது கொண்டே ப்ரபத்தின் அநுபாயத்வமும் நிஷ்கர்ஷிக்கப்பட்டதாகும். மேலும் தனிப்படவும் நிரூபிக்கப் படுகிறது.

21. ' கடையில் சென்று எண்ணெய் வாங்கிக்கொண்டுவா ' என்று கட்டளையிடப் பெற்ற வொருவன் அது வாங்கக் கோணியையோ கூடையையோ எடுத்துக்கொண்டு புறப் பட்டானாகில் ' எண்ணெயின் ஸ்வரூபத்தையே இவன் தெரிந்துகொள்ளவில்லை போலும் ' என்று நினைக்கத் தடையில்லையன்றோ. அதுபோல, ப்ரபத்தி உபாயமென்று சொல்லுபவரு...

22. ப்ரபத்தியாவது என்ன?* த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: ஶரணாகதி என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. எம்பெருமானையே உபாயமாக அத்யவஸிக்குமதுவே யென்பது. இத்தகையதான ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வத்தை எங்ஙனே கொள்ளக்கூடும்? ப்ரபத்தி யென்கிற வஸ்து தேறும்போதே அதன் அநுபாயத்வமும் தேறியே இருக்கும்.

23. இதை தேசிகன் வெகு அழகாக நிரூபித்தருளுகிறார்; ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஜீவ பரிச்சேதத்தில்—

* இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா,
ஸ்வஹேதுத்வதியம் ருந்தே கிம்புநஸ் ஸஹகாரிணம் *

என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளில் தலையானது. எம்பெருமானொருவனையே உபாயமாகக் கொள்வதாகிற இந்த ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வ புத்தியைத் தடைசெய்கின்றது: ப்ரபத்திக்கே உபாயத்வ மில்லாதபோது அதன் ஸஹகாரிகளானவற்றுக்கு அது இல்லை யென்னுமிடம் தனிப்படச் சொல்ல வேணுமோ? என்பது இந்த ச்லோகார்த்தம்.

24. சாஸ்த்ரங்களில் ஒன்று விதிக்கப்படுமானால் அது உபாயமாக (ஸாதனமாக) இருந்து தீரும் என்பது பொதுவான வொரு கொள்கை. உபாயமாக மாட்டாததை சாஸ்த்ரம் எதற்காக விதிக்கும்? எப்போது விதி ஏற்படுகிறதோ அப்போது விதிக்கப்படுகின்றவதின் உபாயத்வமும் கூடவே ஸித்திக்குமாதலால் சரம ச்லோகத்தில் * மாம் ஏகம் சரணம் வ்ரஜ * என்று விதிக்கப்படுகிற ப்ரபத்திக்கு உபாயத்வம் அநிவார்யம்—என்று பிறர் நினைக்கக்கூடியதுண்டு. இதையும் ந்யாஸ திலகமென்கிற க்ரந்தத்தில் தேசிகரே எடுத்துக்காட்டி அழகாக ஸமாதானமும் வருத்துள்ளார். * ஹேதுர் வைதே விமர்சே * என்கிற ச்லோகம் காண்க. இதன் கருத்தாவது—ப்ரபத்தியானது விதிக்கப்பட்டிருப்பதனால் உபாயமென்று சொல்லவேண்டியிருந்தாலும் இங்கு அப்படி கொள்ளவேண்டா; ஒவ்வொரு வித்யையிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு ரூபம் அறியக்கடவதா யிருக்கிற கணக்கிலே இந்த ப்ரபத்தி வித்யையில் இதராநபேக்ஷ உபாயத்வம் (பிறிதொன்றை எதிர்பாராத உபாயத்வம) அறியத்தக்க ரூபமாதலால்—என்று இந்த ச்லோகத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

25. இங்கு மற்றொரு வாதம். ஸித்தோபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் உபாயம் இருவகைப்படும். எம்பெருமான் ஸித்தோபாயமானாலும் ஸாத்யோபாயமாக ஒன்றை ஸ்வீகரித்தே யாகவேண்டுமென்பர் நவீநர்; இதற்கு அறிவிக்கப்படும் ஸமாதானமாவது—ஸாத்யோபாயமென்றால் "சேதநனுடைய முயற்சியால் ஸாத்யமான உபாயம்" என்று தானே பொருளாகும். உண்மையில் இது சேதநக்ருதியாலே ஸாத்யமானதா? என்று ஆராய்ந்தால் மேலெழ வாரியில் அப்படிச் சொல்லலாமாயினும் * இசைவித்தென்னை யுன்தாளிணைக் கீழிருத்தும் அம்மானே * என்பது போன்ற பல பாசுரங்களைக்கண்டால் இது நம்முடைய முயற்சியால் ஸாத்யமன்றிக்கே ஸர்வேச்வரனுடைய க்ருஷிபலமாகவே விளையுமதாக உண்மை தெரிவதால் ஸாத்யோபாயமென்கிற வ்யபதேசமும் இதற்கு ஏலாது. இவ்விஷயம் "ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது; ஸ்ருஷ்டி அவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்" என்ற பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீஸூக்திக்குச் சார்பாக தேசிகர் பணித்த * நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிபுண:* இத்யாதி பரச்சத ஸ்ரீஸூக்தி ஸம்வாதியாகும். * வரத! தவ கலு ப்ரஸாதாத் ருதே சரணமிதிவசோபி மே நோதியாத் * என்ற கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்தியும் தெளிவு பெறுத்தும்.

26. * स्वामिन्! स्वशेषं स्ववशं स्वभरत्वेन निर्भरम्। स्वदत्तस्वधिया स्वार्थं स्वस्मिन् न्यस्यति मां स्वयम्॥* என்பதும் தேசிகனுடைய ஸூக்தி. இதில் ஒன்பதின்கால் ஸ்வசப்த ப்ரயோகம் செய்திருக்கிறார். இதனால் சேதநனுடைய முயற்சி நாற்றம் வேரற அறுக்கப்படுகின்றமை யால் உபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் வாய்திறக்க வழியேயில்லை.

27. இதில் ஸாரமான ஒரு வார்த்தை. ஸ்ரீதேனம் என்கிற ஒரு வஸ்துவைக் கொள்வோம்.

உபாயம், மற்றொரு அதிகாரிக்கு அநுபாயம் என்றுதானே சொல்லவேண்டியதாகிறது, ...னின்; வாணிஜ்யத்தை ஜீவிகையாகவுடையவர்கள் ரத்னத்தை விற்று ஜீவிக்கக் காண் ...மாதலால் அத்தகைய அதிகாரிகளுக்கு ரத்னம் உபாயமே. சக்ரவர்த்திபோல்வாரிடத்தில் ...த ரத்னம் இருக்குமாகில் அது ஜீவனோபாயமாக ஆக்கப்படுகின்றதன்றே. ஸ்வயம்போக்ய ...வன்றோ அணியப்படுகின்றது. இப்படி எந்த வஸ்துவும் அதிகாரி பேதத்தாலே உபாய ...கவும் போக்யமாகவும் நிற்கும். ப்ரபத்தியை நாம் உபாயமாகக் கொள்ளப் பிறந்தோமல் ...லாம். "ப்ரபத்தியை" என்று விசேஷித்துச் சொல்லவேண்டியதுமில்லை; எதுவும் நமக்கு ...பாயமன்று. எந்த நன்மையும் ஸ்வரூபத்தில் சேர்ந்ததாகவே கொள்ளப்படுகிறது.

28. "பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி" என்பது ஆசார்யர்களின் ஸூத்ரம். அசித்வ்யாவ்ருத்த வேஷமாகவும் ஸ்வரூபாதிரேகியல்லாதபடியாகவு முள்ளதற்குமேலே மிகையான ப்ரவ்ருத்திகள் நேர்ந்தால் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமுள்ளதாக எம்பெருமான் திருவுள்ளம்பற்றி நம்மை ரக்ஷிப்பதில் தான் கைவாங்கி நிற்கநேரும். ஆகவே இங்ஙனம் பகவத்ப்ரவ்ருத்திக்கு விரோதியாகக் கூடிய ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் நிவ்ருத்தி யடைவதே ப்ரபத்தியாம். இவ்வர்த்தத்தை கூரத்தாழ்வான் * க்ஷாம்யஸ்யஹோ ததபி ஸந்நிவி ராமமாத்ராத் * என்கிற ஸ்ரீஸூக்தியால் காட்டியருளினார். * சசால சாபஞ்ச முமோச வீர: * என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தைக் கொண்டும் இதை ரஸமயமாக்கியருளிச் செய்வர்கள். * வனத் திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரியார் பெய்கிற்பார் மற்று * என்கிற பூதத்தாழ்வார் பாசுரத்தின் திவ்யார்த்ததீபிகையுரையைக் காண்க.

29. ஸ்ரீபாஷ்யகாரரின் சில ஸ்ரீஸூக்திகளையுங் காட்டுவோம்: * உபபத்தேச் ச * (3-2-4.) என்கிற ப்ரஹ்ம ஸூத்திரத்தின் பாஷ்யத்திலே— "प्राप्यस्य परमपुरुषस्य स्वप्राप्तौ स्वस्यैवोपायत्वोपपत्तेः * नायमात्मा प्रवचनेन लभ्यः . . . . . तनूं स्वाम् * इति अनन्योपायत्वश्रवणात्" என்றும், "* अमृतस्यैव सेतुः * इति अमृतस्य स्वस्य स्वयमेव प्रापक इति सेतुत्वव्यपदेशोपपत्तेश्च" என்றும்; * பலமத உபபத்தே: * (3—2—37.) என்கிற ஸூத்திரத்தின் பாஷ்யத்திலே— "स एव हि सर्वज्ञस्सर्वशक्तिर्महोदारो यागदानहोमादिभिरुपासनेन च आराधित ऐहिकामुष्मिकभोगजातं स्वस्वरूपावाप्तिरूपमपवर्गं च दातुमीष्टे; न ह्यचेतनं कर्म क्षणध्वंसि कालान्तरभाविफलसाधनं भवितुमर्हति" என்றும் அருளிச் செய்துள்ளார்.

30. இந்த ஸ்ரீஸூக்திகளை யநுஸரித்தே ஸ்ரீ தேசிகனும் கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷையிலே * निजकर्मादि भक्त्यन्तं कुर्यात्प्रीत्यैव कारितः । उपायतां परित्यज्य न्यस्येद्देवे तु तामभीः * என்கிற ச்லோக வியாக்கியானத்தில்—"स्वयं स्वादुत्वात् क्षणिकस्य कालान्तरभाविफलसाधनत्वानुपपत्तेर्दानाच्च नास्य स्वव्यापारे मोक्षोपायताबुद्धिरपि स्यादिति भावः; अन्ततः तैस्तैराराधितो भगवानेव हि सर्वत्रोपायः" என்றருளிச்செய்தார்.

31. 'ப்ரபத்தி உபாயம்' என்று வாய்திறக்கவே கூடாதென்று ஒரு ஆசிரியர்க்கும் திருவுள்ளமில்லை. திருக்கச்சிநம்பிகள் மூலமாகப் பேரருளாளன் எம்பெருமானார்க்குப் பணித்த ஆறு வார்த்தைகளில் "மோக்ஷோபாயம் ப்ரபத்தி" என்றுள்ளது; எம்பெருமானாரும் ஸ்ரீவைகுண்டகத்யத்தில் "तत्प्राप्तये च तत्पादाम्बुजद्वयप्रपत्तेरन्यन्न मे कल्पकोटिसहस्रेणापि साधनमस्तीति मन्वानः" என்றருளிச்செய்தார். அந்த கத்யத்திலே * अमृतसागरान्तर्निमग्नसर्वावयवस्सुखमासीत * என்ற விடத்திற்கு வியாக்கியானமருளிச் செய்யாநின்ற பெரியவாச்சான்பிள்ளை "ப்ரபத்தியையே உபாயமாகக் கொண்டு ப்ராக்ருத மண்டலத்தை விட்டு" என்றருளிச்செய்தார். பிள்ளை லோகாசார்யரும் ஸ்ரீ வசநபூஷணத்தில் "ப்ரபத்த்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்று மில்லை" என்றருளிச்செய்தார். அவ்விடத்திற்கு வியாக்யான மருளிச் செய்யாநின்ற மணவாள மாமுனிகள்— "இக்குற்றங்களொன்றுமில்லை யென்கையாலே மற்றொரு குற்றமுமுண்டென்னு மிடம் தோற்றுகிறது; அதாவது ஆபாத ப்ரதீதியிலே உபாயத்வப்ரதிபத்திக்கு அர்ஹமாயி...

32. இவ்வோ ஸ்ரீஸூக்திகளை ஆராயுமிடத்து வாணிஜ்யாதிகளுக்கு த்ரவ்ய
ஸாதநத்வவ்யபதேசம் போலே ப்ரபத்திக்கும் மோக்ஷோபாயத்வவ்யபதேசம் கூடுமென்
உட்புகுந்து ஆராய்ந்து பார்த்தால் "*உன் மனத்தா லென் னினைந்திருந்தாயென்கிறபடி
ப்ராப்திக்கு உபாயம் அவன்னினைவு" என்று கொள்வதே பொருந்துமென்றும் ஸகலாசா
ஸித்தாந்தமாகத் தேறுகின்றது. "எம்பெருமானே! எம்பக்கலில் ஏதேனும் ஒரு உபாயத்தை
கொண்டே எம்மைக் கைக்கொள்ளவேணுமென்று நிர்ப்பந்தமுண்டாகில், செயல்மாண
நிற்கையாகிறசரணாகதி தவிர வேறொன்றும் எம்பக்கல் இல்லாமையாலே இதனையே தான்
உபாயமாகக் கொள்ளவேணும்" என்று ஆசாரியர்கள் ஸ்தோத்திரங்களிலே அருளிச்செய்
துண்டு. இந்த அபிப்பிராயங்கொண்டே ப்ரபத்த்யுபாயம், ப்ரபத்த்யுபாயம் என்கிறது.

33. தேசிகனுடைய ஸூக்திகளில் * घुणक्षतलिपिक्रमादुपनिपातिनः पाति नः* என்பது ஒ
அற்புதமான ஸ்ரீஸூக்தி. "புழு குறித்தது எழுத்தாமாப்போலே" என்ற பெரியவாச்சான்
பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை தேசிகர் இங்ஙனே ச்லோகமாக்கியருளினர். புழுவானது நிலத்தில்
செல்லும்போது ஒரு எழுத்து எழுதவேணுமென்கிற எண்ணம் அதற்கு இல்லை; ஆனாலும்
அதன் செல்லுகையை நாம் உற்று நோக்கினால் ஏதேனும் ஒரு எழுத்து தேறினதாக ஆகக்
கூடும். இதற்கு குணாக்ஷரந்யாயமென்று பெயர். இந்த ந்யாயத்தாலே யாத்ருச்சிகமாக நல்ல
தாய் முடிகின்ற நட்டு செயலை உபாயமென்று ஸாதிக்க நினைப்பது ஸமஞ்ஜஸமன்று. 'ப்ரபத்தி
உபாயம் என்று சொன்னாலும் * न्यास इति ब्रह्म * न्यास इत्याहुर्मनीषिणो ब्रह्माणम् * என்கிற உப
நிஷத்தின்படி ப்ரபத்தவ்யனான பரமபுருஷனுக்கும் ப்ரபத்தியென்று வ்யபதேசமுண்டாதலா
அவனையே உபாயமாகச் சொன்னதாய் முடிந்து நிற்குமத்தனை. ப்ரபத்தியே பரிக்ராஹ்யமென்
பொருளில் ப்ரபத்தியே உபாயமென்கிறது.

... ... (4.)

5. சேதநலாபம் ஈச்வரனுக்கே பேறு என்பதுபற்றி

34. ஸம்பிரதாயத்தில் சேதநலாபம் ஈச்வரனுக்குப்பேறு? ஈச்வரலாபம் சேதனனுக்குப்
பேறு? என்று இந்தவொரு விசாரம் தலைமை பெற்றிருக்கும். இந்த விசாரத்தின் முடிவை
உள்ளபடி தெரிந்துகொள்வதே மிகச் சிறக்கும். சாஸ்த்ரங்களை மேலெழப் பார்க்கும்போது
'ஈச்வரனை அடைவது சேதநனுக்குப் பேறு' என்பதாகவே தோற்றி நிற்கும். [ब्रह्मविदाप्नोति परम्
इत्यादि] ஈச்வரனை ப்ராப்யனென்றும், சேதநனை ப்ராப்தாவென்றும் ஸ்பஷ்டமாகப் பல விடங்
களிலும் சொல்லி யிருக்கையாலே 'ஈச்வரலாபம் சேதநனுக்குப் புருஷார்த்தம்' என்றே
க்ரஹிக்கநேரும். நவீநர் இப்படியே மதமாகக் கொண்டிருக்கிறார்கள். "ஈச்வரனுக்குத்தான்
சேதநலாபம் புருஷார்த்தம்" என்பது ஸித்தாந்த ஸாரம்.

35. ஸ்ரீ தேசிகருடைய திருவுள்ளமும் சேதநலாபம் ஈச்வரனுக்குப் பேறு என்பதே
யாம். இதனை அவர் கீதாதாத்பர்ய சந்த்ரிகையில் வெகு அழகாகக் காட்டியுள்ளார். கீதையில்
ஒன்பதாமத்யாயத்தின் முடிவிலுள்ள * மந்மநா பவ * என்கிற ச்லோகத்தின் பாஷ்யத்திற்கு
விவரணமெழுதுகையில்—"आश्रितसंरक्षणं स्वलाभं मत्वा प्रवर्तते" [ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஸ்வ
லாபம் மத்வா ப்ரவர்த்ததே] என்றருளியிருப்பது காண்க.

36. "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே" என்பது ஸ்ரீவசந
பூஷண ஸ்ரீஸூக்தி. சேதநனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு என்றால் இவ்வர்த்தம் ஹ்ரு
தயத்தில் அவகாஹிப்பது சிரமமேயாகும். ஆனாலும் எளிதாக உணர்த்துகிறோம். சேதநன்
முக்தனாகிப் பரமபதத்தில் சென்றபின் அங்கு என்ன கோஷிக்கிறனென்பதை நம் உபநிஷத்து
தெளிவிக்கின்றது. *अहमन्नमहमन्नमहमन्नम्* [அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்] என்பது முக்த
னுடைய முதல் வார்த்தை. 'பகவானுக்கு நான் அன்னமாகிறேன்' என்று ஒரு தடவைக்கு மூன்று
தடவையாக இதில் சொல்லுகிறது. இதனால், ஈச்வரனானவன் சேதனனைப் பெற்று அநுபவிக்க
வேணுமென்று பெரும்பசி கொண்டிருந்தானென்றும், அப்பசி முக்தாத்மாவால் தீருகி
தென்றும் ஸ்பஷ்டமாகிறது. இல்லையாகில், * அஹமந்நம் * என் ...

acharya.org

37. அடுத்தபடியாக * अहमन्नादोऽहमन्नादोऽहमन्नादः * [அஹம் அந்நாத: அஹம்
நாத: அஹம் அந்நாத :] என்றும் வருகிறது. எம்பெருமானுக்கு இவன் அன்னமாகி
வன் பசியைத் தீர்த்தபிறகு இவனும் தன்பசி தீருவதாக ஓதிற்று. अहमन्नमन्नमदन्तमद्मि (அஹ
ந்நம் அந்நமதந்தமத்மி) என்கிற மேல்வாக்கியத்தினாலும் இது விவரிக்கப்படுகிறது. இதன்
ற்பரிய மென்னவென்றால், முக்தனாகிய தன்னை யநுபவித்து எம்பெருமான் விடாய்தீர்ந்து
கிழ்ந்து நிற்கையில் அந்த மகிழ்ச்சியைக் கண்டு தான் மகிழ்கிறான். இவன் அசேதநனல்லாமல்
சேதநனாய் ஞானாநந்தங்களை வடிவாகவுடையனாயிருக் கையாலே தன்னுடைய ஆனந்தமும்
பயன் பெற்றதாக வேணுமே. அசித்திற்காட்டில் ஒரு வாசி ஏற்படவேணுமே. தன்னைப்
பெற்று எம்பெருமான் ஆனந்திப்பதைக் கண்டு 'நம்மால் எம்பெருமானுக்கு இப்படியொரு
ஆனந்த முண்டாயிற்றே!' என்று அநுஸந்தித்து அதனால் தான் ஆநந்திக்கையே ப்ராப்தம்.
'அஹமந்நாத:' 'அஹமந்நமந்நமதந்த மத்மி' என்ற உபநிஷத்தின் கருத்து இதுவேயாம்.
38. இப் பரமார்த்தத்தை ஆழ்வார் திருவாய் மொழியில் பலவிடங்களிலும் வெளியிட்
டருளுகிறார். * வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னை
யொழிய என்னின் முன்னம் பாரித்துத், தானென்னை முற்றப்பருகினான்.* (9—6—10)
என்கிற பாசுரம் அவற்றுள் சிகரமானது. ஆசார்ய ஹ்ருதயத்தில் (2—18) * பெரும்பாழில்
க்ஷேத்ரஜ்ஞன்பெருஞ் செய்.* இத்யாதியான பெரிய சூர்ணையில் இவ்வர்த்தம் வெகு அற்புதமாக
நிரூபிக்கப்படுகிறது.
39. ஸ்ரீ ராமாயணத்தில்*अभिषिच्य च लङ्कायां राक्षसेन्द्रं विभीषणम् । कृतकृत्यस्तदा रामो
विज्वरः प्रमुमोद ह ॥ [அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருத க்ருத்யஸ்
ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ] என்கிற சுலோக ரத்நத்தாலே வான்மீகி முனிவரும்
வெளியிட்ட பரமார்த்தமிது. மகுடாபிஷேகம் பெற்ற விபீஷணனும்வான் மகிழ்ந்தானென்று
சொல்லவேண்டியிருக்க அங்ஙனம் சொல்லாமல் ச்லோகமமைத்திருக்கிற அழகை நோக்க
வேணும். க்ருத க்ருத்யத்வமும் விஜ்வரத்வமும் ப்ரமோத சாலித்வமும் ஸ்வாமியான பெருமா
ளுக்கே யல்லது ஸ்வம்மான விபீஷணனுக்கில்லை யென்று விளங்கவைத்தார் வான்மீகி.
40. ஆத்மாவுக்கு சைதந்யாதிகமான போக்த்ருத்வமிருந்தாலும், அது பாரதந்த்ரியத்தை
யும் போக்யதையையும் ஸ்வரூபவுண்மையாகத் திருமந்திரத்தினால் கண்டறிந்தவனுடைய
போக்த்ருத்வமாகில் தன்னுடைய ரஸத்துக்கு உடலன்றிக்கே சேஷியினுடைய ரஸத்துக்கே
உடலாயிருக்கும். * படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே * என்கிற பெருமாள்
திருமொழிப் பாசுரத்தில் "படியாய்க்கிடந்து" என்பதனால் அசேதந வ்ருத்தியும், "உன் பவள
வாய் காண்பேனே" என்பதனால் சேதநவ்ருத்தியும் பிரார்த்திக்கப்பட்டன. இத்தலையை விரி
யோகங்கொண்ட எம்பெருமானுக்கு விளையும் உகப்பைக்கண்டு உகப்பதுதவிர வேறுபயனில்லை
சேதநனுடைய ஆநந்தித்வத்திற்கு என்பதே ஸாரமான பொருள்.
41. இதனை ஆளவந்தார் *कदाऽहमैकान्तिकनित्यकिङ्करः प्रहर्षयिष्यामि [கதாஹமைகாந்
திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி] என்கிற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தியால் ஸ்பஷ்டமாகக்
காட்டியருளினார். இதில் 'ப்ரஹர்ஷயிஷ்யாமி' என்கிற க்ரியாபதம் ஆச்சரியமாக அமைந்தது.
நான் எப்போது ஆனந்திக்கப் போகிறேன் என்னாமல், நான் எப்பொழுது எம்பெருமானை ஆனந்
திப்பிக்கப்போகிறேனென்று பேசியுள்ளார். ணிஜந்தப்ரயோகம் நோக்குக. இங்கு வியாக்கி
யானத்தில்—"தன்னுடைய அநுவ்ருத்தியால் ஈச்வரனுக்குப் பிறக்கும் ஹர்ஷமேயிறே சேதந
னுக்கு ப்ராப்யம்" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்ததை தேசிகன் தமது ஸ்தோத்ர
பாஷ்யத்தில்—"प्रहर्षयिष्यामि त्वद्दासभूतस्य मे त्वत्प्रहर्ष एव प्रधानं प्रयोजनमिति भावः। एवञ्च स्वाधीन-
स्वार्थकर्तृत्वभ्रमरहितकैङ्कर्यप्रार्थना कृता भवति ॥" என்று விசதீகரித்தருளினார். * कृतार्थोऽहं भवि
[illegible] என்ற வருமிடங்களில் இந்த நிர்ணயத்திற்கு அநுகுண

42. எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தின் முடிவில் *அநாவ்ருத்திஸூத்ரபாஷ்ய
* न च परमपुरुषः सत्यसंकल्पः अत्यर्थप्रियं ज्ञानिनं लब्ध्वा कदाचिदावर्तयिष्यति * என்கிற ஸ்ரீஸூ
யினால் 'சேதநலாபமே ஈச்வரனுக்குப் பேறு' என்கிற ஸத்ஸம்ப்ரதாய ரஸ்ய
பொருளை ஸ்தாபித்தருளினார். அங்கே விஷயம் என்னவென்றால், மோக்ஷத்திற்குச் சென்ற
சேதநன் திரும்பிவருதல் உண்டா இல்லையா என்று விசாரம் வந்தது. ஈச்வரன் கேட்பாரற்ற
ஸ்வதந்த்ர னாதலால் அந்த ஸ்வாதந்திரியத்தினால் முக்தாத்மாவைத் திருப்பியனுப்பிவிடக்கூடு
மன்றோ என்கிற சங்கையுண்டாக, ஸூத்ரகாரர் *अनावृत्तिः शब्दात् अनावृत्तिः शब्दात्* என்று
ஸூத்ரமியற்றினார். முக்தாத்மா ஒருநாளும் திரும்பி வருவதில்லையென்று சாஸ்த்ரம் சொல்லி
யிட்டிருக்கையாலே புநராவ்ருத்தி கிடையாதென்று ஸூத்ரகாரர் சொல்லிவிட்டார்; பாஷ்ய
காரரும் இவ்வர்த்தத்தை வியாக்கியானித்தார். ஆனால் தோன்றின சங்கைக்கு த்ருப்திகரமான
ஸமாதானம் வந்ததாகவில்லை. "यदि परमपुरुषायत्तं मुक्तैश्वर्यं तर्हि तस्य स्वतन्त्रत्वेन तत्संकल्पान्मुक्त
पुनरावृत्तिसंभवाशङ्कैत्यत्राह" என்பது ஸூத்ரபாஷ்யாவதாரிகை. ஈச்வரன் ஸ்வதந்த்ர னை
யாலே கேட்பாரற்று முக்தாத்மாவை மீண்டும் கீழே தள்ளிவிட நினைத்தால் என் செய்வது
என்பது சங்காசரீரம். 'தள்ளமாட்டானென்று சாஸ்த்ரம் சொல்லியிருக்கையாலே' என்
விடை கூறினதால் என்ன ஸமாதானம் வந்ததாகும். சாஸ்த்ரத்தையும் மீறிச் செய்வதன்றோ
ஸ்வதந்த்ரக்ருத்யம். அப்படிப்பட்ட ஸ்வாதந்திரியத்தாலே ஈச்வரன் ஒன்று செய்யப்புகுந்தால்
சாஸ்த்ரம் குறுக்கே நிற்குமோ? என்றன்றோ இங்குப் பூர்வபக்ஷியின் கருத்து. அதற்குத்
வடங்கச் சொல்லவேண்டிய ஸமாதானத்தை ஸூத்ரகாரர் சொல்லாத குறைதீர நம் பாஷ்ய
காரர் வெகு அழகாக அருளிச் செய்கிறார்.

43. ஈச்வரன் ஸ்வதந்திரனே யானாலும் உன்மத்தனல்லன், மூர்க்கனல்லன், அரஸிக
னல்லன். ஸத்யஸங்கல்பனென்று பேர்பெற்றவன் தன்னுடைய மநோரதத்திற்கு மாறு
பாடாக நடந்துகொள்பவனல்லன். ஒரு சேதநனைப் பெறுவதற்கு அவன் என்னபாடுபடுகிறான்
தெரியுமோ? அவன் ஸ்ருஷ்டி பண்ணுவதும் அவதாரங்கள் பண்ணுவதும் சேதநரை லபிக்கைக்
காகவன்றோ? எவ்வளவோ தவப்பயனாக ஒரு சேதநனை லபித்த பின்பும் ரஸிகனான பரம புரு
ஷன் அவனை இழப்பனோ? - என்று இவ்வளவுமெழுதி நம் பாஷ்யகாரர் சங்காபரிஹாரத்தைத்
தலைக்கட்டியுள்ளார். இதில் "परमपुरुषः ज्ञानिनं लब्ध्वा" [பரம புருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா]
என்கிற ஸ்ரீஸூக்திவிந்யாஸமானது எம்பெருமானார் திருவுள்ளத்தில் திருவாய்மொழியமுதக்
கடல் அலையெறிகிறபடியை நன்கு காட்டுகிறது. கீதையில் "स महात्मा सुदुर्लभः" [ஸ மஹாத்மா
ஸுதுர்லப:] என்று எம்பெருமான் தானே சோதி வாய்திறந்து பணித்ததையும் உடனே உதா
ஹரிக்கிறார். எல்லாம் கண்ணனென்றிருக்கிற மஹாத்மா மிகவும் துர்லபன் என்று பகவான்
தன் திருவாக்காலே சொன்னால், அப்படிப்பட்டவொரு மா ஞானியை லபிக்கைக்கு அவன் எவ்
வளவோ பாடுபடுகிறவன் என்பது விளங்கவில்லையா? ஆகவே சேதந லாபமே ஈச்வரனுக்குப்
பேறு என்கிற ஸித்தாந்தம் நன்கு பொலிந்ததாயிற்று.

44. ஆகிச், யத்கிஞ்சித்ஸுக்ருதம் செய்வதும், பேற்றுக்கு த்வரிக்கையுமாகிற இவை
யெல்லாம் நம் பக்கலில் அடியோடு வேண்டாவே என்று பிறர் க்ஷேபிக்க வருவர்கள். சைதந்ய
கார்யமாக விளையுமவை நம்மால் தடுக்க வொண்ணாதவை. அவையுங்கூட நம்மால் விளைவன
வல்ல. * निदानं तत्रापि स्वयमखिलनिर्माणनिपुणः * [நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண
நிபுண:] என்கிற தேசிக ஸூக்தியால் இவ்வுண்மையும் திண்மை பெறும்.

45. ஸொத்தைப் பெற்று அனுபவித்து ஆநந்திக்க வேணுமென்கிற ஆவல் ஸ்வாமிக்கே
உரியதாகவும் உள்ளதாகவும் உலகில் காண்கிறோமாதலால் இந்த நியாயமேயாகும் இங்கும்.
ஆனால் ஜீவாத்மாவாகிற இந்த ஸொத்து சைதந்யமாகிற ‡ கல்மஷத்தோடும் கூடியிருக்கை

† நிலாத் தென்றல் சந்தனம் புஷ்பம் முதலியன போலே ஸர்வாத்மா
வொழிய ஜீவாத்மாவுக்கு சைதந்யமே இடையூறாகின்றதல்...

லை சிறிது தலையாட்டவும் வாலாட்டவும் பெறுகிறது. தன்னை நன்றாக வுணரும்போது
மடிந்து நிற்கிறது. ... ... (5.)

6. ஸ்வகதஸ்வீகார பரகதஸ்வீகாரங்களைப்பற்றி.

46. சேதநன் தான் எம்பெருமானைப் பற்றுவதானது ஸ்வகத ஸ்வீகாரமென்றும், எம்
பெருமான் தானே சேதநனை வரிப்பதானது பரகத ஸ்வீகார மென்றும் சொல்லப்படுகிறது.
இடைவே மர்க்கடகிசோர ந்யாயமென்றும் மார்ஜாரகிசோர ந்யாயமென்றும் வழங்குவர்.
பரகத ஸ்வீகாரமென்பதன் சுவையை அறியப்பெறாத கவிகர் 'இது அஸம்பிரதாயப் பேச்சு'
என்பர். அது கிடக்க. கீதா பாஷ்யத்தில் எம்பெருமானார் தெளிவித்தருளின மஹார்த்தம்
இது. அதில் எட்டாவது அத்தியாயத்தில் பதினான்காவது ச்லோகம். * अनन्यचेता स्सततं यो मां
स्मरति नित्यशः । तस्याहं सुलभः पार्थ ! नित्ययुक्तस्य योगिनः ॥ * [அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம்
ஸ்மரதி நித்யச:, தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந] 'ஜ்ஞாநீது ஆத்
மைவ மே மதம்' என்று பகவான் தான் தனக்கு உயிர்நிலையாகக் கொண்டாடும் ஞானியானவன்
தன்னை உபாஸிக்க வேண்டியபடியையும் பேறு பெறும் பரிசையும் இனி யருளிச் செய்கிறான்
கண்ணபிரான்—என்று அவதாரிகையிட்டு சுலோகத்தை வெகு அழகாக வியாக்யானித்தருளி
யுள்ளார் ஸ்ரீபாஷ்யகாரர்.

இந்த சுலோகத்தின் கருத்து என்னவென்றால், அர்ஜுநா! எவன் இடைவிடாமல் எப்
போதும் வேறொன்றிலும் நெஞ்சைச் செலுத்தாதவனாய் என்னையே ஸ்மரிக்கிறானோ, என்னோடு
நித்யஸம்ச்லேஷத்தை விரும்பியிருக்கின்ற அந்த பக்தனுக்கு நான் ஸுலபன்—என்பதேயாம்.
இதில் (தஸ்யாஹம் ஸுலப:) அவனுக்கு நான் எளியன் என்கிற பகுதிக்கு பாஷ்யம் செய்
தருளியிருக்கின்ற அழகை என் சொல்வோம்! பாஷ்யபங்க்திகள் வருமாறு:—

"तस्य नित्ययुक्तस्य—नित्ययोगं कांक्षमाणस्य योगिनः । अहं सुलभः—अहमेव प्राप्यः, न
मद्भाव ऐश्वर्यादिकः । सुप्रापश्च । तद्वियोगमसहमानः अहमेव तं वृणे । मत्प्राप्त्यनुगुणोपासनविपाक
तद्विरोधिनिरसनम् अत्यर्थमत्प्रियत्वादिकं च अहमेव ददामीत्यर्थः । * यमेवैष वृणुते तेन लभ्यः *
इति हि श्रूयते । वक्ष्यते च * तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् । ददामि बुद्धियोगं तं येन मा-
मुपयान्ति ते ॥ तेषामेवानुकम्पार्थं मह मज्ञानजं तमः। नाशयाम्यात्मभावस्थो ज्ञानादीपेन भास्वता॥ * इति।

இவ்வளவும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகள். இவற்றின் பொருளாவது—என்னோடு எப்
போதும் கூடியிருக்க வேணுமென்கிற விருப்பமுடையவனுக்கு அடையத்தகுந்தவன் நானே
யாகிறேன். மிக எளிதாக அடையத்தகுந்தவனுமாகிறேன் நான்; (அதாவது) அவனுடைய பிரி
வைப் பொறுக்கமாட்டாதவனாய் (அவனைப் பிரிந்து தரித்திருக்க மாட்டாதவனாய்) நானே
அவனை வரிக்கிறேன். என்னையடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலைமையையும்
அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும் என்னிடத்தில் அதிகமான ப்ரீதி முதலியவைகளையும்
நானே கொடுக்கிறேன். * நாயமாத்மா ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்த
கீதையிலேயே மேலே பத்தாவது அத்தியாயத்தில் ௧0, ௧௧ ச்லோகங்களாலும் சொல்லப்படு
கிறது என்பதாம். ஸத்ஸம்பிரதாய ஸாரார்த்தம் இங்கே பொதிந்திருக்குமழகு காண்க.

47. ஸ்ரீவசநபூஷணத்தில் 142 "இவன் அவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்
கன்று" என்று அருளிச் செய்தவிடத்தில் வியாக்கியானத்தில் மணவாளமா முனிகள்—"உடை
மையை உடையவன் சென்று கைக்கொள்ளுமாபோலே ஸ்வாமியான அவன் தானே வந்து
அங்கீகரிக்கக் கண்டிருக்கக்கடவ பரதந்த்ரனான இச்சேதநனானவன் தான் (फलि) பலியாய் தன்
ஸ்வீகாரத்தாலே ஸ்வதந்த்ரனாய் அவனைப்பெற நினைக்குமளவில் அவன் நினைவு கூடாதாயிலும்
இவ்வடிவில் [illegible] ருயிருக்கிற ப்ரபத்தியும் தல்லாபஸாதனமாகாதென்றபடி. ... ஸ்வாமியாய

நுபாயத்வமும் பரகதஸ்வீகாரோபாயத்வமும் காட்டப்பட்டது.'' என்றருளிச் செய்திருக்கு
ஸ்ரீஸூக்திகள் மேலே காட்டிய கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகளையே அடியாகக்கொண்டவையென்
நன்கு புலப்படுகின்றது. (மணவாளமாமுனிகள்) தாம் முன்பு ஒரு வேஷத்தாலே கீதாபாஷ்ய
தில் வடமொழியாலே அருளிச் செய்ததை பின்பு மற்றொரு வேஷத்தாலே ஸ்ரீவசநபூஷ
வியாக்கியானத்தில் தென்மொழியாலே அருளிச்செய்தாரென்று அறுதியிடத் தட்டில்லை.

48. மேலே உதாஹரித்த கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியில் ஒவ்வொரு வாக்கியமும் ஸா
மானது. (*தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே*) ஞானியான சேதநனைப் பிரி
திருப்பதை எம்பெருமான் தான் பொறுத்திருக்கமாட்டாதவனாய்த் தானே அந்த சேதநனை
வரிப்பதாகக் கூறுகின்றவிதுதான் பரகத ஸ்வீகாரமென்பது.

49. (*மத்ப்ராப்த்யநுகுணோபாஸந விபாகம் அஹமேவ ததாமீத்யர்த்த:) என்கிற இந்த
வாக்கியமானது ஸ்வகதஸ்வீகாரப் பற்றுதலை நன்றாகக் கழிக்கிறது. இத்தலையில் விளைவதெல்
லாம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாக விளைகின்றதேயன்றி இவன்தலையாலே விளைவித்துக்
கொள்ளுமது ஒன்றுமில்லையென்கிற ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் தெளிவிக்கப்பட்டது.
இந்த இடத்தில் *நாயமாத்மா ச்ருதியையும் எடுத்துக்காட்டியருளின பாஷ்யகாரர் பரகதஸ்வீ
காரத்திற்கு அதுவே பிரமாணமென்று நிரூபிக்கிறமுகத்தாலே பிறருடைய குத்ஸிதவாதங்களை
யும் அகற்றினாராயிற்று.

50. இவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் அருளிச்செய்துள்ள திவ்ய ஸூ
களும் தெள்ளியவே. "उक्तस्य अतिवाल्पात्वशङ्काव्युदासाय श्रुतिमूलतामाह-यमेवेति" என்றரு
செய்திருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

51. இவ்விஷயத்தில் ஸாரமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது இவ்வளவே; *த்வத்
பாதமூலம் சரணம் ப்ரபத்யே* என்றும் *புகலொன்றில்லாவடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்
தேனே* என்றும் சொல்லிக்கொண்டு (அதாவது, நாம் பற்றுகிறோமாகக் காட்டிக்கொண்டு)
திருவடிகளிலே விழுந்தாலும், 'இது நாம் பற்றின பற்றன்று; எம்பெருமான் தானே பற்று
வித்தானத்தனை: அவனுடைய க்ருஷி பலித்தத்தனை' என்று உள்ளூர அநுஸந்திக்க ப்ராப்
தம். இதையிட்டே பரகத ஸ்வீகார மென்கிறது.

52. "प्रजापतिं त्वो वेद प्रजापतिस्त्वंवेद यं प्रजापतिर्वेद स पुण्यो भवति" என்று நம்வேதத்
தில் முதல் காண்டம் ஆறும் ப்ரச்நத்தில் ஓதப்படுகிறது. இதுவும் பரகதஸ்வீகாரத்தின்
பெருமையையே காட்டுகின்றதென்று *நிவேதயத மாம் க்ஷிப்ரம்* என்றவிடத்து வியாக்கியானத்
திலே நிரூபித்தருளுகிறார். இந்த ச்ருதியில் ப்ரஜாபதி யென்றது அவனுக்கு அந்தர்யாமியான
பகவானைச் சொன்னபடி. त्वो वेद (த்வோ வேத) ஒருவன் வரிக்கிறான்; த்வ: என்பது ஒரு
ஸர்வநாம சப்தம்; அந்ய: என்று அர்த்தம். எம்பெருமானை ஒருவன் வரிக்கிறான்; எம்பெரு
மான் ஒருவனை வரிக்கிறான்: இவ்விருவருள் எம்பெருமானால் வரிக்கப்படுமவனே புண்ணியன்
என்பதாக இந்த ச்ருதியில் அநாயாஸமாகக் கிடைக்கும் பொருள். ... ... (6.)

7. ப்ரபத்தியின் அபராதகோடிப்ரவேசத்தைப்பற்றி.

53. பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தியென்று ஸ்ரீமே
நிரூபித்ததானது ஸித்தாந்தத்திலுள்ளும் பரமஸித்தாந்தமானதொரு ஸூக்ஷ்மார்த்த விசேஷம்.
இது ஒரு புறமிருக்க, "ஆத்ம ஸமர்ப்பணம் ப்ரபத்தி" என்பது மொன்றுண்டு. "எனதாவி
தந்தொழிந்தேன்" "தோள்களையாரத் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன்" என்று
ஆழ்வாரும் *அஹம் அத்யைவ மயா ஸமர்ப்பித:* என்று ஆளவந்தாரும் அருளிச்செய்த கணக்
கிலே ஆத்ம ஸமர்ப்பணத்தையும் ப்ரபத்தியாகக் கொள்ளக் கடவதாகையாலே இதுதன்னை
நிரூபித்துப் பார்த்தால் இதை அபராத கோடியிலே எண்ணவேண்டு மென்பர்
அப்படிச்சொல்வது அபசாரமென்பார் [illegible]

சாருகி நிற்கும். *எனதாவி தந்தொழிந்தேன்* என்றவுடனே அதற்கு அநுதபித்து "என
ாவி யார் யானார் தந்த நீ கொண்டாக்கினையே" என்று ஆழ்வார் அருளிச் செய்திருக்கையா
லும், ஆளவந்தாரும் "அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:" என்ற பின் "மம நாத யதஸ்தி யோஸ்ம்
யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ! நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ: அதவா கிம்நு ஸமர்ப்பயாமி தே"
என்று அநுதபித்து உண்மையை வெளியிட்டிருப்பதாலும்.

54. ஆளவந்தாருடைய திருவுள்ளத்தை நன்கு விவரிக்கிறோம் காண்மின்: 'மயா
அஹம் ஸமர்ப்பித:' என்று முந்துற ஆத்மஸமர்ப்பணம் பண்ணினதாக அருளிச் செய்தார்
உடனே, இப்படிச் சொல்வதற்கு எனக்கு என்ன அதிகாரமுள்ளது? நான் என்கிற ஒரு வஸ்து
வும், என்னுடையது என்கிற ஒரு வஸ்துவும் ஸ்வதந்த்ரமாகவுண்டோ? "யானே நீ என்
னுடைமையும் நீயே" என்றபடி எல்லாம் ஏற்கெனவே உன்னுடையதாகவேயிருக்கும்போது,
இந்த ஆத்ம வஸ்து உனக்கு இல்லாதது போலவும் இப்போதுதான் என்னால் புதிதாக ஸமர்ப்
பிக்கப்படுவது போலவும் பேசிவிட்டேனே பாவியேன்; ஸமர்ப்பிப்பதற்கு நானார்? ஸமர்ப்
பிக்க என்னிடம் என்ன இருக்கிறது? அதிலும் உனக்கு நான் ஸமர்ப்பிக்க என்னவுண்டு? இவ்
விஷயங்களை ஆராயாமல்தானே அவிவேகியாய் 'அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:' என்று பிசகா
கப் பேசிவிட்டேனே! என்று அனுதாபம் காட்டி *மம நாத யதஸ்தீத்யாதியான அடுத்த ச்லோ
கம் அருளிச்செய்தாராயிற்று. கீழ் ச்லோகத்தில் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினதாகவும் அதைப்
பற்றி இந்த ச்லோகத்தில் அநுதபித்ததாகவும் முடிந்தது. ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம்
அபராத ரூபமென்றதாகிறது.

55. ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு சூர்ணைகள் இங்கே அநுஸந்திக்கவுரியன:—
146. "ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்திதானும் அபராத கோடியிலேயாய் க்ஷமணம்
பண்ண வேண்டும்படி நில்லா நின்றதிறே. (147) நெடு நாள் அந்ய பரையாய்ப்போந்த பார்யை
லஜ்ஜாபயங்கள் இன்றிக்கே பர்த்ரு ஸகாசத்திலே வந்து நின்று என்னையங்கீகரிக்க வேணுமென்று
அபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்றிறே இவன் பண்ணும் ப்ரபத்தி" என்பன அவை. இங்கு
வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகளின் விவரணத்தை யநுபவித்துத் தெளிக.

56. நம்மாழ்வாரும் ஆளவந்தாரும் முன்னம் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணிப் பின்னை
அதற்காக அநுதபித்தார்களென்றும் ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம் அபராத ரூபமென்றும்
சொல்லுகிற பக்ஷத்தில், அநுதாப யோக்யங்களான பாபங்களைப் போலே ஆத்ம ஸமர்ப்பண
மும் ஒரு பாபமாகவன்றோ தேறுகிறது; அது செய்யக் கூடாத காரியம் என்று ஏற்பட்டு
விடாதா? இவ்விஷயம் ஆழ்வார்க்கும் ஆளவந்தார்க்கும் முன்னம் தெரியாமையில்லையே;
தெரிந்து பாபத்தைப் பண்ணுவானேன்? பிறகு அநுதபிப்பானேன்? *प्रक्षालनाद्धि पङ्कस्य दूराद-
स्पर्शनं वरम्* (முன்பு சேற்றில் காலை வைத்துப் பின்பு அதை அலம்புவதைக்காட்டிலும் சேற்
றில் காலைவைக்காமலே யிருந்துவிடலாமே) என்கிறப்போலே ஆத்ம ஸமர்ப்பணமென்கிற
பேச்சையே ப்ரஸ்தாவியாமலிருந்துவிடலாமே என்கிற வாதங்கள் இங்கு விளையக்கூடியதுண்டு.
இதற்கு ஸமாதானமாகப் பெரியவாச்சான்பிள்ளையருளிச் செய்வது பாரீர்:—"[தே கிம்நு ஸமர்ப்
பயாமி] இத்தையுடைய உனக்கு எத்தை ஸமர்ப்பிப்பேன்? ஸமர்ப்பணீய மேது? ஸமர்ப்பகர்
ஆர்? ஸமர்ப்பணியமர்கைக்கு ஸ்வாம்யமில்லை. ஸமர்ப்பிக்கைக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை. ஸம்
ஸார பீதியால் ஸமர்ப்பிக்கையும் ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்தால் அநுசயிக்கையுமாக இரண்
டும் யாவந் மோக்ஷம் அநுவர்த்திக்கக் கடவது" என்று. இதனால் தேறினது என்னவென்றால்,
ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் அது பண்ணினதற்காகப் பிறகு அநுதாபம் காட்டுகையு
மாகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தம் என்றதாகத் தேறிற்று.

57. இப்படி வியாக்கியானம் செய்யலாமோ? முந்துற ஆத்ம ஸமர்ப்பணம் பண்ண
வேணும், பின்னை அநுதாபமும் படவேணும் என்றால் இது நன்றாக இல்லையே. தப்பான காரி

acharya.org

...யிருக்கும். கேண்மின்; இந்த ஸ்தோத்ரரத்நத்திலேயே கீழே முப்பத்திரண்டாவதுச்லோ...
முதல் நாற்பத்தாறும் ச்லோகங்களவும் பதினுன்கு ச்லோகங்களாலே எம்பெருமானுடைய...
கைங்கரியத்தைப் பரம புருஷார்த்தமாகப் ப்ரார்த்தித்த ஆளவந்தார் தாமே அடுத்த (...
* धिगशुचिमविनीतम् * என்கிற ச்லோகத்தால் கீழே அப்படி ப்ரார்த்தித்ததற்கு மஹத்தா...
அனுதாபத்தை ஆவிஷ்கரித்திருக்கின்றுரென்பது அபரோக்ஷம். இங்கு ஆராயவேண்டு...
கைங்கர்ய ப்ரார்த்தனை கூடுமா கூடாதா? *பவந்தமேவாநுசரந் நிரந்தரம்...கதாஹமைகாந்...
நித்யகிங்கர: *நித்ய கிங்கரோ பவாநி* இத்யாதிகளை நோக்குமிடத்து கைங்கர்ய ப்ரார்த்தனை
கூடுமென்று விளங்காநின்றது. "திகசுசிமவிநீதம்...தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:"
என்றதனுல் அந்த கைங்கர்ய ப்ரார்த்தனைக்காக ஆத்ம கர்ஹை செய்துகொண்டதை நோக்கு...
மிடத்து கைங்கர்ய ப்ரார்த்தனை கூடாதென்றே விளங்காநின்றது. வேதாந்த தேசிகருங்கூட
* त्वत्किङ्करत्वविभवे स्पृहयाऽपराध्यन् * என்று கைங்கர்ய ப்ரார்த்தனைக்குப் பூர்வபாவியான
கைங்கர்யருசியையுங் கூட அபராத கோடியிலே வைத்துப் பேசியுள்ளார். அங்ஙனம் பேசினவர்
தாமே கைங்கர்ய ப்ரார்த்தனையையும் பல பல ச்லோகங்களாலும் செய்யுள்களாலும் செய்தருளி...
யிருக்கின்றுர். இவை பரஸ்பர விருத்தங்களாகத் தோன்றவில்லையா? உண்மையில் இரண்...
டும் சாஸ்த்ரார்த்தமேயென்று நிஷ்கர்ஷித்தாலொழிய வழியில்லையன்றே. கைங்கர்ய ப்ரார்த்
தனையும் பண்ணவேணும்; 'ஸார்வபௌமனை நீசப் பெண் ஆசைப்படுமாபோலே ஐயோ
என்ன ஆசைப்பட்டோம்! இது தகுமா?' என்று உடனே நெஞ்சாறல் படவும் வேணும்
என்றே சாஸ்த்ரார்த்தம் சிக்ஷிதமாகிறது.

58. மற்றொன்றுங் காண்மின் :—*ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெ...
பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ* (திருவாய்மொழி 3-1-2) என்று,
பரஞ்சோதியான எம்பெருமானுக்கு உலகத்திலுள்ள க்ஷணபங்குரமான தாமரை, மேகம்,
காயாம்பூ முதலானவற்றை ஒப்பாகச் சொல்லுதல் இழிவு என்கிருராழ்வார். இஃது உண்மையா
அன்று? உண்மையாகில் 'கொண்டல் வண்ணு! கடல் வண்ணு! காயா வண்ணு!' என்று
பலகாலும் ஆழ்வார்கள் கதறுகின்றுர்களே, இது என்ன? என்று ஆராயவேண்டாவோ?
அன்றியும், பெரிய திருவந்தாதியில் *புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்* என்று
எம்பெருமானை நாம் புகழ்வதானது பழிப்பதேயாகுமென்கிருர் நம்மாழ்வார். இப்படி சொல்
லிக்கொண்டே மேன்மேலும் எம்பெருமானைப் புகழ்வதற்கே ஒருப்படுகின்றுரே, இது என்ன?
என்று இதையும் ஆராய வேண்டாவோ?

59. இன்னமும்; கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் * या कंसमुख्यनृपकीट-
निबर्हणोत्था सा निर्जितत्रिजगतस्तव नैव कीर्तिः* என்று, கம்ஸன் முதலிய அரசர்களாகிற புழுக்களை
ஸர்வேச்வரன் தொலைத்தானென்று சொல்லி அவனை யேத்துவதானது மூவுலகத்தையும் வென்
றிருக்கிற அவனுக்குப் புகழ்ச்சியன்று, இகழ்ச்சியே என்று சொல்லிவைத்து அப்படிப்பட்ட
கம்ஸவதம் முதலிய சரித்திரங்களையே மீண்டும் பேசிப் புகழ்கின்றுரே, இஃது என்ன? என்று
இதையும் ஆராயவேண்டுமே. இங்ஙனே பல விஷயங்களுள்ளன. இவை ஒன்றுக்கொன்று
அபவாதமாகுமோ? இவையெல்லாம் பரஸ்பர விருத்தம்போல் தோன்றினும் உண்மையில்
விருத்தமன்றே: இரண்டு படிகளும் சொல்லித்திரவேண்டியவை யத்தனையன்றே?

60. இவைபோலவே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்பு அதற்கு அநுதபிப்ப
தாகப் பேசுகையுமாகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தமென்று அறுதியிட்டபின் இதில் ப்ரத்யாக்...
யாந ப்ரஸக்தியில்லை. முதலில் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணிவிட்டுப் பிறகு அதற்கு அநுதாபம்
காட்டுகிற ச்லோகத்தில் ஆளவந்தார் *.* इति प्रबुद्धधीः— இதி ப்ரபுத்ததீ: * என்கிருர். ஓம்
ச்லோகம் சொல்லும்போது [அதாவது ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணும்போது] தாம் அவி
வேகியாயிருந்ததாகவும், உடனே விவேகம் பெற்று இந்த ச்லோகம் [அநுதாப...
சொல்லுகிறதாகவும் இதனால் தெரிகிறது. ...

வந்தார் முன் ச்லோகம் ஸாதிக்கும்போது அவிவேகியாயிருந்தார். பின் ச்லோகம் ஸாதிக்
போது விவேகம் பெற்றுவிட்டார் என்கை ஏலாது. அப்படியிருக்க * इति प्रबुद्धधीः *
(இதி ப்ரபுத்ததீ:) என்று ஸாதித்தது ஏன்? என்னில்; க்ரமேண சாஸ்த்ரார்த்தங்களை வெளி
வேண்டுமிடத்து இங்ஙனே சொல்வது க்ரந்தசைலி.

61. இன்பமிகு மாறுயிரமருளிச்செய்த திருக்குருகைப்பிரான் பிள்ளானும் *என
ாவியுள் கலந்த பாசுர வியாக்யானத்தில்— "இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியா
லுள்ள நிரவதிக ப்ரீதியாலே அறிவழிந்து இவ்வாத்மா தம்முடையதன்றென்று நிரூபிக்கமாட்
டாராய் அவன் தம்மோடு கலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை
அவனுக்கு மீளா வடிமையாகக் கொடுத்து. பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவே
கித்து" என்றருளிச்செய்தார். அவ்விடத்திற்கும் இதுவே நிர்வாஹம். ஆகவே முன்கூற ஆத்ம
ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்னை அதற்காக அநுசய ப்ரகாசனம் பண்ணுகையுமாகிற
விரண்டும் பரஸ்பராபவாதமல்லாத சாஸ்த்ரார்த்த மென்றதாயிற்று.

62. இதற்குமேல் ஒரு சிறிய கேள்வி தோன்றும்; ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணவேணு
மென்பதும் சாஸ்த்ரார்த்தமாக ஆய்விட்டபடியாலே அந்த ஆத்ம ஸமர்ப்பணத்தை நாம் எப்
போது செய்கிறோம் என்று;—இதைப்பற்றி தேசிகரே ஸுவ்யக்தமாகத் தெரிவித்துள்ளார்.
ஹரஸ்யத்ரய ... ாதிகாரத்தில்— "பகவத்க்ருபையடியாகவுண்டான ஸதா
சார்ய கடா ... த்வயோச்சாரண அநூச்சாரணத்தாலே ப்ரபத்தி
யனுஷ்டானம் ப ... ாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே"
இத்யாதி ஸ்ரீஸூக்தி ... இந்த வாக்கியத்தில் "த்வயோச்சாரண அநூச்சார
ணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டா ... பின்பு" என்று ஸாதித்திருப்பதொன்றே தெளிவு
பிறப்பிக்குமது. பஞ்சஸம்ஸ்கார காலத்தில் ஆசார்யன் த்வயத்தை உபதேசிக்குமளவில் அவர்
உச்சரிக்க சிஷ்யன் அநூச்சாரணம் பண்ணுவதனால் ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்ததென்று
தேறிற்று. த்வயத்தின் பொருள் நெஞ்சில் ஊறவூற, த்வயார்த்த ப்ரகாசகமான திரு
வாய்மொழிப் பாசுரங்கள் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் இவற்றின்பொருள் நெஞ்சில் தேங்க
அதுவே பழுத்த ஆத்ம ஸமர்ப்பணமாகத் தலைக்கட்டும். [இதைப்பற்றி விரிவான நிரூபணம்
மேலேயும் வரும்.] ... ... (7.)

8. உபாயாந்தரங்களின் ஸ்வரூப விருத்தத்வத்தைப்பற்றி

63. ப்ரபத்தியொழிந்த மற்றை யுபாயங்கள் உபாயாந்தரங்க ளெனப்படும். உபா
ஸநம் முதலான அவற்றிலே, ப்ரபந்நர்களான நமக்கு ப்ராப்தியில்லையென்பது ஸர்வஸம்ப்ரதி
பந்நம். சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள அந்த உபாயாந்தரங்களை நாம் விடுகைக்கு
ஹேது என்ன? என்கிற விசாரத்தில். அவற்றை (உபாயாந்தரங்களை) அறிகைக்கும் அநுஷ்
டிக்கைக்கு மீடான ஜ்ஞாந சக்திகளில்லாமையே ஹேது என்பர் பிறர். அவையன்று ஹேது.
பகவானுக்கு அத்யந்தம் பரதந்த்ரப்பட்டிருக்கையாகிற ஸ்வரூபத்துக்குச் சேராதென்னுமதுவே
முக்ய ஹேதுவென்று ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம். அஜ்ஞானமும், அசக்தியுமடியாக விடுவ
தானல், ஜ்ஞான சக்திகளுண்டாகில் அவற்றைப் பரிக்ரஹிக்கவேண்டி வருமன்றோ; ஸ்வரூப
விரோதியென்று விட்டாலன்றோ மறுவலிடாதொழிவது; ஆகவே ஸ்வரூப விருத்த மென்னு
மதுவே ப்ரதாந ஹேதுவாகும்.

64. உபாயாந்தரங்களும் மோக்ஷோபாயமாயிருக்க அவற்றை இப்படி கழிக்கலாமோ?
அவை யார்க்கு உபாயம்? என்னில், ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரயத்ந நாற்றத்தையும் ஸஹியாத
ஸ்வரூபத்தை உள்ளபடி யறிகைக்கீடான ஞானமில்லாதவர்களுக்கே அவை உபாயமாயிருக்
... அத்யந்த

65. நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் (6) *நெறிகாட்டி நீக்குதியோ நின்
என்றருளிச்செய்த பாசுரம் இதற்கு ப்ரமாணமாக அநுஸந்தேயம். இப்பாசுரத்தின் பொரு
கேளீர். நெறியென்றால் வழி; வழியாவது உபாயம். பகவத்கீதையில் சரம ச்லோகத்தி
கீழே விரிவாகச் சொல்லப்பட்டுள்ள ஸாதநாந்தரங்களை இங்கு நெறி யென்கிறது. எம்
மான் யாரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவர்களை நோக்கி 'நீங்கள் எவ
மான அஞ்சலும் படவேண்டா; என்னையே தஞ்சமாக உறுதிகொண்டு மார்விலே கையை
உறங்குங்கள்' என்பன். எவர்களைக் கைவிட நினைக்கிறானோ அவர்களுக்(ருந்தொழில்
அளவில்லாதபடி விதித்து 'இவற்றைச் செவ்வனே செய்து பேறு பெறுங்கள்' என்
ஆகவே நெறி காட்டுகையென்பதும் நீக்குகை யென்பதும் பர்யாயம். நெறியைக் காட்டு
யாவது, 'இது கர்ம யோகம், இது பக்தியோகம்; இவற்றுள் எது உமக்கு ஸாத்யமோ அத
அநுஷ்டிக்கக் கடவீர்' என்று சொல்லித் தான் உதாஸீநனாகை. (நெறி காட்டி நின்பால் நீ
தியோ) உன்னை யொழிய வேறோருபாயத்தைக் காட்டி உன் பக்கலில் நின்றும் என்னை அகற்ற
பார்க்கிறாயோ வென்று ஆழ்வார் எம்பெருமானை நோக்கிக் கேட்கிறபடி. நள மஹாராஜ
தமயந்தியை உடுத்த புடவையிலே ஒரு தலைப்பை யறுத்து 'இது விதர்ப்பதேசம் போகிறவழி
இது கோஸலதேசம் போகிறவழி; எந்த வழியில் வேணுமானாலும் போய்க்கொள்' என்
சொல்லிவிட்டு அகன்றாப்போலே அகலப் பார்க்கிறாயோ? என்று வினவுகிறபடி. ஆக இ
பாசுரத்தால், உபாயாந்தரங்களில் அந்வயிக்கை எம்பெருமான் பக்கலில்நின்றும் அகல்வத
குறுப்பு என்று தேறுகின்றது. *நெறிகாட்டி நீக்குதியோ* என்ற விடத்தில் நீக்குகையாவ
பரதந்த்ரமான வஸ்துவை ஸ்வதந்த்ரக்ருத்யமான உபாயாநுஷ்டானத்திலே மூட்டித் தனக்
அசலாக்குகையென்று மணவாளமாமுனிகளின் திருவாக்கு.

66. இவ்விஷயத்தில் திருக்குருகைப் பிரான் பிள்ளான் பணிப்பதொரு நல்வார்த்தை
யுண்டு; ஸ்ரீவசநபூஷணத்திலே வ்யக்தம் "மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமய கும்பகத
தீர்த்த ஸலிலம்போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தரம்" என்று பிள்ளான் பணிப்பராம்.
பொற்குடத்திலிருக்கும் கங்கா தீர்த்தஜலமானது, பாத்ரசுத்தியுமுண்டாய் தானும் பரிசுத்தமா
யிருக்க, மத்யபிந்துவின் கலப்பினாலே நிஷித்தமாகிறாப்போலே, ஸ்வதோ நிர்மலத்வாதிகளாலே
பரிசுத்தமாயிருக்கின்ற ஆத்மவஸ்துவினுள்ளதாய், பகவானையே பற்றியதாதலால் பரிசுத்தமா
யிருக்கின்ற உபாயாந்தரமானது ஸ்வயத்ந மூலமான அஹங்காரஸ்பர்சத்தாலே ஜ்ஞானிகள்
அங்கீகரியாதபடி நிஷித்தமாயிருக்கும் என்பது மேற்குறித்த பிள்ளான் திருவாக்கின் தாற்
பரியம். "அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்" என்ற இவ்வாக்கியத்தில் கூறும் அஹங்கார
மாவது இன்னதென்று தெளியவேணும். தானே கர்த்தாவென்றும் தானே போக்தாவென்றும்
அநுஸந்திப்பதுதான் இங்கு அஹங்காரமாவது. கீதையில் பதினெட்டாவது அத்யாயத்தில்
(6, 9 ச்லோகங்களில்) * संगं त्यक्त्वा-ஸங்கம் த்யக்த்வா* என்று உபாயாந்தர நிஷ்டனுக்குச்
சொன்ன அஹங்காரத்யாகமாவது—ஸ்வதந்த்ரனாக நான் கர்த்தா போக்தா என்கிற ஸ்தூலா
ஹங்காரத்யாகம். ஆயினும் அவனுக்கு ஸூக்ஷ்மாஹங்காரமொன்று அவர்ஜநீயமாயுண்டு. அது
ஸ்வயத்நரூபதா நிபந்தநம். அதுவும் நிஷித்தமென்று பிள்ளானுடைய திருவுள்ளம். இது
எங்ஙனே தெரிகின்றதென்னில், அவரது திருவாக்கில் "மதிராமிச்ரமான" என்னாதே "மதிரா
பிந்து மிச்ரமான" என்று காண்கையாலே அந்த பிந்துபதத்தினால் இதுதெரிகின்றது. கெடுப்ப
தற்கு அணுவளவும் போதுமாதலால், உபாயாந்தர ப்ரவ்ருத்தியில் ஸூக்ஷ்மாஹங்கார முண்
டாகி அதுதான் அவர்ஜநீயமாயிருந்து அது அற்பமானாலும் ஸ்வரூப நாசகத்வத்தில் குறையற்ற
தென்று காட்டினபடி. "ஸ்வயத்நநிவ்ருத்தி பாரதந்த்ர்யபலம்" என்கிற ஸ்ரீ வசநபூஷண திவ்ய
ஸூக்தியும் காண்க. *என்னுன்செய்கேன்* என்கிற ஆழ்வார் பாசுரத்தை ஸ்ரீ வசநபூஷணத்தி
லெடுத்தாண்டவிடத்து மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் வைசத்யமும்
காணத்தக்கது.

67. இப்படிப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயார்த்தத்தை தேசிகன் ...
...காட்டியுள்ளார். எங்ஙனே யென்னில்...

आर्तेष्वाशुफला तदन्यविषयेऽप्युच्छिन्नदेहान्तरा वह्न्यादेरनपेक्षणात्तनुभृतां सत्यादिवद्व्यापिनी ।
श्रीरङ्गेश्वर! यावदात्मनियतत्वत्पारतन्त्र्योचिता त्वय्येव त्वदुपायधीरपिहितस्वोपायभावाऽस्तु मे ॥

[ஸ்ரீரங்கேச்வர!] .... இங்கு பக்தி ப்ரபத்தி இரண்டுக்கும் ஏற்றத்தாழ்வுகளை விளக்குகின்ற .... விசேஷணங்களைத்தனையும் பக்தி
....பது ஒரு ச்லோகரத்நம். இதில் ப்ரபத்திக்கு இட்டிருக்கிற விசேஷணங்களைத்தனையும் பக்தி
....ஷவ்யாவர்த்தகங்கள். விவரித்துக் காட்டுகிறோம் காண்மின்: [ஆர்த்தேஷு ஆசுபலா]
....க்தியானது விளம்பித்துப் பலனளிக்கும்: ப்ரபத்தி அங்ஙனன்றிக்கே விரைவில் பலனளிக்
....ம்—ஆர்த்தப்ரபந்நர்திறத்தில். [ததந்யவிஷயேபி உச்சிந்ந தேஹாந்தரா] பக்தியானது
....தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத் தருவதில் நியதியுடையதன்று; ப்ரபத்தி நியமேந
....தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத் தரும். [வஹ்ந்யாதே: அநபேக்ஷணாத் த..ருதாம் ஸத்
....ாதிவத் வ்யாபிநீ] பக்தியாகிற உபாயத்தின் அநுஷ்டானத்தில் அக்நிகார்யம் முதலியவை
அபேக்ஷிதமாயிருக்கையாலே அது அதிக்ருதாதிகாரமாயிருக்கும்; ப்ரபத்தியில் அவ்வபேக்ஷை
யில்லாமையாலே ஸத்யம் சொல்வதற்கு எப்படி ஸர்வரும் அதிகாரிகளோ அப்படியே ப்ரபத்தி
யிலும் ஸர்வரும் அதிகாரிகள். இனி இதற்கு அடுத்த விசேஷணமே ப்ரக்ருத விஷயத்திற்கு
உற்று நோக்கத்தக்கது. [யாவதாத்ம நியத த்வத் பாரதந்த்ர்யோசிதா] பக்தி ஸ்வரூபவிருத்தம்,
ப்ரபத்தி ஸ்வரூபாநுரூபம் என்கிறது. யாவதாத்மநியதமான அத்யந்த பாரதந்த்ர்யத்துக்கு
ப்ரபத்தி உசிதமாயிருக்குமென்றபோதே ப்ரபத்திப்ரதிகோடியான பக்தியானது அந்த
பாரதந்த்ரியத்திற்கு விருத்தமாயிருக்குமென்னுமிடம் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்
றன்றோ; ஆகவே தேசிகன் திருவுள்ளமும் உபாயாந்தரம் ஸ்வரூப விருத்தமென்பதே யென்று
தேறி நின்றது. இதனையே *பத்தி முதலாமவற்றில் பதியெனக்குக் கூடாமல்* என்ற அடைக்
கலப்பத்துச் செய்யுளாலும் தேசிகனே தமிழில் விளங்க வைத்தார்.

68. உபாயாந்தரங்களை ஸ்வரூப விருத்தமென்ன வொண்ணுது. இவை *அகிஞ்சநோ
நந்யகதி:* என்றிருக்கும் அதிகாரிக்கு ஸ்வாதிகார விருத்தங்களென்ன ப்ராப்தம்—என்றும்
அவர் ரஹஸ்யத்தில் பேசியிருப்பதுண்டு. ந்யாஸதிலகத்திலருளிச்செய்தபடியே இவை அத்யந்த
பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்குப் போராதென்கிற ஸத்ஸம்ப்ரதாய நிஷ்கர்ஷம் சாலவினிது. (8.)

9. விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றமென்பதுபற்றி

69. க்ருஹஸ்தாச்ரம தர்மமாக விஹித விஷய போகம் ப்ராப்தமானாலும், அநந்யார்ஹ
சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடுகூட அநந்ய போக்யத்வமென்கிற விலக்ஷணமான தன்மை
யையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு அந்த விஹித விஷய போகம் அருவருக்கத்தக்க
தாய் விடத்தகுந்ததேயாகுமென்பது ஸதாசார்ய ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதார
போகம் நியமமாக விதிக்கப்பட்டு அது தவிர்ந்தால் தோஷமும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கை
யாலே விஹிதவிஷய நிவ்ருத்தி அசாஸ்த்ரீய மென்பர் நவீநர். ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு
மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக அருளிச்
செய்கிறார். மிகுஞானச் சிறுகுழவியான எம்பெருமான் சோதிவாய் திறந்து பணித்த கீதையில்
(8-3) எட்டாவது அத்யாயத்தில் மூன்றாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர்
வெளியிட்டருளின விசேஷார்த்தமிது. அதனை விவரிப்போமிங்கு :—

70. கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் *ஜராமரண மோக்ஷாய* என்
கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் *"ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम्" என்று ஒரு
வார்த்தை சொன்னான். அதுகேட்ட அர்ஜுநன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத்
தெரிந்துகொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான் எட்டாவது அத்யாயத்தின்
1, 2-ச்லோகங்களினால். *किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम—கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம்
கிம் கர்ம புருஷோத்தம* என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம்
..... "...விடை வெளிவருகின்றது: கிம் கர்ம என்ற கேள்விக்குக் கண்ண..... விஸர்க்க....

71. சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்துவருகையில் கருமத்தை அறி
வேண்டும் என்று சொல்லியிருந்ததனுல் கருமமென்ருல் எது? என்று அர்ஜுனன் கேட்க நேர்
தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது. பற்றுவதற்
காகவும் ஆகலாம், விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந்தால் பற்றுவது. கெட்டதாயிரு
தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்துகொள்ள வேண்டும் கெட்டதையும் தெரிந்து
கொள்ள வேண்டும். இங்கே தெரிந்துகொள்ளவேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்ல
தன்று, கெட்டது. என்பதாக பகவானுடைய விடையினுல் தெரிகின்றது. பூதபாவோத்பவகரோ
விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:* என்பதற்கு நம்முடைய ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிற
அர்த்தம் வருமாறு:—

“भूतभावः—मनुष्यादिभावः तदुद्भवकरो यो विसर्गः *पञ्चम्यामाहुतावापः पुरुष-
वचसो भवन्तीति श्रुतिसिद्धो योषित्संवन्धजः; स कर्मसंज्ञितः। तच्चाखिलं सानुबन्धम्
उद्वेजनीयतया परिहरणीयतया च मुमुक्षुभिः ज्ञातव्यम्। परिहरणीयता च अनन्तरमेव
वक्ष्यते *यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्तीति ॥”

என்பது கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்தி. இதன் கருத்தாவது—ஸ்த்ரீ புருஷஸம்யோக மென்பது
தான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத்தக்கதாகையால் விடத் தக்கது
இதனை யறியவேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினேராவது சுலோகத்தி
காட்டப்படுகிறது என்பதாம். இதனுல் நாம் தெரிந்துகொள்வது, க்ருஹஸ்தாச்ரம தருமம
விஹிதவிஷயபோகம் ப்ராப்தமே யானுலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமே யென்று
ஆகவே இவ்விஷயத்திலும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க. ... (9.)

10. கர்மாநுஷ்டானத்தைப்பற்றி.

72. இதர ஸம்ப்ரதாயத்தில் கர்மாநுஷ்டானப்பற்று அதிகமாகவும் ஸத்ஸம்ப்ரதாயத்
தில் அது குறைவாகவுமுள்ளது. இதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியவிஷயங்கள்
வருமாறு: “क्रियमाणं न कस्मैचिद्यदर्थाय प्रकल्पते। अक्रियावदनर्थाय तत्तु कर्म समाचरेत् ॥
[க்ரியமாணம் ந கஸ்மைசித் யதர்த்தாய ப்ரகல்பதே, அக்ரியாவதநர்த்தாய தத் து கர்ம ஸமாசரேத்]
என்கிற பிரமாணத்தை தேசிகரும் எடுத்தாளுகிறர். இந்த பிரமாண வசனத்தின்படியே தான்
தென்னுசார்யர்களின் அநுஷ்டான பரம்பரை காண்கிறது. எந்தக் கருமத்தைச் செய்தால் ஒரு
பலனும் கிடைக்கமாட்டாதோ, செய்யாவிடில் ப்ரத்யவாயம் விளையுமோ அந்தக் கருமத்தை
மாத்திரம் 'செய்யவேண்டியதென்று இந்த வசனத்தின் தாற்பரியம். அதாவது—அகரணே
ப்ரத்யவாயாவஹமாயும் பலச்ருதி யற்றதாயுமிருக்கிற கருமத்தையே செய்யக்கடவதென்றபடி.

73. பூர்வாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையில் எந்தெந்த கருமங்கள் அனுட்டிக்கப்பட்டு
வருகின்றனவோ அவை அகரணே ப்ரத்யவாயத்தை விளைப்பனவாயிருக்கும். எந்தெந்த கரு
மங்கள் அனுட்டிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றனவோ அவை ஸாமாந்ய பலப்ரதமாயிருக்
கும்—என்று அறியக் கடவது. ஒவ்வொரு ஸௌரமாஸ ஸங்க்ரமணத்திற்கும் தர்ப்பணம்
அனுட்டியாமல் நான்கு மாதப்பிறப்புகளுக்கே அது அனுட்டிப்பது இந்த ஸம்ப்ரதாயத்திலுள்
ளது. இத்தகைய அனுஷ்டாந—அனனுஷ்டானங்களை இங்கே நிதர்சனமாகக் கண்டு
கொள்வது.

74. இந்த ப்ரகரணத்தில் பல விஷயங்கள் விவக்ஷிதங்களுண்டு. ஆனுலும் சில சுருங்
கச்சொல்லுகிறேம். பரவ்யூஹவிபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரரூபேண ஐவகை
பகவத் ரூபங்களில் பரவ்யூஹ விபவங்கள் ...

அந்தர்யாமி ரூபத்திலும் அர்ச்சாவதார ரூபத்தி
வழிபாடுகளுக்கு இலக்காகமாட்டாதவை. அந்தர்யாமி ஆராதனமென்றும்,
லுமே வழிபாடுகள் செய்யப் ப்ராப்தம். கர்மாநுஷ்டானம் அந்தர்யாமி ஆராதனமென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. கர்மா
கைங்கரியாநுஷ்டானம் அர்ச்சாவதார ஆராதனமென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. பசுபதி ப்ருஹஸ்பதி என்கிற
நுஷ்டானங்களில் அக்நி இந்திரன் ஸோமன் வருணன் ப்ரஜாபதி பசுபதி ப்ருஹஸ்பதி என்கிற
பல தேவதைகளின் பெயர்கள் பலகாலும் வரும். அந்தத் தேவதைகளை உத்தேசித்துச் செய்
வதே கர்மாநுஷ்டான வேஷமாகும். இங்ஙனம் தேவதாந்தரங்களுக்கு ஆராதனமாக அமைகின்ற
கருமங்களானவை *இறுக்குமிறை யிறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி நிறுத்தினான்
தெய்வங்களாக அத்தெய்வநாயகன் தானே *என்கிற திருவாய் மொழியின்படி அந்த தேவதை
களுக்கு அந்தர்யாமியான எம்பெருமானிடமே போய்ச் சேருகின்றன வென்பது வேதாந்திகளின்
ஸித்தாந்தம். ஆகவே கர்மாநுஷ்டானம் அந்தர்யாமி ஆராதனமென்னக் குறையில்லை. *ஒழி
வில்காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்* என்கிறபடியே
கைங்கர்யாநுஷ்டானத்திற்கு அர்ச்சாவதாரமே இலக்கு என்பதில் விவரணம் அநபேக்ஷிதம்.

75. தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலையில் *நாட்டினான் தெய்வமெங்கும் *நல்லதோரருள்தன்னாலே காட்டினான்
என்று கர்மாநுஷ்டான லக்ஷ்யத்தைச் சொல்லி உடனே *நல்லதோரருள்தன்னாலே காட்டினான்
திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்* என்று கைங்கர்யாநுஷ்டான லக்ஷ்யத்தையும்
சொல்லி, *கேட்டிரே நம்பிமீர்காள் கெருடவாகனனும் நிற்கச் சேட்டைதன்மடியகத்துச் செல்
வம் பார்த்திருக்கின்றீரே *என்று பின்னடிகளால் அந்தர்யாமி ஆராதனத்திற்காட்டில் அர்ச்சா
வதார ஸமாராதனமே ப்ராப்தம் என்று காட்டியருளினார். மேலே * மெய்ப்பொருள் போகவிட்டு
மெய்ம்மையை மிக வுணர்ந்து, ஆம் பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கிக், காம்பறத் தலை
சிரைத்து உன்கடைத்தலை யிருந்துவாழும், சோம்பரை யுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே*
என்ற பாட்டினால் அர்ச்சாவதாரகைங்கர்ய ப்ரவணர்களின் பெருமையையும் அன்னவர்க
ளிடத்து எம்பெருமானுக்குள்ள உவப்பின் மிகுதியையும் உரைத்தார்.

76. திருமங்கை யாழ்வாரும் *உலகமேத்தும் கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர்
மல்லையென்று மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே* என்ற பாசுரத்தை மிக
வும் பாவகர்ப்பமாக அருளிச் செய்துள்ளார். இதில் மற்றையார் என்று கழித்தது கருமமே
கண்ணாயிருப்பவர்களை. அர்ச்சாவதார ரஸிகர்கள் உஜ்ஜீவிக்கலாகுமே தவிர ஸ்மார்த்த கர்ம
கலாபங்களிலே ஊன்றிப் போருமவர்கள் உஜ்ஜீவிக்கப்போகாதென்று வாய்விட்டு அருளிச்
செய்திருக்கிறார். அருளிச் செயல்களில் இங்ஙனே பல பாசுரங்கள் உள்ளன. இப்பாசுரங்
களையே அல்லும் பகலும் சிந்தை செய்து இவற்றின் அர்த்தங்களிலேயே ஊன்றிப்போரும்
தென்னாசார்யர்களின் பரம்பரையில் கருமச்ரத்தை குன்றி கைங்கர்ய ருசியே மிக்கிருக்கின்ற
தென்றால் இது ப்ராப்தமே. இதில் பொருந்தாமை யொன்றுமில்லை. கர்ம கலாபங்கள் தவிர
வேறொன்றையும் பேசாத வேதத்தையே உருப்போட்டு அதொன்றே போதுபோக்காயிருப்பா
ருடைய பரம்பரையிலே கர்மானுஷ்டானம் வலுத்திருக்கின்றதென்றால் அதுவும் ப்ராப்தமே.
கோவிலைக்காப்பவர்கள், குளத்தைக் காப்பவர்கள் என்ற வ்யவஹாரம் இன்று நேற்று
வந்ததன்றே. "வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திகளென்று துறை வேறிடுவித்தது" என்பது
ஆசார்ய ஹ்ருதயம்.

77. பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலே "श्रीरङ्गपालनकर्मठाः—ஸ்ரீரங்க பாலந கர்மடா:"
என்று மிகவழகியவொரு ஸ்ரீஸூக்தி யருளியுள்ளார். இதனால், கோவிலைக்காப்பதே நித்ய
கர்மாநுஷ்டானமென்று காட்டியருளினாராயிற்று. ஆனாலும் * श्रुतिः स्मृतिर्ममैवाज्ञा यस्तामुल्लंघ्य वर्तते । आज्ञाच्छेदी मम द्रोही मद्भक्तोऽपि न वैष्णवः ॥* என்கிற பகவத் வசனத்தையும் குறிக்
கொண்டு அவர்ஜநீயங்களான சில நித்ய நைமித்திக கருமங்களை அனுட்டித்துப் போருகிறோம்.
78. "வர்ணாச்ரம தீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள் போலே அத்தாணிச் சேவகத்திலும் ...

திலே அதிகரித்தவர்களுக்கு தேவதாந்தர்யாமி விஷயமாய் தச்சரீரபூத தேவதாத்வாரா ததாரா
தனமாகையாலே ஸாதாரணமா யிருந்துள்ள கர்மம் உறங்குவான் கைப்பண்டம் போலே
தன்னடையே நழுவுமென்கை: இத்தால், வர்ணாச்ரமாதி நிஷ்டர்க்கு தத்ததிகாராநுரூபதர்ம
மொழிய அநநுகுணமானது த்யாஜ்யதயா கழிக்கப்படுமாபோலே ஸ்வரூப யாதாத்ம்யதர்சி
களானவர்களுக்கு ததநுரூபதர்மமொழிய அநநுரூபமானது த்யாஜ்யமாய்த் தன்னடையே விட்
டுக் கழியு மென்றதாயிற்று. இப்படியிருக்கச் செய்தே சிஷ்டர்கள் அநுஷ்டித்துப்போரு
கிறது—ஸ்வாநுஷ்டானத்தைப் பின்சென்று லோகம் நசிக்க வொண்ணாதென்னும் ஆந்ருசம்ஸ்
யத்தாலேயிறே" என்று இவ்விடத்து வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள் விசதமாக
வருளிச்செய்தருளினர்.

79. முமுக்ஷுப் படியில் சரமச்லோக ப்ரகரணத்தில், "இவன்தான் இவை தன்னை
நேராக விட்டிலன். கர்மம் கைங்கர்யத்திலே புகும்" என்றவிடத்து வியாக்கியானத்தி[ல்]
"ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமாக இவன் அனுஷ்டிக்கும் விஹிதகர்மம் ஸாதநபுத்
றிக்கே ஆந்ருசம்ஸ்யத்தாலே பரார்த்தமாக வநுஷ்டிக்கையாலே ஈச்வரனுக்கு மிகவுமுகப்
யாலே தத்ப்ரீதி ஹேதுவாகப் பண்ணும் கைங்கர்யத்திலே அந்தர்ப்பவிக்கும்" என்
செய்தார். இத்தகைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு நன்கு தெளிவது. ... ...

11. எம்பெருமானுடைய வ்யாப்தியைப்பற்றி.

80. உபநிஷத்தானது * अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः * என்று ஸகல
தங்களிலும் எம்பெருமான் உள்ளும் புறமும் வியாபித்திருப்பதாக ஓதியிருக்கின்றது.
வான பதார்த்தங்களில் உள்ளீடாக வ்யாப்தி ஸம்பவிக்கமாட்டாதென்று ஒரு வாதம். அ
யான பதார்த்தங்களுக்கே உள், வெளி என்று சொல்லக்கூடுமாதலாலும் நிரவயவமான
பதார்த்தங்களுக்கு 'உள்ளே வெளியே' என்று சொல்வதற்கு ப்ரஸக்தி யில்லாமையா
அணுபதார்த்தங்களிலே எம்பெருமானுக்கு உள்ளுற வ்யாப்தி சொல்லவொண்ணாது
கிறார்கள் பிறர்.

81. அன்றியும், ஒரு பொருளிலும் எம்பெருமானுக்குப் பரிஸமாப்யவர்த்தித்வம் [அ
வது - பரிபூர்ண வ்யாப்தி] கொள்ளவொண்ணாது. ஒரு பதார்த்தத்திலே அவனுக்குப் பரிபூ
வ்யாப்தியை அங்கீகரிக்குமளவில் [அதாவது பகவானுடைய ஸ்வரூபம் ஒன்றிலே பரி
பித்து வர்த்திக்கிறதென்னில்] மற்றொரு பதார்த்தத்தில் வியாபிக்க ப்ரஸக்தியில்லாமை
பரிஸமாப்ய வ்யாப்தியை அங்கீகரிக்க வாகாதென்றும் மற்றொரு வாதம் கூறுவர் பிறர்.

82. அணுபதார்த்தங்களிலும் அந்தர் வ்யாப்தி உண்டென்றும், ஒவ்வொரு பொ
ளும் பரிஸமாப்யவர்த்தித்வமும் பொருந்துமென்றும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம். சா
மீமாம்ஸையில் (ப்ரஹ்ம ஸூத்ரத்தில்) * कृत्स्नप्रसक्तिर्निरवयवत्वशब्दकोपो वा * என்
பூர்வபக்ஷ ஸூத்ரத்தின் மேல் * श्रुतेस्तु शब्दमूलत्वात् * என்கிற ஸித்தாந்த ஸூத்ரம் அவதரி
துள்ளது. சாஸ்த்ரங்களினால் தேறுகின்ற விஷயங்களில் குதர்க்க மூலகமான குசோத்ய
களைச் செய்யாமல் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே இசையவேண்டுமென்று இந்த ஸூத்ர
சிக்ஷிக்கின்றது. * அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:* என்று சு
ஸ்பஷ்டமாகச் சொல்லி வைத்தது. வேதஞ் சொன்னது ஒருபுறமிருக்கட்டும். வேதார்த்
ஞயகர்களான மஹாசார்யர்கள் நிஸ்ஸந்தேஹமாக அருளிச் செய்திருப்பது என்ன? எ
பார்ப்போம்.

83. ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸாக்ஷாத் திருவடியான திருக்குருகைப்பிரான் பிள்
திருவாய் மொழியில் (1—1—10) * பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் *
பாசுரத்தின் ஆறாயிரப்படியில் இங்ஙனே யருளிச் செய்கிறார்:—" அதி ஸூக்ஷ்மமா
அசித் வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கிற சித்வஸ்துக்களிலும் எ
மான அண்டத்தில் வியாபித்துப்போலே ...

..தசோபநிஷத் பாஷ்யகாரரான ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்
..படி யென்று ஸம்ஸ்க்ருத ப்ரதிபதார்த்தடீகை பணித்துள்ளார். [அச்சிட்டு மிருக்கிறது.]
அதில் இப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் அவர் பணித்திருப்பதாவது—* एकैकस्मिन् जलपर-
..माणौ अतिविशालब्रह्माण्ड इव व्यक्तिषु जातिवत् पर्याप्तवृत्तिः * என்று. இதன் பொருளாவது, வ்யக்தி
..களில் ஜாதியானது எப்படி பரிஸமாப்யவர்த்திக்கின்றதாக ஜாதிவாதிகளால் கொள்ளப்பட்
..டிருக்கின்றதோ அப்படி எம்பெருமான் ஒவ்வொரு ஜலபரமாணுவிலும் அதி விசாலமான ப்ரஹ்
..மாண்டத்தி லிருப்பதுபோல் (நெருக்குண்ணாமல்) நிறைந்திருக்கின்றான் என்பதாம். இங்கு
..பர்யாப்த வ்ருத்தி :* என்று இம்மஹான் பணித்திருப்பது பூருவர்களின் ஸித்தாந்தத்தை நன்கு
அடியொற்றியதாம். பரிஸமாப்ய வர்த்தமாநத்வமே சொல்லிற்று.

84. பகவானுடைய ஸ்வரூபம் ஓரிடத்தில் பரிஸமாப்ய வர்த்திக்குமானால் அது மற்றோ
ரிடத்தில் இருக்க ப்ரஸக்தியில்லை. ஏனென்றால், ஒன்றில் பரிஸமாப்தமாய் விட்டதென்றால்
அவ்வளவோடு முற்றிற்று என்றபடியாகையால் மற்றொன்றிலே யிருக்க அவகாசமேது?
வஸ்துவே இல்லையன்றோ. பரிஸமாப்ய வர்த்தமாநத்வமென்பதை சாஸ்த்ரீய ஸரணியில் பேசுவ
தானால் "तदितरावृत्तित्वे सति तद्वृत्तित्वं परिसमाप्य वर्तमानत्वम्" என்று நிஷ்கர்ஷிக்க வேண்
டியதாகும். ஆகவே ஸர்வவ்யாபகனாக ஓதப்படுகின்ற எம்பெருமானை ஒரு வஸ்துவிலும் பரிஸ
மாப்ய வர்த்தமானனாகச் சொல்லமுடியாது என்று சோத்யம் ப்ராப்தமாகிறது. இப்படிப்பட்ட
சோத்யம் இன்று நேற்றல்ல; ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னமே தோன்றினதுண்டு.
* ஒன்றுந்தேவு ஈட்டு ப்ரவேசத்திலேயே இந்த சோத்யம் உபக்ஷேபிக்கப்பட்டிருப்பது காண
லாம். அவ்விடத்து ஸ்ரீஸூக்திவருமாறு;—" ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்கு
மென்றால் அசித்பதார்த்தத்துக்கு இது கூடுமென்றிருப்பர்கள்; பரமசேதநனாயிருப்பானொரு
வன் பரிஸமாப்யவர்த்திக்கு மென்றால் இதுகூடாதென்று ஸம்சயியாநிற்பர்கள்." என்று.

85. தேசிகனும் ந்யாய ஸித்தாஞ்ஜந-ஈச்வரபரிச்சேதத்தில் இவ்வாக்ஷேபத்தை யெடுத்
துக்காட்டி * श्रुतेस्तु शब्दमूलत्वात् * என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தையே கொண்டு * यथागमं
सर्वत्र पूर्ण एव भगवान् * [சாஸ்த்ரம் சொன்னபடி பகவான் எங்கும் பூர்ணனே] என்று ஃபலிக்
கட்டியருளினார்.

86. ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த வேதார்த்த ஸங்க்ரஹத்திற்கு ச்ருதப்ரகாசிகாபட்டர்
அருளிச் செய்த தாத்பர்ய தீபிகையில். * निरंशे प्रतिपदार्थं पूर्णवर्तिन्यपि स्वरूपे अंशशब्दव्यवहारः
..एकस्मिन्नेव वस्तुनि स्वरूपस्य पूर्णवर्तितया अन्यत्र वृत्त्ययोग्यत्वशङ्काव्युदासार्थः * என்கிற ஸ்ரீஸூக்
..திகள் உள்ளன. பரமபுருஷன் ப்ரதிவஸ்து பூர்ணன் என்கிற விஷயத்தில் இவ்விதமான
ஆக்ஷேபந்தன்னையே ச்ருதப்ரகாசிகாசார்யர் உத்க்ஷேபித்து அதற்கு நிரஸம் வந்துவிட்டதாக
அருளிச் செய்திருக்கிறாரென்பது இதில் ஸுஸ்பஷ்டம். இந்த ஸ்ரீஸூக்தி அமைந்திருக்கிற
..விதம் நன்கு ஆராயத்தக்கது. * अन्यत्र वृत्त्ययोग्यत्वशङ्काव्युदासार्थः * என்று கண்ணாடிபோ
..லுள்ளது. ஒரு வஸ்துவிலேயே ஸ்வரூபம் பரிஸமாப்தமாக இருந்து விட்டால் அது மற்றொரு
..வஸ்துவில் இருக்கமுடியாதே யென்கிற சங்கை தள்ளுண்டதாக இந்த மஹாசார்யர் அருளிச்
..செய்திருக்கும்போது இன்னமும் அந்த சங்கையையே பிரபலமாகச் செய்து போருமவர்கள்
..ஸ்ரீ பாஷ்யகார ஸம்ப்ரதாயஸ்தர்களாகக் கூடுமோ? * एकत्र समाप्तस्वरूपस्य अन्यत्र वृत्ति-
..योग्यत्ववादो व्युदस्यते * என்று ஸ்ரீஸூக்தியிருந்தால் கீழே விவரிக்கப்பட்ட ஆக்ஷேபம் இன்ன
..மும் ஜீவித்துக் கொண்டிருக்கலாம். ஸ்ரீஸூக்தியோ அப்படியில்லை. சங்கைக்கு (அதாவது
..ஆக்ஷேபத்திற்கு)க், கண்டனம் வந்து விட்டதாக ச்ருதப்ரகாசிகாசார்யர் நிஸ்ஸந்தேஹமாக
..அருளிச்செய்துள்ளார். அப்படி யிருக்கவும் இன்னமும் அந்த ஆக்ஷேபமே பிறருடைய [நவீனர்
..களுடைய] மதத்தில் ஓங்கி நிற்கின்றது.

87. ஸர்வசக்தியுக்தனென்...

...எம்பெருமானுடைய வைபத்திரை...

श्रूयते என்கிற ... க எம்பெருமானை உபநிஷத்வாக்யமொன்றே போதும். இவ்வத்புத சக்தியின் ... புகழ்கின்றன. * पराऽस्य शक्ति...
தாழ்வான் ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்தில் ஒரு ச்லோகத்தினால் விவரித்தருளுகிறார் ...

"किंसाधनः क निवसन् किमुपाददानः कस्मै फलाय सृजतीश इदं समस्तम् ।
इत्याद्यनिष्ठितकुतर्कमतर्कयन्तः त्वद्वैभवं श्रुतिविदो विदुरप्रतर्क्यम् ॥"

என்னுமிந்த ச்லோகத்தின் கருத்தாவது;—எம்பெருமானே ஸர்வஸ்ரஷ்டா என்னுமிட... பிறர் சில குசோத்யங்களைக் கூறுகின்றார்களாம்; உலகத்தில் ஸ்ருஷ்டி செய்பவர்கள் ... சில ஸஹகாரி காரணங்களோடு கூடியே படைக்கக் காணுகின்றோம். ஸர்வஸ்ரஷ்டாவான புருஷனுக்கும் ஸஹகாரி காரணங்கள் இன்னவை யென்று காட்டவேணும். ... தொழிலில் அவன் ஸ்ருஷ்டிகர்த்தாவென்பது அஸம்பாவிதமாகும். அப்படி கா... களை நிரூபிப்பதானால், ஸஹகாரிகளான அப்பொருள்களைப் படைத்தது யார்? என்று கே... வரும். ஈச்வரனே படைத்ததாகச் சொல்லுவீர்கள். அவற்றைப் படைக்கும்போது ஏவை ஸஹ... காரிகளா யிருந்தனவென்று கேள்வி வந்தே தீரும். இதற்காகச் சில ஸஹ... கொண்டே யிருக்கும். கடைசியாக ஸர்வேச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்படாத சில பொருள்களு... டென்று இசையவேண்டி வரும். இப்படியே ப்ரச்ந பரம்பரை போ... இப்படியே மற்றொரு கேள்வியு முண்டாகிறது; ஸ்ருஷ்டிக்கும்போது பகவான் எந்த இடத்... விருந்து கொண்டு ஸ்ருஷ்டிக்கிறான். ஒரு அதிகரணமின்றி ஸ்ருஷ்டிக்க முடியாதன்றோ. அ... கரணமாக ஒரு தேசத்தைக் காட்டினால் அதைப் படைக்கும்போது எந்த இடம் அதிகரணம... யிருந்ததென்று கேள்வி வரும். இப்படியே இவ்விஷயத்திலும் ப்ரச்ந பரம்பரைகள் சென்று... கொண்டே போம். கடைசியாக, பகவானால் ஸ்ருஷ்டிக்கப்படாத ஒரு இடம் ஸித்தித்தே தீரும். இதனாலும் பகவான் ஸர்வஸ்ரஷ்டாவல்லன் என்றதாகும். இங்ஙனே மற்றொரு கேள்வியு முண்டாகிறது. ப்ரபஞ்சத்தைப் படைக்கின்ற பரமாத்மாவுக்கு எது உபாதாந காரணமா... கின்றதென்று கேட்கிறோம். கீழ் ஸஹகாரிகாரண விஷயத்திற் போலவே இதுதன்னிலும் ப்ரச்நபரம்பரையும் ஆபத்தியும் துல்யம். இனி, பகவான் என்ன பலனைக் கருதிப் படைக்கிறா... னென்கிற கேள்வியு முண்டாகிறது. * प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते * என்பவாதலால் ஸ்ருஷ்டிக்கு ஒரு ப்ரயோஜனம் சொல்லியே யாகவேணும். அந்த ப்ரயோஜனமானது ஸ்ருஷ்டிக்கு முன்னே ஸித்தித்திருக்கவில்லை யென்று கொள்ளவேண்டியதாகும். ஆகவே பகவான் அவாப்த ஸமஸ்தகாமன் என்கிற ஸித்தாந்தம் குலைந்ததாகும்—என்றிப்படியாகப் பிறர் செய்யும் குசோத்யங்கள் மேற்குறித்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தால் அநுவதிக்கப்பட்டு, மேல் உத்தரார்த்தத்தில் ஒரே வார்த்தையால் ஸமாதானம் சொல்லப்பட்டுள்ளது. * त्वद्वैभवं श्रुतिविदो विदुरप्रतर्क्यम् * [த்வத்வைபவம் ச்ருதிவிதோ விதுரப்ரதர்க்யம்] என்கிறவிதுவே ஸமாதான மாய்த்து. விசித்திர விலக்ஷண சக்திசாலியான பகவான் திறத்தில் ப்ரபல ப்ரமாண ஸித்தமான அர்த்தங்களில் குசோத்யம் செய்வது தகாது என்கிறவிதுவே ஸமாதானமாக முடிந்து நின்றது.

88. தேசிகனும் அச்யுத சதகத்தில் இப்படியே கூறுகின்றார்; * पुरिसपहाणसरीरो भुवणाणं होसि अच्चुअ उवाआणम् । णिअसंकप्पसणाहो वहसि णिमित्तत्तणं वि अब्भुअ सत्ती ॥ (छाया— पुरुषप्रधानशरीरो भुवनानां भवस्यच्युतोपादानम् । निजसंकल्पसनाथो वहसि निमित्तत्वमप्यद्भुतशक्तिः) என்றார். இதில் முடிவில் அத்புதசக்தி: என்றதே ஸாரம். பிறர் செய்யும் குசோத்யங்களை ... னுடைய அத்புதசக்தியோகத்தை நிரூபித்தே நிரஸிக்கவேணு மத்தனையென்று காட்டு... கிறது. இப்படியெல்லாம் அருளிச்செய்கிற ஆசார்யர்களுக்கு * श्रुतेस्तु शब्दमूलत्वात् * ... ப்ரஹ்மம் ... ஆதாரமே வழிகாட்டியாக நிற்கிறது. பிறர் இக்கருத்தை மேலே... ... எம்பெருமானுடைய விசித்ரசக்தியை ... உபாதாநமாக ...

89. * अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणस्थितः * என்று ச்ருதி ஸ்பஷ்டமாகச் சொல்லி ...க் செய்தேயும், அணுவான வஸ்துக்களிலே பகவான் எப்படி உள்ளே வியாபிக்க ...யும்? என்கிற ஆக்ஷேபத்தைப் பிறர் வலிதாகச் செய்கிறார்கள். ஜீவாத்மாவோ அணு ... நிரவயவமான அணுவஸ்துக்களுக்கு உட்புறம் கிடையாதாகையாலே உள்ளே வியா...பிக்கிறதென்பது அணுவஸ்துக்களில் அஸம்பாவிதமன்றோ. ஆகவே * अन्तर्बहिश्च तत्सर्वम् * ...றவிடத்து தச்சப்தார்த்தத்தில் ஜீவாத்மாவை விலக்கியேயாகவேணும்; அயோக்யார்த்த...த ச்ருதி ப்ரதிபாதியாதன்றோ? என்று அவர்கள் வாதிக்கிறார்கள்.

90. ஸித்தாந்திகளின் ஸமாதானம் யாதெனில்; ஸாவயவமான வஸ்துக்களுக்குத் ...ான் உட்புறமிருக்குமென்றும், நிரவயவமானவற்றுக்கு உட்புறமிராதென்றும் ஒரு ப்ரமாண...மும் கூறுகின்றதில்லை. நிரவயவமான ப்ரதாநம் முதலியவற்றில் அந்தர்தேசம் அங்கீகரிக்கப்...பட்டிருக்கின்றதே. ப்ரதாநம் நிரவயவமென்கிற பக்ஷத்தை தேசிகனும் தத்வமுக்தாகலாபத்...தில் * अव्यक्तं त्वन्मतेऽपि ह्यनवयवम् * என்கிற ஸ்ரீஸூக்தியால் தெரிவித்துள்ளார்.

91. நிரவயவமான வஸ்துக்களுக்கு அந்தர்தேசமில்லையென்று சொல்வதைவிட்டு அணுத்ரவ்யங்களுக்கு அந்தர்தேசம் கிடையாதென்று சொல்லுகிறோமென்றும், சேதநன் அணு த்ரவ்யமாகையாலே அவனுக்கு அந்தர்தேசமில்லையென்பது பொருந்துமென்றும் பிறர் வாதிப்பதுதானும் அயுக்தம். * य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरः * अणोरणीयान् * இத்யாதி ச்ருதிகளாலும் * अणोरणीयांसम् * என்கிற கீதாவசனத்தாலும் சேதநனிடத்திலும் பகவானுக்கு அந்தர்வ்யாப்தி யுண்டென்று ஸ்பஷ்டமாக விளங்குகையாலே.

92. ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையில் * य आत्मनि तिष्ठन्नित्युक्ते, व्योमाग्निस्तिष्ठति तिले तैलं तिष्ठतीतिवत् बहिरबहिस्स्थितिसाधारण्यात् तद्व्यवच्छेदार्थमाह आत्मनोऽन्तर इति * என்றுள்ளது. இது ஆத்மாவினிடத்தில் அந்தர்வ்யாப்தி யுண்மையை நன்கு புலப்படுத்தாநின்றது. ஆத்மாவுக்கு அந்தர்தேசமுண்டென்று கொள்ளவேணுமென்பதை ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீஸூக்தியும் விசதீகரிக்கின்றது; மேலேகாட்டிய கீதாவசனத்தில் * कविं पुराणमनुशासितारम् अणोरणीयांसमनुस्मरेद्यः * என்பதில் அணோரணீயாம்ஸம் என்பதற்குப் பொருளருளிச் செய்யாநின்ற பாஷ்யகாரர் * जीवादपि सूक्ष्मतरम्—ஜீவாதபி ஸூக்ஷ்மதரம் * என்றுரைத்தருளினர். ஆத்மாவில் அந்தர்தேசம் உள்ளதாக இசையாவிடில் 'ஜீவாதபி ஸூக்ஷ்மதரத்வம்' எம்பெருமானுக்கு நிர்வஹிக்க இயலாதன்றோ. * ஜீவாதபி ஸூக்ஷ்மதரம் * என்றது ஜீவனிற் காட்டிலும் அங்குஷ்ட பரிமாணமுடையவன் என்றபடியன்று; அப்படியாகில் பகவானுக்கு விபுத்வஞ்சொல்லுகின்ற ச்ருதிஸ்ம்ருதிகள் சீறுமே. ஆகவே ஆத்மாவினுடைய அல்ப தேசத்திலும் வியாபித்திருக்கின்றானென்பதே இங்குப் பொருளாகும்.

93. * मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव * என்பதனாலும் அணுவில் அந்தர்தேசம் ஸித்திக்கும். நூலில் ரத்னத்திரள் போல் ப்ரஹ்மத்தினிடத்தில் சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சம் கோக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறது இந்த ப்ரமாணம். ஆத்மாவில் அந்தர்தேசமிசையாவிடில் இது பொருந்ாது. அதில் பரப்ரஹ்மத்துக்கு ஸூத்ரஸ்தாநீயத்வம் சொல்லியிருப்பது உணரத்தக்கது.

94. ஸ்ரீவசனபூஷணத்தில்... * अणुर्ह्रदत्वग्रस्थूलः * என்றவிடத்தில் அணுபதத்திற்கு ... அருளிச்செய்யாநின்ற ... (பகவத்குண தர்ப்பணத்தில்) * अतिसूक्ष्मदहराकाशान्तःस्थजीवानुप्रवेशसामर्थ्यात् अणुः ... * இப்படிப்பட்ட ப்ரமாண... [illegible]

ஓழ்விவ்ரித்தவ்யாப்திவிஷயத்திலேயே பஹுமுகமான விவரணம்.

95. பரம புருஷனொருவனுளனென்பதையும் அவனுடைய ஸ்வரூபரூப... இப்படிப்பட்டவை யென்பதையும் நாம் சாஸ்த்ரங்களைக் கொண்டு அறிகிறோமேயல்ல... எதனாலும் அறிகின்றிலோம். அதீந்த்ரியமான விஷயங்களில் நமக்கு சாஸ்த்ரமே கைவிளக்... அல்பஜ்ஞர்களான நாம் சாஸ்த்ரங்களில் நேராக இறங்கித் தத்துவங்களையும் மருமங்களையு... உணர உரிமையுடையோமல்லோம். * சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலந காரணம் உபதேசாத் ஹரிம் புத்த்வா * என்று சாஸ்த்ரமே காட்டின கட்டளையிலே, தத்வதர்சிகளான மஹாப்ராஜ்ஞர்கள், வெண்ணெயைக் கடைந்து திரட்டியெடுத்துக் கொடுக்குமாபோலே வழி... மாக எடுத்துரைத்து வைக்க, அது கொண்டு உணரவே நாம் அதிகாரிகள். எதிலும் எங்கும் ஸம்ப்ரதாயபேதமென்று ஒன்று தோன்றி யிருப்பதனால் இன்ன ஸம்ப்ரதாயஸ்தர் இன்ன ஆசார்யருடைய ஸ்ரீஸூக்திகளையே நிதியாகக் கொள்வதென்றும் அவற்றையே பேசுவி... பேசுவதென்றும் ஒரு பத்ததி இருப்பதனால் அவரவர்கள் தம் தம் ஆசார்யருடைய ... களில் வைத்திருக்கிற நம்பிக்கையினால் திருப்பித்திருப்பி ஸ்வமதத்தையே வலிதாக ... டுக் கொண்டு காலங்கழிக்கிறார்கள். இந்த மருமத்தை யாரோ சில மஹாமேதாவிக... இப்படி பக்ஷபாதிகளாய்ப் பேசியும் எழுதியும் போருகிறவர்களின் வார்த்தைகளில் ந... கொடுக்கவோ கண் செலுத்தவோ தகாது; மத்யஸ்தர்களான ஆசாரியர்களின் திரு... களைக் கொண்டே தத்துவத்தை உணரவேணும்' என்று துணிந்து விவாதிகளான ... ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவாகவுள்ள ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளையே ... தத்வநிஷ்கர்ஷம் செய்கிறார்கள். இதுதான் ராஜமார்க்கம்.

96. உபய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவாகச் சில ஆசாரியர்கள் உ... விளங்குகின்றார்களன்றோ. ஸ்ரீபாஷ்யகாரர், கூரத்தாழ்வான், பட்டர், ச்ருதப்ரகாசிகா... என்னும் மஹாசார்யர்கள் பொதுவானவர்களென்பது நிர்விவாதம். விவாத க்ரஸ்தமா... யங்களை மத்யஸ்தத்ருஷ்டியுடன் நிஷ்கர்ஷிக்கவேண்டும்போது மேற்குறித்த மஹாசார்யர்... ஸ்ரீஸூக்திகள் எப்படியுள்ளன? என்று விமர்சிப்பதே ப்ராமாணிகர்களுக்கு உற்றது. ... களின் திவ்ய ஸூக்திகளில் ஸ்பஷ்டமாகத் தெரியாத விஷயங்களிருந்தால் அவற்றில் ... ரவர்கள் தம் தம் [அஸாதாரண] ஆசாரியரின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு தெளி... லாம். பொதுவான ஆசாரியர்களின் திருவாக்குக்களில் ஸ்பஷ்டமாகவும் ஸுஸ்பஷ்ட... விளங்குகின்ற விஷயங்களிற்கூட ஏகதேசிகள், தங்கள் அபிப்ராயத்தையே ... கொண்டு போராடுவதென்பது விவேகிகளின் பணியாகுமோ?

97. சிலருடைய கொள்கை என்னவெனில், மற்றையாசாரியர்களின் திருவாக்... எப்படியாவது இருக்கட்டும்; அவற்றைப்பற்றி நமக்கு விசாரமே வேண்டா; நமக்... வாய்த்த அஸாதாரண ஆசாரியருடைய திருவாக்கில் ஸ்பஷ்டமாக எவ்வண்ணம் வெ... துளதோ அவ்வண்ணமேதான் நாம் கொள்ளவேண்டும் - என்பதாக. இக்கொள்கை தப்பென்று நாம் சொல்லலாகாது. ஸ்வாசார்ய பக்தியின் கனம் விளங்குமிதில். ஆனால் ... தகைய கொள்கை ரஹஸ்யமாக ஸ்வக்ருஹத்தினுள்ளே போற்றத் தகுமே யன்றி ஸதஸ்ஸு... குப் பயன்படாது. விவாதம் விளையாத வளவில் க்ஷேமமே. விவாதம் வளர்ந்திட்டால் ... சார்ய ஸூக்தியென்கிற அபிமானத்தை வெகு தூரத்தில் விலக்கிவைத்திட்டு, பொ... ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை மாத்திரமே தஞ்சமாகக் கொள்ளவேணும்.

98. இனி ப்ரக்ருத விஷயத்திற்கு வருவோம். எம்பெருமான் எங்கும் நிறைந்... சோதி யென்று உலகமனைத்தும் உணரும். "கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்... நிறையும் ஒருதனி நாயகமென்றால் உன் பெருமைக்கு அளவுண்டோ?" என்று போற்... [illegible]

கொள்ளலாம்; அணுப்தார்த்தங்களுக்கு இங்ஙனே பகுத்துக் காட்டக்கூடிய நிலைமை இல்லாமையால் அப்பொருள்களில் பகவான் உள்ளேயுளன் என்று ஒப்புக்கொள்ள இயலாது—என்பது ஒரு ஆக்ஷேபம். (2) உள்ளேயுளன் என்று ஒப்புக் கொள்ளக் கூடிய விடத்திலும், பகவான் தன்னுடைய ஸ்வரூபம் எவ்வளவுண்டோ அவ்வளவும் அடங்க வியாபித்துளன் என்று இசையத்தகாது; ஏனென்றால் ஒரு வஸ்துவிலேயே பகவானது ஸ்வரூப மடங்கலும் அடங்கிப் போகுமானால் மற்றும் உலகிலுள்ள அபரிமிதங்களான வஸ்துக்களிலும் அந்த ஸ்வரூபம் வியாபித்திருக்க வேணுமல்லவா? அதற்கு அவகாசமில்லாமற் போகுமே. ஒரு உதாரன் தனக்குள்ள பொருள்களை யெல்லாம் ஒரு யாசகனுக்கே பூர்த்தியாகக் கொடுத்துவிட்டால் எப்படி? மற்றுள்ள பல யாசகர்களுக்கும் கொடுக்கச் சரக்கு இருக்கவேணுமே; (அதுபோல) பகவானும் தன் ஸ்வரூபத்தை நிச்சேஷமாக ஒரு வஸ்துவிலேயே நிரப்புகிறானென்றால் இது எப்படி ஸம்பவிக்கும்? மற்ற வஸ்துக்களுக்கு என்ன கதி? ஒவ்வொரு வஸ்துவிலும் நிச்சேஷமாக நிரம்பியுள்ளானென்கை பொருந்தமாட்டாது. ஒன்றில் நிச்சேஷமாக நிரம்பி விட்டால் மற்றொன்றிலிருக்க ப்ரஸக்தியேது? ஆகவே வஸ்துதோறும் பகவத் ஸ்வரூபம் நிச்சேஷமாக நிரம்பியுள்ளதென்று கொள்ளத்தகாது—என்பது மற்றொரு ஆக்ஷேபம்.

99. இவ்விரண்டு ஆக்ஷேபங்களும் இன்று நேற்று உதித்தவையல்ல; நெடு நாளாகவேயுண்டு. இவற்றை நமது பூருவாசாரியர்கள் நன்கு கண்டித்துள்ளார்கள். ஸுஸ்பஷ்டமாகக் கண்டித்திருப்பவர் ச்ருதப்ரகாசிகாசார்யர். மேலே விவரித்த இரண்டு ஆக்ஷேபங்களைக் கூசாமல் பேசவல்லவர்கள் யாராயிருக்க வேண்டு மென்பதைச் சிறிது விமர்சிப்போம். பகவானுக்கு ஒப்புயர்வற்ற சக்திவிசேஷ முண்டென்பதைப் பொறுக்கவில்லாதவர்களே இந்தக் கக்ஷிகளைக் கிளப்பவேண்டும். பகவான் அத்புத சக்தியுக்தன் என்றும் அகடித கடநாஸமர்த்தன் என்றும் பிரமாணங்கள் கூறுவதை அஞ்ஜலிபந்தத்துடன் ஏற்கவல்ல ப்ராமாணிக வேதாந்திகள் இப்படிப்பட்ட கக்ஷிகளைக் கிளப்ப ஒருபோதும் நினையார்கள்.

100. இந்த வ்யாப்தி விஷயத்தை, அல்லது ப்ரதிவஸ்து பூர்ணத்வ விஷயத்தை விட்டிட்டு வேறு சில விஷயங்களை யெடுத்துக்கொள்வோம். ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் பகவானையே காரணபூதனாகக் கொள்ளுகிறோம். உலகில் ஒவ்வொரு கார்யவஸ்துவுக்கும் மூவகைப்பட்ட காரணங்கள் வேண்டியிருக்கின்றன; 1. உபாதாநகாரணம், 2. ஸஹகாரி காரணம், 3. நிமித்த காரணம். ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியில் இம் மூவகைக்காரணமும் பகவானொருவனே யென்று மறைமுடி அறுதியிடுகின்றது. ஒன்றுக்கே மூவகைக் காரணத்வமும் எங்ஙனே பொருந்தும்? உலகில் இப்படியுள்ள ஒரு வஸதுவையாவது உவமையாக எடுத்துக் காட்ட முடியுமோ? முடியாதே. உலகிற் காண்கிறபடிதானே பகவானிடத்தில் ஸமந்விதமாக வேணும். ஒருவனே மூவகைக் காரணமுமென்று அஸம்பத்தமாக எப்படிச் சொல்லுகிறீர்கள்? என்று கேட்டால். பகவான் அத்புதசக்தியுக்தனாகையாலே அப் பரம புருஷனிடத்தில் எதுவும் ஸமந்விதமே; அஸம்பத்தமானது ஒன்றுமில்லை என்கிற விடைதவிர வேறொன்றும் சொல்லகில்லார் வேதாந்திகள். வேதாந்த தேசிகனும் இதே விடையைத்தான் விடுத்தருளுகிறார்; அச்யுதசதகத்தில் * புரிஸபஹாண ஸரீரோ * என்றச்லோகத்திற்கு நம்முடைய விரிவான வியாக்கியானம் உலகம் பரவியுள்ளது; வியாக்கியானமே வேண்டா; மூலமே போதும்; * வஹஸி ணிமித்தத்தணம் வி அப்புய ஸத்தீ—வஹஸி நிமித்தத்வமபி அத்புதசக்தி:* என்றன்றோ ச்லோகமுள்ளது. அத்புத சக்தியோகத்தாலே இவை கூடும்—என்றன்றோ நிர்வஹிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ பாஷ்யகாராதிகளுக்கும் இந்த அத்புத சக்தியோகமே சாஸ்த்ரார்த்த நிர்வாஹங்களுக்குக் கைகொடுக்கின்றது. ஆகவேதான் "ஸகலவஸ்து விலக்ஷணஸ்ய சாஸ்த்ரைக ஸமதிகம்யஸ்ய அசிந்த்ய அப்ரமேய அத்புதசக்தியுக்தஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண:" என்று அடிக்கடி [illegible] மற்றும் [illegible] ஸ்ரீ பாஷ்ய [illegible] ஸாராதிகளில் நாம் [illegible]

101. * பரா அஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே * என்பது முதலான [illegible] வாக்யங்கள் பலபல. இவற்றால் பகவானுடைய சக்தி அத்புதமானதென [illegible] படுகிறது. அப்படிப்பட்ட சக்தி அவனுக்கில்லையென்று ப்ராமாணிகரொருவரும் [illegible] இந்த சக்தியை இசைந்தால் விருத்த ஸமுச்சயங்கொள்ளும் பேதாபேத வாதி [illegible] கிராதிகளின் வாதமும் உபபந்நமாக வேண்டிவரும் என்று ஒரு அசட்டுவாதம் [illegible] இதைச் சிறிது விமர்சிப்போம். பேதாபேத வாதிகள் பகவானுடைய அத்புத சக்தி [illegible] உபஷ்டம்பகமாகக் கொண்டா தங்களுடைய வாதத்தைக் கிளப்பி யிருக்கிறார்கள்? இ[illegible] ஆகவே இந்த ப்ரதிபந்தி எப்படி விலைச் செல்லும்? அர்த்தமற்ற இப்படிப்பட்ட [illegible] களினால் சில அறிவிலிகளை வஞ்சிக்கலாமே யொழிய, விவேகிகளிடம் விலைச் செல்[illegible] வார்த்தையே அன்றிது.

102. ஒன்று பாருங்கள்: ஸ்வர்க்கத்தை நரகமென்னமாட்டோம்; நரகத்தை ஸ்வ[illegible] மென்ன மாட்டோம்; ஐச்வரியத்தை தாரித்ரிய மென்ன மாட்டோம், தாரித்ரியத்[illegible] ஐச்வர்யமென்ன மாட்டோம். த்வேஷத்தை ஸ்நேஹ மென்ன மாட்டோம், ஸ்நேஹத்[illegible] த்வேஷமென்ன மாட்டோம்; விஷத்தை அம்ருதமென்ன மாட்டோம், அம்ருதத்[illegible] விஷமென்ன மாட்டோம்; நிழலை வெய்யிலென்ன மாட்டோம், வெய்யி[illegible] நிழலென்ன மாட்டோம். ஆனால் நம்மாழ்வார் திருவாய்மொழியின் சேராதவற்[illegible] யெல்லாம் சேர்த்துச் சொல்லி யேத்துகிறார். * நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமா[illegible] வெல்பகையும் நட்பும் விடமுமமுதமுமாய். * கண்ட வின்பம் துன்பம் கலக்கங்களும் தெ[illegible] மாய் * நகரமும் நாடுகளும் ஞானமும் மூடமுமாய் * * புண்ணி[illegible] பாவம் புணர்ச்சி பிரிவென்[illegible] வையாய் * என்றிப்படி வாய் வந்தபடி யெல்லாம் பேசியுள்ளார். இப் பதிக்கத்திற்கு [illegible] தேசிகன் அத்புதமான ச்லோகமிட்டருளுகிறார்:—*ஸம்பத்தாரித்ர்யபாவாத்...அகடித கட[illegible] ப்ராஹ க்ருஷ்ணம் சடாரி:* என்றருளியுள்ளார். இங்கே புத்திமான்கள் சால விமர்சி[illegible] வேண்டிய துண்டு;* நல்குரவுஞ் செல்வுமென்கிற இத்திருவாய்மொழியில்* வன்சரண் சுர[illegible] கட்கு அசுரர்க்கு வெங்கூற்றமுமாய் * என்பதும் (8) ஒரு பாசுரம். பகவான் தைவப்ரக்ரு[illegible] களுக்கு சரண்யனும் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு ம்ருத்யுவாயுமுளன் என்று இப்பா[illegible] ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. உலகில் ஒரு மனிதன் சிலர்க்கு நல்லனும் [illegible] தீயனுமிருப்பதை எங்குங்காணுகின்றோம். இப்படியிருப்பதற்கு ஒரு அகடிதக[illegible] வேண்டிய அவசியமேயில்லை. இதுபோல் பகவானும் நல்லார்க்கு நல்லனாய்த் [illegible] தீயனாயிருக்கிறானென்பதில் அகடிதத்வமென்பது சிறிதுமில்லை. சிலரிடத்திலே நல்[illegible] சிலரிடத்திலே செல்வத்தையும் தருகிறான்; சிலர்க்கு நரக ப்ராப்தியையும் சிலர்க்கு [illegible] ப்ராப்தியையும் பண்ணி வைக்கிறான்—என்றால் இதில் அஸம்பாவிதத்வசங்கைக்கு [illegible] யில்லையன்றோ. இத்திருவாய்மொழியை இப்படியிலே நிர்வஹிப்பதில் என்ன [illegible] ன்றுமில்லை. எம்பெருமான் இப்படியாக வுள்ளானென்று சொல்லுவதனால் அவ[illegible] அகடித கடனா ஸாமர்த்யம் விளங்குகைக்கு ப்ரஸக்தி யேது? சேராதவற்றைச் சேர்ப்பிக்க[illegible] சக்தி பகவானுக்கிடையவே கிடையாதென்பவர்கள் இங்கே இரண்டு விஷயங்களுக்கு [illegible] றவேண்டும். (1) * அகடித கடநம் ப்ராஹ க்ருஷ்ணம் சடாரி: * என்று ஸ்வாமி தேசிகன் [illegible] அருளிச் செய்தார்? (2) இந்தத் திருவாய்மொழியில் அகடித கடனா சக்தியைக் கொண்[illegible] வேண்டிய விஷயம் என்ன இருக்கிறது? வர்ஷசதமானாலும் இவ்விரண்டு கேள்வி[illegible] [illegible] விடையிறுக்க பகவச் சக்தி வித்வேஷிகள் அசக்தரே. இப் பதிக[illegible] [illegible] அநுபவிக்கப்பட்ட தென்று அருளி [illegible] ஆறுயிரப்படியாசிரியரான [illegible] [illegible] ச்லோகமிடாமல் [illegible] திருவடிகளின் [illegible] வியாக்யான [illegible] [illegible] வேயிலே * அகடித கடநம் ப்ராஹ * என்றருளிச் செய்த தேசிகன் [illegible]

[illegible]

103. பகவானுடைய ஸ்வரூபம் ஒவ்வொரு வஸ்துவிலும் நிச்சேஷமாக நிரம்பியுள்ளதென் ...
...ளுகிறவிதில் என்ன விபத்து வந்திட்டது? பரம சாந்தியுடனே விடையிறுக்கவேணும். ...
கேட்கிற கேள்வியை நன்கு வாங்கிக்கொண்டு விடை கூறவேணும். நூற்றெட்டுத் திருப்...
...துள்ளன; ஒவ்வொரு திருப்பதியிலுமுள்ள மூர்த்திகளொவ்வொன்றிலும் பகவானுடைய
...ரூபம் நிச்சேஷமாக நிறைந்துள்ளதா இல்லையா என்று கேட்கிறோம்; மற்றவற்றில் பகவத்
...ரூபம் எப்படியாவது இருக்கட்டும். ஆங்காங்கு பக்தர்களால் ஆராதிக்கப்படுகிற திரு
...த்திகளை யெடுத்துக் கொள்வோம். இவற்றிலும் ஸ்வார்த்தயஜ மூர்த்திகளை விட்டுப்
...ர்த்தயஜ மூர்த்திகளை மாத்திரம் கொள்வோம். இவற்றிலும் திவ்யதேசங்களில் திகழும்
...மூர்த்திகளையே கொள்வோம். அவ்வளவும் வேண்டா; கோயில் திருமலை பெருமாள்
...யில் என்று சிறப்பித்துக் குலாவப்படுகிற மூன்று திருப்பதிகளிலுள்ள திருமூர்த்திகளையே
...ள்வோம். ஸ்ரீரங்கநாதனிடத்தில் [மூலமூர்த்தியில்] பகவத்ஸ்வரூபம் நிச் சேஷமாக
...ம்பியுள்ளதா இல்லையா? என்று கேட்கிறோம். தெளிந்து நின்று விடை கூறவேணும்.
...வாமிதேசிகன் அருளிய அற்புதமான ச்லோகமொன்று * பக்தஸ்ய தாநவசிசோ: பரிபாலநாய *
...த்யாதி. இதில் என்ன சொல்லப்படுகிறதென்னில் * எங்குமுளன் கண்ணனென்ற மகனைக்
...ய்ந்த இரணியன் தூணைப் புடைப்பதற்கு முன்னே எம்பெருமான் மூவுலகத்திலும் ஒவ்
...வாரு வஸ்துவிலும் [ஒவ்வோரிடத்திலும்] நரஸிம்ஹரூபியாக ஆவேசித்து விட்டதாகவும்,
...ரணியன் தட்டினது ஒரு தூணையே யாதலால் அந்த வொருதூணில் நின்று மாத்திரம் ஒரு
...ரஸிம்ஹமூர்த்திமாத்திரமே வெளிவந்தபடியால் மற்ற ஸகல ப்ரதேசங்களிலும் ஆவேசித்த
...லகோடி நூறாயிரம் நரஸிம்ஹமூர்த்திகள் இன்னமும் அப்படியே ஸர்வத்ர வாஸஞ்செய்வதாக
...ம் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. இதை அதிவாதமென்று சொல்லிவிட்டால் ஸ்வாமிக்கு
...ஸாதாரணமாகவுள்ள ஏற்றம் போய்விடும். "ஆளவந்தார், பாஷ்யகாரர் முதலானருங்கூட
...திவாதிகளே; நம் தேசிகனொருவரே அதிவாத கதாவைதேசிகர்" என்று சாற்றிய பறை
...ன்றாக அவச்ய மடையலாகாது. ஏற்கெனவே ஆவிர்ப்பவித்த நரஸிம்ஹமூர்த்திக்கும், இற்றைக்
...ம் கர்ப்பவாஸம் பண்ணுகிற நரஸிம்ஹ மூர்த்திகளுக்கும் வாசியுண்டோ? என்பதையும்
...சர்த்துக் கொண்டு விடையிறுக்கவேணும். (ப்ரக்ருதவிஷயத்தில் வருவோம்.) ஒரு ஸ்ரீரங்க
...தனிடத்திலேயே பகவத் ஸ்வரூப மடங்கலும் அடங்கிவிட்டால் மற்றும் திருமலையிலும் பெரு
...ள் கோயிலிலுமுள்ள மூர்த்திகளிலே வியாபிப்பதற்கு ஸ்வரூபமில்லாமையாலே ஸ்ரீரங்கநாத
...ர்த்தியில் பகவத் ஸ்வரூபத்தின் ஸ்வல்ப பாகந்தான் உள்ளதென்று உரைக்கவேணும்.
...ந்தத் திருமூர்த்தியைப்பற்றிக் கேட்டாலும் இப்படியேதான் விடையிறுக்க வேண்டியது
...தியாயிற்று பகவத் சக்திவித்வேஷிகளுக்கு. பகவத் ஸ்வரூபம் அரை குறையாக இருக்கப்
...பற்ற மூர்த்திகளையே இவர்கள் தொழுதுவருவதாகத் தேறிற்கும்.

104. ஸ்வரூபம் ஆங்காங்கு அ... குறையாக இருந்தாலும் ஒவ்வோரிடத்திலும் பரி
...ர்ணசக்திக்கு அணுமாத்திரமும் குறையே கிடையாதென்று நாங்கள் இசைகிறோமே யென்று
...வர்கள் சொல்லக்கூடும். இது அர்த்தமில்லாத வார்த்தை; வ்யாப்தனுக்கு ப்ரதிவஸ்து
...ர்ணத்வத்தைச் சொல்லுகிற வைதிகர்கள் யாவர்க்கும் இவ்விதமான அபிப்ராய... உள்ளது;
...ரொரு உபாத்யவச்சிந்ந ப்ரதேசமே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல சக்... த்தா
...ருக்கை யென்பதை மறுப்பாரார்? நிருபகர்கள் இதை மாத்திரமே யெழுதிவிட்... ன்றால்
...வகு அழகாக இருந்திருக்கும். ந்யாயஸித்தாஞ்ஜந ஸ்ரீஸூக்தியோடும் மிக இணங்கியிருக்கும்.
...ருவர்க்கும் ஒன்று சொல்ல வாய்பெறாது. "வஸ்து தோறும் ஸ்வரூப ஸமாப்தியென்று
...கொண்... மற்றோரிடத்தில் வ்யாபிப்பதற்கு வஸ்துவில்லையாகும்" என்று ...
...காரு... இதுமிகு ஆச்சரியம்.

105. ந்யாயஸித்தாஞ்ஜநத்திலும் ... பரிமாணமிவை ...

"अन्यत्र विद्यमानस्य अन्यत्रपूर्णत्वं न स्यादिति चेत्" என்கிற ஸ்ரீ ஸூக்தியுள்ளது. இந்த
திக்கு உதயம் எப்படி? என்பதொன்றையே விவேகிகள் விமர்சிக்கவேணும். * इति चेत्
இந்த ஆசங்கைக்கு ஸமாதானம் எதுவாயினுமாகுக. அதைப்பற்றி விசாரமே
* ஸர்வத்ராபி பூர்ண ஏவ * என்று ஸாதித்தவுடனே "வேறிடங்களிலுமிருக்கின்ற
ஒரேயிடத்தில் எப்படி பூர்ணனாயிருக்கமுடியும்? என்று ஒருவன் ஆக்ஷேபிப்பதாக எழு
பட்டிருக்கிறதே. கீழ் வாக்யத்திலிருந்து தானே இந்த ஆக்ஷேபம் தோன்றவேண்டும். இப்
ஆக்ஷேபிக்கவேண்டும்படியான விஷயமே கீழ்வாக்யத்தில் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறதெ
பது கைகொள்கனியாகக் காண்கிறதே.

106. சாகுந்தல நாடகத்தின் முடிவில் மஹாகவி ஒரு வாக்விநோதம் காட்டியுள்ளா
அதைச் சுருக்கமாக நினைப்பூட்டுகிறோம்: குழந்தையான துஷ்யந்தகுமாரனெதிரில் ஒருத்தி ஒரு
பதுமைப் பறவையைக் கொண்டுகாட்டி "ஸர்வதமந! சகுந்தலாவண்யம் பச்ய" [குழந்தாய்? இந்த
பக்ஷியின் அழகைப்பார்] என்று சொன்ன வளவிலே, 'அப்படியா? என் தாயான சகுந்தலை
எங்கே?' என்றதாம் அக்குழந்தை. சகுந்தமென்று பக்ஷிக்குப் பெயராகையாலே 'சகுந்த
னுடைய லாவண்யத்தைப் பார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. குழந்தையானது (சகு
என்றும் (லாவண்யம்) என்றும் கொள்ளாமல் (சகுந்தலா...) என்று தன் தாயின் பெய
ப்ரஸ்தாவித்ததாகக் கொண்டு சகுந்தலை எங்கே? என்று கேட்டதாக அமைப்பு உள்ள
இங்கு 'சகுந்தலாவண்யம்' என்று சொல்லாமல் "விஹங்கம லாவண்யம்" என்றோ '
லாவண்யம்' என்றோ சொல்லியிருந்தால் அப்போது குழந்தை 'என் தாய் எங்கே?' என்
கேட்பதற்கு ப்ரஸக்தியுண்டோ? இது கவி தானாக வைத்தவொரு சமத்காரம். அப்படி எ
னும் இங்கு விசித்ரவாக்கின் அமைப்பு உள்ளதோ? ருஜுவான வாக்கேயுள்ளது. "ஸர்
ராபி பூர்ண ஏவ" என்று ஸாதித்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் "अन्यत्र विद्यमानस्य अन्य
पूर्णत्वं कथं भवेत्?" என்று சங்கிப்பதற்கு உறுப்பான அர்த்தமே உறைந்துகிடந்ததென்ப
அசைக்க முடியாதபடி தேறிவிட்டது. அந்த பூர்ணத்வந்தான் 'வஸ்துதோறும் ஸ்வரூப
ஸமாப்தி' யென்பது. கடைசியாக இவ்விஷயத்தை முடிக்குமளவிலும் வேறொரு சப்தத்தை
யிட்டு முடிக்காமல் * "यथागमं सर्वत्र पूर्ण एव भगवान्" * என்று முதல் முதலிலெடுத்த பூர்ண
சப்தத்தையே யிட்டு முடித்தார். இவ்விடத்தில் *க்ருத்ஸ்நப்ரஸக்திரித்யாதிபூர்வபக்ஷ ஸூத்ரத்தை
யும் * ச்ருதேஸ்து சப்தமூலத்வாத் * என்கிற ஸித்தாந்த ஸூத்ரத்தையும் எடுத்துக் காட்
இதைத் தஞ்சமாகக் கொண்டன்றோ விவாத விஷயம் உபஸம்ஹரிக்கப்பட்டது. பிறர் சொல்
கிறபடி ஸ்வாமிக்குத் திருவுள்ளமாயிருந்தால் இங்கு இந்த ஸூத்ரத்தை உதாஹரித்தது எ
வாத்மநா அப்ரஸக்தமாகுமே. லோக விஸஜாதீயமான அத்புத சக்திவாய்ந்த பரம புருஷனிட
திலே 'இது எப்படி ஸம்பவிக்கும்? அது எப்படி ஸம்பவிக்கும்?' என்று வாயைத் திறவாதே
என்றன்றோ ஸூத்ரகாரர் முடித்திட்டது. அது தானே இங்கு ஸ்வாமியின் முடிவுக்குக் கை
கொடுத்தது. அகடிதகடநாசக்தன் பக்கலிலே கூடாததொன்றில்லை யென்று கூறிவைத்தவர்
தாமே ஸ்ரீ ஸார சாஸ்த்ரத்தில் இந்த சக்திக்குக் கண்ணழிவு கூற நேர்ந்ததென்றால், இந்தப்
பொற்றலையடைக்க மூவுலகும் திரண்டாலும் செய்யலாவதில்லையே. கைதேர்ந்த ஆயிரம்
மருத்துவர்கள் ஒன்று கூடித் திரண்டுருண்டு வந்தாலும் உயிரிழந்து போனவற்கு உயிர்ப்பிச்சை
யளிக்க முடியுமா வென்பதையும் உணரகில்லாரந்தோ இம்மஹாமேதாவிகள்.

107. * மலிநமபி ஹிமாம்சோர் லக்ஷ்ம லக்ஷ்மீம் தநோதி * என்ற மஹாகவி தானே * ஏகே
ஹிதோஷோ குணஸந்நிபாதே நிமஜ்ஜதி இந்தோ: கிரணேஷ்விவாங்க: * என்றதுஎன்னே? * லக்ஷ்மீம்
தநோதிக்கும் * நிமஜ்ஜதிக்கும் சேர்த்தியில்லையே யென்று கேட்டால் இதற்கு ஒரு ...
... மொழகலாம். இங்கு அப்படியில்லையே.

108. ...

இது அவசியமோ? * ஆத்மநி திஷ்டந் * என்றவளவே போராதோ? என்று சங்கை தோன்றக் கூடியது. இதற்கு ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையில் * "वेद्यामग्निस्तिष्ठति, तिले तैलं तिष्ठति" * (வேத்யாமக்நிஸ் திஷ்டதி, திலே தைலம் திஷ்டதி) என்ற இரண்டு வாக்கியங்களையெடுத்துக் காட்டித் தெளிவு பெறுத்தியிருப்பது காண்க. 'எள்ளில் எண்ணெய் இருக்கிறது' என்றால் எண்ணெயானது எள்ளினுள்ளே யிருப்பது சொல்லிற்றாகுமே யல்லது வெளியிலுமிருப்பதாகச் சொல்லிற்றாகாது. 'திண்ணையில் தீ இருக்கிறது' என்றால் தீ திண்ணையின் மேலிருப்பது சொல்லிற்றாகுமே யல்லது உள்ளிலுமிருப்பதாகச் சொல்லிற்றாகாது. ஆத்மநி பரமாத்மந: ஸ்திதியோ வென்னில் உள்ளும் புறம்பு மொக்கவாயிற்று; திலத்தில் தைலமிருப்பது போலவும் வ்யாப்தி; வேதியில் அக்நியிருப்பது போலவும் வ்யாப்தி; இப்படிப்பட்ட விலக்ஷண வ்யாப்தியை விளங்கக் காட்டுவதற்கே ச்ருதி * ஆத்மநி திஷ்டந், ஆத்மந: அந்தர: * என்று இரண்டு படியாகவும் ஓதிற்று—என்று ச்ருதப்ரகாசிகையில் விவரணமுள்ளது. ஆக அணுவஸ்துவில் அந்தர் வ்யாப்தி விஷயம் நிஷ்கல்மஷமாய் முடிவு பெற்றது.

109. [illegible] பரிஸமாப்ய வர்த்தித்வத்தைப்பற்றி ச்ருதப்ரகாசிகாசார்யருடைய திருவுள்ளத்தை இங்கு சுருங்க உபபாதிக்கிறோம். இதற்கு அவதாரிகையாகச் சில வார்த்தைகள் அவசியமாகின்றன. நவீநர்களின் சுவடியில், ஜயந்தபட்டன்—பார்த்தஸாரதி மிச்ரர்—சாலிகநாதன் என்கிற பெயர்களை மகுடமாக வைத்துச் சில சில வரிகள் வரையப்பட்டுள்ளன. இந்த பரிச்ரமம் எதற்காகக் கொள்ளப்பட்ட தென்பதைச் சிறிது விவரிக்கிறோம். இது மிக முக்யமான விஷயம். "ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலே எல்லாவற்றிலும் தனித் தனியே குறைவற வியாபித்து நிற்கும்" என்றும், "ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்கிறதென்றால் அசேதநத்துக்கு இது கூடுமென்றிருப்பர்கள்; பரமசேதநனும் ஸர்வ சக்தியானவன் இங்ஙனே வர்த்திக்கிறானென்றால் இதில் விப்ரதிபத்தி பண்ணிப் போருவர்கள்" என்றும் ஈட்டில் அருளிச்செய்தவற்றை நாம் எடுத்துக்காட்ட நேர்ந்தபோது நவீநர்கள் "நாம் ஜாதியை ஒப்புக் கொள்ளாதவர்களாகையாலே ஜாதியை த்ருஷ்டாந்தீகரித்து இவ்விஷயத்தைச் சொல்லுவதே தகுதியற்றது" என்றார்கள். அதன்மேல் நாம் * "यथा जातिवादिनो जातिरेकैव अमूर्ताखण्डमुण्डादिषु अत्यन्तविलक्षणेषु अनन्तेष्वपि परिसमाप्यैव वर्तते, न तत्र इतरवस्तु-चोद्यमिति" * என்றுள்ள வேதாந்த தீபஸூக்தியை யெடுத்துக் காட்டினோம். அதன்பிறகு திகைத்து நின்றவர்களிவர்கள். இந்த ஸ்ரீஸூக்தியானது இவர்களுடைய குசோத்யங்களையெல்லாம் வேரறுக்குமது. இருக்கட்டும். இந்த ஸ்ரீஸூக்தியை நாமெடுத்துக்காட்டியான பிறகு தாங்களும் அதை உதாஹரிக்கத் தொடங்கினார்கள். "பகவத் ராமாநுஜன் தீபக்ரந்தத்தில் ஸ்பஷ்டமாக ஸாதித்தார்" என்று அசட்டுத்தனம் நன்கு விளங்க எழுதுகிறார்கள். வர்ஷஸஹஸ்ரம் போராடினாலும் இந்த ஸ்ரீஸூக்தி இவர்களுக்கு காலகூடமேயென்பது அசைக்க முடியாதது.

110. சோத்யம் பண்ண வாயைத் திறவாதே என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கச் செய்தேயும் "ஒரு வ்யக்தியினுள்ளே பரிஸமாப்ய வர்த்தித்தால் அந்யத்ர வ்யாப்தி எப்படி கூடும்." என்று இந்த ஆக்ஷேபமொன்று தானே இவர்களிடம் தாண்டவமாடுகிறது. இந்த ஆக்ஷேபத்தைச் செய்யாமல் அர்த்த பரிஷ்காரத்தை எங்ஙனே செய்தாலும் அழகியதே யென்று நாமும் பல பல கால் அறைகின்றோம். தைவதுர்விபாகாத் இந்த ஆக்ஷேபத்தை மறைத்திட முடியவில்லையிவர்களுக்கு. எதைச்சொல்லி உய்வோமென்று தடுமாறுகின்றார்கள். ஜாதியைப்பற்றிப் பிறர் என்ன சொல்லுகிறார்களென்று பார்க்கிறார்கள். எதைப்பார்த்தாலும் இவர்களுக்கு அநர்த்தமாகவேயுள்ளது. அதையும் தாங்களே வெளியிட்டுக் கொள்ளுகிறார்களே, இதுவும் ஒரு விநோதம். ஜயந்த பட்டன் என்ற தலைப்பின் கீழ் இவர்கள் எழுதியுள்ள விஷயம் இவர் [illegible] பரிஸமாப்யவர்த்தியென்கிறோ, ஒரு

கிறீர்?" என்று கேட்பவர்களுக்கு ஐயந்த பட்டாசார் என்ன மறுமொழி கூறுகின்றார்? சொல்லுவதிவ்வளவே; 'என்னைக் கேட்டால் நானென்ன சொல்வது? பரிஸமாப்யை யென்று சொல்லித் தீரவேண்டியதாயிருக்கிறது; அது மற்ற வ்யக்திகளிலும் காணப்படுகிற தென்கிறீரோ? ஆமாம், காணப்படுகிறது. அதை இல்லை செய்ய யாரால் முடியும்? அதுவும் இசையவேண்டியதே, இதையும் இசையவேண்டியதே' என்று.

111. இவ்விதமாகவே - இதைவிட அதிகமாகவே பகவான் விஷயத்தில் பேசவேண்டி யிருக்க, இந்தநவீனர்கள் என்ன பேசுகிறார்களென்பதை விவேகிகள் நோக்கவேண்டுமே. ப்ரஹ்ம ஸ்வரூபம் ஒன்றில் பரிஸமாப்யவர்த்தித்தால் மற்றொன்றில் அது காணமுடியா தென்றே இன்னமுங் கூறுகிற இவர்களின் பிடிவாதம் ஊமனார் கண்ட கனவிலும் பழுதா யொழிந்ததென்று முடியவில்லையா? பகவானை ஸ்பர்சியாத அவர்களின் பேச்சு ஒரு புறமிருக்க, ப்ரஹ்மவாதிகளில் தலைவரான ச்ருத ப்ரகாசிகாசார்யருடைய ஸ்ரீ ஸூக்தியன்றோ நமக்குத் தலைமேலது.

112. வேதார்த்த ஸங்க்ரஹவிவரணத்தில் * "एकस्मिन्नेव वस्तुनि [illegible] पस्य पूर्णवृत्तितया अन्यत्र वृत्त्ययोग्यत्वशङ्काव्युदासार्थः" * என்றுள்ள ஸ்ரீ ஸூக்தியானது இவர்கள் கூறும் அல்ப மான ஆக்ஷேபத்தைப் பல யோஜனை தூரத்தளவில் கொண்டு தள்ளவில்லையா? "ஏகஸ்மிந் வஸ்துநி ஸ்வரூபஸ்ய பூர்ணவ்ருத்திதயா" என்ற வாக்யமானது பரப்ரஹ்ம ஸ்வரூபம் [illegible] தோறும் பூர்ணவ்ருத்தி யென்று திடப்படுத்திற்று. அடுத்ததான * அந்யத்ர வ்ருத்தி - யத்வசங்கா வ்யுதாஸ * என்றதானது பஹிர்வ்யாப்திக்கு விருத்தமாமென்று வாயெடுக்க [illegible] தென்று கெட்டியான பூட்டுப்போட்டு விட்டது. இந்த மருமம் இவர்களது நெஞ்சிற்ப[illegible] வில்லை; பட்டும் பயனில்லையே. 'சட்டி சுட்டது, கைவிட்டது' என்று விட்டுத் தொ[illegible] விதியில்லையே. "இந்த ஸூக்திக்கு அது திருவுள்ளம். அந்த ஸூக்திக்கு இது திருவுள்ளம்" என்று தம் மனத்துக்கும் பொருள் படாதவகையில் மெழுகிக்கொண்டு போகிறார்கள். உபநி[illegible] பாஷ்யகாரரான ரங்கராமாநுஜ ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியை நாமெடுத்துக் காட்டினோம். இவர்களைத் தெளிவிக்க அதைவிட வேறொரு ஸ்ரீஸூக்தி வேணுமா? அதையும் இவர்கள் த[illegible] களுக்கு அநுகூலமென்று காட்ட 'அதைக் காண்க' என்கிறார்கள்.

113. கலியாண முஹூர்த்தத்திற்கு நாளிட்டுத் தரும்படி ஒரு யதாஜாதன் புரோஹிதரிடம் வேண்டிக் கொண்டான்; அவர் ஏதோவொரு பஞ்சாங்கத்தைத் தவ[illegible] பார்த்து 'பங்குனி 14உ நல்ல நாள்' என்று தெரிவித்தார். அந்த யதாஜாதன் அப்படி குறிப்பிட்டு உற்றுருறவினர்க்கு சுப பத்திரிகை அனுப்பிவிட்டான். ஒருவர் கவனித்துப் பார்[illegible] தில் அந்நாள் க்ருத்திகையும் அமாவாஸ்யையும் சனிக்கிழமையும் மரணயோகமுங் கூடியி[illegible] தது. உடனே ஓடிவந்து 'இதென்ன, இப்படி விபரீதமான நாளை யார் உமக்கு இட்டுக் கொடுத்தது?' என்று கேட்க, அவன் உண்மையில் திதிவாரநக்ஷத்ர நன்மை தீமைகள் ஒன்றுமறி யாதவனுகையாலே புரோஹிதரிடம் வந்து 'தாங்களிட்டுக் கொடுத்த நாள் நல்லதன்று' என் றார்களே யென்றான். உடனே புரோஹிதர் பஞ்சாங்கமெடுத்துப் பார்த்தவாறே முன்பு தாம் பார்த்தது வேறொரு வருஷத்தியதென்றும் அநவதாநாத் தவறிப்போய் விட்டதென்று உண்மைதெரிந்து கொண்டார்; ஆனாலும் தமது அசட்டுத்தனத்தை ஒப்புக்கொள்ள மன[illegible] லாமல் ஒரு சூது செய்யத் தொடங்கினர்; "நல்ல நாளன்று என்று உன்னிடம் சொன்னவ[illegible] இங்கு அழைத்துவா; நான் எது கேட்டாலும் அவர் ஆமாம் ஆமாம் என்றே ஒப்புக்கொள்[illegible] படி செய்துவிடுகிறேன் பார்" என்று சொல்லிப் போகவிட்டார். உடனே அவரை யழைத்துக் கொண்டு வந்தானவன். அவரை நோக்கிப் புரோஹிதர் கேட்கிறார்— (வினா) பங்குனி [illegible] அமாவாஸ்யை தானே (விடை) ஆமாம் (வினா) அன்று க்ருத்திகை [illegible] (விடை) [illegible] (வினா) அன்று சனிக்கிழமைதானே (விடை) ஆமாம் (வினா) [illegible] (விடை) ஆமாம் (வினா) [illegible]

ய் (அல்ல அல்ல) என்கிறீராமே, ஏன்? இதற்குமேல் அவர்க்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. நம்மால் இவர்க்கு பதில் சொல்லிப் பிழைக்க முடியாதென்று சிக்கென எண்ணி ஒன்றும் சொல்லாமல் போய்விட்டாரென்று ஸ்ரீமத்தேரழுந்தூராண்டவன் ஒரு கதை ஸாதிப்பது கேட்டதுண்டு. அதுதான் இங்கு ஞாபகத்திற்கு வருகிறது. "உங்களுக்கு அனுகூலமான ப்ரமாணங்காணுமிது" என்று நாம் எந்த ப்ரமாணங்களைக் காட்டுகிறோமோ அவற்றைப்பற்றி இவர்கள் ஆராய்ந்து விவரிக்கவேண்டியிருக்க அதைவிட்டு அதை உங்களுக்கு அனுகூலம் போலவே பாவனை காட்டி "அவற்றைக்காண்க" "அதைக் கவனிக்கவேண்டியது" "அதை உற்று நோக்கவேண்டியது" என்று எழுதிவிட்டால் என்னாகும்? விவரித்த கதையில் புரோஹிதருடைய ஸ்தா[illegible] இவர்கள் ஆச்சரியமாக அலங்கரிப்பவர்களென்பதை எளிதாகக் கண்டறியவல்ல விவேகிகள் ஆங்காங்கு இல்லாமற் போகவில்லை.

114. நவீநர்களின் ஸர்வசக்திச் சுவடியில் தர்க்கம் என மகுடமிட்டு எழுதின விஷயம் ஸர்வாத்மநா அஸாதுவென்பது ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. தர்க்கமாவது யுக்திவாதம். சாஸ்த்ரங்களில் தேறின அர்த்தங்களை யுக்திவாதங்களாலும் ஸ்தாபிப்பது என்றொரு முறையுண்டு. *ஆர்ஷம் தர்மோபதேசஞ் ச வேதசாஸ்த்ராவிரோதிநா, யஸ் தர்க்கேணா[illegible]த்தே ஸ தர்மம் வேத நேதர:* என்பது ப்ரஸித்தமாதலால் சாஸ்த்ரங்களோடு முரண்படாத யுக்தி வாதங்களைக் கொண்டு சாஸ்த்ரார்த்தங்களை நிஷ்கர்ஷிப்பதென்பது நிரவத்யமானது. யுக்தி வாதங்களால் சாஸ்த்ரார்த்தங்களைத் தலை கீழாக்குவதென்பது கிடையாது. ப்ரக்ருத விஷயத்தில் தர்க்கத்தை உபஷ்டம்பகமாகக் கொள்ள வேணுமானால் "பகவான் ப்ரதிவஸ்து பூர்ணன்" என்பதற்கு ஸாதகமான வழியில் கொண்டு அதை ஸ்தாபிக்கலாமேயல்லது வேறுசெய்யத்தகாது. பிறர் செய்வது என்னவென்றால், ப்ரதிவஸ்து பூர்ணத்வத்தை அபலாபம்செய்வதற்கு யுக்திவாதத்தை உபஷ்டம்பகமாகக் கொள்ளப் பார்க்கிறார்கள். இவர்களுடைய யுக்திவாதம் எதுவென்றால் "ஒரு வஸ்துவிலேயே பகவான் பூர்ணன் என்று கொண்டால் மற்றொரு வஸ்துவில் வியாபிக்க ப்ரஸக்தியில்லையே" என்பதுதான். வேறு ஒரு சரக்கும் இவர்கள் கையில் கிடையாதென்பது சிலாலிகிதம். இந்த யுக்தி வாதத்தைக்கொண்டு ஸர்வசக்தியை இல்லை செய்வதானால், இது போன்றனவும் இதைவிட மேம்பட்டனவுமான யுக்திவாதங்களினால் எல்லா சாஸ்த்ரார்த்தங்களையும் எளிதாக நிரஸித்துவிடலாமே. பகவானொருவனுளன் என்று வைத்துக்கொண்டன்றோ நாம் இங்ஙனே வ்யாப்தியென்றும் வாத்ஸல்யமென்றும் தயையென்றும் ப்ரபத்தியென்றும் சிலவிஷயங்களைப் பற்றிக்கொண்டு போராடுகின்றோம். 'மூலே குடார:' என்று அந்த பகவானையே இல்லை செய்கிற யுக்திவாதிகள் இவ்வுலகில் மலிந்து கிடக்கிறார்களே; அவர்களது வாதங்களினால் பகவான் போய்விட்டானென்று நாம் நினைக்கிறோம். * यदुक्तयस्त्रयीकण्ठे यान्ति मङ्गलसूत्रताम्— யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கலஸூத்ரதாம் * என்னும்படி வேத மாதுக்குத் தாலி கட்டிவைத்த மஹாசார்யர் * "इत्याद्यनिष्ठितकुतर्कमतर्कयन्तः त्वद्वैभवं श्रुतिविदो विदुरप्रतर्क्यम्"— * இத்யாத்யநிஷ்டித குதர்க்கமதர்க்கயந்தஸ் த்வத்வைபவம் ச்ருதிவிதோ விதுரப்ரதர்க்யம் * என்று அருளிச்செய்துவைக்கையாலே நாம் குறைவின்றி வாழ்கின்றோம். [illegible]க்குக் கழிக்கப்பட்ட அநிஷ்டித குதர்க்க வாதிகள் ஸ்ரீ பாஷ்யாதிகளால் நிரஸ்தரானவர்கள் மாத்திரமல்ல; ஸ்ரீ வசநபூஷணாதிகளால் நிரஸ்தரானவர்களும் கூட அந்தவிருது சுமப்பவர்களேயென்று அறியத்தக்கது. நையாயிகர்கள் ஈச்வரனை அங்கீகரியா[illegible] லேனினும் அவர்கள் அநுமானத்தைக்கொண்டு ஈச்வரனை ஸாதிக்கிறபடியால் [illegible]

[illegible]

12. வாத்ஸல்யமாவது தோஷபோக்யத்வமென்பதுபற்றி.

115. எம்பெருமானுடைய திருக்குணங்களை விவரித்தருளாநின்ற நம் பூருவா...
யர்கள் "வாத்ஸல்யமாவது - தோஷங்களையும் ...்யமாகக் கொள்ளுகை" என்று ...
யருளினார்கள். சரணாகதிகத்யத்திற்கு மிகவும் விசேஷமாக பாஷ்யமிட்டருளின ச்ருத...
காசிகாபட்டர். "वात्सल्यं नाम दोषेषु गुणत्वबुद्धिः—வாத்ஸல்யம் நாம தோஷேஷு குண...
புத்தி:" என்றருளிச் செய்தார். அவர் தாமே ஸ்ரீ பாஷ்யச்ருதப்ரகாசிகையிலும் * संच...
विशेषान्वितेषु प्रीतिः स्नेहः। यस्य विपाका अस्थानभयशङ्कित्वम्, दोषानवभासः, दोषेऽपि गुणत्वबुद्धि...
त्यादयः * என்றருளிச் செய்துள்ளார். இந்த வாக்யத்தில் * தோஷேபி குணத்வபுத்தி:* ...
றது நோக்கத் தக்கது. * वात्सल्यं नाम दोषेष्वपि गुणत्वबुद्धिः * என்று ஸமந்வயாதிகரண ச்...
ப்ரகாசிகையிலுமுள்ளது.

116. உலகில் ப்ரீதியின் நிலைமைகள் பலவிதமாயிருக்கும். அச்சம் சங்கிப்பதற்...
ஆஸ்பதமில்லாமலிருக்கச்செய்தேயும் என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ வென்று வயிறுபிடிக்கு...
படியாகப் பண்ணிவிடுவது ஒருவகையான ப்ரீதி நிலைமை. ஒருவனிடத்தில் குற்றங்கள் பல...
நிரம்பியிருக்கச்செய்தேயும் அவை புலப்படாதபடியாவதும் ஒரு ப்ரீதி நிலைமை. அக்குற்றங்க...
புலப்படாதவளவேயன்றிக்கே அவற்றையே நற்றமாகக் கொள்ளும்படியாவதும் ஒரு ப்ரீ...
நிலைமை. இவ்வர்த்தத்தையே மேலெடுத்துக்காட்டிய ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியானது விள...
கக் காட்டுகின்றது.

117. தோஷங்களையும் போக்யமாகக் கொள்ளுவதென்னும் வார்த்தையைப் பிற...
ஹேயமாக நினைத்து ஹேளனம் செய்வதுமுண்டு. உலகத்திலும் ப்ரத்யக்ஷமான அநுபவத்தி...
லுள்ள படிகளை அறியாமையினாலது. தோஷங்களை அருவருக்க வேண்டியிருக்க அவற்றை...
குணமாகக் கொண்டு போக்யமாகக் கொள்ளும் நிலைமை ப்ரேமத்தினுடைய மிகச் சிறந்த...
எல்லை நிலமான பருவமாகும். ஒருவனுக்கு ஒருவனிடத்தில் எல்லை கடந்த ப்ரீதி சென்றதென்...
றால் அவனது குற்றங்களை யெல்லாம் நற்றமாகக் கொள்வதற்கு மேற்பட வேறொன்றுமாகாது...
இது லோகஸித்தமான விஷயம். * यथा सद्यः प्रसूताया धेनोर्वत्से * [யதா ஸத்ய: ப்ரஸூதாயா
தேநோர் வத்ஸே] என்று ஒரு த்ருஷ்டாந்தமும் காட்டியருளுகிறார் ச்ருதப்ரகாசிகாசார்யர்.
"எற்றே! தன் கன்றினுடம்பின் வழுவன்றோ காதலிப்பது, அன்றதனை யீன்றுகந்த ஆ" என்...
பது ஞானஸாரத்தில் அருளாளப்பெருமானெம்பெருமானார் அருளிச் செய்த பாசுரம். அ...
றீன்ற கன்றின்பக்கல் தாய்ப் பசுவானது எவ்வகையான ப்ரேமம் கொண்டிருக்கின்றதென்பது
அபரோக்ஷம். கன்றினுடம்பிலுள்ள வழுக்களை யெல்லாம் பரம போக்யமாகக் கொண்டு நக்கு...
கின்றது பசு. இப்படிப்பட்டவொரு ப்ரேமவிசேஷமே வாத்ஸல்ய சப்தார்த்தம்.

118. இவ்விஷயத்தில் பிறருடைய சங்கை யென்ன வென்றால், தோஷத்தில் தோஷத்வ...
மென்கிற தன்மை எப்போதும் தோற்றிக்கொண்டே யிருக்க, தோஷத்தைக் கண்டு...
குணமென்று க்ரஹிப்பது எம்பெருமானுடைய ஞான பூர்த்திக்குக் கொத்தை யன்றோ...
என்பதாம்.

119. இங்குத் தெளிவிக்கின்றோம். ஸஹஸ்ரநாமத்தில் * अविज्ञाता सहस्रांशुः—அவிஜ்...
ஞாதா ஸஹஸ்ராம்சு:* என்றுள்ளது ப்ரஸித்தமே. அவிஜ்ஞாதா என்பதற்கு அறியாதவன்
என்று பொருள். ஸஹஸ்ராம்சு: என்பதற்கு ஸர்வதோமுகமான ஞானத்தையுடையவன் என்று
பொருள். இவ்விரண்டு திருநாமங்களும் ஒன்றோடொன்று சேராதவை. ஸஹஸ்ராம்சுவாக
இருப்பவன் அவிஜ்ஞாதாவாக இருக்க முடியாது. அவிஜ்ஞாதாவாக இருப்பவன் ஸஹஸ்ராம்...
சுவாக இருக்க முடியாது. ஆனாலும் இரண்டு திருநாமங்களும் சேர்ந்திருக்கின்றன. அவிஜ்ஞாதா
என்பதற்கு 'அடியார்களின் தோஷங்களைக் காணாதவன்' என்று பொருள் கூறப்படுகின்றது.
இப் பொருளில் ஸர்வஜ்ஞத்வம் ... தானே இரும். இதற்குப் பிறகே...

ம் ஏதென்று பார்க்கவேணும். உண்மையில் எம்பெருமானுக்கு ஸர்வஜ்ஞத்வம் குறையற் றிருக்கவும் ப்ரேமவசத்தினால் அடியார்களின் குற்றங்களைக் காணக் கண்ணிட்டிருப்பதென்பது பொருந்தும். அதுவொரு ப்ரேமபருவம். குற்றங்களை நற்றமாகக் கொள்ளுவதென்பது அதற்கு மேற்பட்ட ப்ரேமபருவம். இதைத்தான் ச்ருதப்ரகாசிகாசார்யர் நன்கு காட்டியருளியுள்ளார்.

120. நம் தோஷங்கள் எம்பெருமானுக்கு போக்ய மென்றால், போக்ய வஸ்துக்களை ஸமர்ப்பிக்க நாம் மேன்மேலும் ஆசைப்படுவதுபோல தோஷங்களையும் மேன்மேலும் நாம் செய்ய ஆசைப்பட வேண்டிவந்துவிடாதோ வென்பது பிறருடைய முக்கியமான ஆக்ஷேபம். அவர்கள் கவனிக்க வேண்டும். எம்பெருமானை தோஷாதர்சி [அதாவது, தோஷங்களைக் காணாதவன்] என்று தெரிந்து கொண்டாலும், தோஷங்களை க்ஷமிப்பவன் என்று தெரிந்து கொண்டாலுங்கூட கீழ்க்கூறிய ஆக்ஷேபம் இடம் பெற்றே நிற்குமன்றோ. நாம் என்ன குற்றம் செய்தாலும் எம்பெருமான் அதைப்பாரான் என்றும், பார்த்தாலும் பொறுத்துக்கொள்வன் என்றும் நாம் க்ரஹிக்கலாமென்று இசைகின்றார்களன்றோ பூர்வபக்ஷிகள். இங்ஙனே இசையும் போது, நாம் குற்றங்களைக் கூசாமல் அஞ்சாமல் செய்யவேண்டிவாராதோ? இதை நன்றாக ஊன்றி நோக்கவேணும்.

“எம்பெருமான் எப்போதும் தண்டதரனாய் நிக்ரஹத்திலேயே ஊற்ற
முற்றிருப்பனேயல்லது அவன் பொறுமைக்குண முடையவனல்லன்”

என்று க்ரஹித்தாலன்றி அவரவர்கள் பாபபீருக்களாயிருக்க முடியாது. க்ஷமிப்பவன் என்று அறிந்துவிட்டால் பாபஞ் செய்யத் தயங்கவேண்டியதில்லையன்றோ. ஆகவே எம்பெருமானை தோஷ போக்யனாகக் கொண்டால் எந்த ஆபத்து வருமென்று ஆக்ஷேபம் செய்யப்படுகின்றதோ அந்த ஆபத்து எம்பெருமானை தோஷாதர்சியென்றும் க்ஷமாசீலனென்றும் கொள்ளுமவர்களின் பக்ஷத்திலும் அபரிஹார்யமென்று அறியக் கடவது.

121. வஸ்துத: ஒரு ஆபத்துக்கும் இடமில்லாமே உண்மை யுணர்த்துகிறோம். எம்பெருமானுக்குப் பலவகைப்பட்ட குணங்கள் உள்ளன. அவற்றுள் எந்த குணம் எந்த ஸமயத்தில் எந்த வ்யக்தியின் மீது எந்தவிதமாக ப்ரஸரிக்குமென்று நிலையிடவல்லார் ஆருமில்லை. அப்பெருமானது 'க்ஷமாகுணத்திற்கோ வாத்ஸல்ய குணத்திற்கோ நாமே யிலக்கு' என்கிற நிச்சய வுணர்ச்சி நமக்குத் திடமாக இருக்குமாகில் தோஷங்களை நாம் கூசாது செய்ய நேருமென்கிற தூஷணம் இடம் பெறும். * केवलं स्वेच्छयैवाहं प्रेक्षे कञ्चित्कदाचन— கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந * என்றருளிச் செய்கிற எம்பெருமான்படியை யறிந்து வைத்து ஆஸ்திகனொருவன் புத்தி பூர்வகமாகக் குற்றஞ் செய்யத் துணியக் கூடுமோ? நெருப்பு தாஹகத்வ சக்தியுடையது என்று ஒருவன் சிந்தித்த மாத்ரத்திலே அவன் வீடு பற்றி யெரிந்தாய் விடுமோ? சர்க்கரை மிகவும் தித்திக்குமென்று சொன்னவளவிலேயே நாக்கு தித்திக்குமோ? அதுபோல், வாத்ஸல்யமாவது தோஷ போக்யத்வமென்று குண ஸ்வரூபத்தைப் பேசுவதால், நம் தோஷங்களெல்லாம் பகவானுக்கு போக்யமாய்விடுமென்றாவது, அவனுக்கு போக்யமான தோஷங்களை நாம் செய்துவிடலாமென்றாவது நினைக்க நேருமோ? ஒருகாலும் நேராது. அவன் திருவுள்ளம் எந்த வ்யக்தியினிடத்தில் எந்த க்ஷணத்தில் எவ்விதமாகப் பெருகுமோ, அதை யார் அறியவல்லார்? யாரும் அறியகில்லார். அப்பெருமான் தானும் முன்னம் அறியகில்லான்.

122. அளவு கடந்த அன்புக்கு இலக்கானவருடைய தோஷங்களை போக்யமாகக் கொள்ளுமியல்வு அவனிடமுள்ளதென்றும், அதுதான் வாத்ஸல்யமென்றும் [illegible] அவத்யம். நம் தகப்பனார் நம்மிடத்தில் ப்ரம ப்ரீதி வாய்ந்தவர். நாம் தெரிந்தும் தெரியாமல் [illegible]

குற்றங்களைக் காணாதது போலவே போய்விடுகிறார். சில வேளைகளில் அக்குற்றமாகக் கொண்டு அணைத்து உச்சிமோந்து உகக்கிறார். அதனால் நாம் அச்சங்கெ பூர்வமாகக் குற்றஞ் செய்யத் துணிவதில்லை. அது போலவே இங்குங் கொள்க.

123. இவ்விஷயத்தில் இவ்வள வெழுதுவதே போதுமானது. ஆயினும் சிறிது பன்னி யுரைக்க விரும்புகிறோம், இது மிக முக்கியமான விஷயமென்பது பற்

124. எண்ணில் பல் குணங்கட்குக் கொள்கலமான எம்பெருமானிடத்தில் வாத்ஸல்யமென்கிற விது மிகச் சிறந்த குணம். நம்மாழ்வார் திருவாய்மொழியில் *நிகரில்புகழ்* என்ற சொல்லால் இக்குணத்தைக் குறிப்பிடுகிறாரென்று நம் ஆசாரியர்கள் வியாக்கியானஞ் செய்தருளுகிறார்கள். அங்ஙனம் நிகரற்றதாக ப்ரஸித்தமான இக்குணத்தை ஸாமாந்ய குணமாகவிடப் பார்க்கிறார்கள் பிறர். தோஷங்களைப் பாராமையே வாத்ஸல்யமென்கின்ற அ... ரஸமயமான பொருளை அறியப் பெறாததோடு ஸித்தாந்தப் பெ... ப் பழிக்கவும் இழிக்கவும் தலைப்பட்டார்கள். "தென்னாசார்யர்கள் கேசவனை தோஷ போக்யனாகக் கூறி நிந்திக்கிறார்கள்" என்றும், "நாம் குற்றஞ் செய்தால் எம்பெருமான் தண்டிப்பனேயென்று அஞ்சவேண்டியிருக்க அவனை தோஷ போக்யனாகக் கூறி அவனுக்கு க்ஷீராங்கம் ஸமர்ப்பிக்கும் ஸ்தானத்தில் தோஷங்களையே மிக மிகச் செய்து அவனை உகப்பிக்கப் பார்க்கிற தென்னாசார்யர்களுக்கு பாபஞ் செய்வதிலேயே முழு நோக்கு' என்றும் இங்ஙனே பலவாறு பேசியு மேசியும் பேசுகின்றார் பிறர்.

125. ஸித்தாந்திகளில் சிலர் 'இதுவொரு சிறிய விஷயந்தானே; நிர்வாஹ பே... போலும்; இது எப்படியிருந்தாலென்ன?' என்று இதில் உபேக்ஷையாயிருப்பார்கள். வஸ்துதஸ்து, வாத்ஸல்யம், தயை என்கிற இரண்டு குணங்களில் பிறர்செய்யும் வாதங்களை நிரஸித்து உண்மைப்பொருளை ஸ்தாபிப்பதொன்றே முக்கியமான ஸித்தாந்த கைங்கர்யமாகும் என்பதே பெரியார்களின் துணிபு. இதில் இவ்வளவு ஊற்றமென்னில்; கேண்மின்.

123. நிர்க்குண ப்ரஹ்மவாதிகளான குத்ருஷ்டிகளைக் கண்டித்து எம்பெருமானை கல்யாணகுணகண மஹோததியாக ஸ்தாபிப்பதே எம்பெருமானார் தர்சனத்தின் மி... நோக்கு. ஆனது பற்றியே ஆழ்வாரும் திருவாய்மொழி தொடங்கும்போதே *உயர்வற முடையவன்* என்றார். "நிர்க்குண ப்ரஹ்மவாதிகளின் மிடற்றைப் பிடித்தாப்போலே அருளிச் செய்வதே" என்று கூரத்தாழ்வான் முதலானோர் உள் குழைந்துருகினார்கள். குணங்கள் உயர்வறவுயர்ந்திருக்கையாவது என்ன எனின்; அதை *அநவதிகாதிசய* வடசொல்லால் ஆசார்ய ஸார்வபௌமர்கள் விவரித்தருளினார்கள். அதாவது ... மநுஷ்யர்களிற் காணுங்குணம் ஒரு அளவில் நிற்பதென்றும், எம்பெருமானிடத்தில் அ... றிக்கே ஒவ்வொரு குணமும் எவ்வளவு ஓங்கியிருக்கலாமோ அவ்வளவும் ஓங்கியிருப்பதெ... சொன்னபடி.

127. வாத்ஸல்ய குணமும் தயாகுணமும் நம்போன்றவர்களிடத்திலுள்ள அவ்வ... எம்பெருமானிடத்தில் இல்லையென்று வாதிக்கின்றவர்கள், அப்பெருமானைக் கல்யாண... கடலாக இசைந்து பயனென் கொல்?

128. ஸாமான்யமாக மநுஷ்யகுணங்களை முன்னம் எடுத்துக்கொண்டு பே... உபநிஷத்தும் * सैषाऽऽनन्दस्य मीमांसा भवति . . . . स एको मानुष आनन्दः * என்று ... நந்தத்தை முதலிட்டுக்கொண்டே பரப்ரஹ்மாநந்தத்திற்குச் சென்றதாதலால் நாமு... குணத்தை முதலிட்டுக்கொண்டு பகவத் குணத்திற்குச் செல்வோம்.

129. ... குணத்திலே ... உயர்ந்தது ... குற... ... ...

துமே உயர்ந்த குணமாக லோகாநுபவத்திலுள்ளது. நூல்களிலுமெழுதப்பட்டுள்ளது. இவ்விரண்டுகுணங்களும் எம்பெருமான் பக்கலில் பொருந்தமாட்டாவென்று பிரபலமாக வாதிக்க எழும்வர்கள் அந்தோ! எம்பெருமானை குணசாலியென இசைந்தார்களாக வழியில்லையே. *यदि भास्करयादवप्रकाशौ निगमान्तस्थितिनिर्णयप्रवीणौ । अपरैः किमिचापराद्धमार्यैरयथाप्रलापणचातुरीधुरीणैः* (2-93) என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸ்வாமி ஸாதித்த ச்லோகமொன்றே அடிக்கடி நினைவுக்கு வாராநின்றது.

130. *யஸ்ய விபாகா:......தோஷேபி குணத்வபுத்திரித்யாதய:* என்று கீழே யெடுத்துக்காட்டிய ச்ருதப்ரகாசிகாஸூக்தி விளங்கும்போது ப்ரீதி பரீவாஹ ரூபமான தோஷ போக்யதா சக்தி குணமன்றென்று சொல்லப்போகாது. குணமென்று தேறின விது மநுஷ்யர்களிடத்திற்காட்டில் எம்பெருமானிடத்தில் சதகுணாதிகமாக விளங்குகின்றதென்று இசைந்து தீரவேண்டும். உலகத்தில் குணமென்று பேர் பெற்றவற்றுள் ஒன்று தப்பாமல் எம்பெருமானிடத்து இருந்தேயாகவேண்டுதலால் இது எம்பெருமானுக்கு ஸம்பவியாதென்று வாதிக்குமவர்கள் விஷயத்தில் *जघन्य काननमृगैर्मृगतृष्णिकेप्सोः कासारसत्त्वनिहतस्य च को विशेषः* என்கிற ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியே அநுஸந்தேயமாக வடுக்கும்.

131. தோஷமென்பது இரண்டுவகை. செய்கைகளில் காணும் தவறுகள் ஒருவகை தோஷம். *மாம்ஸாஸ்ருக்பூய விண்மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்த்தி ஸங்குலமான அழுக்குடம்பில்* தீண்டாவழும்புஞ் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றம்* என்னப்பட்டவை மற்றொருவகையான தோஷம். கடோபநிஷத்தில் [2-4-12] *अंगुष्ठमात्रः पुरुषो मध्य आत्मनि तिष्ठति, ईशानो भूतभव्यस्य न ततो विजुगुप्सते* என்றுள்ள ருக்கானது [சரீர] தோஷங்களும் எம்பெருமானுக்கு போக்யமாகின்றன ...வன்பதைக் காட்டி நின்றது. இவ்விடத்திற்கு பாஷ்யமுரையாநின்ற ரங்க ராமாநுஜஸ்வாமி *भूतभव्येश्वरत्वादेव वात्सल्यातिशयात् आश्रितगतानपि दोषान् भोग्यतया पश्यतीत्यर्थः* என்றுரைத்தார். ஸ்ரீ தேசிகன் வரதராஜபஞ்சாசத்திலே *औदन्वते महति सद्मनि भासमाने श्लाघ्ये च दिव्यसदने तमसः परस्मिन् । अन्तःकलेबरमिदं सुषिरं सुसूक्ष्मं जातं करीश कथमादरणास्पदं ते* [பரமபதம் முதலிய சிறந்த ஸ்தானங்களையெல்லாம் இகழ்ந்திட்டுப் பரமஹேயமான பரிவியேனுடலை போக்யமாகக் கொண்டு வர்த்திக்கிறுயே] என்னும். இப்படிப்பட்ட தோஷ போக்யத்வமே வாத்ஸல்யமென்று இந்த ச்லோகத்தின் வியாக்யானத்திலும் பெரியார் வரைந்தார். இந்த தோஷ போக்யத்வத்தை *மங்கவொட்டுன் மாமாயை* என்கிற பாட்டிலே ஆழ்வாரும் விளங்கவுரைத்தருளினர். மிகமிக அருவருக்கத்தக்கதான தேஹ தோஷங்களே போக்யமாகிறதென்று உபநிஷதாதி ஸித்தமாம்போது, செய்கைத் தவறுகளான தோஷங்கள் ப்ரீதியின் கனத்தால் போக்யமாகின்றனவென்னும் விஷயத்தில் விப்ரதிபத்தி ஸர்வாத்மநா அப்ரஸக்தம்.

132. ஸஹஸ்ரநாமத்தில் வத்ஸலநாமத்திற்கு பாஷ்யமருளிச் செய்யாநின்ற பட்டர் பகவத்குண தர்ப்பணத்திலே *स हि चिरं परिचीयमानेष्वपि शरणागतेषु कस्यापि हेतोः सद्यः प्रसूतेष्विव वत्सेषु सहुंकाराः सपयस्संस्रवस्तनवेदनाः किंकर्तव्यताकुला धेनव इव संभ्रमिष्यति* என்றருளிச் செய்தார். அறிவுடையார் இப்படியெல்லாம் அநுபவித்துப் பேசும் பகவத் குணத்திற்குக் கண்ணழிவு சொல்லுமதிற் காட்டிலும் நிர்க்குண ப்ரஹ்மவாதமே நன்றாகும்.

133. எம்பெருமானுக்கு தோஷ தர்சித்வம் [அதாவது அடியார்களின் குற்றங்களைக் காணுமை] என்னுங் குணம் இல்லையென்பது ஸித்தாந்திகளின் வாதமன்று. அதுவும் ப்ரீதியின் ... பருவம் ... அதனை இல்லை செய்வரிலை. அதுவும் ஒருபுடை. அதற்கு மேற்பட்ட ... தோஷ போக்யதா ரூபமான ப்ரீதியை இல்லை செய்யலாகாதென்பதே தத்துவம்.

134. தோஷங்களை போக்யமாகக் ... ...

தோஷங்களைக் கண்டும் விளையுமென்றபடி, இதைத் தான் ச்ருதப்ரகாசிகா ஸ்ரீ
காட்டாநின்றது. குணங்களைக் கண்டு விளையும் ப்ரீதி தோஷங்களைக் கண்டு விளையுமோ
என்கிற ஆக்ஷேபமே பிறர்பால் தலையெடுத்திருக்கும். இதற்குரிய ஸமாதானங்களைக்
விரிய வுரைத்திட்டோம் இன்னமும் இவ்விஷயத்தை மிக வெளியமுறையில் விவரிக்கிறோம்.

135. கூரத்தாழ்வான் * யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேபி அநாச்யம தத் கில்பிஷம் ஸ்ருஜ
ஜந்துரிஹ க்ஷணார்த்தே* என்றருளிச்செய்கிறார் ; அனேகமாயிரம் ப்ரஹ்ம கல்பங்களில் அனுபவி
த்தாலும் தொலைய மாட்டாத தீவினைகளை நாம் அரைநொடிப் பொழுதில் அவலீலையாகச் செய்
போருகின்றோமென்பது மேற்குறித்த ச்லோகத்தின் கருத்து. இப்படிப்பட்ட நம்மைக் கா
தருளக் கடமைப்பட்ட எம்பெருமான் பரம க்ருபாளுவேயானாலும் லோகநிர்வாஹார்த்தமா
தண்டதரனுயிருப்பதால் தனது திருவடிவாரத்தில் தலைசாய்க்குமவர்கள் விஷயத்தில் குற்ற
காரணமாக நிக்ரஹிக்க நேர்கின்றது. அப்போது பிராட்டி மாத்ருத்வப்ரயுக்தமான வாத்ஸல்
யாதிசயத்தினால் நம்மை அநுக்ரஹத்திற்கு இலக்காக்குவிக்கப் பலவகையுபாயங்களைக் கொண்டு
எம்பெருமானைத் தன் சொல்வழியொழுகுமவனாக்கக் கடமைப்பட்டவள். அதனால் எம்பெரு
மானை நோக்கி 'நாதா! குற்றங்களை அளவு கடந்து செய்திட்டும் உமது திருவடிவாரத்தில்
தலைசாய்க்காமலே கிடக்குமவர்கள் விஷயத்தில் நீர் எவ்வளவும் நிக்ரஹத்தைக் காட்டவமை
யும் ; அப்படி விமுகர்களாகவன்றிக்கே அபிமுகர்களாமவர்கள் எத்தனையேனும் தோஷபூயிஷ்
டர்களாயிருந்தாலும் அவர்களை அருளுக்கு இலக்காக்கியே யாகவேணும்' என்று ஸதுபாய
மாகக் கூறுவள்.

136. தன்னுடைய தண்டதரத்வமும் பழுதாகாமல் தயை முதலிய குணங்களும் பாழ்
படாமல் அதிகாரி பேதேந எல்லாம் நிறம் பெறும்படி நல்லவுபாயமாகப் பிராட்டி இங்ஙனம்
கூறியதைக் கேட்குமெம்பெருமான் சில வ்யக்திவிசேஷங்கள் பக்கலிலே தனது அருள் முதலிய
குணங்களைப் பெருகவிட்டு குணக்கடலென்கிற திருநாமமும் தலையெடுக்கப் பெறுகின்றான்.
["புருஷகாரபலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்கும் குணங்களைச் சொல்லு
கிறது நாராயணபதம்" என்கிற முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தியின் வியாக்யானத்தில் இவ்விஷ
யம் வியக்தமாகவுணரத்தக்கது. அங்ஙனே தலையெடுக்கும் குணங்களுள் வாத்ஸல்யமென்ப
தொப்புயர்வற்றது. நெஞ்சை நீர்ப்பண்டமாக உருக்க வல்லது. இந்த குணத்தின் ஸ்வரூ
இன்னபடிப் பட்டதென்று தெளியவுணர்த்தினாலுங்கூட இதில் சிலர் அநவரதம் ஆக்ஷே
களையே செய்து போருகிறார்கள். பூருவாசாரியர்களின் தெளிவான ஸ்ரீஸூக்திகளை அவர்க
பாராதவர்களல்லர். பார்த்துவைத்தும், ஏதோ அபிநிவேசவசத்தினால் சில ஆக்ஷேபங்களை
செய்துகொண்டே யிருக்கின்றனர். குணாநுபவத்தில் ஊன்றினவர்களுக்கு அவ்வாக்ஷேப
ங்களில் காதுகொடுப்பதும் கண்செலுத்துவதும் அப்ராப்தமாதலால் அவற்றுக்கு மறுப்புரைக்க
அவசியமில்லையாயினும், மதுபானம் செய்யவேண்டும் போதைக்கு மக்ஷிகாநிரஸநமும் அவர்ஜ
நீயமென்ற கணக்கிலே, ப்ரமாண சரங்களாலே அந்த ஆக்ஷேபகர்களை விலக்கிவிட்டு பகவத்
குணாம்ருதாஸ்வாதனத்தில் இறங்க வேண்டியிருக்கிறது.

137. வாத்ஸல்யமாவது குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுகையென்று ச்ருதப்ரகா
சிகா ஸ்ரீஸூக்தியிருப்பது கீழே ப்ரக்நிரூபிதம். இதனை அதிவாதமென்கிறார்கள் பிறர்.
இதை அப்படியேயிசைந்துகொண்டு சில சொல்லுகிறோம். நடாதூரம்மாள் பக்கலிலே கேட்ட
அர்த்தங்களையே ஸ்ரீஸுதர்சநபட்டர் தமது க்ரந்தத்தில் எழுதியருளப் பண்ணினாரென்றும்
அதுபற்றியே ச்ருதப்ரகாசிகை யென்ற திருநாமம் சாற்றினாரென்றுமுள்ளது. இதனால்
எம்பெருமானார் முதலான முன்னோர்கள் மொழிந்தருளின பொருளையே ஸ்ரீஸுதர்சநபட்ட
அருளிச்செய்து வைத்தாரென்று தேறிற்று. இனி அந்தப்பூருவாசாரியர்களும் அதிவா
ரையே சொல்லப் போந்தாரென்று சொல்ல வேண்டியதாயிற்று. அப்படி
[illegible]

[illegible]டருக அதிவாதம் செய்கைக்கு என்ன காரணமென்று. இதற்கு நேரான விடையிறுக்க வேண்டுமிவர்கள் ஸ்தோத்ர பாஷ்யத்தில் ஸ்வாமி தேசிகன் * महतामपि केषाञ्चिदतिवादाः पृथग्विधाः । तत्तदर्थप्रशंसादितत्परत्वादबाधिताः ॥ * [* மஹதாமபி கேஷாஞ்சித் அதிவாதா: ப்ருதக் விதா:. தத்ததர்த்த ப்ரசம்ஸாதி தத்பரத்வாத் அபாதிதா: *] என்று ஸாதித்திருப்பது ப்ரஸித்தம். அதனையடியொற்றியே விடையிறுத்தல் நன்று. அதிவாதம் செய்வதானது ப்ரசம்ஸைக்காகவே; அதாவது பெருமைப்படுத்துவதற்காகவே என்று தேசிகன் திருவுள்ளம் பற்றுகிறார். அது பகவத் குணத்தில் சேருமானால் என்னகுறை? அதிவாதமென்று ஒதுக்கவேண்டிய அவசியமில்லையே. இப்படிப்பட்ட அதிவாதம் அவசியம் செய்யவேண்டியதன்றோ.

138. இதற்கு நவீநர்கள் ருஜுவான உத்தரமொன்றுமுரைக்கவில்லார்கள். எம்பெருமானுக்கொரு ப்ரசம்ஸை ஏற்படுவதானால் அதற்காக எவ்வளவு சொற்களைத் தொடுக்கவேணுமானாலும் கூசாமல் தாராளமாகத் தொடுக்கவேண்டியதுதானே. இல்லாதவற்றை ஏறிட்டுச் சொல்லி ப்ரசம்ஸையை விளைப்பதென்பது எம்பெருமான் விஷயம் தவிர மற்ற விஷயங்களிலேயாகுமத்தனை. எம்பெருமான் விஷயத்திலோவென்னில், இல்லாததொன்றைச் சொல்லிப் பெருமைப்படுத்துவதென்பது பரமைகாந்தி வேதாந்திகள் இசையுமதன்று. இங்கு * அந்யத்ர அதத்குணோக்திர் பகவதி ந * இத்யாதியான பட்டர் ஸ்ரீஸூக்தி அநுஸந்தேயம். எம்பெருமான் விஷயத்தில் நாம் எவ்வளவோ மிகையாகச் சொல்லிவிட்டதாக நினைக்கும்படி அதிகமாகவே சில சொன்னோமானாலும் உண்மையில் அவனது குணக்கடலில் ஒரு சிறு திவலையளவே சொல்லிற்றாக ஆகுமத்தனையல்லது வேறில்லையே. *கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர் விசேஷ: * என்ற கணக்கிலே நாமும், நம்மிற் காட்டிலும் மேம்பட்ட பிரமன் சிவனிந்திரன் முதலானோரும் உயர்த்தியாக எத்த[illegible]பேசினாலும் அப்பெருமானது குணஸாகரத்தில் அதுவொரு பிந்துமாத்ரமேயாமென்ப[illegible]யமுண்டோ? இப்படியிருக்க, ப்ரசம்ஸைக்காக அதிவாதம் செய்தபடியென்று நவீநர்[illegible]னால் அவர்களின் பக்ஷத்திற்கு என்ன அநுகூலமாயிற்றென்று பார்க்கவேணும். ப்ரசம்ஸையென்பது குணங்களின் பெருமையேயன்றோ. அதனால் அவத்யலேசமும் விளையப் போகிறதில்லையே. அவத்யம் விளைவதானால் அதற்குறுப்பான அதிவாதத்தை ஆசார்யர்கள் செய்யமாட்டார்களன்றோ. ஏதேனுமொருபடியாலே பகவத்குணங்களைப்போஷித்துக்கொண்டே போதுபோக்குவதுதான் நம்போல்வார்க்கு நித்ய கர்மாநுஷ்டானமாக இருக்கவேண்டுமென்று ஆசாரியர்கள் நியமித்திருக்க, அவ்வநுஷ்டானம் தைவாதீனமாக ஏதோ சிறிது வாய்த்ததானால் பகவத் குணங்களில் ஈடுபடவேண்டிய வகுப்பினர் இதில் ஆக்ஷேபங்களைச் செய்து பொறாமை காட்டத் தகுமா?

139. ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியை அதிவாதமென்னுமளவால் இவர்களின் மதத்திற்கு என்ன லாபமாயிற்றென்பதே இங்கு முக்கியமாக விமர்சிக்க வுரியது. அதை நாமே நன்கு விமர்சித்து மருமமுணர்த்துகிறோம். * तत्तदर्थप्रशंसादितत्परत्वादबाधिताः * [தத்ததர்த்த ப்ரசம்ஸாதி தத்பரத்வாத் அபாதிதா:] என்கிற தேசிக திவ்ய ஸூக்தியிலுள்ள ஹேதுவையும் ஸாத்யத்தையும் விவேகிகள் நன்றாக நோக்கவேணும். பக்தர்கள் அவசியம் செய்து தீரவேண்டியதும் மிகவும் உசிதமுமான குணப்ரசம்ஸைதானே அதிவாதத்தினால் விளைகின்றது. இப்படிப்பட்ட ப்ரசம்ஸைக்கு நாம் உகக்கவேண்டியிருக்க வெறுப்பது ஏனோ? இந்தப்ரசம்ஸையில் உங்கட்கு மாச்சரியமுண்டானது எதனாலென்று கேட்கிறோம். இதற்கு விடையிறுத்தே தீரவேண்டும். 'இது அசாஸ்த்ரீயமான ப்ரசம்ஸை' என்று சொல்வதற்கோ இடமில்லை. அசாஸ்த்ரீயமாயிருந்தால் * अबाधिताः * "அபாதிதா:" என்று ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கமாட்டாரன்றோ. இது சாஸ்த்ரீயமேயென்று தெரியுமிருக்கிறதே. இந்த ப்ரசம்ஸையின் பெருமை உந்தமக்குத் தெரியவில்லையடி? இது பக்தர்களை எவ்வளவோ உகப்பிக்குமது. பகவ[illegible]

[illegible]களின் உள்ளத்தை உருக்கவல்லதல்லவோ[illegible]

வாக்குக்குப் பெருமை பயக்குமது. பகவத்குணப் பெருமையைப் பொருதாருடைய செ...
யடக்குமது. ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவமே வடிவெடுத்ததென்னத் தக்கது. கொடிய...
களுக்கு வித்தான ஸம்ஸாரத்தையே அடியறுக்குமது. நிகரற்ற ஆனந்தக் கடல்கள்...
திரண்டபடியோ! என்னத்தக்கது.. இப்படிப்பட்ட மிகச்சிறந்த குண ப்ரசம்ஸையை விள...
வல்ல ஸ்ரீ ஸூக்திகளை அதிவாதமென்றால் இதனை ஸத்யாதிவாதமென்றன்றோ கொள்...
வேண்டும், இந்த அதிவாதோக்தியானது பிறருடைய [குத்ருஷ்டிகளினுடைய] மதத்தை...
பாறு பாறுக்குமதன்றோ. 'தோஷேபி குணவத்புத்தி:' என்பதைச் சிறந்த சாஸ்த்ரார்த்தமென்...
ஸ்தாபிக்கவல்ல தன்றோ இந்த அதிவாதவாதம்.

140. சில மதஸ்தர்கள் நிர்குண ப்ரஹ்மவாதிகளாக வுள்ளார்கள். அவர்களை மறுப்...
தாகக் கூறுமிவர்கள் அவர்களது திரளிலேயே புகுந்தார்களாகப் பெறுவது தகுதியோ? பகவ...
குணப் பெருமையில் ஒரு ஆக்ஷேபம் செய்வதென்பது குணாநுரக்தர்களுக்குச் சேருமதன்றே...
ஹேயமான குணத்தை ஏறிட்டுரைத்தால் ஆக்ஷேபியாமல் வேறு என்ன செய்வது என்கிற...
வாதமும் இடமற்றதே; தோஷேபி குணத்வபுத்தி: என்பதனால் குணாதிசய ப்ரசம்ஸைதான்...
ஏற்படுகிறதென்று நன்கு இசைந்தான பின்பு ஹேய குணமென்று வாய் திறக்கவும் வழி...
யில்லையே. எம்பெருமான் பக்தர்களது குற்றங்களைக் குற்றமாகவே கொள்ளுகிறானா?...
நற்றமாகக் கொள்ளுகிறானா? அல்லது காணாமலேயிருந்து விடுகிறானா? அல்லது...
னால் இதற்குத் திண்ணமான விடையிறுக்க ஒருவர்க்குமியலாது; ஏனென்றால், அவனது...
திருவுள்ளத்தை யறிவாராருமில்லையே; அப்பெருமான் ஒருகால் தோஷங்களை தோஷமாகவே...
கொள்ளக்கூடும். ஒருகால் குணமாகவும் கருதக்கூடும். ஒருகால் அதைக் காணாமலேயிருக்கவுங்...
கூடும். ஒருகால் குணங்களையும் தோஷமாகக் காணக்கூடும். எந்த விதத்திலும் அவன் ஸ்வதந்...
திரன். நியோகபர்யநுயோக அநர்ஹன் ஆகவே அவனது திருவுள்ளமோ ப்ரவ்ருத்தியோ ஒருவ...
ருடைய புத்திக்கும் எட்டுமதன்று. இதுதான் ஸித்தாந்தமாகத் தேறி நிற்கும். ஆனால் இங்கு...
முக்கியமாகக் குறிக்கொள்ளவேண்டும்:– உலகத்தில் மிக உயர்ந்தவனாகச் சொல்லப்படுகிற...
வொரு மஹா புருஷனிடத்தில் எந்தெந்த நற்குணங்களிருக்குமோ அவையெல்லாம் நூறாயிரம்...
மடங்கு அதிகமாய் எம்பெருமானிடத்து உள்ளனவாகப் பேச வேணுமென்று பெரியோர்களின்...
கொள்கை. சட்கினியான அவன் ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களைச் செய்தருளின்போது...
அந்த நற்குணங்களை யெல்லாம் குஹ ஸுக்ரீவ விபீஷணாதிகள் திறத்திலே போரப் பொலியக்...
காட்டியிருப்பதும் காணத்தக்கது. *நிஷாதாநாம் நேதா* இத்யாதி தயாசதக திவ்ய ஸூக்தி...
யொன்றே இங்கு அநுஸந்திக்கப் போதும். பகவான் அவதாரங்கள் செய்வது எதற்காக?...
என்கிற கேள்விக்குப் பலவாறு விடைகள் பகரலாமானாலும், தனது திருக்கல்யாண குணங்...
களைக் காட்டுவதற்காகவே திருவவதாரம் செய்கிறான்—என்பதொன்றே பரமார்த்தமான...
விடை. ஸ்ரீ ராமாயணத்தில் *கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந்* என்கிற உபக்ரமமே...
இதனை வற்புறுத்தும்.

141. விபவாவதாரங்களில் ஸ்ரீ ராமக்ருஷ்ணாதிகள் காட்டியருளின ஒவ்வொரு திருக்...
குணமும் மெய்யன்பர்களின் உள்ளத்தையுருக்குமவை. அத்தகைய திருக்குணங்களை அநு...
பவிக்கைக்காகவே நாம் ஸ்ரீ ராமாயண ஸ்ரீ பாகவதாதிகளைப் பாராயணம் செய்து போரு...
கிறோம். அத் திருக்குணங்களில் தோஷாரோபணம் செய்து அவற்றை இல்லைசெய்வது பக்தர்...
களுக்கு உரியதன்று. 'ஒப்புயர்வற்ற கல்யாண குணங்கள் எம்பெருமானிடத்துள்ளன' என்று...
வெறுமனே சொல்லிவிட்டால் போதுமோ? அந்தச் சொல்லுக்கு ஓர் அர்த்தமிருக்கவேண்...
டாவோ? இருக்கிறதென்னில் அதை உபபாதித்துக் காட்ட வேணுமே! நம்போன்ற ஸாமான்ய...
[illegible] குணங்களிலும் [illegible] எம்பெருமானிடத்தில் இதை...
[illegible]

தமர்களென்றும், குற்றத்தைக் குற்றமாகக் காண்பவர்கள் மத்யமர்களென்றும், குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுமவர்கள் உத்தமர்களென்றும் உலகில் அனைவருமிசைந்து கூறுவதாம். ஆகவே உத்தம புருஷகுணமாகப் புகழ்பெற்றிருக்கின்ற தோஷபோக்யத்வத்தைப் புருஷோத்தமன் பக்கலிலே இல்லைசெய்வது எப்படி பொருந்தும்? இந்தக் கேள்வி இன்று புதிதாக நாம் கேட்பதன்று. முற்காலத்தில் பட்டர் கேட்ட கேள்வி இது.

142. குற்றத்தில் குற்ற மென்கிற தன்மையானது உள்ளது; அதனை உள்ளபடி காணாமல் அதைக் குணமாகக் கண்டால் இது விபரீதவுணர்ச்சியேயாதலால் எம்பெருமானை [தோஷேஷு குணத்வபுத்தி காரணமாக] ப்ராந்தனென்று சொல்ல நேருமேயென்று சோத்யம் செய்வார்க்கு இன்னமும் கூறுகிறோம். அளவு கடந்த அன்புக்கு உரியவர்களிடத்தில் ப்ரேமமடியாக மருண்டுபோவது தான் எம்பெருமானுக்குச் சிறந்த குணம். உலகிலும் குற்றங்களை நற்றமாகக் கொள்வதென்பது எல்லார் திறத்திலும் குணமாகாது; விலக்ஷணப்ரீதி பாத்ரமானவர்களிடத்திலேயே அது குணமாகவுள்ளது. அப்படியே விலக்ஷண பக்தவிசேஷ விஷயத்தில் * கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந * என்கிற முறையில் இருகரையுமழியப் பெருகும் எம்பெருமானது அன்புவெள்ளமானது அப்பெருமானை ப்ராந்தியுள்ளவனாக ஆக்குமானால் அந்த ப்ராந்தியேயன்றோ பக்தர்களுக்குச் சேமநிதி. இந்த ப்ராந்தி எம்பெருமானிடத்து இருப்பதுபற்றியேயன்றோ ஆழ்வார்கள் களிப்பதும் கூத்தாடுவதும். மாலென்றும் பித்தனென்றும் பேயனென்றுமிப்படி பல திருநாமங்களை அவனுக்கு ஆழ்வார்கள் சாற்றியுள்ளார்கள். தத்வதர்சிகளில் தலைவர்களான அவர்களது ஸ்ரீஸூக்திகளையே நிதியாகக் கொண்ட நம் ஆசிரியர்கள் அருளிய அரும்பெரும் பொருள்கள் பிறர்க்கு ருசிப்பது எங்ஙனே? ப்ராந்தியும் அதற்கு எதிரிடையான ப்ரமையும் உபாதி பேதத்தாலே குணமாகவும் தோஷமாகவும் மாறுமென்று தெளியவேணும்.

143. கூரத்தாழ்வான் எம்பெருமானார்க்கு இட்ட தனியனில் * யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹத:* என்று வ்யாமோஹத்தை நிரூபகமாகக் கூறியுள்ளார். மணவாளமாமுனிகள் நம்மாழ்வார்க்கு * ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்யஸேவாப்ரேமாவிலாசயபராங்குச* என்று கலக்கத்தை நிரூபகமாகக் கூறியுள்ளார்; இந்த வ்யாமோஹமும் கலக்கமும் அப்பேராசிரியர்களுக்கு பூஷணமேயல்லது தூஷணமல்ல. "ப்ரமஸாமாந்யமும் தோஷம், ப்ரமாஸாமாந்யமும் குணம்" என்று நிர்ணயிக்க யாருமதிகாரிகளல்லர். புண்யமென்றாலென்ன? பாபமென்றாலென்ன? இவற்றின் லக்ஷணம் கூறவேணுமென்று கேட்டால் இதற்கு ருஜுவான விடையிறுக்கக் கூரத்தாழ்வானொருவரே வல்லவர். * யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யமபுண்யமந்யத் * என்றவர் அவ்வாசிரியரே. அவனது திருவுள்ளத்திற்கு உகப்பானது புண்யம், வெறுப்பானது பாபம்—என்றிவ்வளவேயன்றோ புண்யபாப லக்ஷணம். பக்த தோஷங்கள் அவன் திருவுள்ளத்தால் ப்ரியமாகத் தோன்றினால் அவற்றில் பாப சப்தவாச்யத்வம் தொலைந்து புண்யசப்த வாச்யத்வமன்றோ வந்துவிடும். ஆழ்வானும் பட்டரும் எம்பெருமானை ப்ராந்தனென்றே அறுதியிட்டுரைத்தனர். பக்தர்கள் கலங்கி நின்றால் அன்னவர்கள் திறத்திலே பகவானும் கலங்கி நிற்க ப்ராப்தமேயன்றோ. அப்படி அவன் கலங்கிற்றிலனாகில் *ரஸோ வை ஸ:* என்று உபநிஷத்து அவனை ரஸமாகவே ஓதினது பொய்யாகுமே. * கள்வன் திருவின் மணாளன் என்றபடி பிராட்டியோட்டைச் சேர்த்தியினால் பரமரஸிகனாகப் பெற்ற பெருமான் ப்ராந்தியையிட்டே நிரூபிக்க வுரியனென்றே ப்ராமாணிகர்கள் அறுதியிட்டிருப்பது. "மஹர்ஷிகளின் ஓலக்கத்தில் ப்ரமையையிட்டே நிரூபிக்கவேண்டியிருந்தவன் ஆழ்வார்கள் திரளிலே ப்ராந்தியையிட்டே நிரூபிக்கத்தக்கவனாயினான்" என்றது அர்த்த[illegible] [illegible]யோக்தியன்று; உண்மையுரை. "மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை" இத்யாதிகள் இங்கு அநுஸந்தேயம்.

கேட்கிறோம்; ஸர்வஜ்ஞனென்று பேர் பெற்றிருக்கிற எம்பெருமான் சிலருடைய குற்றங்களை
யறியவில்லானென்னில்; இதுவொரு அஜ்ஞானமேயல்லவா? ஸர்வஜ்ஞனை அஜ்ஞனென்று
அவத்யம் வாராதோ? யந்நாஸ்த்யேவ தத்ஜ்ஞதாமநுகுணம் ஸர்வஜ்ஞதாயா விது: என்று ஆழ்வான்
அருளிச் செய்துள்ளார். அடியோடு இல்லாததை அறியாமலிருந்தால் ஸர்வஜ்ஞத்வத்திற்குக்
கொத்தை வாராது. உள்ளதையும் அறியாமலிருந்தால் ஸர்வஜ்ஞத்வம் எப்படி ஸம்ரக்ஷித
மாகும்? ஹேயமான அந்த அஜ்ஞத்வம் எப்படி குணமாகும்? மேலும், தோஷங்களைக் காணுமை
யென்பது க்ஷமா குணத்தின் காரியம். அதை வாத்ஸல்யத்தின் காரியமாகக் கூறுவதும் தவறு.
எம்பெருமானுக்கு க்ஷமா குணமுண்டென்று இசைந்தாலும் ப்ரபலமான ஆபத்து அபரிஹார்
யமே யாகும், எங்ஙனேயென்னில்;

145. *வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்* என்கிற ப்ரஹ்ம ஸூத்ரம் முதலிய
வற்றால் எம்பெருமான் கர்மாநுரூபமாகப் பலன்களைக் கொடுத்தே தீருவனென்று நிர்ணயிக்கப்
பட்டிருக்க, அதற்கு முரணாக க்ஷமா குணத்தைக் காட்ட அவனால் எப்படி முடியும்? என்று
கேட்டால் இக் கேள்விக்கு வர்ஷ சதமானாலும் விடையிறுக்க முடியுமோ இவர்களுக்கு?
ஏதேனுமொரு விடை கூறினர்களாகில் அது க்ஷமாகுணத்தின் பெருமையைக் குலைத்தே
நிற்கும். அதிகாரி விசேஷ விஷயத்தில் சாஸ்த்ரங்களைக் கடந்து க்ஷமிக்கக் கூடுமென்னில்,
நம் வழியே வந்து நின்றார்களாணர்கள். வாத்ஸல்ய விஷயத்தில் நாம் சொல்லுவது மிதுவே
காணீர். ஸர்வஜநவிஷயமாக யாரும் சொல்லுகின்றிலர்.

146. அர்ச்சாவதாரப் பெருமான்கள் திறத்தில் [மூல மூர்த்தியில்] பாதாதிகேசாந்த
மான ஸௌந்தர்யலாவண்யங்களை ஆழ்வார்களுமாசாரியர்களும் அநுபவித்துப் பாசுரமிடு
கிறார்கள். அர்ச்சா மூர்த்தியில் கூந்தலென்பது காணவே முடியாது. அப்படியிருக்க, கருங்
குழல்கள் தடந்தோள் மேல் தொங்குவதாகவும் திருநெற்றியில் அலைவதாகவும் அருளிச் செய்
கிறார்களே! இது எப்படி பொருந்து மென்று ஒரு பாமரன் கேட்டுவிட்டால் இதுவும் அதி
வாதமே யென்று தான் இவர்கள் சொல்லித் தீரவேணும். இதில் அநுபவ்ராஸிக்யம் நவீநர்
களுக்கு இப்பிறவியில் உண்டாகவிரகில்லை. இதற்காக வேறு பிறவியைக் கோரவேணுமிவர்கள்.
"அருளிச் செயல்களையே அருமருந்தாகக் கொள்வோமாக; ஸ்ரீசைலேசத்தனியனையே தஞ்ச
மாகக் கொள்வோமாக" என்று திருமலையடிவாரத்தில் நீடூழிகாலம் நின்று தவம் புரிதல் நன்று.

147. பெரியாழ்வார் திருமொழியில் *தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளா
கிலும் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர்
போலும்* என்கிற பாசுரம் (4-9-2) ப்ரஸித்தமானது. ஆழ்வார் இப்பாசுரத்தினால் வெளி
யிட்ட திருவுள்ளம் பற்றிய பொருளை நவீநர்கள் தலைகீழாக்குகின்றனர். அதனை விவரிக்கிறோம்.
பிராட்டி தன் புருஷகார பலத்தினால் சில சேதனர்களை எம்பெருமான் அங்கீகரிக்கக் கண்டு
இவ்வங்கீகாரம் நம்முடைய நிர்பந்தத்திற்காக மாத்திரமேயோ, அல்லது தன் திருவுள்ள
முகந்து திடமாகவே ஸ்வீகரித்தபடியோ என்று தெரிந்து கொள்வதற்காக அந்த பக்தர் விஷய
தில் சிதகுரைப்பாள்: [அதாவது, நாதா! நான் ஆலோசியாமல் இவர்கட்குப் புருஷகாரம்
செய்து விட்டேன்; பிறகு நன்கு பரிசீலனை செய்ததில் இவர்கள் பெருங்குற்றவாளரென்று
தெரிய வந்தால் இவர்களைக் கைவிட்டிடுதல் நன்று என்றுரைப்பாள்.] அப்போது எம்பெரு
மான் 'லக்ஷ்மீ! இவர்கள் உன்னடியார்களாயிருந்த காலத்தில் ஒருகால் குற்றவாளர்களா
யிருப்பினும் என்னடியார்களான பின்பு ஒருபோதும் குற்றவாளர்களாகார்கள்' என்று கூறு
வன். அதற்கு மேலும் பிராட்டி எம்பெருமான் திருவுள்ளவுறைப்பை இன்னமும் சோதிப்போ
மென்றெண்ணி 'அவர்கள் அபராதிகளே' யென்று திட்டப்படுத்திக் கூறுவள். அப்போது
எம்பெருமான் 'என்னடியார் ஒரு அபராதமும் செய்யார்கள் ... ஏற்கெனவே சொன்னேன்; செய்வே
செய்தார்களென்னில் அது நன்றேயாகும்' ...

...று என்று
வார்த்தையைக் கேட்பதற்காகவே நாம் சிதகுரைத்தோம், அது ஸ்பலமாயிற்று என்ற
ண்டு மிகவுகப்பள்.] ஆகவிப்படி ஆச்ரித பக்ஷபாதத்தைக் காட்டி யருள்பவன் யாவனென்
ஸ்ரீ விபீஷணாழ்வான் திறத்துக் கடற்கரையில் பண்டு காட்டின பக்ஷபாதத்தை இன்ன
காவிரிக்கரையிலே காட்டிக்கொண்டு சாய்ந்தருளும் நம் திருவரங்கனே. அவ்வரங்கனுக்
றி நாம் மற்றவர்க்கு ஆட்படத்தகுமோ? என்கிற விது * தன்னடியார் பாசுரத்தின் தலை
ந்த தாற்பரியம். இவ்வழகிய தாற்பரியங்கொண்ட பாசுரத்தையும் இவர்கள் தூஷிக்கத்
லப்படுகின்றனர். ச்ருத ப்ரகாசிகையின் கதியே அங்ஙனுகும்போது இதில் வியப்பொன்று
ல்லையே. இப்பாசுரத்தில் இரண்டாமடியின் முடிவில் போலும் என்று இடைச் சொல்
லொன்று உளதென்று அது கொண்டு இவர்கள் செய்யும் ஆகாசதாண்டவம் விசித்திரமானது.

148. விபீஷணாழ்வானிடத்துள்ள பக்ஷபாதம் இப்பாசுரத்தின் பின்னடிகளில் ப்ரஸ்
தாவிக்கப் பட்டிராநின்றது. இதுவே யிங்கு ஸாரமான விஷயம். ஸ்ரீ சக்ரவர்த்தி திருமக
னுர்க்கு விபீஷணாழ்வான்திறத்து இருந்த அன்பு எத்தகைத்து என்பதை ஸ்ரீ தேசிக திவ்ய
ஸூக்திகளைக் கொண்டே அறுதியிடவேணும். விபீஷணன் * நிவேதயத மாம் க்ஷிப்ரம் என்று
அடைக்கலம் புகுந்தவன்று இரண்டு பக்ஷங்கள் தோன்றின; இவன் துஷ்டனுகையாலே அங்கீ
கரிக்கத்தகாதவனென்று ஸுக்ரீவ பக்ஷத்திற்பேச்சு; இவன் அதுஷ்டனுகையாலே அங்கீகரிக்கத்
தக்கவனே யென்று திருவடி பக்ஷத்திற் பேச்சு. இது அனைவருமறிந்ததே. பெருமாள் ஸுக்ரீவ
பக்ஷத்தைக் கண்டித்து மாருதி பக்ஷத்தை ஆதரித்ததாக எல்லாரும் க்ரஹித்திருப்பர்கள்.

149. அங்ஙனன்றிக்கே பெருமாள் ஸுக்ரீவ பக்ஷத்தோடொப்ப மாருதி பக்ஷத்தையும்
கண்டித்து மூன்றுவதாக வொரு விலக்ஷண பக்ஷத்தைத் தாம் வெளியிட்டருளினதாக அபயப்ர
தாநஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் அற்புதமாக அருளிச் செய்கிறார். அந்த மூன்றுவது பக்ஷம்
எதுவாயிருக்குமென்று வித்வான்கள் தம்தம் உள்ளத்தில் சற்று ஆலோசித்துப் பார்க்கலாமே.
மேதாவிகளில் தலைவரான தேசிகனுடைய மேதைக்கே நிலமானவது மற்றையோருடைய
மதிக்கு எட்டுமோ? அவர் எடுத்துக்காட்டி யருளின திவ்யமானபொருளை ஆர்ஜவத்துடன்
ஏற்று அனுபவிக்கப்பெற்ருல் அது போதுமே. இவ்விசேஷார்த்தம் பிறர்க்கு துரவகாஹ
மாதலால் நாமே விசதீகரிப்போம். ஸுக்ரீவமாருதிகளின் இரண்டு பக்ஷங்களிலும் ஸாத்ய
ஹேதுக்கள் உண்டே; ஸுக்ரீவபக்ஷத்தில் ஸாத்யாம்ஸத்தைக் கண்டித்தும் மாருதிபக்ஷத்தில்
ஹேத்வம்ஸத்தைக் கண்டித்தும் போந்தார் பெருமாள். இவன் துஷ்டனுகையாலே ஸ்வீகரிக்
கத்தகாதவன் [த்யாஜ்யன்] என்ற முந்தின பக்ஷத்தில் த்யாஜ்யத்வ ரூபமான ஸாத்யாம்ஸ
மொன்றையே கண்டித்தார்; துஷ்டத்வமென்னும் ஹேதுவைக் கண்டிக்கவில்லை. இவன்
அதுஷ்டனுகையாலே ஸ்வீகார்யன் என்ற பிந்தின பக்ஷத்தில் அதுஷ்டத்வமாகிற ஹேதுவைக்
கண்டித்து ஸ்வீகார்யத்வமாகிற ஸாத்யாம்சத்தை ஏற்றுக்கொண்டார். ஆகவே பெருமா
ளுடைய மூன்றுவது பக்ஷமாகத் தேறினது யாதெனில், விபீஷணன் தோஷவானுகையினலேயே
ஸ்வீகரிக்கத் தக்கவன் என்பதாகத் தேறிற்று. இங்ஙனே நுட்பமாகக் கண்டுபிடித்தருளிச்
செய்த தேசிகனது திவ்ய ஸூக்தியை அவரை யடிபணியுமவர்களாகச் சொல்லிப் போருமவர்
களே அபலாபம் செய்யும் முகத்தால் தூஷித்து நிற்கிறார்கள். ஸ்வாமி இவ்வர்த்த விசேஷத்தை
யருளிச் செய்தவிடமோ ரஹஸ்ய க்ரந்தம். சாஸ்த்ரார்த்த தத்துவங்களை வெளியிடுதற்
கென்றே அவதரித்தது ரஹஸ்ய க்ரந்தம் என்பது ஞாபகமிருக்கவுரியது.

150. இனி, மேலே காட்டின பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தை ஆழ்ந்து ஆராய்ந்து
ஆழ்வாருடைய திருவுள்ளத்தை அறுதியிடவேணும். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஒரு
ஸம்வாதம் நிகழ்ந்ததாக அப்பாசுரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. அது கவி முறையில் கல்பித
... ஸம்பாவிதமானதே. அது ... ஸர்வஜ்ஞர்களான ஆழ்வார்களே ...

...நிரூபித்திருக்கிறோம். எம்பெருமானது திருவுள்ளவுறுதியைப் பரீக்... தோன்றிற்று. பிறகு எம்பெருமான் கூறின வுத்தரத்தினால் பி... ப்ரகாஶத்தை யாரே யறிவார்? அப்படிப்பட்ட மகிழ்ச்சியைப் பெறு... பிராட்டி முன்னம் ஸ்வஸ்வரூப விருத்தமான சிதகுரையிலே ஊன்றி நின்றது... நடந்ததில்லை யென்று கொண்டாலும் *ருஷீணும் புநராத்யாநாம் வாசமர்த்தோநுதாவதி என்ற கணக்கிலே இவ்வருளிச் செயல் அவதரித்த பின்பாவது இது நடந்தே யிருக்க வேண்டாதவால் ஸர்வாத்மநா ஸத்யமானதேயிது என்று கொள்ள வடுக்கும்.

151. இந்த ஸம்வாதம் கல்பித மென்கிற பிறர் கொள்கையின் படியேதான் இருக்கட்டுமே. ஸம்வாத கல்பனைக்கு ஒரு பலன் இருந்தே தீர வேணுமாதலால் இங்கு என்ன பலன் தேறுகிறதென்பதை இவர்களே ஆராய்ந்து கூறுக. பிராட்டி சேதநாபராதத்தை திடப்படுத்திக் கூறிய பின் எம்பெருமான் செய்த காரியமென்ன? அந்த அடியார்களை கைவிட்டு விட்டானா? கைக்கொண்டானா? என்று கேட்கிறோம்; கூறவேணும். கைவிட் விட்டானென்று கூற உங்கட்கும் வாய் எழாதாதலால் கைக்கொண்டானென்றே கூறவேண்டி தாகும். 'என்பர் போலும்' என்றிருப்பதனால் வஸ்து வ்ருத்தியில் நன்றன்று என்று கூற தாகத் தேறுகின்றதென்கிற வாதமொன்று வலிதாக இருப்பதால், இந்த வாதத்தின்படி அ... சேதநர்களின் தோஷ பூயிஷ்டத்வமே எம்பெருமானால் திடப்படுத்தப் பட்டதென்று தே...கிறது.

152. அங்ஙனம் துஷ்டத்வத்தைத் திடப்படுத்திக்கொண்டே அவர்களை எம்பெருமா... ஸ்வீகரித்துக் கொண்டானென்று நீங்கள் சொல்லுகிறபடியால் இதனால் பலித்ததென்ன வென்... பார்க்க. அங்கிகாரத்திற்குக் குற்றமே பச்சையாயிற்றென்று தேறுமே யல்லாது வேறென்ன தேறுது. மரத்தின் முடியிலிருந்துகொண்டு அடிமரத்தை வெட்டுவார்கணக்காயிற்று... அங்கீகாரத்திற்குப் பச்சையாகாதென்று ஸாதிக்கப் பட்டபாடெல்லாம் விபரீதபல...தது காணீர். இனி, தங்கள் பிடிவாதத்தைக் காத்துக் கொள்ளவேண்டி, எம்... பிராட்டியின் சிதகுரையைக் கேட்டு அவ்வடியார்களை உதறித் தள்ளிவிட்ட... இவர்கள் சொல்லியாகவேண்டும். இங்ஙனம் ...ர்களை யொதுக்கித் தள்ளும்படிக்கு பிராட்டி பாடுபட்டாளென்... இவ்வர்த்தம் மிகவழகியதே. திவ்ய தம்பதிகளுக்... சிறந்த குணத்தைப் பெறுவிப்பதும் இங்ஙனே பெறுவிப்பதற்காகவே ஆழ்வார் ஒ... தைக் கல்பனை செய்து பாசுரமமைத்தாரென்பதும் இவர்கட்கே உரிய அழகிய வ... திவ்ய தம்பதிகளுக்கு ஒரு குணோத்கர்ஷத்தை நிலை நாட்டவேண்டி ஆழ்வார் செ... இப்படி விபரீதமாக்க வல்லவர்கட்கே உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்யத்வவிருது கத் தகும்.

153. வத்ஸல: என்கிற பதமானது * वत्सांसाभ्यां कामबले * என்கிற பாணினி... தாலே தேறியது. காமமென்கிற அர்த்தத்தில் லச் ப்ரத்யயம் வருமென்பதை ... மேல் விதித்த பாணினி மஹர்ஷியின் உள்ளம் ஆராய்ந்துணரவுரியது. இத்துட... யத்தை அம்ஸ பதத்தின் மேல் விதித்திருப்பது ஸாபிப்ராயமல்லவா? [வலிமைக்... தோளாதலால்.] அப்படியே ப்ரேமத்திற்கு லக்ஷ்யம் வத்ஸமாதலால் அதை... விதானம் பண்ணினது, வத்ஸத்தினிடத்தில் பசுவுக்குள்ள ப்ரேமம் போன்ற ப்ரேம...வன் வத்ஸலன் என்று காட்டினபடி யல்லவா? பசுவுக்குக் கன்றினிடத்துள்ள போக்யத்வ ரூபமாகவன்றோ உலகில் நன்கு காண்கிறது. இதை ஸஹஸ்ரநாம... ...ஞானஸாரத்தில் அருளாளப் பெருமாளெம்பெருமானாரும் நன்கு ...சிறப்பித்தார். குணோத்கர்ஷங்களை எம்பெருமானிடத்திலிரு... ...விசேஷகுணங்களிலிருப்பதாக இவ்...

154. திருமழிசைப்பிரான் "செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே"
று ப்ரார்த்திக்கிறார்; குற்றத்தை நற்றமாகக் கொள்ளுங் குணம் எம்பெருமானிடத்துள்ள
றுணர்ந்தன்றோ இங்ஙனம் ப்ரார்த்திக்கிறார். இவ்வாழ்வார் பேயாழ்வாருடைய சிஷ்ய
லால் இவரும் ஒரு பேயார் என்பர் போலுமிவர்கள். தேசிகன் தயாசதகத்தில் * मयि
ति दुष्कृतां प्रधाने मितदोषानितरान् विचिन्वती त्वम्। अपराधशतैरपूर्णकुक्षिः कमलाकान्तदये! कथं
ी * प्रबलवृजिनप्राभृतभृताम् * இத்யாதி ஸ்ரீஸூக்திகளாலே உணர்த்தியருளின அர்த்த
ஷங்களும் நவீநர்களுக்கு தூஷணீயங்களாய் விட்டன. ... ... (12)

13. தயையாவது பரதுஃக்கதுஃக்கித்வ மென்பதுபற்றி.

155. எம்பெருமானை தயாளுவென்று போற்றுகிறோம். தயையாவது என்ன? என்னில்,
ர் படும் துயரத்தைக்கண்டு தானும் துயருறுவது தயை என்று ஸதாசார்யர்களின் திருவுள்
. ஆநந்தமயனான எம்பெருமானுக்கும் துயருண்டென்று கொள்வது அவத்யமாகையாலே
ர்படும் துயரத்தைத் தவிர்க்க நினைப்பது மாத்திரமே தயை என்னத்தகும் என்பர் பிறர்.
பெருமானிடத்தில் பரதுஃக்க நிராகரணேச்சை [அதாவது பிறர்படும் துயரத்தைத்
ர்க்க நினைக்கை] இல்லையென்று யாரும் சொல்லகில்லார். அதுவுள்ளதென்பது ஸம்ப்ரதி
ம் அது வொரு ஸாமாந்ய குணமே யல்லது விசேஷ குணமன்று. பிறர்படும்
ரத்தைக் கண்டு ஐயோ வென்று தானும் துயருறுகையே தயையென்றும் இதுவே
ச்சிறந்த விசேஷகுண மென்றும். இதனை இல்லைசெய்வது நிர்க்குணப்ரஹ்மவாதத்தோ
ாக்கு மென்றும் ஆழ்வார்களும் எம்பெருமானார் முதலான ஆசார்யர்களும் திருவுள்ளம்
றுகிறார்கள்.

156 கீழ்ச்செய்த வாத்ஸல்யவிசாரம் போலே இந்த தயாவிசாரமும் மிக முக்கியமானது.
துஃக்க துஃக்கித்வ மென்பது மிகவுயர்ந்த குணமென்றும் இதுவே எம்பெருமானுடைய குணங்
லேயுருகும் மெய்யன்பர்களின் உள்குழைவுக்கு உறுப்பானதென்றும் உண்மையைத் தெளிய
ாரவேணும்.

157. பிறர்படும் துயரத்தைக் கண்டு ஐயோ வென்றிரங்குகை குணமா? தோஷமா?
ாறு முதலில் ஆராயவேண்டும். இதை தோஷமென்று யாரும் சொல்லார். *நண்ணாதார் முறு
ிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க* என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை நோக்குங்கால்,
துக்கங்களிலே முறுவலிப்பது ஹேயமென்றும், கரைந்து ஏங்குவது உற்றதென்றும் நன்கு
ரிகின்றது. கரைந்து ஏங்குமவர்களையே நல்லுற்றாரென்கிறது. துக்கத்தின் எல்லையிலே
பது தான் கரைந்து ஏங்குவது. இதை நல்லுற்றாருடைய செயலாக அருளிச்செய்கின்ற
ழ்வாருடைய திருவுள்ளம் இது குணமென்பதே யன்றோ. இது குணமன்று என்று சொல்வ
ற்கு ஒரு விதமான உபபத்தியும் இருக்க நியாயமில்லை. மநுஷ்யர்களுக்கு இது குணந்தா
ான்று தேறி விடுமானால் இக்குணம் எம்பெருமானிடத்தில் அதிசயிதமாக இருந்து தீரவேணு
ன்பது புநருக்தம்.

158. ஒருவரிடத்தில் ஒரு குணமுள்ள தென்பதை நாம் எங்ஙனம் தெரிந்து கொள்ளு
றோம்? குணவானுடைய நடத்தையைக் கண்டும், அந்த நடத்தையைக் கண்ட ஆப்தர்கள்
ால்லுமது கொண்டும் தெரிந்துகொள்ளுகிறோம். எம்பெருமான் தனது தயாகுணத்தை
ந்தெந்த நடத்தைகளினால் காட்டினானோ அந்த நடத்தைகளெல்லாம் ஸ்ரீராமாயண பாரத
கவதாதிகளில் விசதம்.

159. எம்பெருமான் அவதாரங்கள் செய்தருளினது எதற்காக வென்றால், தன்னிடத்
ள்ள சிறந்த திருக்குணங்களை வெளியிடுதற்காகவே யென்பது பரமார்த்தம். இதைத்தான்
* गुणपरीवाहात्मनां जन्मनां — குண பரீவாஹாத்மநாம் ஜந்மநாம் * என்கிறார் ஸ்வாமி

வுகைக் காரியங்களுக்காகவாயிற்று எம்பெருமான் இவ்விலவுலகத்தில் அவதரித்தது ஸாமானியர்கள் நினைக்கும்படி யிருந்தாலும் உண்மையதுவன்று. ஸங்கல்ப மாத்ரத் ஸ்கலத்தையும் நிர்வஹிக்கக்கூடிய சக்திவாய்ந்த எம்பெருமான் புழுக்கள் போன்ற அரக் ளுடையவும் அசுரர்களுடையவும் ஸம்ஹாரார்த்தமாக அவதரித்தானென்கை அப்பெருமானுக் குப் பழிப்பாகவும் தலைக்கட்டும். தனது திருக்குணங்களைக் காட்டுவதற்காக அவதரித்தா னென்பதே பரமார்த்தம். இதைத்தான் ஆழ்வார் திருவாய்மொழியில் *மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க் களித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே*என்ற பாசுரத்தினால் விளங்கக் காட்டியருளினார். இதன் திவ்யார்த்தந்தன்னையே கூரத்தாழ்வான் *या कंसमुख्यनृपकीटनिबर्हणोत्था सा निर्जितत्रिजगतस्तव नैव कीर्तिः* என்பது முதலான பல ச்லோகங்களினால் விவரித்தருளினார். இவ்வளவையும் கபளீகரித்தது *குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்* என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தி.

160. இங்ஙனே எம்பெருமான் அவதரித்து எந்த குணங்களைக் காட்டியருளினானென்று விமர்சிக்க வேண்டுவது அவசியம். இதனை நாம் இன்று புதிதாக விமர்சிக்க வேண்டாதபடி பண்டே ஸாக்ஷாத்தாக அநுபவித்த அயோத்யா வாஸிகள் அக்குணங்களை விரிவாக வெளியிட் டுள்ளார்கள். அயோத்யாகாண்டத்தில் *बहवो नृप कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते—பஹவோ ந்ருப கல்யாணகுணாঃ புத்ரஸ்ய ஸந்தி தே* என்று பீடிகை யிட்டுக்கொண்டு எண்ணில் பல குணங்களை அழகாக எடுத்துரைத்திருக்கக் காணுகின்றோம். அந்த ப்ரகரணத்தில் தான் *व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः—வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித:* என்றுள்ளது. இதனால் பரதுக்க துக்கித்வமே நன்கு தெரிவிக்கப் படுகின்றது. இது குண வர்ணந ப்ரகரணத்தில் கூறப்பட்டிருப்பது கொண்டே இதனைக் கல்யாணகுண விசேஷ மென்று கொள்ளக் குறையில்லை என்று நம் பூருவாசாரியர்கள் பணித்தார்கள்.

161. இவ்விஷயத்தை நன்கு ஆராய்ந்தே நிஷ்கர்ஷிப்போம். எம்பெருமான் அ ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநன் என்று வேதாந்தங்களிற் புகழப்படுகிறான். அவனிடத் விரும்பத்தக்க சுபகுணங்கள் குடிகொண்டிருக்கின்றனவேயன்றி வெறுக்கத்தக்க ஹேயகு ஒன்று கூட இல்லையென்பது தாற்பரியம். சோகமென்பது ஹேயகுணமேயன்றிக் கல் குணமன்றே. ராமக்ருஷ்ணதிவிபவாவதாரங்களில் சோகங்கொண்டிருந்ததாக வி கின்றதே; ஹேயகுணமான சோகத்தைக்கொண்ட எம்பெருமானை அகில ஹேயப்ர னென்று எங்ஙனே போற்றலாம்? என்கிற ஆராய்ச்சியில் சில பெரியார் எழுதியுள்ள தானமாவது—அவதாரங்களிற் காணும் சோக மோஹாதிகள் வெறும் அபிநயமாத்தி யாதலால் ஆபத்தி யொன்றுமில்லை யென்றும்.

162. அவதாரங்களிற் காணும் எல்லாவகையான சோகங்களும் அபிநயரூபங்களேய அவற்றில் ஏதேனும் பாகுபாடு உண்டா? என்று விமர்சிக்கவேணும். உலகில் சோ இரண்டு வகையாகக் காண்கிறது; 1. ஸ்வார்த்த சோகம். 2. பரார்த்த சோகம். தன்கால் அடிபட்டு அதனால் ஒருவன் துடிக்கிறான். பிறர் துக்கப்படுவதைக்கண்டு ஒருவன் துடி கிறான். ஆக இவ்விருவரும் பொதுவாக சோகப்படுகிறவர்களே யானாலும், முதல்வனு சோகம் ஸ்வார்த்தசோக மென்றும், இரண்டாமவனுடைய சோகம் பரார்த்தசோகமெ வழங்கப்படுகின்றது. இவ்விருவகையான சோகமும் விபவாவதாரங்களில் பகவானிட காண்கின்றது. பொதுவிலே எல்லாவிதசோகமும் அபிநயரூபமென்றே சிலர் நினைக்கிற இது ஸமஞ்ஜஸமன்று.

163. [illegible] ஒரு ப்ரமாணம் எடுத்துக்கொள்வோம். வால் [illegible]

முஹூர்த்தம் விமநா இவ* என்கிறார். இப்படிப்பட்ட பிரமாணங்கள் மற்றும் பலவு முள்ளனவேனும், இஃதொன்றை விமர்சிப்போம்.

164. முன்னம் "ஸஞ்ஜாதபாஷ்ப:" என்று வாலிக்காகப் பெருமாள் கண்ணீர் விட்டழுதார் என்றான் ரிஷி. அது மேலுக்கு அழுதபடியோ? அன்றி உள்ளிலும் வெதுப்புண்டோ என்ன, 'விமநா இவ' என்று உடனே சொல்லிற்று. மனமும் விகார மடைந்துவிட்டது என்று நன்கு காட்டப்பட்டிருக்கிறது. இது ஸ்வார்த்தமான சோகமன்று, பரார்த்தமான சோகம் என்பது நிர்விவாதம். இத்தகைய சோகமுங்கூட அபிநய ரூபமேயென்று கொள்வதானால் சாஸ்த்ரார்த்தங்கள் மிகவும் வியாகுலப்பட்டுவிடும். ஏனென்றால், எம்பெருமானுக்கு ஸ்துதி ரூபமாகப் பல விசேஷணங்களையும் ஸம்போதனங்களையும் எம்பெருமானார் முதலான மஹாசார்யர்கள் இடுகிறார்கள். அவற்றை வியாக்கியானிக்கும்போது ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுள்ளிட்ட ஆசிரியர்கள், *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:* ஸஞ்ஜாத பாஷ்ப: பரவீரஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா இவ* என்றிது முதலான பிரமாணங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியே ஒவ்வொரு திருக்குணங்களையும் ஸ்தாபிக்கக் காணா நின்றோம்; அபிநய ரூபமான விஷயத்தை யெடுத்துக்காட்டி ஒரு சாஸ்த்ரார்த்தம் நிர்ணயிக்கலாகுமோ?

165. நாளைக்கும் நாடகக்காட்சிகளில் வேஷங்கட்டியாடுகின்ற பலருடைய துக்காபிநயங்களை நாம் கண்டு வருகின்றோம். அதைக்கொண்டு அந்த சைலூஷனை நாம் காருணிகனென்றாவது தயாளுவென்றாவது சொல்லுவதுமில்லை, நினைப்பதுமில்லை. நன்றாக அபிநயிக்கிறானென்று தலைதுலுக்கிக் கொண்டாடுகிறோமித்தனை. ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் இப்படி அபிநயிக்கிற சோகங்களைக் குறித்தா *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:* என்று அயோத்யா வாஸிகள் கொண்டாடினார்கள்? *ஸஞ்ஜாத பாஷ்ப:* இத்யாதியாகச் சொன்னதும் மேலுக்கு அபிநயித்த படியைக் கொண்டா? எம்பெருமானுடைய குணங்களைக் கொண்டாடுவதற்கு உறுப்பாயிருக்கின்ற விஷயங்களை அபிநயரூபமென்று சொல்லிவிடுவதானால் நமக்கு அநுபவ சாஸ்திரம் என்ன இருக்கிறதென்று ஆராயவேணும். ராமக்ருஷ்ணாத்யவதார திருக்குணங்களிலே நீர்ப்பண்டமாயுருகி நையும் ஆழ்வாராசார்யர்களின் கோஷ்டியில் அபிநயமென்கிற வார்த்தை தலைகாட்டப் பெறாது.

166. ஸஹஸ்ரநாமத்தில் * सत्यमेधाः—ஸத்ய மேதா:* என்[illegible] ஒரு திருநாமம். ஸத்யமான மேதையையுடையவன் என்று பொருள். * वल्लववसुदेवादिसाजात्याभिमानिनी मेधा सत्या अस्य ; न नटनमात्रम् * என்று பட்டர் பாஷ்யமிட்டருளியுள்ளார். இங்கே 'ந நடநமாத்ரம்' என்றதற்கு நடனமும் உண்டு என்று சிலர் பொருள் கூறுவது ஆச்சரியம். * सारं तु सारस्वतं जानीते नितरामसौ गुरुकुलक्लिष्टः * என்னும்படியுள்ளார் இப்படி பொருள் பணிக்கத்துணியார். அங்கு பாஷ்யத்தில் மேலே நிருபித்திருப்பதற்குச் சிறிதும் ஏலாது. சப்தஸ்வாரஸ்யத்திற்கும் பொருந்தாதது. சாஸ்த்ரார்த்தமுமன்று. மூலத்துக்கும் சேராது. நடநமாத்ரமென்று சொல்லுமவர்களை வாய்மாளப்பண்ணுதற்காக 'ந நடநமாத்ரம்' என்ற சொல்வடிவம் அமைந்தது.

167. அன்றியும் இது பட்டருடைய ஸ்ரீஸூக்தியென்பதும் விசேஷித்து நெஞ்சிற் கொள்ளத்தக்கது. ஆவதென்? என்னில்;* மின்னிடை மடவார்கள்* என்கிற திருவாய்மொழியில் ஆறும்பாட்டில் *கழகமேறேல் நம்பீ* என்றவிடத்து பட்டருடைய ஸரச்சொற்கள் ஈட்டில் ஸேவிக்கப்படுகின்றன. (எங்ஙனே யென்னில்);

168. "இவ்விடத்தே பட்டர் அருளிச் செய்வதொரு வார்த்தையுண்டு;—ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய ஸர்வ நியந்தாவாயிருக்கிற ஸர்வேச்வரன் [illegible] [illegible] [illegible] செல்லாமை [illegible] இங்கும் [illegible]

னென்கிற ஸௌசீல்யம் தங்களையும் இவர்களையுமொழிய ஆரறிந்து கொண்டாட வியாஸ... கள் எழுதியிட்டு வைத்துப் போனார்களோ! என்றருளிச் செ... .''

169. (இதற்கு மேல் நம்பிள்ளையின் ஸ்வீய ஸ்ரீ ஸூக்தி.) "ஸர்வ நியந்தாவானவ... சிலர்க்கு நியமிக்கலாம்படி எளியனானான் என்றால் இது மெய்யென்று கைக்கொள்ளுவாரை கிடையாதிறே. சாஸ்த்ரங்களெல்லாம் ஈசேசிதவ்ய விபாகம் பண்ணி ஒருங்கவிடா நிற்க அத்தலை யித்தலையாகச் செல்லுகிறதிறே இது'' எ...

170 பகவத் குணங்களில் அதிசங்கை செ...ர் அநாதிகாலமாகவே உளர் என்பதும் பட்டர் போல்வாரான சிலரே பகவத் குணங்களில் ஆழ்ந்து நையுமவர்கள் என்பதும் இவற்றால் நன்கு அறியக் கிடக்கின்றதன்றோ. ஆகவே ஸத்ய மேதா: என்கிற திருநாமத்திற்கு அஸ... மேதா: என்று கருத்துப்பட பாஷ்யமிட்டார் பட்டர்—என்பது சேவியேற்கவும் தக்கதன்...

171. இன்னமும், ஸ்வார்த்த சோகம் பரார்த்த சோகம் என்று வகையிட்டு, பரார்... சோகம் குணமேயல்லது தோஷமன்று என்றும், அது எம்பெருமானுக்குச் சிறந்த பெருங்கு... மென்றும் ஸ்பஷ்டமாக அருளிச் செய்தவர் பட்டரே யாவர். ஸஹஸ்ரநாமத்தில் விக... என்னும் திருநாமத்தின் பாஷ்யம் காண்க. * "विकर्ता—स्वार्थहर्षशोकाद्यभावेऽपि परार्थतत्प्रस... दोषः। अन्यथा परदुःखदुःखित्वादयो गुणाः कथमस्य स्युः?" என்பது பட்டர் ஸ்ரீ ஸூ... விகர்த்தா என்கிற திருநாமத்திற்கு மநோவிகாரமடைகிறவர் என்றே பொருளருளிச் செ... எம்பெருமானுக்கு ஸ்வார்த்தமான ஹர்ஷ சோகம் முதலானவை உண்மையில் இல்லையா... பரார்த்தமான ஹர்ஷ சோகங்கள் உண்டாமது அவத்யமன்று; அப்படி ஒப்புக்கொள்ளா... எம்பெருமானுக்குப் பரதுஃக்கதுஃக்கித்வம் முதலானவை சொல்லப்படுகின்றனவே அவை... படி குணமாக ஆகும்? என்கிறாரிறே இங்கு பட்டர்.

172. இதனால் ஸ்வார்த்த ஹர்ஷ சோகங்களிற் காட்டில் பரார்த்த ஹர்ஷ சோ... களுக்கு நெடுவாசியுள்ளதாக பட்டர் திருவுள்ளம்பற்றியிருக்கின்றமை நன்கு விளங்குகி... "பரார்த்ததத்ப்ரஸக்தி:அதோஷ:'' என்கிற ஸ்ரீ ஸூக்தி இங்கு அமைந்திருக்குமாற்றை ஆராய்ந்து பார்க்கு மளவில் 'எம்பெருமானுக்கும் விகாரமுண்டென்று சொன்னால் நி... ரத்வ [அகிலஹேயப்ரத்யநீகத்வ] ச்ருதிக்கு தோஷம் வருமென்று சிலர் ஆபத்தி ப... தாகவும் அந்த ஆபத்திக்கு இடமில்லை யென்று ஸ்வாமி (பட்டர்) பரிஹாரம் ஸாதி... வும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. பரதுஃக்க துஃக்கித்வ மென்பது எம்பெருமானுக்குச் குணமென்றும் அடுத்த வாக்கியத்தினால் நன்கு விளக்கியுள்ளார். பொய்யான துக்... கொண்டு இவ்வளவு பாஷ்யமிட்டருளினாரென்றால் இது பொருந்துமோ? "யானையும் நான் அஞ்சியோடினதும் பொய்'' என்று ஓர் அத்வைதி சொன்னாரென்று கதை சொல்... கணக்கிலே இதிஹாஸ புராணங்களெல்லாவற்றையுமே பொய்யாக்கவேண்டிவருமே.

173. ஆநந்தமயனாக வே...பட்ட எம்பெருமானுக்கும் துஃக்கமுண்டென்று வி... யிசைய முடியும்? என்றே பிறர் வாதிப்பர்கள். * पतिं विश्वस्यात्मेश्वरम् * न तस्येशे... *तमीश्वराणां परमं महेश्वरम्* இத்யாதிகளான ப்ரச்சத ப்ரமாணங்களினால் நிரங்குச... னென்று தேறியிருக்கிற எம்பெருமானை ஆச்ரித பரதந்த்ரனென்று எங்ஙனம் இசை... னென்று கேட்கவேணும். அதையும் நாங்கள் இசைகின்றிலோம் என்றே அவர்க... யளித்துத் தீரவேண்டும். இதைப்பற்றி விரோத பரிஹாரமென்கிற ரஹஸ்யத்தி... வெகு அழகாக அருளிச் செய்கிறார்.

174. [illegible]

... கட்டு மடிக்கவு நிசைந்தும்
பக்ஷித்தவற்றைச் செய்யவும் இடைச்சிகளுள்ளிட்டார் ... இந்த பார
படி நடக்கிற கட்டளையெல்லாம்...தன் ஸ்வாதந்த்ர்ய காஷ்டையானபடியாலே
ந்ர்யம் விருத்தமன்று" என்கிற ஸ்ரீ ஸூக்திகளைக் கண்டு தெளிவது.

175. பரதுஃக்க துஃகித்வம் எம்பெருமானுக்குள்ளதாக ப்ரஹ்ம ஸூத்ரகாரரான
ாஸர் ஒரு ஸூத்ரத்திலும் சொல்லவில்லையே யென்கிற வாதமும் பேசலம். எம்பெருமான்
வதாரம் செய்தருளுகிருனென்கிற விஷய ப்ரஸ்தாவமே ப்ரஹ்ம ஸூத்ரத்தில் இல்லையே.
ஷ்மீபதித்வமும் அதிலில்லையே.

176. ஆக, எம்பெருமானுடைய திருக்குணங்களில் தயையே சிறந்ததென்றும், அது
துக்க துக்கித்வ ரூபமேயன்றி வேறு வகைத்தன்று என்றும் நிரூபித்தாயிற்று. ... (13)

14. பிராட்டியின் விஷயமான விசாரங்களுக்கு அவதாரிகை

விளைந்திருக்கின்றன.
177. பிராட்டிதிறத்தில் மூன்று வகையான விவாதங்கள்
(1) பிராட்டியும் எம்பெருமானைப்போலே உபாய பூதை: (அதாவது) முக்தியளிப்பதில் எம்
பெருமானுக்குப்போலே பிராட்டிக்கும் ஸ்வதந்த்ராதிகாரமுண்டு; (2) பிராட்டிக்கு விபுத்வ
முண்டு. (அதாவது) எம்பெருமான் ஸ்வரூபம் எப்படி விபுவோ அப்படியே பிராட்டியின் ஸ்வ
ரூபமும் விபு. (3) பிராட்டிக்கும் ஜகத்காரணத்வமுண்டு—என்பதான மூன்று அம்சங்களை
வீனர் கூறுகின்றனர்கள். நம் பூர்வாசார்யஸித்தாந்தத்தில் (1) பிராட்டிக்குப் புருஷகாரத்வ
மாத்திரமேயுள்ளது, உபாயத்வமில்லையென்றும்; (2) ஜீவஸிர்விசேஷமாக அணுத்வமேயுள்ளது,
விபுத்வமில்லை யென்றும், (3) ஜகத்ஸ்ருஷ்டியில் பிராட்டி ஸாக்ஷிபூதையே யல்லது ஸாக்ஷாத்
ஜகத்காரணத்வம் இவளுக்கு இல்லையென்றும் அருளிச்செய்யப்படுகிறது. கீழே விவரித்தபடி
பிறர் கூறுகின்ற மூன்று அம்சங்களும் பிராட்டியின் பெருமையைப் பேசுவனவாதலால் அப்
படிப்பட்ட பெருமைகள் அவளுக்கு இல்லையென்று கூற நாம் முன்வரவேண்டிய அவசியமில்லை.
பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு என்று ஆழ்வா
ரருளிச்செய்த படியே பகவத்கடாக்ஷ லக்ஷ்மீகடாக்ஷங்களைச் சேமநிதியாகக்கொண்டு *தேவௌ
தம்பதீ நஃ—தைவதம் தம்பதீ நஃ* என்று தேசிகனருளிச் செய்தபடியே திவ்ய தம்பதிகளிரு
வரையும் தைவமாகக்கொண்டிருக்கிற நாம் 'பிராட்டிக்கு உபாயத்வமில்லை, விபுத்வமில்லை,
காரணத்வமில்லை' என்று சொல்லப் புறப்படுவது எதற்கு? வஸ்துதஃ அவை இல்லாமலிருந்தா
லும் உண்டென்று பிறர் சொன்னால் வைபவவாதமே பண்ணிப்போரவேண்டிய பக்தர்களுக்கு
அதைக்கண்டித்து ஆகவேண்டியது ஒன்றுமில்லையே. அப்படியே சொல்லிக்கொள்கவென்று
இருந்தால் ஹாநியொன்றுமில்லையேயென்று சிலர்க்குத் தோன்றக்கூடும். சாஸ்த்ரார்த்த நிஷ்
கர்ஷம் என்கிற துறையில் உள்ளபடி தத்துவத்தை விளக்கவேண்டுவது விவேகிகளின் கடமை.

178. பட்டர் ஸ்ரீகுணரத்ந கோசத்திலே * श्रियं त्वत्तोऽप्युच्चैर्वयमिह फणामः— ச்ரியம்
த்வத்தோபி உச்சைர் வயமிஹ பணாம: *என்று பெருமாளைக்காட்டிலும் பிராட்டியை உயர்
த்திக் கூறப்போ...க ப்ரதிஜ்ஞை பண்ணியே தோத்திரம் செய்ய இழிந்தார். அப்படியே
* तव स्पर्शादी... शति कमले मङ्गलपदम्—தவ ஸ்பர்சாதீசம் ஸ்ப்ருசதி கமலே மங்களபதம்*
இத்யாதி ச்லோகங்களால் உயர்த்தியே கூறினர். அவற்றால் சாஸ்த்ரார்த்த க்ஷேபமொன்று
மில்லை.

179. தேசிகன் கோதாஸ்துதியில் அற்புதமாகவொரு ச்லோகமருளிச் செய்தார்.
* वाचालयन्ति वसुधे रसिकास्त्रिलोकीं न्यू...
...ரங்கேச்வரஸ்ய தவ च* இத்யாதி (21-ச்லோ) இதில் ... த்ரிலோகீம் ந்யூநாதிகத்வ...
...नाधिकत्वसमताविषयैर्विवादैः—வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ் ... இங்கனைவிக்கத். ...
[illegible]

மூவதையான வார்தங்களைச் செய்து கோஷிக்கின்றார்களாம். பெருமாளைத் தாழ்த்தி ஆண்டா
உயர்த்திப் பேசுவாரும், ஆண்டாளைத் தாழ்த்திப் பெருமாளை உயர்த்திப் பேசுவாரும், இருவ
ஏற்றத்தாழ்வு இன்றியே ஸமமாகவே விளங்குகின்றனரென்று பேசுவாருமாய் இங்
பேச்சுக்கள் அதிகரித்துப் பேரொலியுண்டாயிற்றென்கிறார். எம்பெருமானுக்கு சேஷித்வமு
பிராட்டிக்கு சேஷத்வமும், அப்படியே எம்பெருமானுக்கு ஸகலஜகத்பதித்வப்ரயுக்தமா
ஏற்றமும் பிராட்டிக்குப் பத்நீத்வப்ரயுக்தமான தாழ்வும் அபலபிக்கவொண்ணாதவை. ஆக
படி. சாஸ்த்ரீயமான ஏற்றத்தாழ்வு இருக்கச் செய்தேயும், ஒரு அபிமாந விசேஷத்தி
"ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம்" என்று எம்பெருமானும் சொல்லிவைத்த கணக்கிலே பிரா
டியை உயர்த்தியும் எம்பெருமானைத் தாழ்த்தியும், இருவரையும் ஸமதுலையிலே வைத்து
ரஸிகர்கள் பேசுவதாக தேசிகன் ஸாதிக்கிறார்.

180., நம் ஆசாரியர்கள் பிராட்டியினிடம் பகை கொண்டவர்களல்லர். அவளுடை
வைபவத்தைக் குறைத்துப்பேச நினைத்தாரொருவருமிலர். அதீந்த்ரியமான விஷயங்களி
சாஸ்த்ரஸித்தமான அர்த்தங்களையே பேணக் கடமைப்பட்டிருக்கிறோம். மோக்ஷ ப்ரதத்வமோ
விபுத்வமோ ஜகத்காரணத்வமோ இவை லக்ஷ்மீவிசிஷ்டனான எம்பெருமானுக்கேயல்ல
லக்ஷ்மிக்குத் தனியாக இல்லையென்பதே சாஸ்... ஸம்ப்ரதிபந்நமான ஸத்ஸம்ப்ரதாயம். தே
கன் திருவுள்ளமும் பெரும்பாலுமிதுவேயாகும். அவர் சதுச்ச்லோகிபாஷ்யத்தில் பல பக்ஷ
களை உபக்ஷேபித்துக்கொண்டு போந்து *पञ्चस्वेतेषु पक्षेषु कश्चिदेकः प्रमाणवान् — பஞ்சஸ்
தேஷு பக்ஷேஷு கச்சிதேக: ப்ரமாணவாந்* என்று நிர்ப்பரமின்றிக்கே தலைக்கட்டி
அதாவது, "இந்த ஐந்து பக்ஷங்களுள் ஏதாவது ஒரு பக்ஷமே ப்ராமாணிகம்" என்றார்.
வளவோடு நில்லாமல் உத்தரார்த்தம் பணித்தபடி காண்மின்— *सपत्नीकस्य साम्राज्यं सर्वथा
सुप्रतिष्ठितम्—ஸபத்நீகஸ்ய ஸாம்ராஜ்யம் ஸர்வதா ஸுப்ரதிஷ்டிதம்* என்றார். அதாவது,
எம்பெருமானுக்குச் சொல்லப்படும் உயர்த்திகளெல்லாம் தனிமைப்பட்ட அவனுக்கல்ல,
பிராட்டியோடு கூடியிருந்துள்ளவனுக்கே என்றபடி. ஆகவே மோக்ஷப்ரதத்வாதிகளைப் பிரா
டிக்குத் தனியாக ஸாதிப்பதில் தேசிகனுக்கும் திருவுள்ளமில்லையென்பது விளங்கிற்று.

181. இதற்கு மற்றொரு சான்றும் நன்கு காட்டுகிறோம். காண்மின். யாதவாப்யுதயத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் ருக்மிணிப் பிராட்டி விஷயமென்பது ப்ரஸித்தம். அதில் முத
லிரண்டு ச்லோகங்களில் ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியே ருக்மிணியாக அவதரித்தமை சொல்
லிற்று. மேல் மூன்றாவது ச்லோகம் *शिखण्डकं निष्प्रतिमं श्रुतीनां शृङ्गारलीलोपमविश्वकृत्यम्।
अधीयते तन्मिथुनं स्वभावात् अन्योन्यजीवातुमनन्यभोग्यम्* என்றுள்ளது. அதற்கு மேல் உள்ள
ச்லோகங்களெல்லாம் ருக்மிணிப் பிராட்டியை மாத்திரம் பற்றியவை. முதலிரண்டு ச்லோகங்
களும் அப்படியே. இடையில் மூன்றாவது ச்லோகமொன்று மாத்திரம் மிதுநம் என்ற நிர்த்தேச
முடையது. இந்த ச்லோகத்தில் *ச்ருங்கார லீலோபம விச்வக்ருத்யம்* என்கிற இரண்டாவது
பாதத்திற்கு "शृङ्गारलीलावत् अनायाससाध्यविनोदरूपजगत्सृष्टिसंहारादिकृत्यम्" * என்று வியாக்கி
யானம். இந்த க்ருத்யத்தைப் பிராட்டியினிடத்தில் தனியே பேசக்கூசியன்றோ தேசிகன் மிதுந
மென்றிட்டு இடையில் விலக்ஷணமான ச்லோகமொன்றை இ... ...ர்.

182. ஸ்ரீஸ்துதியிலும் *यत्संकल्पाद्भवति कमले यत्र ...न्यमीषां जन्मस्थेमप्रलयरचना
जङ्गमाजङ्गमानाम्। तत्कल्याणं किमपि यमिनामेकलक्ष्यं समाधौ पूर्णं तेजः स्फुरति भवतीपादलाक्षार-
साङ्कम्* என்றார். இந்த ச்லோகமொன்றே லக்ஷ்மீதத்வத்தை நிர்த்தாரணம் செய்யப் போ
மன்றோ. இங்கு லக்ஷ்மியைத் துதிக்க விழிந்த தேசிகன் லக்ஷ்மியினிடத்திலுள்ள தர்மங்க
யன்றோ கூறித் துதிக்கவேணும். இங்கு எங்ஙனம் துதித்திருக்கிறாரென்று பார்க்கவேணும்
லக்ஷ்மியினிடத்தில் தனிப்பட இல்லாத தர்மத்தை அவளிடத்துள்ளதாகக் கூற எங்ஙனம்
[illegible] ? *जङ्गमाजङ्गमानां जन्मस्थेमप्रलयरचनाम् भद्रे त्वं करोषि—ஸ்ரீ மஹாலக்ஷ்மி...
[illegible] ... [illegible] ...

வைத்து ச்லோகமியற்றலாமே ; அப்படியியற்றவில்லை காணீர். அந்த ஜந்மஸ்தேம ப்ரளய
ரசனையானது பரமபுருஷனுக்கே யுள்ளதென்றும் तदनुग्राहकत्वमेव இவளிடத்துள்ள
தென்றும் ஆழ்வான் பட்டர் முதலானோர் * स्वस्ति श्रीर्दिशतादशेषजगतां सर्गोपसर्गस्थितीः
स्वर्गं दुर्गतिमापवर्गिकपदं सर्वं च कुर्वन् हरिः। यस्या वीक्ष्य मुखं तदिङ्गितपराधीनो विधत्तेऽखिलम् *
* यद्भ्रूभङ्गाः प्रमाणं स्थिरचररचनातारतम्ये मुरारेः * என்பவை முதலான ஸ்ரீ ஸூக்திகளால் நன்கு
காட்டியுள்ளார்களென்பதை யுணர்ந்த தேசிகன் வேறு வகையாக எங்ஙனே பணிக்கக்கூடும் ?

183. ஸ்ரீ பாஷ்யத்தில் * விநத விவிதபூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே * என்றவிடத்து ச்ருதப்ர
காசிகையில் * जगत्कारणत्वमोक्षप्रदत्वे हि राज्ञः छत्रचामरवत् ब्रह्मणोऽसाधारणचिह्नम् * என்றருளிச்
செய்யப்பட்டது. அந்த ஸ்ரீ ஸூக்தியை யநுஸரித்தே தேசிகனும் ரஹஸ்யத்ரயஸாரத்தில்
பரிபூர்ண ப்ரஹ்மாநுபவாதிகாரத்தில்—"ஈச்வரனுக்கு சத்ர சாமராதிகளைப் போலே லக்ஷண
மாகச் சொன்ன ஜகத்காரணத்வ மோக்ஷப்ரதத்வ லக்ஷ்மீஸஹாயத்வாதிகள் ப்ரதிபிய
தங்கள்" என்றார். இந்த மஹா வாக்யத்தில் ஜகத் காரணத்வத்தை முதலிலே வைத்து லக்ஷ்மீ
ஸஹாயத்வத்தை முடிவிலே வைத்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. லக்ஷ்மீஸஹாயத்வ
மானது எப்படி லக்ஷ்மியினிடத்தில் ஸம்பவியாதோ அப்படியே ஜகத்காரணத்வமும் அவளிடத்
தில் ஸம்பவியாது, பரப்ரஹ்மத்திற்கே ஸம்பவிக்கும்—என்று விளக்கினபடி.

184. ந்யாயஸித்தாஞ்ஜநத்திலும் ஜீவபரிச்சேதத்தில் * सृष्ट्यादिजगद्व्यापारमोक्षप्रदत्व-
मुमुक्षूपास्यत्वसर्वशेषित्वादिरूपभगवदसाधारणधर्म .... * இத்யாதிவாக்யத்தால் இவ்
வர்த்தந்தன்னையே ப்ரதிபாதித்தார். முநிவாஹந போகத்திலும் முதற்பாட்டின் வியாக்
யானத்தில். "[ஆதி] ஸர்வஜகதேக காரணபூதன்........இக்காரணத்வமும் மோக்ஷப்ரத
த்வமும் சத்ரசாமரங்கள் போலே ஸர்வலோக சரண்யனுக்கே விசேஷ சிஹ்நங்கள்" என்று
பணித்தார். . இத்தகைய ப்ரமாணங்கள் பலபலவுள்ளன. இனி நாம் இவ்விஷயங்களை ஒவ்
வொன்றாக எடுத்துக்கொண்டு ஸித்தாந்தத்திலுள்ள உபபத்திகளை மூதலிப்போம். ... (14.)

15. பிராட்டிக்குப் புருஷகாரத்வமே வடிவு.

185. முதலில் பிராட்டியின் உபாயத்வத்தைப்பற்றிப் பேசுவோம். மந்த்ரரத்ந மென்று
புகழ்பெற்ற த்வயமென்னும் ரஹஸ்யமானது பூர்வகண்ட மென்றும் உத்தரகண்டமென்றும்
இரண்டு கூறுகளாகவுள்ளது. இவ்விரண்டு கூறுகளிலும் ஸ்ரீமத் பதம் இருந்துகொண்டு
நாராயணனுக்கு லக்ஷ்மீஸம்பந்தத்தைக் காட்டியிருக்கின்றது. பூர்வ கண்டத்தில் பிராட்டியை
முன்னிட்டு [அதாவது பிராட்டியை புருஷகாரமாகக் கொண்டு] எம்பெருமான் திருவடிகளை
உபாயமாகப் பற்றுகிறதென்றும், உத்தரகண்டத்தில் பிராட்டியும் பெருமாளுமான சேர்த்தி
யிலே அடிமை செய்ய அர்த்திக்கிறதென்றும் ஸமகண்டமாக ஸகலாசார்யர்களும் நிர்வஹித்
தருளியுள்ளார்கள்.

186. மோக்ஷமளிக்கு மாற்றல் [அதாவது மோக்ஷப்ரதத்வமாகிற உபாயத்வம்] பிராட்
டிக்கும் உண்டென்று பிறர் சொல்லுவதாக ஒரு ப்ரஸ்தாவம் உள்ளதானது மிகவும் அஸ்தானே.
ஏனெனில், பிராட்டிக்குப் புருஷகாரத்வத்தை யிசைந்துவிட்டால் அவளுக்கு உபாயத்வமு
முண்டென்று வாய் திறக்க வழியேது? இருளும் ஒளியும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கமாட்
டாதது போலவே புருஷகாரத்வமும் உபாயத்வமும் ஒரு வ்யக்தியில் ஒன்று சேர்ந்திருக்க
முடியாதே.

187. எம்பெருமானைப் போலே பிராட்டியும் முக்தி ஸாம்ராஜ்யத்தைக் அருள்வல்ல

பிக்க மற்றொருவரிடத்தில் ப்ரயாஸப்பட ப்ரஸக்தியுண்டோ? இது ஸர்வாத்மநா அ... மின் மென்று உணருவதில் என்ன ச்ரமம்.

188. உலகத்திலும் பார்க்கலாம். ஒரு பொருளைக் கொடுப்பிக்கிறவராக ஒரு... பட்டால் அவர்தாமே அந்தப் பொருளை ஸ்வயம் கொடுக்கவல்லவராகவும் இருக்கமுடியாது. சிபார்சு செய்கிறவர் என்று ஒருவரை நாம் ஒப்புக்கொண்டால், அவருக்கு சிபார்சு செய்கிற தொழில் ஒன்றுதான் பொருந்தும். எந்தவஸ்துவுக்காகச் சிபார்சு செய்கிறாரோ அந்த வஸ்துவைக் அவரே கொடுக்கவும் வல்லவர் என்று சொல்லுவதானது அர்த்தமில்லாத வார்த்தையேயாகும். அந்த வஸ்துவைத் தாமே கொடுக்க வல்லவரானால் அவர் இன்னொருவரிடத்தில் சென்று சிபார்சு செய்கிற வருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேமாட்டார், சிபார்சு செய்வதென்பது பராயத்த மாய் யாசகத் தொழிலேயாகும். தாமே கொடுக்க ப்ராப்தியில்லாதவரே பிறரிடம் சென்று 'இதை நீ கொடுக்கவேணும்' என்று இரக்கக்கூடும்.

189. 'பிராட்டிக்குப் புருஷகாரத்வமில்லை, உபாயத்வம் மாத்திரமேயுள்ளது' என்று சொல்லுவதானால் அது ஒருவாறு பொருந்தும். புருஷகாரத்வத்தை அவளுக்கு இசைந்து கொடு க்கின்ற பின்பு கூடவே உபாயத்வமும் உண்டென்று வாய் திறக்கவுண்டோ வழி?

190. நம்மைப் போன்ற ஆர்த்தர்கள் திறத்தில் எம்பெருமானைக் காட்டிலும் பிராட் டிக்கே காருண்யம் கனத்ததென்பது விவாதமற்ற விஷயம். இத்தகைய காருண்யமுள்ள பிராட்டி தனக்கே முக்தியளிக்க வல்லமையுமிருக்குமாகில் அந்த முக்தியைத் தானே அளி க்காமல் நிரங்குச ஸ்வதந்த்ரனை பகவானிடத்தில் புருஷகாரஞ்செய்து மன்றாடுவது எத ற்காகவென்று சிந்திக்கவேண்டுமே விவேகிகள்.

191. எம்பெருமான் ஒருநாளும் புருஷகாரக்ருத்யத்தில் கை வைப்பதில்லை யென்றும் இத்தொழிலை எப்போதும் பிராட்டியே நடத்திவருகிறாளென்றும் ப்ரஸித்தமாகவுள்ளது. இதனை ஊன்றி நோக்கினாலும், புருஷகாரத்வமே பிராட்டிக்குள்ளதென்னும் தத்துவம் நன்கு உணரப்பட்டதாகும். புருஷகாரத்வமாவது दापयितृत्वम्— கொடுப்பித்தல். உபாயத்வ மாவது * [दातृत्वम्] *— தானே கொடுத்தல். இவ்விரண்டும் ஏகவஸ்துவிஷயகமாய் ஏகவ்யக் தியில் இருக்கமுடியாதென்பதைத் திடமாக நெஞ்சிற் கொள்ளவேணும்.

358. பத்தாம்பத்தில் முதல் திருவாய்மொழி * தாளதாமரை யென்பது. இதில் திருமோகூரெம்பெருமானுடைய அநுபவம் நிகழ்கின்றது. இத்திருவாய்மொழிக்கு அவதாரிகையிட்டருளின திருக்குருகைப் பிரான் பிள்ளான் ஆறுயிரப்படியில்—“திருக்கண்ணபுரத்திலெம்பெருமானை யநுபவித்து இப்போது திருமோகூரிலெம்பெருமானை யநுபவிக்கிறுர்” என்று இவ்வளவேயருளிச் செய்தார். மேற் பாசுரங்களிலும் ஸாதாரணமாகப் பாசுரப்பொருளே பணித்துள்ளார். மற்ற ஆசார்யர்களெல்லாரும் இங்கு ஒரு விசேஷ மருளிச்செய்கிறுர்கள்; அதாவது—ஆழ்வார் கீழ் * மாலைநண்ணித் திருவாய்மொழியில் * சரணமாகுமென்கிற பாசுரத்தில் தம்முடைய பரமபதயாத்திரையை நிச்சயித்து அர்ச்சிராதி மார்க்க கதியை யறுதியிட்டு அந்த கதிக்குத் திருமோகூர்க் காளமேகப் பெருமானை வழித்துணையாகப் பற்றுகிறுர் இத்திருவாய்மொழியில்—என்பதே. மணவாள மாமுனிகள் நூற்றந்தாதியில் * தாளடைந்தோர் தங்கட்குத் தானேவழித்துணையாம்; காளமேகத்தைக் கதியாக்கி” என்றருளிச் செய்தார். ஆசார்ய ஹ்ருதயத்தில் “மார்க்கபந்து சைத்யம் மோஹனத்தே மடுவிடும்” என்று பணிக்கப்பட்டது. பெரியவாச்சான்பிள்ளை யிருபத்திநாலாயிரப்படி முதலானவற்றிலும் ‘காளமேகப் பெருமானை வழித்துணையாகப் பற்றுகிறுர்’ என்றுள்ளது. இவ்விதமாக ப்ரமேயசிக்ஷை ஆறுயிரப்படியில் ஸூசனையாகக் கூட கிடையாதென்பது நிர்விவாதம். திருமோகூரப்பனை ஸ்தோத்ரம் பண்ணுகிறுரென்னுமித்தனையே ஆறுயிரப்படியிலுளது. இனி, தேசிகனது த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளியிலும் தத்ஸாரத்திலும் பார்க்கவேணும். ரத்நாவளியில் (104) * தைத்யாநாமித்யாதி ச்லோகத்தில் * “श्रान्तद्वारित्वमुख्यैराकारैः सद्गतिस्याज्जलदतनुरुचिश्चेति तेनाभ्यधायि” * என்கிறுர். * ஸத்கதிஸ் ஸ்யாத் * என்பதற்கு வியாக்கியான மிட்டவர்கள் “காளமேகப் பெருமாளே வழித்துணை யென்று” என்றெழுதி வைத்தார்கள். த்ரமிடோபநிஷத்ஸாரத்திலும் இப்பதிகத்தில் தேறின குணமாக “ஸத்பத்வ்யாம் ஸஹாயம் ஸ்ரீசம் ப்ராஹ” என்றருளிச்செய்தார். * ஸத்கதிஸ் ஸ்யாத் * என்ற தாத்பர்ய ரத்நாவளிக்கு * ஸத்பத்வ்யாம் ஸஹாய மென்றவிது கைவிளக்காயிருக்கின்றது. இப்படி இன்னும் பலவிடங்கள் உண்டு; தேசிகனுக்கு ஆறுயிரப்படியில் த்வேஷம் என்றே வெறுப்பு என்றே சொல்லுகிறேமல்லோம். அது மிகவும் சுருக்கமான வியாக்கியானமாயிருக்கிறபடியால் அதை ஒருகால் ஸேவித்து நிறுத்தி பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் அதற்கு நான்மடங்கு விரிவாகவும் ரஸகனமாகவும் இருக்கிறதென்கிற காரணத்தினுல் தேசிகன் இதுதன்னையே நிதியாகக் கொண்டு இதையே தமக்குக் காலக்ஷேபக்ரந்தமாக ஆதரித்துவந்தாரென்பதே தத்துவம். அவர் ஈடுமுப்பத்தாறுயிரப்படியையும் ஸேவிக்க பாக்யம் பெற்றிருந்தால் ‘தொல்லையின்பத்திறுதி கண்டேனே’ என்று சொல்லி * மொய்ம்மாம் பூம்பொழிற் படியிலே மதுவனத்தில் வானர முதலிகள் பட்டபாடன்றே பட்டிருப்பர்.

359. உண்மை இங்ஙனேயிருக்க, “ஆறுயிரப்படிக்குப் பின்புள்ள வியாக்கியானங்களில் தேசிகன் தோஷங்களைக் கண்டு நிகம பரிமளமென்றொரு அழகான வியாக்கியானம் எழுதத் தலைப்பட்டவராகக் காணுகிறுர்” என்று நிர்லஜ்ஜமாக நவீனர்கள் எழுதுகி

25. திருமண்காப்பு விஷயம்

360. வடகலையார்கள் தங்களுடைய ஆசார்ய பரம்பரையாகச் சொல்லிக் கொள்ளு
றிற [பிள்ளான் முதலான ஆசார்ய] வரிசையில் 'எங்களாழ்வான்' என்றொரு
ஆசார்யரும் தேசிகருக்கு முன்னே சேர்ந்திருக்கிறார். இவர் உச்சிக்குடுமி
ஸ்ரீவைஷ்ணவ மரபில் சேர்ந்தவரென்பது யாவருமறிந்த விஷயம். இதில் ஒருவர்க்
கும் விவாதமில்லை. இப்பூமண்டலத்தில் உச்சிக்குடுமி ஸ்ரீவைஷ்ணவர்கள் பலவாயி
ரக்கணக்கில் எங்கும் மலிந்திருக்கிறார்கள். இவர்களே சோழியர் எனப்படுபவர்
கள். இவ்வகுப்பில் ஆதிகாலந்தொடங்கி இந்நாள் வரையில் வடகலைத்திருமண்
இடுபவர் ஒருவர்கூட இல்லையென்பது திண்ணம். மேற்கே மைஸூர் ப்ராந்தத்தில்
'மண்டயத்தார்' என்னும் வகுப்பிலுமப்படியே. அந்த வகுப்பைப்பற்றி இப்
போது விசாரமில்லை. புரச்சூடர்களின் வகுப்பில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும்
பலபலர் அவதரித்திருக்கிறார்கள். அந்த வகுப்பில் அவதரித்தவரான (மேலே
சொன்ன) எங்களாழ்வானென்னுமாசாரியர் தென்கலைத்திருமண் அணியப்பெற்ற
வரேயொழிய வடகலைத்திருமண் ஸம்பந்தமேயில்லாதவர் என்பது நிர்விவாதம்.
அவர்க்குத் திருவெள்ளறையில் ஆலயப்ரதிஷ்டையுண்டு. அவருடைய சிஷ்ய கோடி
யைச் சேர்ந்தவர்களாக [வடகலையார்களே ஒப்புக் கொள்ளுகிற] நடாதூரம்மாள்
வேதாந்த தேசிகர் முதலானவர்களும் தென்கலைத்திருமண் தவிர வேறொன்றை
யறியாதிருந்தவர்களேயென்பது ஸந்தேஹமற்ற விஷயம். வேதாந்த தேசிகரைப்
பற்றின வுண்மை பலகால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் விபவத்திலும்
அர்ச்சையிலும் தென்கலையேயென்பது மிகத்தெளிவாக அறியலாகும். ஸ்ரீரங்கத்
தில் அவருடைய திருமண்காப்பை மாற்றி வடகலைத்திருமண் போட்டதற்காக
ஆயிரம்ரூபாய் அபராதம் விதித்து அது ஹைகோர்ட்டு வரையில் ஊர்ஜிதமாயிருப்
பது இந்த ஸம்புடத்திலேயே ஸுவிசதம். ஆக, தேசிகனுட்பட பூருவர்களின்
கோஷ்டியில் தென்கலைத்திருமண்காப்பு தவிர வேறு விதமான புண்ட்ரம் இருந்த
தாகக் கனவிலும் நினைக்க ப்ரஸக்தியில்லை. ஆசார்யர்கள் அணிந்து கொண்டிருந்த
திருமண்காப்புதான் ஸகல திவ்யதேசங்களிலும் விளங்கிற்று, விளங்குகின்றது,
நீடூழிகாலம் விளங்கப்போகின்றது — என்பதிலும் ஐயமில்லை. தேசிகனுடைய
ஸ்ரீஸூக்திகளாலும் தென்கலைத்திருமண்காப்புக்குத்தான் ப்ராமாண்யம் ப்ரதிஷ்
டிதமாகிறது. இவ்விஷயம் பல க்ரந்தங்களில் புண்ட்ரப்ரதிமைகளோடு ப்ரகா
சிதம், இதுதன்னிலும் ப்ரகாசிதமாகிறது.

361. ஊர்த்வபுண்ட்ர ஆகாரத்தில் பேதம் ஏற்பட்டிருப்பதால் இந்த பேதம் எக்
காலத்தில் ஏற்பட்டது? யார் ஏற்படுத்தினது? எந்த ஆகாரம் சாஸ்த்ரீயமானது?
இத்யாதி விசாரங்களைப் பலர் பண்ணுவதுண்டு; பேதம் ஏற்பட்டிருப்பது வாஸ்தவம்.
எக்காலத்தில் இது ஏற்பட்டது என்பது நிர்ணயிக்க முடியாதது. இரண்டும் அநாதி
யாகவே உண்டு என்று கொள்வதில் பாதகமொன்றுமில்லை. இந்த புண்ட்ர பேதத்
தைப் பூர்வாசார்யர்களுக்குள்ளே சிலர் ஏற்படுத்தினதாகச் சொல்லுவது ஆதார
மற்றது. ஆசாரியர்களெல்லாரும் வேற்றுமையின்றிக்கே ஒரேவிதமான ஊர்த்வ
புண்ட்ரத்தையே அணிந்து வந்தவர்களென்பதில் ஸந்தேஹிக்க இடமில்லை. ஏறு
மென்று வழங்கப்பட்டுவந்த வடகலைத் திருமண் நம் ஆசார்யகோஷ்டியில் புகுந்
ந்ததில்லையென்பது திண்ணம்.

2. வேதாந்ததேசிகர் தாமியற்றிய 'ஸச்சரித்ரரக்ஷையில்' புண்ட்ர விஷயமாக
தாரம் சர்ச்சை செய்திருக்கிறார். அவருடைய காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்
க்குள்ளே திருமண்காப்பில் வேற்றுமை ஏற்பட்டிருந்திருக்குமாயின் அதைப்
கண்டன மண்டனங்களை அவர் செய்தருளாமலிருந்திருக்கமாட்டார். பல
முதலியவற்றில் விரிவான கண்டனங்கள் செய்தருளியிருக்கிறாரே
திருமண்காப்பு ஸந்நிவேசத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் அவாந்தர பே

மிருப்பதாக ப்ரஸ்தாவமும் செய்யவில்லை. ஆகவே அவருடைய காலத்தில் ஸ்ரீ ஜனங்களெல்லாரும் ஏகரூபமான திருமண் காப்பையே அணிந்து வ ளென்பது அறியக் கிடக்கின்றது.

333. தீபசிகாகாரம், வேணுபத்ராகாரம், பத்ம முகுளாகாரம், குமுதாகாரம், மத்ஸ்யாகாரம், கூர்மாகாரம், சங்காகாரம், சூர்ப்பாகாரம், துத்தூர புஷ்ப (ஊமத்தம் பூ) ஆகாரம், தண்டாகாரம், திந்த்ரிணீ பத்ராகாரம்—என்றிப்படி அநேக ஊர்த்வ புண்ட்ராகாரங்கள் ஆங்காங்கு சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதாக உதாஹரித்துக் காட்டி இவையெல்லாவற்றினுள்ளும் ஹரிபாதாகாரமே உத்தமமென்றும் ஏகாந்திகளல்லாத வைஷ்ணவர்களுக்கு மற்ற ஆகாரங்கள் உபாதேயங்களாகலாமென்றும் அந்த ஸச்சரித்ரரக்ஷையிலேயே முடிவுகட்டி யிருக்கின்றார். ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்தமாலா பதிப்பிலுள்ள ஸச்சரித்ர ரக்ஷையில் பக்கம் 73-ல் இவ்விஷயம் விசதமாகக் காணலாம்.

364. உத்தம ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உரியவையல்லவென்று ஸ்ரீதேசிகனால் கருதப்பட்ட ஆகாரங்களை அச்சிட்டுக் காட்டினால் விஷயம் நன்கு விளங்குமென்று அவை அடைவே அச்சிட்டுக் காட்டப்படுகின்றன. :—

No.1. சூர்ப்பாகாரமான புண்ட்ரம்—ஸ்ரீமத்தின் வடிவம் இதுவே.





No. 3. ஶுத்தார புஷ்பாகாரமான ஊர்த்வ புண்ட்ரம்.



ஊமத்தம்பூ வடிவமான திருமண்காப்பு.



No. 4. திந்த்ரிணீபத்ராகாரம் (புளியிலையுருவம்)





No. 5. மத்ஸ்யாகாரம். மீன்வடிவமான திருமண்காப்பு.



No. 6. சூலாகாரம். சூலாகாரம் இதுவேயொழிய வேறல்ல. காம்பு தனிப்பட்டது.



No. 7. தீப ஶிகாகாரம்.



No. 8. குமுத புஷ்பாகாரம். ஆம்பல்மலர் வடிவான திருமண்காப்பு

ஆக இந்த பத்து ஆகாரங்களும் பரமைகாந்தி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தகாதவையென்று தேசிகனால் கூறப்பட்டவை.

365. ஆக இவ்வளவும் காட்டப்பட்டுள்ள (10) ஆக்ருதிகள் ஸச்சரித்ரரக்ஷா ரக
லானவற்றில் உதாஹரிக்கப்பட்டவையே. இவ்வாகாரங்களான ஊர்த்வ புண்ட்ரங்க
ளைத் தரிக்கவேண்டியதென்று சாஸ்த்ரங்களில் ஏற்படுவதாகப் பாரமேஷ்ட்ய ஸம்
ஹிதை முதலான பலநூல்களிலிருந்து வசனங்கள் பலவற்றை தேசிகனெடுத்துக்
காட்டி முடிவில் தம்முடைய ஸித்தாந்தமாக என்ன முடித்தாரென்றால், ஏகாந்தி
களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஹரிபாதாகாரமான ஊர்த்வ புண்ட்ரமே உபாதேய
மென்றும் மற்றவையெல்லாம் ஏகாந்திகளல்லாத வைஷ்ணவர்களுக்கு உபாதேய
மாகலாமென்றும் முடித்தருளினர். ''एकान्तित्वरहित वैष्णवमात्रविषयतयापि वचनस्य चरितार्थत्वात्''
என்பது அவ்விடத்திலுள்ள தேசிக திவ்ய ஸூக்தி.

366. இனிமேல் தென்கலைத் திருமண்காப்பு ஸன்னிவேசங்களும் அவற்றுக்கான
ப்ரமாண விவேசனங்களும் நிரூபிக்கப்படுகின்றன. இப்பக்கத்தில் கீழே செ. 1.
செ. 2, செ. 3 என்று மூன்று லக்கங்கள் கொடுத்துக் காட்டப்பட்டுள்ள திருமண்
காப்பு ஸன்னிவேசங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமாவது:—
பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் * நாஸிகாமூலமாரப்ய * என்றும், * ஹரே: பாதத்வ
யாக்ருதிம் * என்றும் ப்ரமாணங்களிருப்பது ப்ரஸித்தம். மூக்கின் மூன்றிலொரு
பாகத்திற்கு நாஸிகாமூலமென்று பெயர் என்பதாக ஸம்ஹிதையிலேயே விவரணம்
செய்யப்பட்டிருக்கிறது. நாஸிகா மூலத்திலிருந்து ஹரிபாத த்வயாகாரமாக நெற்றி
யில் திருமண்காப்பு அணிந்து கொண்டால் எவ்விதமாக இருக்குமோ அவ்வித
மானது செ. 1 உருவத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அவ்விதமாகத் திருமண்காப்பு
இடுகிற பக்ஷத்தில் இரண்டு கண்களையும் சிறிது மறைத்துக் கிடக்கிறபடியாலே
அப்படி கண்களை மறைக்காமல் கண்பாகத்தைத் தவிர்த்துத் திருமண் இட்டால் எவ்
விதமாக இருக்குமோ அவ்விதமானது செ. 2 உருவத்தில் காட்டப்பட்டிருக்கிறது.
திருமண்காப்பில் விரல் விரலாகத் தெரியக் கூடாதென்றும் ஸுபரிஷ்க்ருதமாக
இருக்கவேண்டுமென்றும் சாஸ்திரமாதலால் அப்படிப்பட்ட ஸுபரிஷ்க்ருதமான
விதம் செ. 3 உருவத்தில் காட்டப்பட்டிருக்கிறது. வயிறு, மார்பு, கை முதலான அவ
யவங்களில் இடும்போது கண்களை மறைப்பதென்கிற வார்த்தைக்கு ப்ரஸக்தி யில்லா
மையால் நெற்றியில் தேறுகிற திருமண்காப்பின் ஆகாரத்திற் காட்டிலும் உடம்பி
லணியும் திருமண்காப்புகளின் ஆகாரத்திற்கு வேறுபாடு அமைகின்றதென்று
கண்டுகொள்வது. ப்ராகாரம் கோபுரம் முதலானவிடங்களில் கண்மறைவுக்கு ப்ர

செ. 1.



செ. 2.

செ. 3.



ஸக்தி இல்லையானாலும், "முகத்தி லுள்ளதுவே முக்கியம்" என்கிற ப்ரஸித்தியாலே
முகத்திலணியும் ஆகாரமே ப்ராகார கோபுராதிகளில் ப்ராப்தமாகின்றது:

பராசர ஸம்ஹிதையில் * நாஸாதெள த்வ்யங்குலம் பாதம்* என்கிற வசனம்
367. பராசர ஸம்ஹிதையில் * நாஸாதெள த்வ்யங்குலம் பாதம்* என்கிற வசனம் இரண்டு பாகம் பாதம்
ஸ்பஷ்டமாகக் காண்கையாலே அதையநுஸரித்து மூக்கில் இரண்டு பாகம் பாதம் ஸ்பஷ்டமாகக் காண்கையாலே பெயராதலால் நெற்றி
அமைத்து அணிவதும் பொருந்தும். பாதமென்று காலுக்குப் பெயராதலால் நெற்றி
யில் இடுகிறகால்களைப் பாதமென்னலாமே தவிர, மூக்கில் இழுக்கிறதைப் பாத
மென்பது கூடுமோ வென்று சிலர் சங்கிப்பர்கள். * ஏகாங்குலம் புண்ட்ர தரோஸ்
து மூலம்* என்கிற உபநிஷத்தின்படி ஊர்த்வபுண்ட்ரத்தை ஒரு வ்ருக்ஷமாகச்சொல்லி
யிருக்கையாலவ்ருக்ஷத்தின் மூலத்தைப்பாதமென்று வ்யவஹரிப்பதுண்டென்பதை
ந்யக்ரோதோ பஹுபாத் வட: என்கிற அமரகோசத்திலும் தெரிந்து கொள்ள
லாமாகையாலே மூக்கிலிழுப்பதைப் பாதமென்றுவ்யவஹரிப்பதுநன்குபொருந்தும்.

இதன் கீழ் கெ 4, கெ. 5 என்று லக்கமிட்டுக் காட்டப்பட்டுள்ள திருமண்
368. இதன் கீழ் கெ 4, கெ. 5 என்று லக்கமிட்டுக் காட்டப்பட்டுள்ள விஷயமாவது:—
காப்பு ஸன்னிவேசங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய ப்ரமாணத்திற்கு "ஸர்ப்
குண்டலீக்ருத ஸர்ப்பஸ்த ஹரிபாத த்வயாக்ருதிம என்கிற இடவேண்டும்" என்றுசிலர்
பத்தில் காணப்படுகிற ஹரிபாதம் போலே திருமண் இடவேண்டும்" என்றுசிலர்
சொல்லுகிற பொருள் பொருந்துவதற்கு வழியில்லை; ஏனென்றால், இப்பொருள்
விவக்ஷிதமாகில் ஸர்ப்பத்திற்குக் "குண்டலீக்ருத" என்று விசேஷணமிட்டிருப்பது
விபலமாகும் ஆகவே அது பொருளன்று. நாஸிகாமூலத்திலே குண்டலீக்ருத ஸர்ப்
பாகாரமாகத் திருமணிட்டு அதன்மேலே இரண்டு ஹரிபாதங்கள் இருப்பதாகத்
திருமண் இட வேணுமென்பதே யதார்த்தமான பொருள். இதிலும் கண்களில்
மறைவு ஏற்படாதபடி யிடக்கூடிய ஆகாரம் கெ. 4 என்று அறிக. உடம்பில்
உபரோதமில்லாமையாலே ஸர்ப்பத்தின் குண்டலீகரணம் அஸங்குசிதமா
அந்த ஆகாரமே கெ. 5.

கெ. 4.

கெ. 5.

நெ. 6.



நெ. 7.



369. இவ்விரண்டையும்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியதாவது *உத்புல்ல கம லஸ்தாயி ஹரிபாத த்வயாக்ருதிம்* என்கிற ப்ரமாணப்படிக்கு நாஸிகா மூலத்தில் தாமரை மலர் இருப்பதாக வைத்து அதன்மேலே இரண்டு ஹரிபாதங்களாகத் திருமணிடுகிற ஆகாரம் நெ. 6 என்று அறிவது. *அஷ்ட மீந்து கலாதார ஹரிபாதத்வயாக்ருதிம்* என்கிற ப்ரமாணப்படிக்கு அஷ்டமீ சந்திரனை ஆதாரமாக்கி அதன்மேலே இரண்டு ஹரி பாதங்களாகத் திருமணிடுகிற ஆகாரம் நெ. 7 என்று உணர்க.

370. திருவாய்மொழியில் (1—9—10) "*நெற்றியுள் நின்று என்னையாளும் நிரை மலர்ப் பாதங்கள்* என்ற பாசுரத்தை (திவ்யார்த்த தீபிகை யுரையுடன்) உற்று நோக்குமளவில் நெ. 6 திருமண்காப்பு ஸன்னிவேசம் ப்ரபல ப்ராமாண்யம் பெறும்.

—முடிவில் முக்கி[illegible]ன அறிவிப்பு—

371. ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தில் [illegible]ாபி பூர்வாசார்ய[illegible]ரம்பரையிலும் ஸகல தேவாலயங்களிலும் தென்கலைத்திருமண்[illegible]ப்பு தவிர வேறு தலைகாட்டிற்றில்லை யென்பது பரச்சத பரஸ்ஸஹஸ்ர நிதர்சநங்களினால் இருபது வருஷகாலமாகப் பல நூல்களில் மூதலிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இதுவரை ஒருவரும் ஒருபதி லும் வெளியிட்டதில்லை; வெளியிட முயன்றதுமில்லை. இப்போது ப்ரதிபச்சுவடியில் ஸ்வல்பம் பதில் வெளிவந்திருக்கிறது. எங்கும் யாவரும் சொல்லுகிறவொரு பழ மொழியுண்டு—"ஒரு பொய்யை ஸ்தாபிக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்; முடிவில் எல்லாம் பொய்யாகவே முடியும்" என்று. அதேரீதியை இங்குக் காண லாம். இந்த ப்ரதிபச்சுவடி, பக்கம் 65ல் பாரா 36ல் எழுதப்பட்டிருக்கிற விஷ யம் ஒருவரும் மறக்கத்தகாதது. "निर्बन्धादेव कृतपुण्ड्रविपर्यासाः सर्वे श्रीरङ्गदेवस्थानपुरुषाः" என்று—ஸ்ரீரங்கதேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸகலபுருஷர்களும் நிர்ப்பந்தத்தின லேயே திருமண்மாறுபாட்டை யடைவிக்கப்பட்டார்கள் என்று சிலாசாஸனம் செய்துவிட்டது. அதாவது, அநாதிகாலமாக வடகலையாயிருந்தவர்களெல்லாரும் வலிகட்டாயத்தினால் தென்கலைத்திருமண் அணிந்துகொள்ளும்படி செய்விக்கப்பட் டார்கள் என்று எழுதி முடித்துவிட்டது. அப்படி வலிகட்டாயப்படுத்தினவர் யார்? என்கிற கேள்வியுண்டாகுமே; அதற்கு உடனே அங்கேயே பதில் எழுதப்ப[illegible]

விட்டது. அதாவது ஜகத்ப்ரஸித்தமான ஐதிஹ்யம் எடுத்துக்காட்டப்பட்டது. இராமாநுச நூற்றந்தாதி யருளிச்செய்தவரான திருவரங்கத்தமுதனர் நெடுநாள் வரையில் ஸ்ரீராமாநுஜரிடத்தில் ப்ரதிபத்தியில்லாமலிருந்தார். அவர்க்குப் பெரிய கோயில் நம்பியென்று முன்னிருந்த பெயர். ஸ்ரீரங்க தேவஸ்தானத்தின் ஆட்சி அவருக்கே அதீனமாக இருந்தது. கோவில் சாவிகளை அவரிடமிருந்து ஸதுபாய மாக ஸ்ரீராமாநுஜர் கைப்பற்றினர். அந்த ஸதுபாயம் யாதெனில்; அந்த பெரிய கோயில் நம்பியின் தாயார் பரமபதித்தபோது அவர் தம்முடைய வகுப்பினரை நிமந்த்ரித்து ச்ராத்தம் செய்ய விரும்பாமல் ஸ்ரீராமாநுஜரை யடுத்து 'தேவரீருடைய சிஷ்ய வர்க்கங்களில் சிலரை நியமித்து ஏகோத்திஷ்ட ஸபிண்டீகரணங்களைச் சிறப்புற நடப்பிக்கவேணு' மென்று ப்ரார்த்தித்தார். அப்போது கூரத்தாழ் வானே ஏகாஹச்ராத்தத்தில் போக்தாவாக இருக்கும்படி ஸ்வாமி நியமித்தார். அவர் ஸ்வாமியின் குறிப்பையறிந்து அப்படியே போக்தாவாக இருந்து போஜநாந்தத் தில் த்ருப்தி சொல்லுகிற ஸமயத்தில் அந்த கர்த்தாவினிடமிருந்து ஸன்னிதித் திறவு கோல்களைப் பெற்றுக்கொண்டு புக்தி த்ருப்தி சொன்னர்—என்று கோயிலொழுகு முதலான புராதந நூல்களில் ஸுப்ரஸித்தமான ஐதிஹ்யத்தை இந்த ப்ரதீபர் எடுத் துக்காட்டி "இந்த ஐதிஹ்யத்தின்படி ஸ்ரீரங்க தேவஸ்தானச் சாவிகளை ச்ராத்தத் தில் நிமந்த்ரணமிருந்து போஜநாந்தத்தில் த்ருப்தி சொல்லுகிற ஸமயத்தில் கட்டா யப்படுத்தி வாங்கி அதிலிருந்து தேவஸ்தான நிர்வாஹாதிகாரத்தை ஆக்ரமித்துக் கொண்டு, வடகலையாயிருந்தவர்களையும் நிர்ப்பந்தப்படுத்தியே தென்கலையாக்கி விட்டார்" என்று எழுதித் தீர்த்து விட்டார்.

372. இதனல் ஸ்ரீராமாநுஜருடைய இளமையில் தேவஸ்தானம் வடகலையாயிருந்த தாகவும் அவர் தலையெடுத்து அவரே பலாத்காரங்கள் செய்து தென்கலையாக மாற்றி விட்டதாகவும் தெரிவித்து முடித்திட்டாரிவர். இதற்கு நேர்விருத்தமாகக் கீழும் மேலும் பலபல மூர்க்கபாஷிதங்களைப் பரப்புகிறார். இவருடைய லேகன மென்ன வென்றால், உடையவர் தென்கலையாக்கினதை யெல்லாம் மறுபடியும் தேசிகன் வந்து வடகலையாக்கி விட்டாரென்றும், அவற்றை மறுபடியும் தென்கலையார்கள் துராக்ருதமாய்ப்புகுந்து தென்கலையாக்கிக் கொண்டார்களென்றும், ஆனல் அவர் களாலும் பூர்த்தியாகத் தென்கலையாக்கிக் கொள்ள முடியாமல் சிற்சில இடங்கள் விடுபட்டுப் போயினவென்றும், இதனல் தென்கலையார்கள் ஆக்ரமண சீலர்க ளென்று ஸ்பஷ்டமாகிறதென்றும், இப்படிப்பட்ட துராக்ருதமான ஆக்ரமணத் திற்கு ஸ்ரீராமாநுஜரே காற்றங்கால் என்றும் ...... தனக்குத் தோன்றினதையெல் லாம் கடகடவென்று எழுதிப் போகிறார். இதனிடையில் மற்றென்றும் எழுதுகிறார்- ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீராமாநுஜருடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் திருமுகத்திலே திகழ்கின்ற திருமண்காப்புதான் ப்ராமாணிகமென்றும், அந்தவிதமாகத்தான் எல் லாரும் திருமண்காப்பு அணியவேணுமென்று மெழுதுகிறார். அவ்விதமாக முன்னம் இவர் இட்டுக்கொண்டு தம்வகுப்பினர்க்கு வழிகாட்டட்டுமே. திருநறையூரில் எல்லா வ்யவஸ்தைகளையும் தேசிகனே ஸாக்ஷாத் பண்ணிவைத்தாரென்று ஒருபுறமெழுது கிறார். உடையவருகந்த திருமண்காப்பைக் காட்டிலும் தேசிகனுகந்த திருமண் காப்பு இவர்க்கு மிகச் சிறந்ததல்லவா? அந்த விதமாகவும் அணிந்து கொள்ளட்டும். ஸ்ரீரங்கம் ராயகோபுரத்தில் ப்ராமாணிகமான புண்ட்ரமிருக்கிறதென்கிறார்; அந்த விதமாகவுமணியட்டும். விஷப்பூச்சிகளுக்கு ஒருவிதமான புண்ட்ரமிருப்பதாக எழுதுகிறார். அதுவே இவருகந்ததுபோலும். அந்த ஆகாரமுமில்லை. சூர்ப்பா காரமே இவருகந்தது. ... ... (25)

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸாரநிதி முற்றுப்பெற்றது.

பேரருளாளன் 18, 19, 20

ிரியர் : ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர்

1—1—55

ஸம்ப்ரதாயப்ரதீபவிமர்சம்.

கோயமுத்தூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதுபயவே. வித்வச்சிரோமணி. வேதவ்யாஸபட்டர் திருமலை ஐயங்கார்ஸ்வாமிஸன்னிதியிலிருந்து மிகவும் விரிவான ஸ்ரீமுகமொன்று கிடைத்தது. ப்ராமாணிக ப்ராஜ்ஞர்களனைவரும் காணவேணு மென்னுமவாவினால் அவரால் அனுப்பப்பட்ட அதனை இதன்கீழ் வெளியிடுகிறோம்.

"ஸ்ரீமதே ராமாநுஜாய நம:—

கோயமுத்தூர்; பட்டர் திருமாளிகை. ஓங்கியுலகளந்த.

... ... விண்ணப்பம். உபயகுசலம். ஸமீபகாலத்தில் அடியேன் பாண்டுரங்க க்ஷேத்ரம் ஸேவிக்க விடைகொள்ள நேர்ந்தது. ஸேவித்துத் திரும்புகையில் ஷோலாபூரில் ஓரிரவு தங்க நேரிட்டது. அங்கு ஒரு உத்தராதிபக்தர் ஸம்ப்ரதாயப்ரதீபமென்கிற புத்தகமொன்றை அடியேனிடம் கொடுத்தார். அவர் என்னை வடகலை வைஷ்ணவனாக வெண்ணி 'இதை நீங்கள் ஏகாந்தமாகப் பார்க்க வேண்டியது' என்று சொல்லிக் கொடுத்தார். அச்சிட்ட புத்தகத்திற்கு ஏகாந்தமென்ன வந்ததென்று கேட்டேன். அதற்கு அவர் மராட்டியில் சொன்ன பதில் எனக்கு நன்றாகப் புரியவில்லை ஆனால் அவர் புத்தகங்களை மூடிமூடி வைத்துக் கொண்டிருந்த நபர்களைப் பார்த்துப் பார்த்துக் கொடுத்ததனால், ஏதோ பயங்கொள்ளியாயிருப்பதாக அடியேனுக்குப் பட்டது. கிடைத்த புத்தகத்தை வாசித்துப் பார்ப்போமென்று தோன்றி வாசிக்கத் தொடங்குகையில் இப்புத்தகம் சென்ற புரட்டாசி மாதத்திலேயே வெளியிடப்பட்டதாக முகப்பில் காணப்பட்டது. உள்ளே பல ஏடுகளும் உடனே படித்தேன். அடியேன் கார்த்திகைமாத முடிவுவரையில் ஸ்வஸ்தானத்திலேயே யிருந்திருக்கிறேன். இடையில் திருமலைதிருப்பதி பெருமாள்கோயில் சென்னை முதலானவிடங்களுக்கும் கார்யவசாத் ஸஞ்சரிக்க நேர்ந்ததுண்டு. அவ்விடத்தில் எங்கும் இப்புத்தகத்தின் பேரும் கேட்டதில்லை.

இது அந்த ப்ராந்தத்தில் தலைகாட்டியிருந்தால் அந்த புரட்டாசி மாதத்தி [illegible] ஸ்வாமி சிஷ்யர்களினாலோ [illegible] முடிந்திருக்குமே; இதுவரை [illegible]

நூலாசிரியர் இதை வெகு ஜாக்ரத்தையுடன் ஒளித்து வளர்க்கிறார்போலும் என்று எண்ணினேன். பிறகு அதுதான் தத்துவமென்று புலப்பட்டது.

உண்மையில் இச்சுவடி இதுவரை தேவரீருடைய கடாக்ஷவீக்ஷணத்திற்கு இலக்காகவில்லையென்றே நினைக்கிறேன். இச்சுவடி சிறிய அளவில் 127 பக்கமுள்ளது. பாஷை ஸம்ஸ்க்ருதம். லிபி நாகரி. எழுதியவர் அவரே; எவரென்னில், ஏற்கெனவே பலகால் தேவரீரிடத்தில் பங்கப்பட்டு "வகம்ருக: குத்ரேதி நஜ்ஞாயதே" என்றும் "வகம்ருக: அத்ரேதி விஜ்ஞாயதே" என்றும் ப்ராஜ்ஞர்களால் எழுதப்பெற்ற நபரே. இவர் தமக்குப் பலபல பிருதாவளிகள் இட்டு நீட்டியிருக்கிறார். ஏதோ அக்ஷராஸ்யராகத்தானே யிருக்கவேண்டும். விஷயங்களை யெழுதுவது எப்படியாவது இருக்கட்டும். வாக்கில் சிறிதாவது மாதுர்யமுண்டா? மார்தவமுண்டா? விநயமுண்டா? ஸத்யமுண்டா? ஆர்ஜவமுண்டா? எதுவுமில்லையே. குதிரைவண்டிக்காரன் பாஷையையே கூட்டிக்கொள்ளலாம் போலிருக்கிறதே. சென்ற வருஷத்தில் ஸ்வாமி வெளியிட்டருளின 'ராமாநுஜ தயாபாத்ர பத்யசரித்ரம்' என்கிற க்ரந்தத்தின்மேல் பதில் எழுதுவதாக இவருடைய ஸம்ரம்பம். விஷயங்களை எவ்வளவும் எழுதலாம். ஆக்ரஹமும் கோபமும் தாபமும் எவ்வளவு தோன்றினாலும் அதைச்சிறிதும் வெளிக்காட்டாமல் உள்ளே யடக்கிக்கொண்டு விஷயங்களை மாத்திரமே வரைந்தால் எவ்வளவு கௌரவமாயிருக்கும். ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி எழுதவில்லையா?

விவேகிகளுக்குப் பரமத்ருப்திகரமான விஷயங்களை ப்ராமாணிகமாக வெளியிட்டுப் புகழ்பெறுவதற்கு இவர் ஸுக்ருதம் செய்து வைக்கவில்லை. அது உலகமறிந்த விஷயம். விஷயவிசாரம் எப்படியிருந்தாலும் வாக்விந்யாஸமாவது அருவருக்கத்தகாத முறையில் அமைந்தால் நூலுக்கு அதுவே ஒரு ஏற்றமாகுமன்றோ. அந்ருதவாதீ — அஸத்யவாதீ — வஞ்சக:— விப்ரலம்பக:— அவ்யுத்பந்ந:— நிர்லஜ்ஜ:— ப்ரலபதி — ஜல்பதி— அஸத்யநிஷ்ட:— அதிக்ரூரஹ்ருதய:— ராகத்வேஷவசம்வத:, ஸ்வயம் நஷ்ட: பராந் நாசயதி— ஏவமேவ கிமபிகிமபி ப்ரலபநீயம், நாந்யா கதிரஸ்தி. ....இப்படி அநுவதிக்கவும் தகாத உபாலம்ப துருக்திகளையே பக்கந்தோறும் வரிதோறும் புகுத்தி இத்தகைய அபசப்தங்களினாலேயே பல பக்கங்களை வளர்த்தி எழுதப்பட்டிருக்கிற இச்சுவடிக்கு வழக்கம்போல் தாளம் போடுகிற வொருவரும் 'கர்தபகாநே ஸ்ருகாலீ விஸ்மய:' என்கிற ரீதியில் அபிநந்தநம் செய்து முன்னுரை யெழுதியுள்ளார்.

இவர்கள் தேசிக திவ்யஸூக்திகளில் ப்ராவண்யாதிசயமே வடிவெடுத்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள் எழுதுகிறார்கள். "த்ரஸ்ய ப்ரஹ்மவிதாகஸ:" என்றதையும் அறிந்திருக்கிறார்கள். அத்தனை வேண்டா; ஸர்வஜநீநமானவொரு ஸௌஜந்யத்தைக் காப்பாற்றிக் கொண்டு பெருமைபெற வேணும்—என்கிற விது கூடவா அக்ஷராஸ்யர்களுக்குத் தெரியாது? வசவுமாலைகளை வாரியிறைப்பதனால் மதஸ்தாபனம் செய்ததாய் விடுமா என்கிற இவ்வளவுகூட விமர்சிக்கமாட்டாதவர்கள் க்ரந்தமெழுதப் புறப்படுவதுதான் வெகு ஆச்சரியம். "இவர்களிடத்தில் வசவுகள் தவிர வேறு பதில் கிடையாது" என்று எங்கும் பிறர் சொல்லி வரும் வார்த்தைப்படி இவரே தம் புத்தகத்தினால் "எங்களிடத்தில் வசவு தவிர வேறு பதில் கிடையாது" என்று கண்ணாடிபோல் காட்டிக் கொண்டதாக முடிந்திருக்கிறது. "இப்படிப்பட்ட வம்பு வசவுகளை நம் மதத்திலுள்ளவர்கள் கண்டாலும் அருவருப்பர்களே!" என்று தோன்றவொட்டாததபடியன்றோ மஹத்தான அவிவேகம் மூடிக்கிடக்கிறது. இந்த நபர் சொல்லிக் கொண்டிருக்காராம்—'ராமாநுஜதயாபாத்ர [illegible] சரித்ர [illegible] ஸம்ப்ரதாயஸ்தர்களெல்லார்க்குமே அடிவயிற [illegible]

acharya.org

துணிந்திருக்கிறோம்" என்று. அப்படி தாம் கைகண்ட வழியையே ...த்து
முடித்திட்டார் இந்த திட்டுச்சுவடியினால்.

ஸம்ப்ரதாயப்ரதீபமென்று இவர் தம் நூலுக்கு வைத்திருக்கிற பெயரில் 'தீ'
என்கிற எழுத்து தவர்க்க த்ருதீயமன்று, ப்ரதமமேயென்பது அக்ஷரந்தோறும்
அநாயாஸமாகக் காணலாகிறது. ஒவ்வோரெழுத்தும் ஸம்ப்ரதாய प्रतीप மாகவே
யுள்ளதென்பது க்ரமேண ஸ்வாமி திருக்கையால் விபுலமாகவும் விசதமாகவும்
வெளிவருமாயினும் அடியேனும் யதாசக்தி கிஞ்சித்கரிக்க விரும்புகிறேன். ஸார
மாகச் சில விஷயங்கள் இங்கே விஜ்ஞாபயே. உலகில் ஸ்வயம் ஸ்வைரிணியான
வளே பதிவ்ரதைகளை யெல்லாம் ஸ்வைரிணிகளென்று பழிப்பள்; ஸ்வயம் வஞ்சக
னும் தஸ்கரனுமானவனே ப்ராமாணிகர்களிடத்திலே அக்குற்றங்களை யேற்றிப்
பழிப்பது இயல்பு. இதே ரீதியில் இந்த நபர் தேவரீர் போல்வாரை வாசாமகோசர
மாகப் பழித்திருப்பதானது, வஸ்துஸ்திதியில் அந்த அவத்யங்களெல்லாம் இவர் தம்
மிடத்திலேயே ஸுப்ரதிஷ்டிதங்களென்று நன்கு நிலைநாட்டித் தருகின்றதென்பதில்
ஸந்தேஹகந்தமுமில்லை.

1. தவறான விஷயங்களைத் தெரிவித்துப் பாமரர்களை வஞ்சிப்பது.
2. முக்கியமாக பதில் சொல்ல வேண்டிய விஷயங்களை விட்டிட்டு அநாவச்
யக விஷயங்களிலே வாகாடம்பரங்களை வளர்த்துவது.
3. தனக்கு இன்னது அநுகூலம் இன்னது ப்ரதிகூலம் என்பதைக்கூடத்
தெளிந்து கொள்ளாமல் மனம்போனபடி யெழுதி பங்கப்படுவது.
4. மனப்பூர்வமாக அப்ராமாணிகமென்று தானறிந்த விஷயங்களை
விதண்டையாலே ஸமர்த்திக்க முயல்வது.
5. ஏற்கெனவே கண்டனமேறித் தலைமடிந்துபோன விஷயங்களுக்கு
இன்னமும் உயிரிருப்பதாக வைத்து அவற்றையே எழுதிக் கொண்
டிருப்பது.

இப்படியாகப் பலவகைப்பட்ட அவத்யங்கள் இந்த நபரிடத்தில் குடிகொண்டிருக்
கின்றனவென்பது இவருடைய சுவடியில் அக்ஷரந்தோறும் அறியவெளிதாகும்.

பாமர வஞ்சகர்களில் இவர் ப்ரதம தீர்த்தகாரரென்பதை முந்துற முன்னம்
தெரிவிக்கிறேன். இவர் தம் சுவடியில் இடையிடையில்—"ஸர்வசக்திக்ரந்தத்திலே
விரிவாகச் சொன்னோம்; ஸஜ்ஜநாராதனக்ரந்தத்திலே பரக்கப் பேசினோம்;
........." என்றிப்படி எழுதிவருகிறார். உண்மையில் அப்பெயருள்ள சுவடிகளை
இவர் எழுதியிருந்ததுண்டு; ஆனால் அவை அடுத்த க்ஷணத்திலேயே "यातु शतधा
विनाशम्—யாது சததா விநாசம்" என்று ஆளவந்தாரருளிச்செய்த கணக்கிலே
தேவரீருடைய திவ்யக்ரந்தங்களாலே நீறுநீறாகிப் பாறுபாறாகித் தொலைந்திருக்க
இன்னமும் அவற்றுக்கு ஜீவிதமிருப்பதாக வைத்து இவர் எழுதிக் கொண்டு
போவதானது எவ்வளவு நெஞ்சுரம்! என்ன பாமரப்ரதாரணம்!! ஒரு பாமரன்
கூட இதில் வஞ்சிதனாக மாட்டான் என்பதை இவர் தாம் அறியாதவரல்லரே
"தாங்குகிறவன் துடையில் திரித்த வரையில் லாபம்" என்னுமாபோலே ஏமாறுகிற
வர்கள் ஏமாறட்டுமே என்கிற அற்பமான நினைவன்றோ இவருடையது. ஜில்லா
கோர்ட்டில் செத்துப்போன முன்ஸீப் கோர்ட்டு ஜட்ஜ்மெண்டையும், ஹைகோர்ட்
டில் மாண்டுபோன ஜில்லா கோர்ட்டு ஜட்ஜ்மெண்டையும், பார்லிமென்டில் பாழ்
யொழிந்த ஹைகோர்ட்டு ஜட்ஜ்மெண்டையும் அறிவிலிகளுக்குக் காட்டி வஞ்சி
க்கும் பாமரர்களின் பணியையன்றோ மேற்கொண்டிருக்கிறாரிவர். திருவாய்ப்பா
டியிலே வந்து தலைகாட்டின அசுரப்பூண்டுகள் தத்தையும் அடுத்தடுத்த க்ஷண

Released by Maran's Dog ,Toronto, Canada Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

திலே பஸ்மமாகி யொழிந்ததுபோல இவருடைய க்ஷுத்ரச்சுவடிகளத்தனையும் அடுத்த நொடியிலேயே மாண்டொழிந்தபடியை உலகமெல்லாம் அறிந்திருக்கிற தென்பதைத் தாமறிந்துவைத்தும் சிறிதும் கூசாமல் 'அந்த க்ரந்தத்திலெழுதினோம், இந்த க்ரந்தத்தி லுளறினோம்' என்றெழுதுவது ஹாஹா! என்ன தார்ஷ்டிகம்!

தவிர, திருக்குடந்தை வித்வான் ஸ்ரீஉவே. K. ஆராவமுதய்யங்கார் ஸ்வாமி இந்த பாமர வஞ்சகப் பேர்வழியின் உண்மை ஸ்வரூபத்தை விளக்கி தேசிக பக்திதத்வமென்கிற (24 பக்கங்கொண்ட) புத்தகத்தை வெளியிட்டு மூன்று வருஷமாகிறது. அதைக்கண்டவிவர் தேள் கொட்டின தஸ்கரன் போல் வாயைக் கையைத் திறக்கமாட்டாது வாளாகிடக்கிறார். அவ்வரிய பெரிய நூலிலுள்ள ஸாரமான வார்த்தைகளாவன—

"இத்தாதாசார்யஸ்வாமியின் தேசிக பக்தியைப்பற்றின உண்மையை உலகம் தெரிந்துகொள்வதற்காக இங்கு ஒருவிஷயம் தெரிவிக்கிறேன். ஸ்ரீதேசிக பக்தர்களான வித்வான்கள் இதை அவசியம் ஆழ்ந்து அவகாஹித்துக்கொள்ள வேணும். இத்தாதாசார்ஸ்வாமி 1946 ஆம் வருஷத்தில் [6, 7 வருஷங்களுக்கு முன்பு] ரூபகபரிசுத்தி யென்றொரு சிறு க்ரந்தமெழுதி திருப்பதியில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அது 'வசஸ்ஸுதா' விசாரபரம். "பாராசர்ய வசஸ்ஸுதாம்" என்கிற ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீஸூக்தியில் ரூபகமா? உபமிதமா? என்று விசாரித்து முடிவுசெய்ய எழுந்தார். அதில் 12ஆம் பக்கத்தில் தத்வடீகையில் தேசிகன் ஸாதித்திருக்கிற மூன்று காரிகைகளை யெடுத்தெழுதி "इति श्रीवेङ्कटनाथीयतत्त्वटीकाग्रन्थादवगम्यते" என்று முடித்து, உடனே அந்த காரிகைகளின் கருத்தை "अयमाशयो लक्ष्यते" என்று தொடங்கிப் பதினொருவரிகளால் விவரித்து உடனே "अत्र अस्त्येव बहु असामञ्जस्यम्" என்று தேசிக திவ்ய ஸூக்திகளை மிகவும் அஸமஞ்ஜஸமென்று தூஷித்து முடித்திருக்கிறார். இது நாம் இந்திர ஜாலமாகக்காட்டும் விஷயமன்று. தேவநாகர லிபியில் உலகமறிய அச்சிட்டு வெளியிட்டிருக்கிற புத்தகத்தில் பக்கலக்கமும் காட்டியிருக்கிறோம் ஒவ்வொருவரும் எடுத்துப்பார்க்கலாம். தத்வடீகையில் தேசிகன் நிஷ்கர்ஷித்தவொரு விஷயத்தில் அஸ்த்யேவ பஹு அஸாமஞ்ஜஸ்யம்" என்று துணிச்சலாக எழுதியிருப்பவர் இத்தாதாசார்யர் ஸ்வாமி. இதில் இன்னொரு வேடிக்கையுமுண்டு. அதில் இவர் ஒவ்வொரு பாராவிலும் தலைமேல் பாணிநி:, தண்டீ, போஜராஜ:, ருத்ரட:, என்றிப்படி சிலருடைய பெயர்களைக் குறிப்பிடுகிறார். அவர்களுடைய உக்திகளையெடுத்து விமர்சிப்பதாகக் காட்டுகிறபடி. இந்த ரீதியில் தத்வடீகாஸூக்திகளையெடுத்து விமர்சிக்குமிடத்தில் தலைமேல் வேதாந்த தேசிக: என்றோ தேசிக: என்றோ நிகமாந்தகுரு: என்றோ வேதாந்தாசார்ய: என்றோ ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: என்றோ மகுடமிட்டிருக்க வேணும். முன்னும்பின்னும் தண்டிக்கும் மொண்டிக்கும் மகுடஞ்சூட்டியிருக்கின்ற இந்த ஸ்வாமி தத்வடீகையின் காரிகைகளை யெடுத்து விமர்சிக்கிற ப்ரகரணத்தில் ஒரு மகுடமுமிடவில்லை. ஏனென்றால், தேசிக: என்று மகுடமிட்டு எழுதினால் அதை தேசிக பக்தர்கள் ஊன்றிக் காண்பர்கள்; காணுமிடத்து தேசிக தூஷணம் புலப்பட்டுவிடும்......என்று ஏதோ சூதுகளைக்கருதி மகுடமிடாமலே விஷயத்தையெழுதி 'அத்ர பஹு அஸாமஞ்ஜஸ்யமஸ்தி' என்று சிறந்த ஸம்பாவனையோடு முடிவுகட்டியிருக்கிறார்."

"தவிரவும், 'ஸ்ரீவேங்கடநாதீய தத்வடீகா' என்றெழுதுகிறார். மேலே 19 ஆம்

acharya.org

தேசிகனைப்பற்றி இப்படி அவலீலையாக எழுதியிருக்கக்கண்டதுண்டோ? நிகமாந்த மஹாதேசிக: இத்யாதிரீதியில் எழுதாமற்போனாலும் ஸ்ரீவேங்கடநாதார்ய: என்றாவது எழுதியிருக்கவேண்டாமா? எவ்வளவோ வெறுப்பினாலல்லவா அநுபவிக்கவும் தகாத முறையில் எழுதியிருக்கிறார். "ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞாலப்த வேதாந்தாசார்யபத:" என்று ஸ்வாமிதாமும் பஹுமானித்துக்காட்டியுள்ள விருதான திருநாமத்தை விட்டிட்டு வழிப்போக்கரான ஒரு நபரைச் சொல்லுவது போல ஆர்யபதமும் ஆசார்யபதமுமில்லாமல் 'வேங்கடநாத:' என்று எழுதுவதும், அம்மஹாசார்யர் தத்வடீகையில் மிகவும் அஸமஞ்ஜஸமாக எழுதிவைத்தாரென்பதும் எவ்வளவு அருவருக்கத்தக்க விஷயமென்பதை வித்வான்கள் விமர்சிக்கவேணும்."

"அந்த தேசிக நிந்தா புஸ்தகம் வெளிவந்தபோது அடியேன் ஒரு உத்யோக நிமித்தமாகத் திருப்பதியில் இருந்தேன். 'மஹாசார்யஸூக்தியை இப்படியா தூஷித்து எழுதுவது? இது உமக்கு ஸ்வரூபமா?' என்று பல பண்டிதர்கள் முன்னிலையில் கேட்டேன். "அஸ்தானேபி மூட பக்தியினால் கொண்டாடுகிற மூர்க்கர்களில் நான் சேர்ந்தவனில்லை; அத்யந்தம் அஸமஞ்ஜஸமாக எழுதப் பட்டிருந்தால் அஸமஞ்ஜஸமென்று காட்டாமல் வேறு எப்படி காட்டமுடியும்? என்றும், அப்படி அஸமஞ்ஜஸமாக எழுதுகிறவருடைய பெயரை கௌரவம் தோற்ற எழுதுவதில் எனக்கு ஔசித்யம் தோன்றவில்லையென்றும் கூசாமல் கூறினார். அதையெல்லாம் இவர் இப்போது இல்லைசெய்தாலும் புஸ்தகத்தில் தம்கையால் எழுதி அச்சிட்டிருக்கிற—உலகமெங்கும் பரவியிருக்கிற அஸமஞ்ஜஸோக்திகளை இல்லைசெய்ய முடியாதன்றோ."

"இத்தாதாசார்ஸ்வாமி பலகாலமாய் அடிக்கடி சொல்லுவதென்ன வென்றால், 'ஸம்ப்ரதாய கோஷ்டியில் வேணுமானால் ஸயூத்யர்களுடைய தாபத்திற்காக தேசிகனைப் புகழ்வோம்; மற்றப்படி தந்த்ரார்த்தங்களை விமர்சிக்குமிடத்தில் அஸமஞ்ஜஸமாகவே மனம்போனபடி யெழுதி வைத்திருக்கிறவரைப் புகழ்வதற்கு எப்படி மனம் வரும்?' என்றே நிர்ப்பயமாய்ச் சொல்லுவர். இப்படிப் பட்டவிவர் ப்ரதிவாதிபயங்கர குலதிலகரான ஸ்வாமியை தேசிக பக்தி ஹீனரென்றும் கபட பக்தி நாடகக்காரரென்றும் எழுதிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம். கூலிக்கு மாரடிக்கிற கதையாய் மடம் ஸ்வாமிகள் ஸாதிக்கிற மாஸிக வேதனம் ஜீரிக்க எதையாவது எழுதிவிடலாமென்று நினைக்கத் தகுமோ? மேலும் இந்த தாதாசார்ஸ்வாமி திருவையாற்றிலிருந்த காலத்தில் 'அஹமேவ பண்டித:' என்கிற ஒரு புதிய செருக்கினால் தேசிகனை கிள்ளுக்கீரையாகவே பேசிக்கொண்டிருந்தவர். யாதவாப்யுதயத்தில் (10—28) "उपवेदमधीयुर्ये" என்றதை யெடுத்துக்கொண்டு अधीयु: என்ற ப்ரயோகத்தை தூஷித்துப் பேசிக் கொண்டிருந்தார். வித்யார்த்தி தசையிலிருந்த அடியேன்போல்வார் சிலர் அப்பயதீக்ஷிதருடைய வியாக்கியானத்தை யெடுத்துக்காட்டி 'வாயை மூடிக்கிடவும்' என்றோம். அதில் லிட் என்று அச்சுத்தவறாக விழுந்திருப்பதைப் பிடித்துக் கொண்டு 'तदिदमन्धस्य जात्यन्धेन यष्टिदर्यिते' என்று அவரையும் சேர்த்து வையத் தொடங்கினர். இப்படி பல விஷயங்கள் வித்வான்கள் பலருமறிந்தவையுண்டு. அவற்றையெல்லாமிவர் இப்போது அபலாபம் செய்வராதலால் இவற்றை விட்டு விடுகிறோம். ஸுஸ்பஷ்டமாக தத்வடீகா காரிகைகளை யெடுத்துக்காட்டி अत्रास्ति बहु असामञ्जस्यम् அத்ராஸ்தி பஹு அஸாமஞ்ஜஸ்யம் என்று சிலாலிகிதமாக்கி வைத்திருக்கிறாரே, இது பேர்க்கவும் போகாததேயன்றோ." (ஆக இவ்வளவும் திருக்குடந்தை ஸ்வாமியின் வியாஸாநுவாதம்.)

இந்த பாமரவஞ்சகப்பேர்வழி மிகவும் அற்பமான ஞானங்கொண்டு ஸம்ப்ரமிப்பதும், அஸ்தானே கலங்கி தூஷிப்பதும், உடனே தகுந்த சாட்டையடிகள் பெற்று அநுதபிப்பதும், அந்த அநுதாபத்தோடே பலநாள்களைப் போக்கிக் கிடந்து திசைநோக்கித் தொழுதிறைஞ்சி நிற்பதும், "புநரபி தைவதுர்விபாகாத் அலர்க்கம் விஷமிவ" என்று பவபூதி சொன்ன கணக்கிலே நாய்க்கடி விஷம் அடிக்கடி தலைகாட்டுவதுபோல துராக்ரஹ பிசாச தாண்டவம் மீண்டுமீண்டு நேருவதும் இயல்பாய் விட்டது. ஒரு விஷயமிங்கே யெடுத்துக்காட்டுகிறேன்.

"2. ப்ரக்ஞைகம்" என மகுடமிட்டு ஆச்சரியமான விஷயமொன்று எழுதுகிறார்—வடகலை ஸம்பிரதாயந்தான் பிராமாணிகமென்பதற்கு அசைக்கமுடியாத ப்ரமாணமொன்று காட்டுகிறார்; காஞ்சீ மண்டலத்தில் ஆக்கூர் என்று ஒரு அக்ரஹாரமாம். அவ்வூரார் யாவரும் பரம்பரையாய்த் தென்கலையாராகவே யிருந்து வந்தார்களாம். அவர்களில் அண்ணு என்பவரொருவர் வேதங்களை யோதி சாஸ்த்ரங்களுமதிகரித்து தர்மசாஸ்த்ரங்களிலும் வல்லவராய் மஹாவ்யாபகராக இருந்தாராம். அவரிடத்தில் மற்ற தென்கலையார்களும் மஹத்தான மதிப்பு வைத்திருந்தார்களாம். அவர் ஒருநாள் தீர்த்தமாடுவதற்குக் குளம் சென்று நீராடி வேஷ்டி சாத்திக்கொண்டு அந்த க்ஷணம்வரையில் தாம் இட்டுக்கொண்டிருந்த தென்கலைத் திருமணை விட்டுத்தொலைத்து வடகலை நாமத்தைப் போட்டுக்கொண்டு திரும்பினராம். அதைக்கண்ட மற்ற தென்கலையார்களும் அவருடைய கட்டளையில்லாமலே அப்போதே வடகலை நாமத்தையே தாங்களும் போட்டுக் கொண்டார்களாம்; அவர்களுள் ஒரு திருமாளிகைக்காரர் மாத்திரம் இவரிடம் வந்து 'ஓய்! ஏன் இப்படிப்பட்ட துர்ப்புத்தி உமக்கு உண்டாயிற்று?' என்று கேட்டாராம்- 'வடகலை ஸம்பிரதாயந்தான் சிறந்ததென்று என் தலைவிதியினால் எனக்குப் பட்டது; அதனால் நான் இந்த கோலம் பூண்டேன்; மற்றவர்களை நான் கட்டாயப்படுத்தவில்லை' என்று அவர் பதில் சொன்னாராம்; அன்று முதலாக அந்த ஒரு திருமாளிகைக்காரர் தவிர மற்ற பேர்களெல்லாரும் அவ்வூரில் வடகலை நாமதாரிகளாகவே யிருந்து வருகிறார்களாம். இது ஒருநூற்றாண்டுக்கு உள்பட்ட ஸம்பவமாம். ஸ்ரீரங்கத்தில் ஆண்டவன் ஆஸ்தானத்திலே அபிஷிக்தராயிருந்து பத்து வருஷங்களுக்குமுன் பரமபதித்த ஆக்கூராண்டவன் ஸ்வாமியும் அந்த ஆக்கூரிலேயே ஜனித்துப் பரம்பரையாகத் தென்கலையாயிருந்து வடகலையாக மாறினவர்தானும். ஆகையால் வடகலை ஸம்பிரதாயந்தான் பிராமாணிகமாம். இங்ஙனே எழுதுகிறார்.

இப்படிப்பட்ட ஆச்சரியமான—அபேத்யமான—அவிசால்யமான—அப்ரத்ருஷ்யமான—மர்மஸ்பர்சியான மஹாவிஷயங்களே இச்சுவடியில் மலிந்து கிடக்கின்றன.

இதைக் கண்டவுடனே அடியேனுக்கு நினைவுக்கு வந்ததாவது;—

சேலம் ஜில்லாவில் 'வீரமங்கலம்' (அல்லது வீரபத்ரமங்கலம்) என்றொரு அக்ரஹாரமிருந்தது. அங்கு நூறு திருமாளிகைக்காரர்கள் வடகலை ஸம்பிரதாயஸ்தர்கள் வாழ்ந்துவந்தார்கள்; ஒருநாள் அங்கு 'மக்வீன்' என்றொரு பாதிரி வந்து ஏசு கிறிஸ்துவின் பெருமைகளை அரைமணி காலம் பொழிந்தார்; அதைக் கேட்ட அத்தனை பேரும் ஒருவர் தப்பாமல் உடனே பூணூலை யறுத்தெறிந்து நாமத்தையுமழித்து விட்டு சர்ச்சுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்; அன்றைக்கே அந்த அக்ரஹாரமே சூன்யமாய் விட்டது. ஆகையால் கிறிஸ்துமதமே மிகச்சிறந்தது; இது இருபது ஆண்டுகட்கு உட்பட்ட ஸம்பவம். அன்றுமுதல் அந்த ப்ராந்தத்திலுள்ள வடகலையார்கள் பலரும் அடிக்கடி அப்படியே மாறிக்கொண்டு வருகிறார்கள்—என்று மாகாண பாதிரியால் ப்ரசுரம் செய்யப்பட்டிருக் [illegible] பேரின்பம் [illegible] வர்களின் பெண்டுகள் மஹம்மதிய மதத்தில் [illegible] அதைக்கண்டு

கொண்டிருக்கிறார்களென்றும் கேள்விப்படுகிறேன். ஆக்கூரென்று சேலம் ஜில்லாவிலும் ஒரு ஊர் இருக்கின்றது; அவ்வூரார்களோ என்னவோ அறியேன். அது எப்படி யாவதிருக்கட்டும்; ஆக்கூரார்கள் புத்திக்கெட்டாத காலத்தி லிருந்து தென்கலையாயிருந்தவர்கள் கி. பி. 20 அல்லது 19ஆம் நூற்றாண்டில் வட கலையாக மாறிவிட்டபடியால் இதைக்கொண்டு வடகலை ஸம்பிரதாயமே மிகச்சிறந்த தென்பதை யுணரலாமென்று, இதுவரை ஒருவருடைய் புத்திக்கு மெட்டாத மஹத் தான வித்த வித்தையே யெழுதிப் பரிசுபெற்றவிவரை நவீநர்கள் விக்ரஹமாக வைத்து நிச்சலு மர்ச்சிப்பது நலம். திருமலைத் தாழ்வரையிலிருந்து கொண்டு கோர மாதவம் செய்தே இப்படிப்பட்ட விசேஷயுக்திகளை இவர் கண்டுபிடித்தார் போலும்.



இவருடைய அபத் தச்சுவடியை ஸ்வாமி ஸன்னிதிக்கே அனுப் பிக் கொண்டிருக்கி றேன். இதை வியாஜ மாகக்கொண்டு ஸ்வா மி செய்தருளும் லோ கோபகாரம் பரமவில க்ஷணமாயிருக்கு மென்று உலகம் முழு வதும் நம்பியிருக்கின் றது. அடியேனும் ஸவிநயம் பிரார்த்திக் கிறேன். அடியேனு டைய பிதாமஹர் 1874 ஆம் ஆண்டில் காஞ்சீபுரத்திற்கு திவ் யதேசயாத்திரையாக எழுந்தருளியிருந்த போது ஸ்ரீதீபப்ரகாச ரையும் ஸ்ரீவேதாந்தா சாரியரையும் சேர்த்து எடுத்த திருவுருவப் படத்தின் ப்ரதிக்ருதி யொன்றும் இத்து டன் அனுப்பியிருக் கிறேன். இதை ஸ்வா மியின் பத்ரிகைகளில் வெளியிட்டால் தேசிக புண்ட்ர ப்ராசீந பரி ஸ்திதியை உள்ளபடி உலகம் தெரிந்து கொள்ளுமென்பது அடியேனது அவா. நியமனம் பெற்றுக் கொண்டிருக்கிறேன்."

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

ஸத்ஸம்ப்ரதாயபாஸ்கரன்.

सुराहारासारीकरणचणयत्सूक्तिलहरीगरीयस्तां स्तोतुं प्रभवति न वाचस्पतिरपि ।
स नस्तन्यादन्यादृशमहिमशाली वरवरो मुनीन्द्रो निस्तन्द्रः कुशलमनुवेलं गुरुवरः ॥

अवाग्भूषाजुष्टैरभुवनगुरुप्रेमभरितैरमूलक्षोद्भूतैरवरदगुरूपासितपदैः ।
कृतं तैस्तैस्सर्वैर्गुरुभिरमहायोगिभिरिति व्यवस्यन्तस्सन्तो हृदि मम लसन्तु प्रतिकलम् ॥

इति स्तुतिप्रकीर्तनैः प्रदर्शितस्वनिर्मलप्रकृष्टभक्तिसम्पदं मदन्ववायशेखरम् ।
हृदा मुदा दधत्सदा विशुद्धबुद्धिशेवधिर्भवन् सतां मुदे लिखामि संप्रदायभास्करम् ॥

1 இதன் முன்னே ஸம்ப்ரதாயப்ரதீபவிமர்சமென்று வெளிவந்துள்ள ஸஹ்ருதயஸஹ்ருந்மணி வ்யாஸமே இந்நூலுக்கு அவதாரிகையாகக் கொள்ளத்தக்கது. ஸம்ப்ரதாயப்ரதீபமென்கிற அந்தச்சுவடியை எழுதியவர் மஹத்தான ...யினால் மறைத்து மறைத்து வைத்துக் கொண்டு ச்ரத்தாஜடர்களான சில பூத்யர்களுக்கே விநியோகித்துக் கொண்டிருந்து அச்சுவடிக்கு இதுவரை ...ர்ப்பிச்சையளித்து வந்தார். இன்றே அது நமது பார்வைக்கு இலக்காயிற்று. ...ரஹ்மதண்டப்ரகாசாநாம் வித்யுத்ஸத்ருசவர்ச்சஸாம், ஸ்மரந் ராகவபாணாநாம் ...வ்யதே ராக்ஷஸேச்வர:* என்னும் நிலைமையிலே நெடுநாள் கிடந்நவிந்த ப்ரதீப...ரர் ஒருவாறு தேறித் துயிலெழுந்து வந்திருக்கின்றார்; இது உலகின் மஹத்தான ...க்யம். ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய ஐந்து பாஷை...யிலும் ப்ரக்ருத விஷயத்தில் உலகுக்கு உண்மைப்பொருளை யுணர்த்த தீக்ஷை...கொண்டிருக்கிற நாம் முதலில் தமிழிலே இதனை யுபகரிக்கிறோம். விரைவில் ...மேண மற்ற நான்கு பாஷைகளிலும் நல்லார்க்கு நல்விருந்தளிப்போம்.

2. ஏற்கெனவே 1—1—54ல் நாம் பல பாஷைகளில் வெளியிட்டிருக்கிற ராமா...நுஜதயாபாத்ரபத்ய சரித்ரத்தில் 1, 2, 3, 4, 5 என்றிப்படி வரிசையாக லக்கங்கள் ...இட்டு விஷயங்களை விளக்கினோம். இவற்றுக்கு ஸமாதானம் வெளியிட...நினைப்பவர்கள் இந்த லக்கங்களின் வரிசைக்கிரமத்திலேயே விடையிறுக்க வேணு...மென்று வெளியிட்டிருந்தோம். இவர் அந்த ரீதியில் மறுப்பு வெளியிடுவதாகக் ...காட்டிக் கொண்டு இடையிலே சில ஏடுகள் எழுதியுள்ளார். மற்ற பல ஏடுகளை ...பு விஷயங்களால் நிரப்பியுள்ளார். இவரெழுதியுள்ள விஷயங்களில் ஒன்றை ...விடாமல் எல்லாவற்றிற்கும் பரிபூர்ணமான மறுப்புகளுரைத்து இவருடைய ...வாதங்களை நிச்சேஷமாக நிரஸித்து உண்மைப் பொருள்களை நிலைநாட்டுவோ...ம்.

3. விவாத விஷயங்களில் தலையிட்டுக் காரியம் செய்வதனால் அத்யாவச்யக ஜக...கார்யங்களுக்கு இடையூறு விளைகின்றதேயென்கிற நிர்வேதம் ஒருபுறமிருந்தா...லும் ஸம்ப்ரதாயார்த்த தத்த்வங்களையுணர்த்தும் முகத்தால் இதுவும் ஜகதுபகார...

களில் தலைசிறப்பதேயாதலால் இதுதன்னிலும் உத்கண்டையும் உத்ஸாஹமும் மீதூர்ந்து செல்லப்பெறுகின்றது. இதற்கு நித்யஸ்ரீர் நித்யமங்களம்.

4. ஒருவருடைய நூலை வாசிக்கத் தொடங்கும்போது எவரும் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமொன்றுண்டு; 'இந்நூலாசிரியர் கூடியமட்டில் ப்ராமாணிகர்தானா?' என்று பார்ப்பது. விவாதாஸ்பத விஷயங்களில் எழுதுவது எப்படியாவது இருக்கட்டும்; விவாதத்தில் சேராத ஸர்வஸாதாரண விஷயங்களில் நூலாசிரியர் அப்ராமாணிக ஸரணியில் கால்வைக்க அஞ்சுகிறவர்தானா? என்பதை முக்கியமாகப் பரிசீலனை செய்யவேண்டும். உண்மையில் ப்ராமாணிகராயிருப்பவர்களின் நூல்களில் அவ்வதிசயம் ப்ரகாசமாகவே நிற்கும். அஃது இவரிடம் சிறிதுமில்லையென்பதை முன்னம் மூதலிக்கிறேன்.

5. தேசிகனருளிச்செய்த அதிகரணஸாராவளியில் "வ்ருத்திக்ரந்தே து ஜைமிந்யுபரசிததயா" என்கிற சுலோகத்தில் நான்காவது பாதம் "நிர்வாஹஸ் தூபசாராத் க்வசித் இதி கடதே வ்யக்ததாத்பர்யயோகः" என்பது. இதில் (இதி) என்கிற பதம் (இஹ) என்று மாறி அச்சுப்பதிப்புகளில் விழுந்து விட்டது. இந்தப் பிறழ்வு ஏற்பட்டு 70, 80 வருஷமாகி விட்டது. வித்வான்களுங்கூட அதை க்ரஹியாமல் (இஹ) என்றே பாடம் செய்து வந்தார்கள். இதற்கு வியாக்கியான மெழுத வேண்டிய ப்ரஸக்தி நமக்கு ஏற்பட்டபோது (இஹ) என்பது இங்கே அந்வயியாமையாலே (இதி) என்றிருந்த பாடம் பிறழ்ந்திருக்க வேண்டுமென்று நிச்சயித்து ப்ராசீநகோசங்களைப் பராமர்சித்ததில் அந்த (இதி) பாடமே ஸம்வா[illegible]ர்த்தமாக கிடைத்து அதை வெகு ஆனந்தத்துடன் வெளியிட்டோம். தேசிக ஸூக்தி ரஸிகர்களான பல வித்வன்மணிகள் அதைக்கண்டு அபரிமிதாநந்த பரிபூரித ஹ்ருதயர்களாகித் தங்கள் உகப்பை வெளியிட்டதோடு அப்போது அஹோபிலமடம் மூலமாக ஸவ்யாக்யாநமாய் அச்சாகிக் கொண்டிருந்த அதிகரணஸாராவளியில் அந்த அருமையான பாடத்தை நிவேசிப்பித்தலும் செய்தார்கள்.

6. இரண்டொரு ஸம்வத்ஸரத்தின்கீழ் மஹாவித்வத்வரேண்யரான ஸ்ரீஉவே. திருச்சி. ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமி ந்ருஸிம்ஹப்ரியாவில் வெளியிடுவித்தவொரு வியாஸத்தில் இந்த அதிகரணஸாராவளி ச்லோகத்தை உதாஹரிக்கையில் (இஹ) என்றிருந்தது; இந்தத் தவறான பாடத்தை ஸ்வாமியும் கைக்கொள்ளலாமாவென்று நாம் பத்ரிகையிலேயே எழுதி வெளியிட்டபோது, அந்த ஸ்வாமி "இஹ என்பது தவறான பாடந்தான்; என் கையால் (இதி) என்றே எழுதியனுப்பியிருந்தேன்; பத்ரிகாஸம்பாதகருடைய அநவதாநத்தினாலேற்பட்ட அச்சுப்பிழைக்கு வருந்துகிறேன்" என்று பதிலெழுதிப் பத்ரிகையில் வெளியிட்டிருந்ததை உலகமெல்லாம் பார்த்திருக்கிறது. இவரும் பார்த்தவரே. அப்படியிருந்தும் 'இவன் திருத்திக்கொடுத்த பாடத்தை நாம் ஏதுக்கு ஏற்றுக்கொள்ள வேணும்' என்று கடுநெஞ்சு கொண்டு, அநாவச்யகமாக அஸ்தானே அந்த ச்லோகத்தைப் பிடித்திழுத்து (இஹ) என்பதுதான் சிறந்தபாடம்—அநாதியான பாடம் என்று காட்டி அதற்கு ப்ராதாந்யம் கொடுத்து வெளியிட்டிருக்கிறார். இது ஒன்றுகொண்டே இவருடைய அப்ராமாணிக சிரோமணித்வத்தையும் வ்யுதாக்ரஹ வசம்வதத்வத்தையும் மத்யஸ்தர்கள் அறுதியிடலாம். இது ஸம்ப்ரதாயபேத விஷயமன்று. பொதுவான விதனிலுங்கூட ப்ராமாணிகஸரணியைத் தழுவ முன் வரமாட்டாதவிவர், நெடுநாளாக ஊறிக்கிடக்கிற விபரீதக்கொள்கைகளிலே ப்ராமாணிகபத்தியைக் கைப்பற்ற ப்ரஸக்தியேது?

7. இப்படிப்பட்ட அநார்ஜவமே வடிவெடுத்த அப்ராமாணிக சிரோமணியோடு [illegible] வைத்துக்கொள்வதே தகாது. மேலேயெடுத்துக் காட்டின [illegible] இவர் மத்யஸ்த பண்டிதர்களின் [illegible]

முன்னிலையில் ஸ்தாபித்து விடுவாரானால் இவருடைய வாதங்களெல்லாம் ப்ராமாணி
கங்களேயென்று நாம் கையெழுத்திட்டு விச்ராந்தியடையத் தடையே கிடையாது.
ஸ்ரீ ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமி போன்ற மஹாப்ராமாணிக ப்ராஜ்ஞப்ரிப்ருடர்க
ளோடு வாதவிவாதங்களை எவ்வளவும் நிகழ்த்தலாம். விஷயங்களை ப்ரமாணங்
களோடு எடுத்துக்காட்டினால் ஆர்ஜவத்தோடு தெளிவுபெறுகையாகிற ப்ராமாணிக
த்வம் அன்னவர்கள் பக்கலிலே ப்ரக்ருஷ்ட குணமாகக் காண்கிறது. ப்ரஸங்காத்
இரண்டொரு விஷயங்களை இங்கு விஜ்ஞாபிக்கிறோம்.

8. ஸ்ரீகோபாலாசார்யஸ்வாமி ஸமீபகாலத்தில் ஹம்ஸஸந்தேச ச்லோக
மொன்றையெடுத்து உரை செய்யுமிடத்து தேசிகன் திருவுள்ளத்திற்கும் பூர்வா
சாரியர்களின் திருவுள்ளத்திற்கும் மாறாக ஒரு விஷயமெழுதி விட்டார். [கங்கா
நதிக்கு சிவசிரஸ்ஸம்பந்தத்தினால் ஏற்றமென்றும், நூபுரகங்கைக்கு அதில்லாமை
யாலே தாழ்வு என்றும் தேசிகன் திருவுள்ளமாக எழுதிவிட்டார்.] இது மிகத்
தவறு என்பதை அடியேன் விசதமாக எழுதி வெளியிட்டதைக் கடாக்ஷித்தருளின
அந்த ஸ்வாமி அடுத்த க்ஷணத்திலேயே க்ஷாமணபத்ரிகை யெழுதிக்கொண்டார்—
ஞாபகப்பிசகினால் இப்படி யெழுதிவிட்டேன், பொறுக்கவேணும் என்று. இது
பொதுவான விஷயம். இதில் அந்த ஸ்வாமி இப்படி யெழுதிக்கொண்டது வியப்
பன்று. சில வருடங்களுக்கு முன்பு வாத்ஸல்யார்த்த விசாரத்தில் அந்த ஸ்வாமிக்
கும் நமக்கும் வலிதான க்ரந்த சர்ச்சை நடந்தது உலகமறிய நின்றது. அப்போது
ஒரு ஸஞ்சிகையில் நாம் எழுதியிருந்தோம்—"தோஷங்களையும் குணமாகக் கொள்
ளுகையென்பது ப்ரேமத்தின் விபாகதசையென்று பூர்வாசாரியர்கள் திருவுள்ளம்
பற்றி யிருக்கிறார்கள்" என்று. இதைக்கடாக்ஷித்த அந்த கோபாலாசார்யஸ்வாமி
"நவீநகல்பனையான இந்த அபார்த்தத்தை ஒரு பூர்வாசார்யரும் திருவுள்ளம்பற்ற
மாட்டார். அப்படி ஒருவர் அபிப்ராயப்பட்டிருப்பதாகக் காட்டினால் அவர் பூர்வா
சார்யர்களில் சேர்ந்தவராயிருக்கமாட்டார் என்பது திண்ணம்" என்று மறுப்
பெழுதி வெளியிட்டு விட்டார். உடனே நாம் "ஸம்பந்தவிசேஷாந்விதேஷு ப்ரீதிः
ஸ்நேஹः; யஸ்ய விபாகா அஸ்தாநபயசங்கித்வம், தோஷாநவபாஸः, தோஷேபி குணத்வபுத்திரித்
யாதயः" என்கிற ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியை யெடுத்துக்காட்டினோம். அதைக்
கண்ட அந்த ஸ்வாமி மஹத்தான அநுதாபமடைந்து "ச்ருதப்ரகாசிகாசார்யரை
விட வேறொரு ஆசார்யர் உலகிலுண்டா? அவர் திருவடிகளிலன்றோ அநியாயமாய்
அபசாரப்பட்டு விட்டேன்! ஐயோ! மஹாபாபியானேனே! இதைவிட எனக்கு
வேறு பாதகமுண்டா?" என்று இனையபலவுமெழுதி "இனி தேவரீரோடு நான்
எவ்வளவும் விவாதம் வைத்துக்கொள்ளமாட்டேன்" என்றெழுதியனுப்பினர்.
இதெல்லாம் புத்தகங்களில் ஏறியிருக்கிற—நாடு நகரமும் நன்கறிந்த விஷயம்.

9. இப்படிப்பட்ட மஹாப்ராமாணிகர்கள் எங்கே! அப்ராமாணிகார்த்தம் தவிர
வேறு எதுவும் லவலேசமுமெழுதக் கூடாதென்று திடமாக ஸங்கல்பம் செய்து
கொண்டிருக்கிற இந்த ஜகத்விக்யாதவிப்ரலம்பகர் எங்கே. இப்படிப்பட்டவரோடு
விவாதத்தை 'சிரஸி மாலிக மாலிக மாலிக' என்று பல்காலும் பேரருளாளன் பதவிணை
யில் ப்ரார்த்தித்து வருகிறோம். இந்த சிரோலிபி இனிமேல் கோராதாயினும் இப்
போது சேர்ந்துவிட்டதற்கு என் செய்வது. இந்த அப்ராமாணிக சிரோமணியின்
அக்ருதஜ்ஞஜாலவலையிலே மயங்க வேண்டாவென்று உலகுக்கு உத்போதநம்
செய்யவே ப்ராப்தமாகிறது. உண்மையில் பாமரரும்மயங்கார்.

10. இவருடைய ப்ரதிபச்சுவடியில் பக்கங்களுக்கு லக்கமிட்டு வரிசையாக விஷயங்
களை மறுக்கப்போகிறோம். முன்னடி, இவருடைய கையினின்று வெளிவரும்
விஷயங்கள் யாவும் அபஹாஸ்யங்களும் அப்ராமாணிகங்களும் அஸம்பத்தங்களு
மாகவே யிருக்குமென்பதை ஒவ்வொருவரும் நன்கு நம்பும்படிக்கும் காட்டுவோம்.

ஈங்கிரேல்மின்* என்று உதறித் தள்ளும்படிக்கும் சில முக்கியமான விஷயங்களை யெடுத்துக் காட்டுகிறோம்.

11. மிக அற்பமான வொரு விஷயத்தில் இவருடைய ஸம்ப்ரமம் கேண்மின்; திவ்யப்ரபந்த சாத்துமுறை காலங்களில் *ஸர்வதேச தசாகாலேஷு* ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா *ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியம்* என்கிற விந்த ஸ்ரீஸூக்திகள் எங்கும் நியமேந அநுஸந்திக்கப்பட்டு வருவதைப்பற்றி ராமாநுஜ தயாபாத்ர பத்ய சரித்ரக்ரந் தத்தில் நம்மால் சில விஷயங்கள் மர்மஸ்பர்சியாக எழுதப்பட்டிருக்கின்றன வன்றோ; அவை இவருடைய அடிவயிற்றில் நெருப்பைச் சொரிகின்றனவாத லால் விஷயத்தில் வாய்திறக்க முடியாமல் இங்கே பெரிய தூஷணமொன்றைக் கிளப்பியுள்ளார்; மேலே யெடுத்துக்காட்டிய மூன்று ஸ்ரீஸூக்திகளில் முதலிரண்டு ஸ்ரீஸூக்திகள் மாத்திரம் ச்லோகமாய் 'ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியம்' இத்யாதி ஸூக்தி யானது ச்லோகமன்றிக்கே வாக்யமாய் இருக்க, நாம் இதைக் கூடத் தெரிந்து கொள்ளமாட்டாமல் மூன்றையும் ச்லோகமாகவே மயங்கி யெழுதியிருப்பதாகக் காட்டி அட்டஹாஸம் செய்திருக்கிறார். ஸதாசார்ய ஸேவைபண்ணி நிர்மல சாஸ்த்ரஜ்ஞானம் சிறிதாவது பெற்றிருந்தால் இப்படி அஸ்தாநே துள்ளிவிழ நேர்ந்திராது. இன்னது வாக்யம், இன்னது ச்லோகம் என்று தெரிந்து கொள்ளக்கூடிய சக்தி ஸம்ஸ்க்ருதத்தில் சில காவ்யங்கள் மாத்திரம் வாசித்த சிறு வித்யார்த்திகளுக்கும் எளிதாகவுண்டு. நூற்றுக்கணக்கான ஸம்ஸ்க்ருத க்ரந்தங் களை யெழுதி வெளியிட்டிருக்கிற நமக்கு இதுகூடத் தெரியவில்லையென்று கோஷிப்பதனால் இவருடைய அஜ்ஞாந ஸாம்ராஜ்யமே உலகறியலாகும்.

12. ச்லோகமென்கிற சொல்லுக்கு ஸ்தோத்ரவசநமென்று பொருள். "அஹம் ச்லோகக்ருத், அஹம் ச்லோகக்ருத், அஹம் ச்லோகக்ருத்" என்பது முக்தர் களின் ஸாமகானம். பக்தர்களின் வாக்கிலிருந்து வெளிவரும் கவிக்கு ச்லோக மென்று பெயர். உபநிஷத்தில் "ததப்யேஷ ச்லோகோ பவதி" என்று அடிக் கடி வருமிடங்களில் ச்லோக சப்தார்த்த மின்னதென்று கேட்டுணரவேணும். "ந உத்தமச்லோககுணாநுவாதாத்" என்ற ஸ்ரீபாகவத ச்லோகரத்நத்தில் பகவா னுக்கு உத்தமச்லோகனென்று திருநாமம் காட்டப்பட்டுள்ளது. அதன் பொருள் இன்னதென்று தெரிந்துகொள்ள இவர் மறுபிறவி பிறந்தாக வேணும்.

13. ச்லோக சப்தார்த்தம் இவருடைய இஷ்டப்படியே யிருக்கட்டும். எடுத்த மூன்றில் இரண்டு ஸூக்திகள் ச்லோகங்களேயென்பது நிர்விவாதம். அவற்றோடு சேர்த்தெடுக்கும்போது ச்லோகமல்லாததையும் ச்லோகமென்று சொல்லத் தட் டில்லையே. *அத்தா சராசரக்ரஹணாத்* என்ற ப்ரஹ்மஸூத்ரத்திற்கு அடுத்ததான "ப்ரகரணாச்ச" என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யம் முடிந்தபிறகு மேல் ஸூத்ரத்திற்கு அவதாரிகை யிடுமிடத்து "ருதம் பிபந்தௌ" என்கிற உபநிஷத் வசனத்தை யெடுத்துக் கிளப்பப்பட்ட பூர்வபக்ஷத்தை மேல் ஸூத்ரத்தின் (1—2—11) ஸ்ரீபாஷ் யத்தில் பரிஹரிக்குமிடத்து "ऋतं पिबन्ताविति व्यपदेशः छत्रिणो गच्छन्तीतिवत् प्रतिपत्तव्यः" என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு விஷயமென்ன வென்றால், "ருதம் பிபந்தௌ" என்பதற்கு கருமபலனை யநுபவிப்பவர்களென்று பொருள்; இங்கே த்விவசநமிருப்பதால் ஜீவாத்ம பரமாத்மாக்களான இருவர்க்கும் கர்மபலாநுபவம் சொல்லப்படுவதாகத் தேறுகிறதேயென்று சங்கை. இதற்கு ச்சத்ரிந்யாயத்தாலே பரிஹாரம். குடை பிடித்துக்கொண்டு போகிறவர்கள் சிலர்; அந்த ஸம்஘த்தில் குடையில்லாமல் போகிறவர்களும் சிலருண்டு; அவ்விடத்தில் "குடையுள்ளவர்கள் போகிறார்கள்" என்று நிகழும் வ்யவஹாரம் தவறன்று. அதுபோல விந்த கொள்வது—என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்த்ரஜ்ஞ கோஷ்டியில் இவ

பாமரப்ரதாரணம் பண்ணுமிவர்க்கு நாம் மறுப்புரைக்க நினைக்கவும் தகாது. ஆனாலும் "இம்மடவுலகர்" என்று ஆழ்வார் ஸாதிக்கிறபடி மூடத்தனம் மிகுந்த உலகுக்கு உண்மையை யெடுத்துக் காட்டியேயாக வேணுமே. மேலே நோக்குக.

14. ராமாநுஜதயாபாத்ரத் தனியன் அநாதியென்பதை ஸ்தாபிக்க ஒரு பெரிய ப்ரமாணம் கண்டு பிடித்து விட்டார். அதுவோ அபேத்யமானது. அது வென்னென்னில்; [ப்ரகீர்ணகத்திலே 4. காண்க] கும்பகோண ஸமீபத்தில் திருநறையூரென்கிற நாச்சியார் கோவில் இருக்கிறதாம். திருமங்கையாழ்வார் வேறு எந்த திவ்ய தேசத்திற்கும் கொடாத நூறு பாசுரங்களை இந்த ஒரு திவ்யதேசத்திற்கே கொடுத்திருக்கிறாராம். [மேல் விஷயமிருக்கட்டும். அந்தோ! இவருடைய மருள் என்னே! பெரியதிருமொழியில் எட்டாம்பத்து முழுவதும்—அந்த நூறு பாசுரமும் திருக்கண்ணபுரத்தைப் பற்றியதென்பதை இவர்க்குச் சொல்லித் தருவாரில்லையே! காளிதாஸர் "பரப்ரத்யயநேயபுத்திঃ" என்றதற்கு முன்னே இரண்டெழுத்துள்ள ஒருபதம் இட்டிருக்கிறாரே; அதற்கு நானே முக்ய லக்ஷ்யமென்று காட்டிக் கொண்டாராயிற்று. இவ்வளவோடும் நில்லாமல், பெரியதிருமொழியில் ஆரம்பத்தில் ஐந்தாவது பதிகத்தில் ஐந்தாவது பாட்டில் "நான்கு வேதங்களையும் பஞ்சமஹாயஜ்ஞங்களையும் ஆறு அங்கங்களையும் ஸப்த ஸ்வரங்களையும் பயின்றவர்கள் வாழுமிடம் திருநறையூர்" என்று கூறப்பட்டிருப்பதாக வொன்று எழுதுகிறார். இந்த விஷயத்தை மாத்திரம் இவர் எழுதியிருந்தால் கேட்பாரில்லை. இத்தனையாம் பதிகம், இத்தனையாம் பாட்டு—என்று இந்த அபத்த பஞ்சாங்கத்தை இதற்கு ஸர்வாத்மநா அநதிகாரியான இவர் படிப்பதுதான் பரிஹாஸ்யமாகி முடிந்தது.

15. ஊன்றிநோக்குமின்; இவர் காட்டுகிற 6–5–5 என்னும் லக்கமுள்ள பாசுரம்—"விடையேழ்வென்று மென்தோளாய்ச்சிக்கு அன்பனாய், நடையால்நின்ற மருதம் சாய்த்த நாதனூர், பெடையோடன்னம் பெய்வளையார்தம் பின்சென்று, நடையோடியலி நாணியொளிக்கும் நறையூரே." என்கிற இதுவே தவிர மற்றொன்றன்று. இதில் வேதப்பேச்சுமில்லை, யஜ்ஞவார்த்தையுமில்லை, அங்கநிர்தேசமுமில்லை, ஸ்வர ஸங்கீர்த்தநமுமில்லை. இவர் தாம் மருளே வடிவெடுத்தவரென்பதைக் காட்டிக் கொள்ளுதற்காகவே இந்த வீண் பணியில் கைவைத்தாரென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் இவ்வர்த்தமுள்ள பாட்டு 6—7—7 என்று லக்கங்கொண்டு "வேத நான்கைந்து வேள்வி அங்கமாறிசையேழ், நடையாவல்ல வந்தணர்வாழ் நறையூர் நின்ற நம்பியே" என்றுள்ளது. இதை இவர் எதற்காகத் தமது சுவடியில் எடுத்துக்காட்டுகிறாரென்னில்; அந்த திவ்யதேசத்தில் ஆழ்வாருடைய காலந்தொட்டு இருப்பவர்கள் வடகலையார்களே யொழியத் தென்கலையார்களல்லர்; வேத தூஷகர்களான தென்கலையார்கள் இப்படிப்பட்ட விசேஷணங்களுக்கு அர்ஹரல்லாமையாலே அவர்களைச் சொல்லியிருக்க நியாயமில்லை—என்றெழுதுகிறார். இவ்வாழ்வாரும், மற்றுள்ள ஆழ்வார்களும் எத்தனை திவ்யதேசங்களிலே இப்படிப்பட்ட வர்ணனைகளைச் செய்திருக்கிறார்களென்று பார்க்கவேணும்.

16. பார்த்தால், கணக்கு வழக்கில்லாமல் காணலாகும். "வந்தனை செய்து இசையேழாறங்கமைந்து வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும், சிந்தனை செய்திருபொழுது மொன்றுஞ் செல்வத் திருக்கோவலூர்" "சந்திவேள்வி சடங்கு நான்மறையோதி யோதுவித்தாதியாய்வரும் அந்தணாளரறா அணியாலி" "நல்ல வந்தழல் மூன்று நால்வேதம் ஐவேள்வியோடாறங்கம் வல்லவந்தணர் மல்கிய நாங்கூர்" "அங்கமாறைந்து வேள்வி நால்வேத மருங்கலை பயின்று எரிமூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர் திருக்கண்ணங்குடி" "தக்க

"தெருள்
"தெள்ளியார் திருநான்மறைகள் வல்லார் மலிதண்சிரீவர மங்கை" "தெருள்
கொள் நான்மறை வல்லவர் பலர்வாழ் சிரீவரமங்கலநகர்"........என்றிப்படி
அனேக திவ்யதேசங்களைப்பற்றி இத்தகைய ஏற்றம் ஆச்சரியமாக அருளிச்செய்
யப்பட்டிருக்கின்றது. இந்த திவ்யதேசங்களிலெங்கும் அன்றுதொட்டு இன்று
வரையில் வடகலையாருடைய ஸம்பந்தலேசமும் காணமல் தென்கலையார்களே
மலிந்திருக்கிறபடியைக் காணுகின்றோம். இவரெடுத்துக் காட்டுகிற திருநறையூரும்
தென்கலையார் வாழ்ந்த திருப்பதியேயென்பது மறுக்க முடியாதது. வீணை தூராக்
ரஹமானது மெய்ப்பொருளை உள்ளபடி காணவொட்டாது மறைக்கின்றதிவர்க்கு.

17. இவர் சுவடியில் திருநறையூர் ப்ரஸ்தாவம் செய்வதற்கு முன்னே (அடுத்த
முற்பக்கத்தில்) எழுதியுள்ளார்—"தென்கலையார்களிலும் நாளைக்கும் சில மஹான்
கள் வடகலையார்களைப்போலவே வேதாத்யயநசீலர்களாயும் வைதிககர்மாநுஷ்டாந
நிஷ்டர்களாயும் குலபரம்பரையாகவே இருந்து வருகிறார்கள்" என்று. இதை
இவர் மனப்பூர்வமாக எழுதக் கருதாவிடினும் தெய்வமே இவர் கையாலெழுதுவித்
தது. குலபரம்பரையாக இங்ஙனே ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடையரா
யிருந்த தென்னாசார்யர்களையே ஆழ்வார்கள் பாடிவைத்தார்களென்று கொள்வதை
விட்டு தூஷிப்பதில் ஏன் இறங்கினரோ? சிலரிருப்பதாக எழுதினேனேயொழியப்
பலரிருப்பதாக எழுதவில்லையே யென்பரேல் "ஸர்வத: கரவீராதீந் ஸூதே ஸாகர
மேகலா, ம்ருதஸஞ்ஜீவநீ யத்ர ம்ருக்யமாணா தசாம் கதா* என்கிற தேசிகஸூக்
தியை நினைத்து வாய்மூடிநிற்க.

18. திருநறையூர்ப்பாசுரத்தை இவர் ஸம்ஸ்க்ருத ச்லோகமாக்கியிருக்குமழகை
யும் கண்ணுடையார் காணவேணும். 'வேதாந் சதுரோ யஜ்ஞாந் பஞ்ச ஷடங்காநி
யே ஸ்வராந் ஸப்த, தக்ஷாஸ் ஸஞ்சாரயிதும் நைராஸ்நிதமநிவஸந் ப்ரபுர் நறையூர்," என்
றுள்ளது. இங்கு திவ்யதேச வாசகமான நறையூரென்கிற பதம் த்விதீயாந்தமாக
இருந்தாலல்லது அந்வயியாது. வடமொழியில் 'நறையூர்' என்று நிறுத்திவிட்
டால் அது உத்ஸர்க்கத: ப்ரதமாந்த போதத்தையுண்டாக்குமேதவிர வேறுவகை
அஸம்பாவிதம். *ஸ்வாதிநே சப்தப்ரயோகே, ந அவாசகம் பதம் ப்ரயோக்தவ்யம்.*
இவர்க்கு எல்லாம் தலைகீழ். அது கிடக்கட்டும். இந்த திருநறையூர்ப் பாசுரத்தைப்
பற்றி இங்கு சர்ச்சை செய்தது ப்ராஸங்கிகம். இனி, உபக்ரமித்துக்கொண்ட
விஷயத்திலே செல்லுகின்றேன்.

19. இந்த நாச்சியார் கோவில் திவ்யதேசத்தில் தேசிகன் பெருமாளோடும்
நாச்சியாரோடுங்கூடவே கர்ப்பக்ருஹத்திலேயே எப்போதும் இடைவிடாமல்
எழுந்தருளியிருக்கிறாராம். இவ்விடத்தில் ராமாநுஜதயாபாத்ரமே சொல்லி வர
வேண்டியதென்று ஸாக்ஷாத் தேசிகனே தமது ஜீவிதகாலத்திலேயே அசைக்க
முடியாத ஏற்பாடு செய்து விட்டாராம். அன்றுமுதலின்றறுதியாக அந்த ஏற்பாடு
தான் அவிச்சிந்ந பரம்பரையாக அங்கு நடந்து வருகின்றதாம். அவ்விடத்தில்
தென்கலையார்கள் திவ்யப்ரபந்த ஸேவா கோஷ்டியில் வாயை மூடிக்கொண்டுகூட
வரக்கூடாதாம். அங்கு ஸர்வாதிகாரமும் வடகலையாருடையதேயாம். தென்கலை
யார் நீதிமன்றங்களில் வெகு பாடுபட்டும் தங்கள் மநோரதம் நிறைவேறாமையாலே
விலகி விட்டார்களாம். இவற்றை வெகு ஆடம்பரமாக எழுதுகிறாரிவர்.

20. இனி இங்கு நாம் விளக்கமாகத் தெரிவிக்கும் விஷயங்கள் இவருடைய அபத்
தச்சுவடியிலுள்ள அநேக விஷயங்களுக்கு உத்தரமாய் நிற்கும். திருநறையூரென்
கிற திவ்யதேசம் த்வீபாந்தரத்திலில்லை, வடதிசை மதுரை சாளக்கிராமம்போல்
வெகுதூர தேசத்திலுமில்லை. பத்தெட்டுமணி காலத்தில் சென்று எளிதாக
ஸேவிக்கக் கூடியதாய் அதிஸந்நிஹிதமாயுள்ளது. இங்கு நாமெழுதும் விஷயங்
களின் மெய்ம்மை பொய்ம்மைகளை அனைவரும் கிட்டக் கண்டுணரலாம். கேண்
[illegible] இங்கே விளங்கும் தென்கலைத் திரு

acharya.org

மண் காப்புகள்போல் ஸ்ரீரங்கத்திலும் காண முடியாது. திருமண்காப்பு விஷய மான விவாதம் இத்தலத்தில் எக்காலிலும் தலைகாட்டினதில்லை. திவ்யதேசம் தோன்றின நாள் முதல் தென்கலையே யென்பது நிர்விவாதம். “அநேக திவ்ய தேசங்களில் தென்கலையார்களே தேசிகனை மற்ற ஆசார்யர்களோடொப்ப ஆரா தித்து வருகிறார்கள்” என்று நாம் பன்முறை எழுதியிருக்கிறபடியில் இத்தலத் திலும் தென்கலையார்களே தேசிகனை (அத்யாபக) ஆராதித்து வருகிறார்கள். இங்கு மற்றையாசார்யர்கள் எங்கே யெழுந்தருளியிருக்கிறார்களோ அங்கே தான் தேசிகனு மெழுந்தருளியிருப்பது. “கர்ப்பக்ருஹத்தில் பெருமாள் தாயாரிருவரோடு கூடவே தேசிகனுமெழுந்தருளியிருக்கிறார்” என்று இவர் எழுதுகிறார் இதனால் இவர்க்கு யாதொரு லாபமுமில்லை, நமக்கு யாதொரு நஷ்டமுமில்லை. ஏனென்னில், அவர் எங்கே யெழுந்தருளப் பண்ணப்பட்டிருந்தாலும் அது தென்கலையாருடைய காரி யமேயல்லது வடகலையார்க்கு இதில் யாதொரு ஸம்பந்தமுமில்லை யன்றோ. பெரு மாள் தாயாரோடு ஏகாஸனத்திலேயே இங்கு தேசிகன் எழுந்தருளியிருக்கிறா ரென்றாலும் ‘தென்கலையார்கள் புராதநமாக தேசிகபக்தர்களேயன்றி தேசிகத் வேஷிகளல்லர்’ என்று நாம் பலகாலும் எழுதியுள்ளதுதான் ப்ரதிஷ்டாபிதமாகும். மற்ற ஆழ்வாராசாரியர்களுக்கு என்ன திருமண்காப்போ அதுவேதான் இங்கும் தேசிகனுக்கு. அவதாரஸ்தலமான தூப்புல்தலத்திலும் ஸ்ரீரங்கத்திலும் தேசிகன் ஆதிகாலந் தொடங்கித் தென்கலையே யென்பது அழிக்கவொண்ணாத ராஜசாஸ னங்களில் நிஸ்ஸந்தேஹமாக ஏறியிருக்கச் செய்தேயும், அவர்க்கு புண்ட்ரவிபர் யம் பண்ணவேணு மென்கிற எண்ணம் நவீனர்களுக்கு நவீனகாலத்திலே தோன் றி சில சேஷ்டைகள் ஆங்காங்கு நடந்துவருவதுண்டு.

21. ஸ்ரீபெரும்பூதூரில் வாழும் ஒரு வடகலை வைணவர் வருஷம் தப்பாமல் ஆவணி மாதந்தோறும் ஒரு கைங்கரியம் நடத்தி வருகிறார்; அதென்னவெனில், “பாஷ்ய காரர் ஸந்நிதியிலெழுந்தருளியிருக்கிற தேசிகனுக்குத் தென்கலைத் திருமண் சாத்தியிருப்பது பிசகு; மிகவும் அநியாயம். அவர் வடகலை குருவாகையால் அந்த விக்ரஹத்தில் ஐந்நூறு வருஷமாய் அநியாயமாய் ஏற்பட்டிருக்கிற தென்கலை ரேகை யின்மீது வடகலைத் திருமண் போடும்படி கோர்ட்டாரவர்கள் தயவு செய்து உத்தர வளிக்கவேணும்” என்று காலணா காகிதத்தில் எழுதி அர்ஜி கொடுப்பது. இப்படி யொரு நப்பாசை இன்னமும் இந்த நவீனர்களுக்கு ஆங்காங்குச் சில சேஷ்டைகள் செய்யஹேதுவாகிறதுண்டு. திருநறையூரில் தேசிகனுக்கு வடகலைத் திருமண் போட வேணுமென்று விரும்புவதற்கு அங்கு ஆள் கிடையாது. சுற்றுக்ராமங்களிலிருந்து யாரேனுமொரு வடகலை வைஷ்ணவர் வந்து அர்ச்சகரிடம் நாலணா எட்டணா கொடுத்து ‘ஸ்வாமி! இன்று ச்ரவணம்; எங்கள் தேசிகனுக்கு கொஞ்சம் வடகலை நாமம் போடக்கூடாதா?’ என்று கேட்டுக்கொண்டால் கைகண்ட யோகத்தாலே அவர் அப்படியே போட்டுவிடுவதும் உண்டு. ‘ஒரு திருமணுமில்லாமல் அழித்து விடும் ஸ்வாமி!’ என்று ஒருவர்வந்து கேட்டுக்கொள்வராம். அர்ச்சகர் அப்படியும் செய்வராம். அங்கு தேசிகனுடைய திருமண்காப்பு நிலைமை இவ்வண்ணமாகத் தானுள்ளது. ‘தேசிகனுக்கு மாத்திரம் வடகலை நாமம் 12 போடவேண்டியது’ என்று இங்கே ஆர்டர் வாங்கியிருக்கிறோமென்றும் ஒருவர் சொல்லிக் கேட்டதுண்டு. வடகலை நாமத்தின் ஸம்பந்த கந்தமுமில்லாத திவ்யதேசங்களில் “தேசிகனுக்கு மாத்திரம் வடகலை நாமம்” என்று நிகழ்கிற ப்ரஸ்தாவமானது ஸர்வதா பரிஹாஸ [illegible] திருப்புட்குழி, ராஜமன்னார் ஸந்நிதி திருக்கண்ணமங்கை ஆகிய திவ்ய தேசங்களில் தேசிகனுக்கு மாத்திரம் வடகலை நாமம் என்பதுண்டு. இது மிக [illegible] காலத்தில் ஏற்பட்டதென்பது ஸ்ரீரங்கம் தேவஸ்தான ரிகார்டுகளில் ஏறி [illegible] விஷயங்களை இங்கே நாம் வளர்க்கிற

தேசங்களில் அத்யாபி தேசிகன் தென்கலைத் திருமண்காப்போடு திகழ்வது அபல பிக்க முடியாமல் விளங்குகின்றது. திருநறையூரில் ஸேவை ஸாதிக்கும் தேசிகன் தென்கலையா வடகலையா? என்கிற விசாரம் அத்யந்தம் அநுபயுக்தம். இந்த தேவஸ்தானம் சுத்த தென்கலை யென்பது அசைக்க முடியாத விஷயமல்லவா.

22. பாத்ரத்தனியன் விஷயமாகப் பேசுவோமினி. இங்கு 20, 30 வருஷகாலமாக திவ்யப்ரபந்த ஸேவையே கிடையாது, ஒரு பாத்ரமும் சொல்லுவாரில்லை. இதில் ஸந்தேஹமுள்ளவர்கள் உடனே அங்குச் சென்று ஒரு வாரம் தங்கியிருந்து உண்மையை யுணர்ந்து வரலாம். 1845வருஷத்தில் இங்கே ராமாநுஜாபாத்ரம் சொல்ல ஆரம்பிக்கப்பட்டுக் கலஹம் தோன்ற, தென்கலையார்கள நீதிமன்றங்களில் சென்று முறையிட்டுக்கொண்டார்களென்பது வாஸ்தவம். "தென்கலா: 1845 வத்ஸரே ந்யாயஸ்தலே வ்யவஹார மசூர்வந்" என்று இவரெழுதியிருப்பது உண்மையே. ஆனால், அதற்குமுன் "கலஹமுத்பாத்ய" என்றெழுதியிருப்பது இவருடைய கைச்சரக்கு. பாத்ரத்தனியன் ஸம்பந்தமாக எந்தெந்த தேவாலயங்களில் விவாதமுண்டாயிற்றோ அங்கங்கெல்லாம் பெரும்பாலும் நீதிமன்றங்களில் வ்யாஜ்ஜியங்கள் நடந்தேயிருக்கின்றன. அனேகமாய் ஹைகோர்ட்டு வரை சென்றுமிருக்கின்றன. எந்த வ்யவஹாரத்தில் பார்த்தாலும் 'புதிதாக ராமாநுஜாபாத்ரம் சொல்லத் தொடங்கினார்கள், இவர்களைத் தடைசெய்யவேணும்' என்கிற கோரிக்கையே யொழிய, புதிதாக ஸ்ரீசைலேச பாத்ரம் சொல்லத்தொடங்கினார்கள், இவர்களைத் தடுக்கவேணும் என்கிற கோரிக்கை ஓரிடத்திலும் கிடையாது. இப்போது ஷோ—பூரில் எப்படி விவாதமுண்டாயிருக்கிறதோ இப்படியேதான் தென்னாட்டில் எங்கும் விவாதம் தோன்றியது. இவர் "தென்கலா: கலஹமுத்பாத்ய" என்றெழுதிவிட்டால் இதை வடகலையார்களுங்கூட நம்பமாட்டார்களென்பது திண்ணம். திருநறையூரின் விவாதப்ரக்ரியை எப்படிப்பட்டதென்றால்; இங்கே தான் விவேகிகள் ஊற்றமாக உள்ளத்திற்கொள்ளவேணும்.

23. திவ்யதேசங்களில் திவ்யப்ரபந்தஸேவை அவிச்சின்னமாகவும் பஹுமானைகார ஸநாதமாகவும் நடந்துவரவேணுமென்று அபிநிவேசங்கொண்ட நம்முன்னோர்கள் திவ்யப்ரபந்தத் தொடக்கத்தை ஒரு மிராசாக ஏற்படுத்தி அதற்கு பஹுமானங்களையும் நியமித்து, 'இதற்கு இன்னவிடத்திலே இன்னாதிகாரிகள்' என்று அதிகாரி நியமமும் செய்து வைத்தார்கள். கோஷ்டியில் கலந்துகொண்டு பாசுரங்களை ஸேவிப்பதற்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் அதிகாரிகளானாலும் திவ்யப்ரபந்தங்களைத் தொடங்கு மதிகாரம் இன்னார்க்கே உரியதென்று நெடுநாளாகவே வ்யவஸ்தை ஏற்பட்டுவிட்டது. ஸந்நிதிகளில் அத்யாபகர்கள் (அதாவது, திவ்யப்ரபந்தம் ஸேவிப்பவர்கள்) என்கிற வ்யபதேசத்தை ஆதிகாலத்திலிருந்து தென்கலையார்களே எங்கும் அநுபவித்து வருகிறார்களென்பது அஸூயாபரவசர்களுக்கும் அகாமேநாபி அங்கீகரிக்கவேண்டிய விஷயம். இவர்களை "தமிழ்ப்பாட்டுப் பாடுகிறவர்கள், பண்டாரப்பாட்டுப் பாடுகிறவர்கள், சோற்றுப்பாட்டுப் பாடுகிறவர்கள்" என்று பழிப்பதும் பரிஹஸிப்பதுமாகவே யிருந்து ஒதுங்கி வர்த்தித்த வகுப்பினர் இரண்டொரு நூற்றாண்டாகத் தாங்களும் இதில் ஸ்பர்த்தையிட்டு வருகிறார்களென்பது தனிப்பட்ட விஷயம். இப்போது நாம் ப்ராமாணிகர்களுக்கு விஷயம் சொல்லுகிறோமே யொழிய நீதிஸ்தலங்களில் வ்யவஹாரத்திற்கு வரவில்லை. "ஸ்வாமி ராமாநுஜர் தம்முடைய திருவடிகளைப் பணிந்த ஸ்ரீவைஷ்ணவர்களை இருவகுப்பாக்கி, ஒருவகுப்பினர்க்குக் குளக்கரையையும், மற்றொரு வகுப்பினர்க்குக் கோயில் வாசலையும் காட்டிக்கொடுத்தார்" என்று கீர்த்தி மூர்த்தியான அம்மாஸ்த்ராம் தேவராசாரியர் ஸ்வாமி அடிக்கடி ஸாதிக்கும்படியாயிருந்ததென்று ஆப்தகமரான ஸ்ரீ உ.வே. தேவனார் விளாகம் திருவேங்கடாசார்யஸ்வாமி பலகால் சொல்ல ... கேட்டிருக்கிறேன். ... [illegible] ... அவரவர்கள் ... அதராங்க ... [illegible]

வளவு காலம் எவ்வளவு போராடினாலும் எத்தனை புத்தகங்களெழுதினாலும் இந்த பரமார்த்தம் ஊர்ஜிதமாகுமேயொழிய எள்ளளவும் மாறுபடாது.

24. ஆகவே, எங்கும் திவ்யப்ரபந்தத் தொடக்க மிராசு தென்கலையாருக்குத்தான் உரித்தானது. அவர்கள் பரம்பராப்ராப்தமான தனியன்களையும் வாழி திருநாமங்களையும் சொல்லி அத்யாபக கைங்கரியத்தை நிர்விவாதமாக நடத்தி வந்தார்கள் - நடத்திவருகிறார்கள். [இதற்குமேல் விஷயங்களை நன்றாக கவனிக்க வேணும்.] தென்கலை ஸம்பிரதாயத்தை விட்டு வடகலை ஸம்பிரதாயத்திற்கு மாறுவதென்கிற ஒரு ஸம்பவம் எம்பெருமான் திருவுள்ளமொன்றேயறிந்த ஹேது விசேஷத்தினால் சில விடங்களில் தோன்றத் தொடங்கிற்று. ஆக்கூர் அக்ரஹாரத்தில் இருந்த ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் அநாதிகாலமாகத் தென்கலையாயிருந்து நவீந காலத்தில் வடகலையாக மாறிவிட்டார்களென்று இவரே யெழுதியிருப்பதால், தென்கலையிலிருந்து வடகலைக்கு மாறுவதென்கிற ஒரு கட்டத்தை நிகழ்ந்து வருவதுண்டென்பது ஆக்ஷேபிக்க முடியாமல் இசையவேண்டியதாயிற்று. அப்படி மாறுவதற்கு என்ன ஹேதுவென்று விசாரிக்கப் புகுவோமாயின் அது நம்மால் நிர்த்தாரணம் பண்ண முடியாததொன்றே. வடகலை ஸம்பிரதாயந்தான் உயர்ந்ததென்று எண்ணி அதற்கு மாறிவிட்டதாக இவர் எழுதுகிறார். மாறினவர்களின் எண்ணம் அதுதான் என்பதை நாமும் ஒப்புக்கொள்வோம். அவர்களது அந்த எண்ணத்தையே ப்ரமாணமாகக்கொண்டு, ஒன்று நிக்ருஷ்ட ஸம்ப்ரதாயம், மற்றொன்று உத்க்ருஷ்ட ஸம்ப்ர[illegible]யம்—என்று முடிவுகட்டுவதானால், ஆங்காங்கு நாள்தோறும் நமது மதத்திலிருந்து கிறிஸ்துமதத்திலும் மஹமதியர்மதத்திலும் போய் விழுகிறவர்கள் கணக்கு வழக்கில்லாமலிருப்பதால் அதுகொண்டு நமது மதம் நிக்ருஷ்டமென்றும் அந்தமதங்களே உத்க்ருஷ்டமென்றும் முடிவுகட்டவேண்டியதாகும். அதற்கு இவர் இசைகிறாரா? என்று கேட்கவேணும். "ஜந்மாந்தர ஸஹஸ்ரஸஞ்சிதமான ப்ரபலபாபவசத்தினாலும், தவிர்க்கமுடியாத தலை விதியினாலும் இப்படி ப்ரத்யக்ஷ நரகத்திலே போய் விழுகிறார்கள்" என்றே இவர் சொல்லித் தீரவேண்டும் 'ஆக்கூர் ஸம்பவத்தி[illegible]ம் இங்ஙனே ஸாதிப்பதுதானே யுக்தமானது' என்றால், அப்போது கோபதாப[illegible] மேலிட்டுக் கறுக்கச் சிவக்கக் கண்பிதுங்கி நிற்பர். "ஸர்வ: காந்தமாத்மீயம் பச்யதி" என்றது நன்றே என்னவேண்டும்.

25. ஆதலால், ஒரு கலையை விட்டு மற்றொரு கலையில் மாறுவதற்கு ஹேதுவையோ பலனையோ வெளியிடப்புகுவது பழுதேயாம். அநிர்வசநீய பகவதிச்சை என்று இவ்வளவோடு முடித்துவிட்டால் ஒரு ஆபத்துமில்லை. நெடுநாட் பரம்பரையாய்த் தென்கலை ஸம்பிரதாயத்திலிருந்தவர்கள் வடகலையாக மாறுவதுண்டென்பது இவருடைய விகிதத்திலிருந்து அசைக்கமுடியாமல் தேறிவிட்டபடியால், இதுவே காரணமாகத்தான் சில கோவில்களில் ராமாநுஜாபாத்ரம் புகுர அவகாசம் பெற்றது. இதைச் சில த்ருஷ்டாந்தங்களினால் ப்ராமாணிகர்களது நெஞ்சில் திடப்படுத்துகிறேன்.

26. திருவுள்ளூரில் அத்யாபகத்தொடக்க மிராசு ஸ்ரீமத் அஹோபிலஸ்வாமிக்கு ஏகதேசமாக ஏற்பட்டது. அவர் இட்டது சட்டமான கோவில் அது. அவர் தென்கலை ஸம்பிரதாயஸ்தராக இருந்தவரையில் மாமூல்படி நடத்திவந்தார். ஸ்வாமி வடகலையாக மாறின பிறகு ஸ்ரீசைலேச பாத்ரத்தை விட்டு வேறு பாத்ர வாழிகளைப் புகவிடத்தொடங்கினார். இதெல்லாம் ரிகார்டுகளில் ஏறியிருக்கிறது. பிறகு ப்ரபலமான ஆக்ஷேபங்கள் ந்யாய ஸ்தான மூலமாகவே தோன்றி அஹோபிலஸ்வாமிக்குப் பலவகைக் கஷ்டங்களேற்பட்டதும், ஸ்ரீசைலேச பாத்ரம் தவிர வேறு சொல்லக்கடவதல்லவென்று கடினமான கட்டளைகள் பலகால் தோன்றினதும், அப்படி தோன்றின காலங்களில் ஜீயர் ஸந்நிதிக்கே போகாமல் யாத்திரை கிளம்பி விடுவதும், அந்த ஜீயருடைய ஆயுள் அலைப்புலிச்சாரமாகவே முடிந்துபோவதும்

பிறகு வேறொரு ஜீயர் மடாதிபதியாக முன்பு கட்டளையிட்ட அதிகாரி மாறினரென்று தெரிந்து கொண்டு பழையபடியே கலஹாஸ்பத காரியங்களைச் செய்யத் தொடங்குவதும், மீண்டும் சுடச்சுட ஆர்டரைப்பெற்று வெளியேறுவதும் இப்படியாகப் பல தடவையன்றோ திருவுள்ளூரில் நடந்திருக்கிறது; கடைசியாக, செல்வம் மிகுந்த அந்த மடத்தை எதிரிட்டு வ்யவஹாரங்கள் நடத்த சக்தியில்லாமையாலும், தென்கலையார்களும் அவ்வூரிலிருந்து வெளியேறி விட்டபடியாலும் வழக்காடுதல் நின்றிட்டது. அதுமுதலாக ஜீயர் யதேஷ்டமாக அநுபவித்து வருகிறார். இந்த ஜீயர்க்கு ஆதீனமாக தெற்கே புள்ளம்பூதங்குடி முதலான சில திவ்யதேசங்களுமுண்டு; அங்கும் இந்த ஆசாரமேயாயிற்று. இந்த உண்மைகளெல்லாம் ஈஷத்தும் மறைக்க முடியாதபடி ரிகார்டுகளில் ஏறிக்கிடக்கிறது. அக்காலத்து ரிகார்டுகளெல்லாம் தமிழிலேயே தோன்றினவாதலால் அவற்றை நாம் உலகறிய அச்சிட்டு வெளியிட்டுமிருக்கிறோம். காலாவதி முதலான தோஷங்களாலே ரிகார்டுகள் வீர்யமற்றுப்போனாலும் ப்ராமாணிகார்த்தபரிஸ்திதியின் பரிஜ்ஞானத்திற்கு ஒரு குறையுமில்லையே.

27. காஞ்சீபுரம் தேவப்பெருமாள் ஸன்னிதியிலும் தூப்புல் ஸன்னிதியிலும் நவீனர்கள் விவாதம் பண்ணத் தொடங்கின காலத்தில் திருவுள்ளூர் ஸன்னிதியின் அநுஷ்டானம் நிஷ்களங்கமாய் நிஷ்கல்மஷமாயிருந்தது. அதுபற்றியே அந்த ஸன்னிதியின் ஆசாரங்களையொட்டியே காஞ்சீபுரத்திற்கு பாத்ர ஜட்ஜ்மெண்டுகள் அவதரித்தன. இவ்விஷயம் மூன்று கோர்ட்டு ஜட்ஜ்களாலும் விசதமாக எழுதப்பட்டு விளங்கா நின்றது. அப்படிப்பட்ட திருவுள்ளூர் ஸன்னிதி தலைகீழாக மாறிவிட்டதனாலே தத்வார்த்தங்கூடவா மாறிவிடும். இந்த ஸன்னிதியில் அத்யாபகத்தொடக்கமிராசு அஹோபில ஸ்வாமிக்கு அதீநமாயிருந்ததுபோல, காஞ்சீபுரத்தைச்சேர்ந்த திருப்புட்குழி ஸ்ரீபெரும்பூதூர் முதலான திவ்யஸ்தலங்களில் அந்த மிராசு கோடிகன்னிகாதானம் தாதாசார்ய திருவம்சஸ்தர்களுக்கு அதீனமாயிருந்தது. அவர்களும் ஆக்கூர் ஸ்ரீவைஷ்ணவர்களின் பழையநிலை போன்ற நிலையில் இருந்தவரையில் தங்கள் கைங்கரியத்தைக் குறையறச்செய்து ஒரு கஷ்டமுமநுபவியாமல் ஆச்சரியமான மரியாதைகளையும் பஹுமானங்களையும் அநுபவித்து வந்தார்கள். ஆக்கூராருடைய இப்போதைய நிலைமைபோன்ற நிலைமையை ஏறிட்டுக்கொண்டதுமுதல் காஞ்சீபுர திவ்ய தேசங்களிலும் திருப்புட்குழியிலும் ஸ்ரீபெரும்பூதூரிலும் எவ்வளவு கஷ்டங்களை யநுபவிக்க ப்ராப்தரானார்களென்பதை நாமிங்கு எடுத்துக் காட்டவேணுமோ? உலகமுழுதுமுணருமே.

28. ஸ்ரீபெரும்பூதூரில் ஒருவிதமான கலஹமுமில்லாமல் நடந்துவந்த விஷயம் விச்வகுணாதர்சத்தில் ஏறிக்கிடக்கிறது. பிறகு வெகுநாள் கழித்து அங்கே வடகலையார் சண்டைகளைக் கிளப்பி அபரிமிதமான வியவஹாரங்கள் நடந்தன. ப்ரஹ்மஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் என்கிறவொரு பிரபல அட்வகேட் அங்கு வடகலையார்களுக்கு வக்கீலாக இருந்தார். அப்போது ஸ்ரீபெரும்பூதூர் வியாஜ்ஜியம் கடைசியாக ஹைகோர்ட்டில் இருந்தது. அந்த ஸமயத்தில், மேலே சொன்ன வடகலையார் வக்கீலான ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தில் அமர்ந்தார். அப்போது ஹைகோர்ட்டிலிருந்த ஸ்ரீபெரும்பூதூர் ஸன்னிதி யப்பீல் அந்த கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய பெஞ்சில் வந்தது. ஏற்கெனவே பல வருஷங்கள் வடகலையார்க்கு வக்கீலாயிருந்த இவருடைய பெஞ்சில் இந்த அப்பீல் நடக்கத் தகாதென்றும், இவரிடம் நடந்தால் நியாயம் தேறாதென்றும் தென்கலையார் ஆக்ஷேபிக்கத் தீவிரமான முயற்சி கொண்டும் பலிக்கவில்லை. அவரே விசாரிப்பதாக கேஸை எடுத்துக் கொண்டார். வடகலையார் நமக்கே வெற்றியென்று [illegible] ஆனந்தமாயிருக்கிறார்கள்; தென்கலையார் கவிழ்தலையிட்டு வருந்தி

...கிறார்கள். ஜட்ஜ் க்ருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் கேஸை யெடுத்துக் கொண்டு ...ற அலம்பிக் கவிழ்த்து விட்டார்; அவர் நெடுநாள் வடகலையார்களுக்கு வக்கீலாயிருந்தபடியால் எல்லா ரிகார்டுகளையும் ஒன்று விடாமல் முற்றிலும் பார்க்க வராகையாலே ப்ராமாணிகராய் மனச்சாட்சியை மீறமாட்டாமல் எழுதினார்—

“தாதாசார்ய குடும்பஸ்தர்கள் தங்களுக்குக் குலபரம்பரையாக வந்த ஸ்ரீசைலேசமந்த்ரத்தை விட்டு வடகலை மந்த்ரத்தை ஆதரிக்கத் தொடங்கினதுதான் இவ்வளவு சண்டைக்கும் காரணம்; இதிலிருந்தே தாதாசாரியர்கள் தங்கள் கவுரவங்களை இழக்க நேர்ந்தது” என்று.

29. இந்த விஷயத்தை இதுகாறும் நாம் எத்தனை புத்தகங்களில் எத்தனை தடவை எழுதியிருக்கிறோம்? தெரியுமா? மேலே குறித்த வாசகம் போன்ற பலபல வாசகங்களை த்வீபாந்தரஸ்தர்களான பெரிய பெரிய ஜட்ஜிகள் திருமலை திருப்பதி ப்ரிவிகவுன்ஸில் தீர்ப்பு முதலியவைகளில் அபரிமிதமாக எழுதியிருந்தாலும் அதைவிட மேலே உதாஹரித்த ஸ்ரீ. க்ருஷ்ணஸ்வாமி ஐயர் திருவாசகத்திற்கு மஹத்தான கௌரவமுண்டு. எதனால்? அவர் பத்தெட்டு வருஷகாலம் வடகலையார்களுக்கு அந்தரங்க வக்கீலாயிருந்து, அவர்களிடம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பெற்றிருந்து ரிகார்டுகளை எழுத்தெழுத்தாகப் பார்த்திருந்தவராகையாலே உள்ளதை உள்ளபடி தெரிந்து கொண்டு எழுதினார்; இது அவராகவா எழுதினது? தெய்வமன்றோ எழுதுவித்தது. இதைக் கண்டுவைத்தும், அந்த தாதாசார்ய குடும்பத்தில் தோன்றியவராகத் தம்மை வெளியிட்டுக்கொள்ளுகின்ற இந்த ப்ரதிபகாரர் தமது வம்சத்திற்கே ஸ்தானப்ரம்சம் முதலிய பல ஆபத்துக்களுக்கு மூலகந்தமானவொரு பொளைக்கலப் பாத்திரத்திற்கு சப்பைக்கட்டுகள் கட்டுவது இன்னமும் அதனுடைய சாயங்கள் கக்குவதற்கேயாம்.

30. திருநறையூரில் ராமாநுஜாபாத்ரம் விலைசெல்லுகிறதென்றும், அதுதானும் தேசிகன் ஜீவித காலந்தொட்டே என்றும் எழுதுகின்ற இவரை “இந்த திவ்ய தேசத்தில் பிம்பந்தோறும் கம்பந்தோறும் மற்றெங்குமில்லாத வைலக்ஷண்யத்தோடு விளங்குகின்ற நூற்றுக்கணக்கான தென்கலைத் திருமண்காப்புகளும் தேசிகன் காலந்தொட்டேதான் நிகழ்கின்றனவோ” என்று கேட்டால், ஆமாம் என்பரோ? அல்லவென்பரோ? அந்தத் திருநறையூர் ஏற்பாடுகளெல்லாம் தேசிகனுடையவையேயாகையாலே இந்தத் திருமண்காப்பு ஏற்பாடும் அவருடையதேயாக வன்றோ இருக்கத் தகும். “இல்லையில்லை, இடையில் சில ஜால்மர்களால் மாறுபாடு சேர்ந்து விட்டது” என்பரேல், நீர் சொல்லுகிற பாத்ர விஷயமும் அப்படிப்பட்டதே யென்று கொண்டாலோ? என்னில்; தலைகவிழ்ந்து தரையைக்கீறி நிற்பது தவிர வேறு கதியில்லை யிவர்க்கு. திருக்குடந்தையிலும் திருவயிந்திரபுரத்திலும் வடகலை ...ர்மத்தோடுங்கூட ராமாநுஜாபாத்ரம் செல்லுபடியாகிறதல்லவா? அதை யெடுத்துக் காட்டுவதை விட்டுத் திருநறையூரை இவர் பிடித்துக்கொண்டு எதுக்குத் திண்டாடுகிறார் என்று பார்க்க வேணும். மிகச்சிறந்த தென்கலை திவ்யதேசமாக இற்றைக்கும் காணப்படுகிறவிதில் நாங்கள் தென்கலையாரை அடித்துத் துரத்தி விட்டோம் என்று பெருமை காட்டிக் கொள்வதற்காகவே என்பது எளிதில் தெரியும்; இங்கு நாம் தெரிவிக்கும் உண்மையைக் கேண்மின்.

31. உலகில் கள்ளர்களின் சேஷ்டைகள் அனேகமாக அவர்களுக்கு பங்கத்தை உண்டாக்கியே தீருகின்றன; சில விடங்களில் அவர்களது அத்ருஷ்டத்தாலும், பறி கொடுத்தவர்களின் முயற்சிக்குறைவு முதலான காரண விசேஷங்களினாலும் அக்கள்வர்களின் சேஷ்டைகள் வெற்றி பெற்று விடுவதையும் காண்கிறோம். ...வலாகவே பல திவ்யதேசங்களில் கள்ளச் சேஷ்டைகள் செய்ய ஆரம்பித்த ...ர்கள் ...ன்றுக்கப்பிடியுண்டு புடையுண்டு பங்கமடைந்தார்கள் ...

சில இடங்களில் மாத்திரம், பகவான் கள்ளர்களிடத்தும் கருணை காட்டுவதுபோல இவர்களிடத்தும் கருணை காட்டினான் போலும். இவர்கள் கள்ளர்களே யென்பது அனேக திவ்யதேச வ்யவஹார பரிஷ்காரங்களினால் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காணப்படுகின்றது. முக்கியமாக, கோயில் திருமலை பெருமாள் கோயில் [ஸ்ரீரங்கம் திருமலைதிருப்பதி காஞ்சீபுரம்] ஆகிய மூன்று திவ்யதேசங்களில் பலபல வருஷங்கள் நடந்து முடிந்த [ப்ரிவிகவுன்ஸில்வரைக்குங்கூட சென்று முடிவுபெற்ற] விவாதங்களினால் நன்றாக விளங்கும். இம்மூன்று தலங்களிலும் ஏற்பட்டிருக்கிற கிரிமினல் ஸிவில் தஸ்தாவேஜுகளை யெல்லாம் சோம்பாமல் ஸம்பாதித்து அச்சிட்டு வெளியிட்டோமானால் "ராக்ஷஸா: கலிமாச்ரித்ய ஜாயந்தே ப்ராஹ்மயோநிஷு, ப்ராஹ்மணாநேவ பாதந்தே தத்ராபி ச்ரோத்ரியாந் க்ருசாந்" என்று முன்னமே கண்டறிந்து பேசிவைத்த மஹர்ஷிகளை மிகமிக மெச்ச வேண்டியதாகும்.

32. இப்போது விரிவுக்கு அஞ்சி ஸ்ரீரங்க தேவஸ்தான வ்யவஹார ஸம்பந்தமான பலபல ரிகார்டுகளுக்குள் சிலவற்றை மாத்திரம் இங்கு வெளியிடுகிறோம் 150 வருஷ காலமாக இவர்களின் சேஷ்டைகள் எப்படிப்பட்டவையென்று உலகமறிந்து கொள்வதற்காக. அனைவருடையவும் உள்ளத்தில் ஒரு விஷயம் மாத்திரம் திடமாகப் பதிந்திருக்க வேண்டும்; அதாவது, எம்பெருமானுடைய விபவாவதாரங்களுக்கு ஹேதுவாக க்ஷீராப்தி முதலான இடங்களில் சென்று முறையிட்டுக் கொண்டவர்கள் தேவர்கள் என்றே இதிஹாஸபுராணங்கள் கூறுகின்றனவே யன்றி அரக்கர்களோ அசுரர்களோ சென்று முறையிட்டுக் கொண்டதாக ஒரு புராணத்திலும் காணவில்லை; அதுபோல, எந்த திவ்யதேசத்திலும் தென்கலையார்களே இடர்ப்பட்டு முறையிட்டுக் கொண்டவர்களென்பதும், அந்த முறையீடுதானும் இந்தியாவோடு நில்லாமல் பார்லிமெண்டு வரையிலுங்கூடச் சென்றதென்பதும் கவனிக்கத் தக்கது. உண்மையில் உரிமையை யிழந்து ஆற்றவொண்ணாத துயரை யடைந்தவர்களுக்கல்லது மற்றையோர்க்கு பார்லிமெண்டுக்கும் சென்று முறையிடத் துணிவு பிறவாது. காஞ்சீபுரம், திருமலைதிருப்பதி ஆகிய இரண்டு திவ்யதேசங்களைப் பற்றின வியவஹாரம் சீமைவரையிலும்சென்று முடிந்ததென்பதை உலகமறியுமே. 'பார்லிமெண்டல்ல, பரமபதம் சென்றாலும் உங்களை ஹிம்ஸிப்பதை விடமாட்டோங் காணும்' என்றன்றோ †மத்குண மசக மக்ஷிகாதிகளைப்போலே பரஹிம்ஸையே யாத்திரையாகத் திரிகின்றார்கள் இற்றைக்கும் நவீனர்கள். இது நிற்க: மேலே நோக்குயின். [†மத்குணம்—மூட்டைப்பூச்சி.]

33. ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் தென்கலைதிவ்யதேசங்களுள் தலையானதென்று இவ்வளவு மாத்திரமே உலகத்தாருக்குத் தெரியுமேயொழிய, அந்த திவ்யதேசத்தில் தென்கலையின் ஆதிக்யம் எப்படிப்பட்டது? வடகலையார்கள் எவ்வெவ்விதமான சேஷ்டைகள் செய்து அந்த தேவஸ்தானத்தை ஆக்ரமிக்கப் பார்த்தார்கள்? அந்த சேஷ்டைகளின் பலன் எவ்விதமாகத் தேறியது?...என்றிப்படிப்பட்ட உள்விஷயங்கள் உள்ளபடி பல பேர்களுக்குத் தெரியாது. சென்னையில் பிரபல அட்வகேட்டாக விளங்கி த்வீபாந்தரங்களிலும் மிக்க பெரும்புகழ் பெற்றவரான ஸ்ரீஉ.வே. T. ரங்காசாரியார் அவர்கள் வாழ்ந்த காலத்தில், ஆங்காங்கு வடகலையார்களால் கிளப்பப்பட்ட அனர்த்தங்களுக்குப் பரிஹாரத்தை நியாயஸ்தானம் மூலமாகத் தென்கலையார் அடைய முயன்றபோது மேலேசொன்ன T. ரங்காசாரியார் அவர்கள் பெரும்பாலும் பல கோர்ட்டுகளில் வாதித்து உண்மையை ஸ்தாபித்தவர். அவரோடு பழகிவந்து, அவருக்குப்பின் ஸம்பிரதாய வ்யவஹாரங்களைப் பல [illegible] மன்றங்களில் ஒழுங்காக நடத்தி வெற்றிப்புகழ் பெற்று விளங்கி வருகின்ற ஸ்ரீ உ.வே. V. N. வேங்கடவரதாசார்ய ஸ்வாமிகள் (வேதவில்லஸ் 4, எழும்பூர்) [illegible]

தேசங்களினுடையவும் ரிகார்டுகள் யாவற்றையும் நன்கறிந்தவர்; அவர் ஸ்ரீரங்கம் தேவஸ்தான ஸம்பந்தமான வ்யவஹாரங்களில் ரிகார்டுகளிலிருந்து மிக முக்கியமாகவும் ஸாரமாகவும் எடுத்து எழுதிக்கொடுத்த விஷயங்கள் இதன்கீழ் ப்ரசுரம் செய்யப்படுகின்றன. இவற்றில் மாறுபாடு இருப்பதாக யாருக்காவது ஸந்தேஹமுண்டானால் அஸலான கோர்ட்டு காபிகளையே அப்படியப்படியே அச்சிட்டு வெளியிடுவோம். இங்கு வெளியிடப்படும் விஷயங்கள் அவ்வளவும் ஸத்யமானவை.

ஸ்ரீரங்க தேவஸ்தான வ்யவஹாரஸாரம்.

34. ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் ஈஸ்டு இண்டியா கம்பெனியார் மானேஜ்மெண்டில் இருந்தபோது கோவில் அதிகாரியான வேலு என்பவர், கலெக்டர் வாலஸ்துரைக்கு தென்கலை வடகலை தகராறுகளைப்பற்றி 15—8—1803ல் எழுதினர்.

"இதுநாள்வரை ஏற்பட்ட மாமூல்படிதான் கோவில் காரியங்கள் நடக்க வேணுமென்று ஸமூகம் உத்தரவு. அந்த மாமூல்படியே தென்கலை வேதாந்தாசார் திருநக்ஷத்ரதினமும் தென்கலையார்கள் சடங்குகளை நடத்தியிருக்க, வடகலையார்கள் மாமூலுக்கு விரோதமாக ராமாநுஜ தயாபாத்ரம் என்கிற மந்திரத்தை புதிதாகச் சொல்ல ஆரம்பித்தவுடன் தென்கலையார்கள் இது நூதனச்செயல் என்று ஆக்ஷேபித்தும், அவர்களில் சில ஸன்யாசிகள் இந்த அநீதிச்செயல் அவமானகரமென்று சொல்லி எழுந்து போயும்......வடகலையாரில் 3, 4 பேர்கள் துஷ்டர்கள் கம்பெனியார் ஆளுகைக்கே படப்படாமல் நூதன காரியங்கள் செய்யத் துணிகிறபடியால் மாமூலுக்கு விரோதமாக நடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று தண்டோரா போடவேண்டும்"—என்று எழுதினர்.

35. (மத்யஸ்தரென்று ரிகார்டுகளில் வழங்கப்படுகிற ஷை) வேலு மறுபடி 13—9—1803ல் எழுதுகிறார்—சில வடகலையார்கள் தன்னிடம் மனுக் கொடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார்—(அதாவது)

"முன்காலம்முதல் இதுவரை தென்கலையாரே கோவிலில் எல்லாவிதமான பாத்யங்களையும் ஏகதேசமாக அனுபவித்து வந்திருக்கிறார்களே; தற்போதைய கம்பெனியார் ஆளுகையில் எங்களுக்கும் சில பாத்யங்களாவது நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாதா? என்று கேட்கிறார்கள்". என்று.

இதிலிருந்து தென்கலையாருக்குத் தான் கோவிலில் எல்லா பாத்யங்களும் ஏகதேசமாகவுண்டென்று வடகலையார்களே ஒப்புக் கொண்டதாகத்தேறுகிறது.

36. பிறகு 28—4—1808ல் ஜில்லா கோர்ட் ஜட்ஜ் லாதாம்துரை தீர்ப்பு:—

"தென்கலையார்களே ஸ்ரீரங்கம் ஸப்தப்ராகாரத்துக்குள் ஸ்வாமிக்குச் செய்யப்படும் எல்லாச் சடங்குகளிலும் ஸர்வாதிகாரிகளென்றும் இக்கோவிலிலுள்ள எல்லாத் திருமண்களும் தென்கலையாயிருப்பதாலும் மற்ற காரணங்களாலும் தெளிவாயிருக்கிறதென்றும் தென்கலையாருக்கே கோயில் ஸப்தப்ராகாரம் ஏற்பட்டதென்றும், வடகலையார்களை அந்த ப்ராகாரங்களுக்குள் குடியிருக்க அநுமதிக்கப்பட்டதானது தென்கலையார்கள் சொல்படியே அவர்கள் வீட்டிலும் கோவிலிலும் அத்யாபக வேத பாராயண எல்லாச் சடங்குகளையும் நடத்த ஸம்மதித்ததின் பேரில்தான் என்பது வ்யக்தமாகிறது. அனேக ருஜுக்களால் கோவிலில் தென்கலையார்களின் ஆதிபத்யம் ஊர்ஜிதமாகிறது. வெகுகாலமாக தென்கலையார்களே அநுபவித்து வந்த பாத்யங்களில் வடகலையார் எவ்விதத்தி [illegible] தலையிட்டுக் கெடுக்கார்களானால் அவர்களை சர்கார் [illegible] [illegible] அல்லது சிறைக்கு உள்ளாக்க வேண்டும்.

[இவ்விதமாக ஜில்லா ஜட்ஜ் தீர்ப்பு] இதற்கு அஸல் இங்கிலீஷ் காபிகாண்மின்:

JUDGMENT OF DISTRICT JUDGE, (LATHAM) TRICHINOPOLY.

Dated 28—4—1808

"The Thengaliars were recognised to be the dictators of the ceremonies within the Sapthaprakaram to Srirangam Swami's Koil and the court is confirmed in this opinion from the circumstance of the Thengalai Thiruman being affixed upon the forehead of the Swami, the mantapam, the Koil and the Garuda Cambum the Sapthaprakarams were successively built for Thengalais and not for Vadagalais who appear to have been admitted from time to time to reside within the Sapthaprakaram under the condition of not giving any interruption to the ceremonies dictated to be performed by the Thengaliars and to their consenting that the Thengaliars were to perform the Nanmai, Theemai (நன்மை, தீமை) Ceremonies either as Adyapakas or Vedaparayanakars.

* * * * * *

It is decided that the Thengaliars be **Confirmed** in their superiority over the Vadagaliar of the Srirangam Swami Koil in the Sapthaprakaram and that they be the dictators in all the ceremonies to be performed to the Swamis therein and they alone have the right of performing Nanmai, Theemai ceremonies in the houses of Vadakalais.

The Defendants and Vadakaliars are to understand, that if they attempt to interrupt the Thengaliars in any of the previous privileges confirmed to them that the judge in his magisterial capacity will either cause to inflict corporal punishment on the back of such offenders and banish them out of the Sapthaprakaram or commit them to the prison for trial before the circuit judge."

37. ஸமீபகாலத்தில், அர்ச்சகர்களின் நமஸ்கார கேஸில் ஸப்கோர்ட்டு ஜட்ஜ்மெண்டில் அப்பீலதிகாரியான ஜட்ஜ் எழுதுகிறார்—

"இவ்வளவு வ்யக்தமாயும் ஸுஸ்பஷ்டமாயும் கோவில் வழக்கத்தை நிர்தாரணம் செய்து, நூறு வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாக எல்லாக் கோர்ட்டாராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட இவ்வளவு மிக புராதனமான ஒரு தீர்ப்பை ஒரு விதத்திலும் நிராகரித்தல் முடியாதது." என்று.

38. மேலே கண்ட 1808௵ ஜில்லா ஜட்ஜ் தீர்ப்பை ரத்து செய்து கொள்ள வடகலையார்கள் அந்த தேதிமுதல் தீவிரமான முயற்சிகள் செய்தும் அந்த தீர்ப்புக்கு இன்னமும் பலமே ஏற்பட்டு வருகிறது.

14—12—1835. அப்பீல் கோர்ட்டு—

நிஸ்ஸந்தேஹமான தென்கலையாரிட ஏகதேசபாத்யம்—

"வடகலையார்கள் மிகவும் பிடிவாதத்துடன் சட்டத்தைமீறி தென்கலையார்களின் பாத்யத்தை நிராகரித்து வருகிறார்கள். அவர்களின் அபிப்ராயம் என்னவென்றால், ஓயாமல் ஹிம்ஸித்துத் தொந்தரவு செய்து வந்தால் தென்கலையார்கள் பலஹீனர்களாய் தங்கள் பாத்யத்தை யெல்லாம் விட்டு விட்டு ஓடிவிடமாட்டார்

களா என்பதுதான். தென்கலையார்கள் நிராக்ஷேபணையாக தங்கள் பாத்யங்களை அநுபவிக்க வேண்டிய ஸௌகர்யம் செய்து கொடுப்பதுடன் சட்டத்தை மீறி நடப்பவர்களுக்கு சரியான புத்தி கல்பிக்க வேண்டும்."

39. 13—4—1820ல் கலெக்டர் உத்தரவு—

"கோவிலில் சாஸ்த்ர ஸந்தேஹம் ஏற்பட்டால் சாஸ்த்ரஜ்ஞர்களாய் தென்னாசார்ய ஸம்பிரதாயஸ்தர்களாயிருப்பவர்களையே கலந்து கொள்ளவேணும்".

40. 1822ல் வடகலையாரில் சிலர் 1808ல் தோன்றிய [முன்னம் உதஹரிக்கப்பட்டிருக்கிற] ஜில்லா ஜட்ஜ் தீர்ப்பை மீறி நடந்து கொண்டார்களென்கிற குற்றத்திற்காக அவர்களை ஆர்யபட்டாள் வாசலுக்குள் விடாமலிருக்க உத்தரவிட்டு,நன்னடத்தை ஜாமீன் வாங்கி, பிறகு உள்ளே விடப்பட்டார்கள்.

41. 1829ஞு முதல் பலதடவை ஸ்ரீமத் அஹோபிலம் ஜீயர் ஸ்ரீரங்கம் எழுந்தருளினபோது நிசான் சுருட்டி முதலான எடுபிடி ஸாமான்கள் தெருவிலே கொண்டுவரப்படுகையில் தடையுத்தரவு ஏற்பட்டிருக்கிறது. ஸ்வஸ்திவாசநம் மாத்திரம் தென்கலை ஸ்வாமிகளைக்கொண்டு செய்துகொள்ள அநுமதியளிக்கப்பட்டது.

42. 1874ஞு பென்னிங்டன் ஜட்ஜிமெண்டு-கொடியாலம் ரங்கஸாமி ஐயங்கார் ஸ்ரீரங்கதேவஸ்தானத்தைச் சேர்ந்த தென்கலை வேதாந்தாசாரியாருக்கு நூதனமாக வடகலை நாமமிட்டு விக்ரஹத்தை ஏள்ளப் பண்ணிவைத்த குற்றத்தின் பேரில் தோன்றிய இந்த ஜட்ஜ்மெண்டின் ஸாராம்சம்—

"வடகலையார்கள் துராகிருதமாய் 1803ஞு தீர்ப்பை நிராகரிக்கவே வழிதேடி வருகிறார்கள். இங்கே தென்கலையாருடைய பாத்யம் நிஸ்ஸந்தேஹமாயும் புராதனமாயுமிருக்கிறது. 1863ஞு வரை கோவிலிலுள்ள எல்லாத் திருமண்களும் (அதாவது) மதிள்கள் சுவர்கள் பாத்ரங்கள் எடுபிடிசாமான்கள் பிம்பங்கள் ஆகிய எல்லாவற்றிலுமுள்ள எல்லா நாமங்களும் அப்போது விட்டு எடுத்ததில் ஏகதேசமாய் தென்கலை நாமங்களேயென்று தெரியவருகிறது. தேசிகருக்கு இட்ட வடகலை நாமம் துராகிருதமாயும் சட்ட விரோதமாயும் வழக்க விரோதமாயும் தெரிகிறது. தென்கலையார்மனதை புண்படுத்தவேணுமென்கிற கெட்ட எண்ணங்கொண்டே தேசிகர் நாதமுனி விக்ரஹங்களை புதிசாக வடகலை நாமமிட்டு எள்ளப்பண்ண (கொடியாலம் ரங்கஸாமி ஐயங்கார்) ஏற்பாடு செய்தார். இந்த குற்றத்திற்கு ரூபாய் ஆயிரம் அபராதம். கட்டத்தவறினால் 6மீ தண்டனை."

இது ஹைகோர்ட்டுவரை அப்பீலில் ஊர்ஜிதமும் செய்யப்பட்டது

43. அதற்குப்பின் சில வருஷங்கள் கழித்து, வடகலை நாமமிட்ட தேசிக நாதமுனி விக்ரஹங்களை ஏள்ளப்பண்ணவேண்டுமென்று பிறரால் கொண்டுவரப்பட்ட 4 கேஸ்கள் ஹைகோர்ட்டு வரையில் வந்து தள்ளப்பட்டன. 1808ஞு தீர்ப்புப்படி கோவிலிலிருக்கும் எல்லா ஸ்வாமிகளுக்கும் தென்கலையாசாரப்படி பூஜாகார்யங்கள் செய்யவேண்டிய தென்கிற தீர்ப்புகளுக்கு விரோதமாகவே வடகலையார்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள், இப்படி செய்யக்கூடாதென்று ஹைகோர்ட்டு தீர்ப்பில் கண்டிருக்கிறது.

44. 1894ஞுத்தில் சேஷராயர் மண்டபத்திலிருந்த தென்கலைத் திருமண்களில் பாதங்களை உளியால் வெட்டி மறுபடித்த வடகலையார்கள் பிரயத்தனம் செய்தார் [illegible] இது அவர்களுடைய துராகிருதம் என்று தீர்மானம் செய்து.... இன்னும் [illegible] வடகலையார்க்கு மூன்றுமாத தண்டனையும் [illegible] விதிக்கப்பட்டது.

45. ஸ்ரீரங்கம் சித்திரை வீதியில் ப்ரைவேட் ஹவுஸில் கட்டப்பட்ட தேசிகர் கோவிலிலுள்ள விக்ரஹத்தை வடகலை நாமத்துடன் வீதிகளில் கொண்டுவரக் கூடாதென்று மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவின்மேல் 1909ஸு வியாஜ்ஜியம். திருவேங்கடபுரம் கேஸில் மணவா மாமுனிகள் விக்ரஹத்தை பப்ளிக் தெருவில் ஏள்ளப்பண்ணலாமென்று ப்ரிவி கௌன்ஸிலில் எப்படி ஏற்பட்டதோ, அப்படியே ஸ்ரீரங்கத்தில் வெளிதேசிகர் விக்ரஹத்தை வீதியில் ஏள்ளப்பண்ணுவோமென்று வடகலையார் வாதித்தார்கள். இந்த தாவாவில் எல்லா தஸ்தாவேஜுகளும் தாக்கல் செய்யப்பட்டு பரிபூர்ணமான பரிசீலனை நடந்ததில் (மேலே காட்டிய) 1808ஸு தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. "இங்கே தென்கலை ஆதிக்யம் புராதனம்; வடகலையார் நாளடைவில் ஆக்ரமிக்க வந்தவர்கள்; கோவில் சடங்குகளெல்லாம் தென்கலைப்ரம்; நாமங்கள் யாவும் தென்கலை. சில வெளிச்சுவர்களில் கொஞ்சம் கொஞ்சமாக வடகலைநாமம் போட ஆரம்பித்தார்களேயொழிய புராதனமில்லை" என்று எழுதப்பட்டிருக்கிறது.

46. 1907ஸு ஸ்ரீரங்க நாராயண ஜீயர் வாதி; அவருடைய பாத்யத்தைப்பற்றின வியாஜ்ஜியம். இதில் முடிவு;—கோவில் சடங்குகள் எல்லாம் தென்கலை; பூஜாவிதி யெல்லாம் ஜீயர் மேல்விசாரணை கர்த்தர் என்று முடிக்கப்பட்டது.

47. வடகலை வேதபாராயணக் கேஸ் தோன்றினபோது முன்னம் குறித்த 1808ஸு வாதாம் துரையின் தீர்ப்புதான் கோவில் ஆசரணையை நிர்த்தாரணம் செய்தது.

48. கடைசியாக, அர்ச்சக நமஸ்கார வ்யாஜ்ஜியத்தில் ஜட்ஜ்மெண்டு—(16-1-53) "மேலே குறிக்கப்பட்ட தஸ்தாவேஜுகளிலிருந்து 1808க்கு வெகுநாள் முன்னே பிடித்து தென்கலையார் ஆதிக்யமே. ஒவ்வொரு விவஹாரத்திலும் தென் கலையார் பாத்யமே நிலைகின்றது. அர்ச்சகர்கள் தென்கலையாசாரத்திற்கு அனேக விதத்தில் கட்டுப்பட்டிருக்கிறார்கள். தென்கலை நாமங்களே மிகவும் விசேஷமாயும் அதிகமாயும் உள்ளது. ஸ்ரீசைலேச தயாபாத்ரம் ஏகச்சத்ராதிபத்யமாய் நிரா க்ஷேபமானது. பஞ்சாங்க படனம், கத்யத்ரயபடனம், கைசிக புராணபடனம், ஆயனர்படிப்பு, அத்யாபக கைங்கரியம் எல்லாவற்றிலும் ஸ்ரீசைலேசபாத்ரம் தென் கலைவாழி திருநாமம் இதுகள் நிராக்ஷேபணையான வழக்கம். மிராசு ஆபீசு களெல்லாமும் எல்லா மரியாதைகளும் தென்கலையாருக்கே; இதுகளிலிருந்து கோவில் ஆசரணை தென்கலையென்பது ஸுஸ்பஷ்டம். வக்கீல் ஸ்ரீநிவாஸய்யர் [டிரஸ்டிகளில் ஒருவர்] தென்கலை வடகலை சண்டையில் கலந்தவரல்ல பிரபல வக்கீல். இவரது அபிடவிட்டு மிகுந்தகௌரவத்துடனேற்றுக்கொள்ளத்தக்கதே."

—ஸ்ரீரங்கவ்யவஹாரங்களில் இதுவே தற்காலம் கடைசியான தீர்ப்பு.

49. மேலே தெரிவித்த ரிகார்டுகள் தவிர இன்னும் நூற்றுக்கணக்கான ரிகார்டு கள் ஸ்ரீரங்கத்தில் தென்கலைத் திருமணும் தென்கலை யாசாரமுமே புராதனம் என்று நிர்த்தாரணம் செய்யக் கூடியவைகளாயிருக்கின்றன. அவையெல்லாம் தனிப்புத்தகமாக வெளிப்படுத்த ஸித்தமாகி வருகிறது.

50. இந்த ஸ்ரீரங்கம் கோவிலில் வடகலையார்கள் தங்களுக்கு ஸாதகமாக ஒரு விஷயம் சொல்லக் கூடும்; அதாவது—வடகலை நாதமுனி ரெங்கையங்கார் தன்வந்தரி கோவிலில் வடகலைநாமம் போட்டதற்காக கீழ்க்கோர்ட்டில் அவர்க்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது; அது ஹைகோர்ட்டில் ஒரு டெக்னிகல் பாயிண்டில் ரத்து செய்யப்பட்டது. இந்த விஷயத்தை வடகலையார்கள் தங்களுக்கு அநுகூலமாகச் சொல்லிக் கொள்ளலாம். இந்த கேஸில் வடகலைநாமம் போடலா மென்று தீர்ப்பு செய்யப்படவில்லை. அது தப்பு என்றுதான் முடிக்கப்பட்டிருக் [illegible]
[illegible]
[illegible]

51. கொடியாலம் ரங்கஸாமி ஐயங்கார் தென்கலை வேதாந்தாசாரியருக்கு வடகலை நாமமிட்டு வெளியில் கொண்டு வந்த குற்றத்திற்காக ஆயிரம்ரூபாய் அபராதம் விதித்த ஜட்ஜ்மெண்டில் ஷை தன்வந்தரி கோவில் திருமண் கேஸில் அபராதம் ரத்து செய்யப் பட்டது சோசனீயமென்றும், அதனால்தான் வடகலையார்களுக்கு துராக்ருதம் செய்வதில் உற்சாகமுண்டாயிற்றென்றும் காட்டப்பட்டிருக்கிறது.

52. ஸ்ரீரங்கத்தைப்பற்றி ரிகார்டுகள் ஸம்பந்தமாகத் தெரிவிக்க வேண்டிய விஷயங்கள் பாரத ராமாயணங்கள்போலே யிருந்தாலும் தற்காலம் இவ்வளவு போதும்.

☞ ஸ்ரீரங்கம் தேவஸ்தான வ்யவஹார ஸம்பந்தமாக மேலே விவரிக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் ஷை கோவில் ரிகார்டுகளிலிருந்து நான் எடுத்துக் கொடுத்தவையே. நான் எழுதிக்கொடுத்தபடியே இங்கு அச்சிடப்பட்டிருக்கிறது.

(Sd.) V. N. Venkatavaradachari,
Advocate, Vedavilas, Madras-8.

53. அன்பர்களே! மேலே தெரிவித்துள்ள வியவஹார விஷயங்களில் அர்ச்சகர்களின் ப்ரணாமக்கேஸ் ஒன்று நீங்கலாக மற்றவையெல்லாம் நிச்சேஷமாக முடிந்து போனவை. ஷை ப்ரணாமக்கேஸ் மாத்திரம் ஹைகோர்ட்டில் அப்பீலில் இருக்கிறது. அப்பீல்வாதிகள் வடகலை அர்ச்சகர்கள். ஸப்கோர்ட்டு தீர்ப்பை இங்கு நாம் எடுத்துக் காட்டியது ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யரவர்களைப்பற்றி ப்ரதிபச்சுவடியில் (பக்கம் 115, 116ல் கௌரவக் குறைவாக எழுதியிருப்பதால் அவருடைய கௌரவத்திற்கு நியாயஸ்தானத்தில் எவ்வித ஹாநியுமில்லையென்று காட்டவே.

54. அன்பர்கள் முக்கியமாகக் குறிக்கொள்க. இந்நூலில் நாம் நியாயஸ்தான தஸ்தாவேஜுகளை யெடுத்துப் பதிப்பிக்க நினைத்ததில்லை. ஸ்ரீரங்க தேவஸ்தானம் விஷயமாக இங்கே நாம் இவ்வளவு விஷயங்கள் கோர்ட்டு ரிகார்டுகளைக் கொண்டு சிறிது விரிவாகத் தெரிவித்தது ஏன்? என்னில்; ப்ரதிபச்சுவடியில் (பக்கம் 115ல்) "திருச்சிராப்பள்ளி டிஸ்ட்ரிக்ட்முன்ஸிப் கோர்ட்டில் ஸ்ரீரங்கதேவாலய அர்ச்சக நமஸ்காரக்கேஸ் ஸம்பந்தமாக 10—1—1950ல் அவதரித்த தீர்ப்பில்........" என்று தொடங்கி நீதிமன்றத்து விஷயங்கள் ப்ரதிபக்ஷரால் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன. என்றைக்கோ உயிரிழந்துபோன புத்தகங்களுக்கு இவர் உயிர் கொடுத்து [அவை ஜீவித்திருப்பவைபோல் காட்டி] பாமரர்களை வஞ்சித்து வருவது போலவே, கடைசியாக முடிந்திருக்கிற தஸ்தாவேஜுகளிலுள்ள விஷயங்களை மறைத்து, கண்டிக்கப்பட்டொழிந்த தஸ்தாவேஜிலுள்ளதை ஏகதேசம் எடுத்துக் காட்டுவதனால் இவருடைய வஞ்சகமே வெளியாகின்றதென்று மூதலிக்கவே.

55. ஆழ்வாராசாரியர்களின் திருவவதார ஸ்தலங்களெல்லாம் அநாதிகாலமாக வடகலையாயிருந்து விஷமிகளால் பிற்காலத்தில் தென்கலையாக மாற்றப்பட்டு விட்டனவென்றும், இவ்வண்ணமாகவே ஸ்ரீரங்கம் முதலான ஸகல தேவஸ்தானங்களும் அநாதியாய் வடகலையாகவேயிருந்து அநியாயமாய்த் தென்கலையாக மாற்றப்பட்டு விட்டனவென்றும், எங்களாழ்வான் பெரியவாச்சான்பிள்ளை முதலான புராசிகாசார்யர்களும் வடகலையாகத்தானிருந்தவர்களென்றும் கைகூசாது பொய்யுரைகளையே பொழிந்து வருகிறார். "தேசிகன் தென்கலைத் திருமணே சாத்திக் கொண்டு தென்கலைஸம்ப்ரதாயமாகவே யெழுந்தருளியிருந்தார்" என்று பிரபல ஸாக்ஷியங்களுடன் நாம் எழுதியிருப்பதற்கு இவை ப்ரதிவசனங்களாம். தென்கலை தேசிகரை வடகலை தேசிகராக ஆக்கினதற்கு எத்தனை விதமான கண்டனங்கள் ரிகார்டுகளில் ஏற்பட்டிருக்கின்றன தெரியுமா? இப்போது நாம் வெளியிடுகிறோமே

ஏகதேசம். "நிச் சேஷம்பரதலம் யதி பத்ரிகா ஸ்யாத்" அத்தனையே. இவர் தாமெழுதுகிற பச்சைப்பசும் பொய்களுக்கு லௌகிகமாகவோ வைதிகமாகவோ ஒரு ஸாக்ஷியம் காட்ட முடியுமா? ராமானுஜதயாபாத்ரத்தனியனும் அதைச்சேர்ந்த உத்தரசாந்தி ச்லோகவாழிகளும் ஸ்ரீசைலேசதயாபாத்ர பத்ததியைப் பார்த்தே விச்வாமித்ரஸ்ருஷ்டியாக நிரூபிக்கப்பட்டனவென்று நாம் அசைக்கமுடியாத உபபத்திகளுடன் விரிவாக எழுதியிருக்கிறோம். விப்ரலம்பகர் இதைத் திருப்பிச் சொல்லிவிடுவதே நலமென்று துணிந்து ராமானுஜாபாத்ரபத்ததியைப் பார்த்தே ஸ்ரீசைலேசபத்ததி நிரூபிக்கப்பட்டதென்று கூசாமலெழுத முன்வந்து விட்டார். யார் எதை யெழுதினாலும் அச்சுத்தாள் தாங்குமன்றோ? இவரெழுதுவதெல்லாம் ஒன்றுதப்பாமல் அத்தனையும் தலைகீழ் என்பதை விரிவுக்கு அஞ்சாமல் நன்கு நிரூபிக்கவே இந்த பாஸ்கரோதயம்.

56. இவராலும், இவரைப்போன்ற பரஸ்ஸஹஸ்ர ப்ரதிபர்களாலும் அசைக்கவுமொண்ணாதபடி ஸப்ரமாணமாக நாம் எழுதியிருக்கும் பல விஷயங்களுள் மூன்று விஷயங்கள் தலையானவை;

(1) பெரும்பாலும் திவ்யதேசங்கள், ஆழ்வாராசார்யர்கள் திருவவதார ஸ்தலங்கள் யாவும் ஆதிகாலத்திலிருந்து நாளைவரைக்கும் தென்கலை ஸம்பிரதாயமாகவே விளங்கி வருகின்றன.

(2) ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தனியன்தான் தேசிகன் ஸன்னிதியுட்பட எங்கும் ஏகரீதியாக ஸம்ருத்தி பெற்று வருவது.

(3) நவீனர்களென்று ஊர்ஜிதர்களான வகுப்பினர்கள் நவீநமான காலந் தொட்டே தேசிகனோடு உறவு கொண்டாடப் புகுந்தவர்கள்—

என்கிற இம்மூன்று விஷயங்களே ஸம்ப்ரதாய விஷயமாக நாமெழுதும் க்ரந்தங்களுக்கு ஜீவநாடியானவை. இம்மூன்று விஷயங்களுக்கும் ப்ரதிபகாரர் பதில் எழுதியிருக்கின்றார். அவருடைய சுவடியில் ஒவ்வோரெழுத்தையும் இந்நூல் ஸப்ரமாணமாகக் கண்டிக்குமென்னுமிடம் இதைப் பூர்த்தியாக வாசிப்பவர்களுக்கு நன்கு தெரிந்தே தீரும். முதலில் ஸாரமாகச் சில எடுத்துக்காட்டுமிந்த ப்ரகரணத்தில் இன்னமும் முக்கியமான சில விஷயங்களை உற்று நோக்குமின்.

57. நாம் ராமானுஜதயாபாத்ர சரித்திரத்தில் சில விஷயங்களெழுதினேம்—

"இந்த ராமானுஜதயாபாத்ரத்தனியன் தேசிகருடைய அவதாரஸ்தலத்தில் எவ்விதமான நிலைமையிலிருக்கிறதென்பதை முக்கியமாக உலகர்கள் கவனிக்க வேணும். தேசிகருடைய அவதாரம் காஞ்சீபுரியில் தீபப்ரகாசர் ஸன்னிதிவாசலில். அங்கு தேசிகருடைய ஆலயத்தில் ஆதிகாலத்திலிருந்து தென்கலைத் திருமண்தானிருந்தது. கி.பி. 1874 வருஷத்தில் வடகலை வகுப்பினர் அத்திருமணை இடித்துத்தள்ளி வடகலைத்திருமண் போட்டார்களென்பது நியாயஸ்தான ரிகார்டுகளால் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. அதாவது இற்றைக்கு 80 வருஷங்களுக்குமுன் வரையில் தேசிகருடைய அவதாரஸ்தலத்தில் தென்கலைத் திருமண்தான் திகழ்ந்ததென்பது நிஸ்ஸந்தேஹமான விஷயம். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாச்சியார் ஸன்னிதி யெதிரில் விளங்குகின்ற தேசிகர் ஸன்னிதி வாசலில் புராதனக்கட்டிடமான தென்கலைத்திருமண் நாளைக்கும் எப்படி பிரகாசிக்கின்றதோ அப்படியேதான் காஞ்சீபுரத்திலும் அவருடைய அவதாரஸ்தலத்தில் கி.பி. 1874-ஆம் வருஷம் வரையில் தென்கலைத்திருமணே பிரகாசித்துக் கொண்டிருந்தது; திருப்புட்குழியப்பாஸ்வாமி 1874-ஆம் வருஷத்தில் ஷை தேசிகன் ஸன்னிதி முன்னணியில் இருந்த புராதன காரைக்கட்டிடமான தென்கலைத்திருமண் காப்பைச் சில வடகலையார்களைக் கொண்டு இடித்துவிட்டார்

றென்று ஸப்கலெக்டர் மிஸ்டர் குருல்துரை முன்னிலையில் கொடுக்கப்பட்டிருந் தாவாவில் ஷை திருப்புட்குழி ஸ்வாமியும் ஒரு எதிரியாக இருந்தார். அந் தாவாவின் நம்பர் 72. அதில் ஷை திருப்புட்குழி ஸ்வாமி கொடுத்த வாக்குமூலம் அப்படியே அச்சாகி வெளிவந்திருக்கிறது. 19—8—1874-ல் ஷை ஸ்வாமி கொடுத்த அந்த ஸ்டேட்மெண்டில் விளங்குகின்ற வாசகங்கள்—

"விளக்கொளிதேசிகன் ஸன்னதி வாசலில் தென்கலைதிருமண் தான் இருந்தது............. 6, 7 மாதத்திற்குமுன் நான் வெளியூர் போயிருந்தபோது யாரோ வடகலையார் அதையிடித்து விட்டதாக கேள்விப்பட்டேன்......அந்த தேசிகன் ஸன்னிதியிலுங்கூடத் தென்கலையார்களே தென்கலைமந்திரம் சொல்லியே திவ்யப்ரபந்த ஸேவைசெய்து வருகிறார்கள். அங்கு வடகலை யார் வடகலைமந்திரம் சொல்லி வரக்காணேம்.".........:—என்பன.

இதனால் வேதாந்ததேசிகனுடைய அவதார ஸ்தலமும் புராதனமாகத் தென்கலையாயிருந்ததென்பது நிஸ்ஸந்தேஹம்."

என்று நாம் எழுதியிருந்தோம். இது நாம் ஸமீபகாலத்தில் எழுதினதன்று; 20, 25 வருஷ காலமாக இரண்டு மூன்று விசை இதை உலகமறிய வெளியிட்டிருக் கிறோம். இது, நியாயஸ்தானங்களில் ஏறின ரிகார்டுகளைக்கொண்டு நாம் நிரூபித்த விஷயமாகையாலே நவீனர்களுக்கு இதன்மேல் வாயைக் கையைத் திறக்க முடிய வில்லை. இதைத் தாங்கள் காணாததுபோலவே [அத்ருஷ்டிமபிநீய] கிடந்தார் களிதுகாறும். கடைசியாக ஏதாவதொன்றை பதிலாக எழுதித் தொலைக்க வேண்டி வந்தபடியாலே இந்த ப்ரதீபர் இப்போதெழுதுகிறார்—(ப்ரதிவசந காண் டம்—42. என்பதை பக்கம் 69-ல் காண்க.) என்ன எழுதுகிறாரென்னில்;

"அநாதியாய் வடகலையாயிருந்த கோவில்களையெல்லாம் தென்கலையாக ஆக்ரமித்துக்கொள்வதே தொழிலாயிருந்த தென்கலையார்களாலே நெடுநாளைக்கு முன்னமே ஆக்ரமிக்கப்பட்டு அவைதிகங்களாய்க் கிடந்த கோவில்களை மறுபடி யும் வடகலையாக்க வேண்டியது யுக்தமேயன்றோ. தூப்புல் ஸன்னிதியானது வெகுகாலமாக அவைதிகமாய்க் கிடந்தது. அதை வைதிகமாக்க ஸ்ரீமத்திருப்புட் குழிஸ்வாமி கங்கணங்கட்டிக் கொண்டார். அவர் செய்த சூது பலித்து விட்டது. லோக க்ஷேமத்திற்காக இப்படிப்பட்ட சூது செய்ய வேண்டியதுதானே. ஆஸ்திகர்களுக்கு இது கடமைதானே." என்று எழுதியுள்ளார்.

58. இங்கே நாம் சொல்லுவதைக் கேண்மின். "தூப்புல் ஸன்னிதி ஒருநாளும் தென்கலையாயிருந்தது கிடையாது; முன்பும் வடகலைதான், இப்போதும் வட கலைதான்; இங்கு தென்கலைத்திருமண் இருந்ததாகவும் அதை திருப்புட்குழி ஸ்வாமி இடிக்கச் செய்ததாகவும் எழுதியிருப்பது பொய்" என்று இவரெழுதி யிருக்கலாம். எத்தனையோ பொய்களைக் கூசாமலெழுதிக் கொண்டிருக்கிற இவர்க்கு இந்தப் பொய்யுரையை யெழுதுவதில் என்ன கஷ்டம்? சில பாமரர் கள் இதையும் மெய்தானென்று சில நாட்களாவது மயங்கிக் கிடப்பர் களன்றோ. அவ்வளவுதானே இவர்க்கு வேண்டுவது. இங்ஙனே எளியவழியை விட்டிட்டு, எல்லாக் கோவில்களுமே தென்கலையாயிருந்தது வாஸ்தவமென்பதை ஒப்புக்கொண்டும், திருப்புட்குழிஸ்வாமி தூப்புலில் சூது செய்ததும் வாஸ்தவமே யென்று ஒப்புக்கொண்டும் ஏதுக்கிவர் திண்டாடுகிறாரென்று ஆலோசிக்க வேணும். விஷயம் இவ்வளவே; தூப்புல் ஸன்னிதி ஸம்பந்தப்பட்டவரையில் அந்த கோவில் அநாதியாய்த் தென்கலையாயிருந்ததும் அங்கே திருப்புட்குழியப்பாஸ்வாமி சூது செய்தாரென்பதும் அசைக்கவும் மறைக்கவும் முடியாத நீதிப்ரமாணங்களில் ஏறி தாம்ரசாஸநமும் சிலாசாஸனமும் பெற்றிருக்கையாலே அதில் விபர்யயம் பேசுவது பெரிய அபாயமாய்த் தலைக்கட்டுமென்று தெரிந்துகொண்டார். ஆகவே இங்கு பச்சைப்புளுகும்பொய் பேசத் துணிவு உண்டாகவில்லை. அவைதிகமாயிருந்ததை

வைதிகமாக்குவதற்காக இந்தச் ரூது செய்நாரென்று எழுதிவிட்டோமானால் துக்கம் தீர்ந்து விட்டதாம் என்று ஒருவாறு தேறி இங்ஙனே யெழுதி நவீனர்களின் கண்ணைத் துடைத்து விட்டார்.

59. ஒரு தஸ்கரன் ஒரு வைதிகருடைய இல்லத்திலே புகுந்து களவு செய்து கையும் பொருளுமாகப் பிடியுண்டான்; ஏன் களவு செய்தாயென்று அதிகாரிகள் கேட்கையில் "பிண்டர்பாய்ந்துண்ணும் சோற்றைவிலக்கி நாய்க்கிடுமினீரே" என்று ஆழ்வார் சொல்லியிருக்கையாலே அநியாயமாய் அஸத்துக்களிடமிருக்கிற பொருளை வாங்கி ஸத்துக்களிடத்திலே சேர்ப்பிக்க வேண்டிக் களவு செய்தேன்" என்றானாம். அதுபோலவேயுள்ளது இவருடைய பதில். அதே கதைதான் இங்கு.

60. எது வைதிகம், எது அவைதிகம் என்கிற விசாரத்தைப் பிறகு வைத்துக்கொள்வோம். ஒருவர் தென்கலை ஸம்பிரதாயத்தை அவைதிகமென்பதும், வேறொருவர் மற்றொருவர் வடகலை ஸம்பிரதாயத்தை அவைதிகமென்பதும், வேறொருவர் இவ்விரண்டு ஸம்பிரதாயங்களையுமே அவைதிகமென்று பழிப்பதும்.........ஆக இப்படிப்பட்ட மதபேதங்கள் உலகில் மலிந்து கிடக்கின்றன. "அஸிநா தத்த்வ மஸிநா பரஜீவப்ரபேதிநா, வித்யாரண்யமஹாரண்யம் அக்ஷோப்யமுநிரச்சிநத்." என்கிற ச்லோகத்தை தேசிகனருளிச் செய்தும், சததூஷணீப்ரப்ருதிகளான வஜ்ரகுடாரக்ரந்தங்களை யருளிச்செய்துங்கூட பரமதங்கள் தொலையவில்லை. "தேவாலயங்களெல்லாம் நெடுநாளாகவே தென்கலையாயிருந்து அவைதிகங்களாய்க் கிடந்தன" என்று இவர் வெளியிடுகிற அர்த்தம் உண்மையாகவேயிருக்கட்டும். இந்த நவீனர்களுடைய முன்னோர்கள் திவ்யதேசங்களிலே காலை வைக்காமல் குளக்கரைகளிலேயே வாழ்ந்ததானது "கோவில்களெல்லாம் அவைதிகங்கள்" என்கிற எண்ணத்தினால்தான். "கோவில்களில் ஜகந்யஜாதீயர்களான ஆழ்வார்களை ஸ்தாபித்தும், அவர்களது வாயில் வெளிவந்த நீசபாஷையான பிரபந்தங்களை உத்கோஷித்தும் தென்கலையார்கள் கோவில்களைக் கெடுத்து விட்டார்கள்" என்றுதான் இந்த நவீநர்களினுடைய முன்னோர்கள் கோவில்களை எட்டிப்பாராமலுமிருந்து விட்டார்கள்—என்று நாம் பலகாலுமெழுதி யிருந்த இதனையே இப்போது இவர் தம் கையால் எழுதினராயிற்று.

61. ஒன்று பாருங்கள்; ஆங்காங்கு தேவதாந்தரக் கோவில்கள் பலபல கிடக்கின்றன; அவை அவைதிகங்களாகையாலே நமக்கு த்யாஜ்யங்கள் என்று கொண்டே வைதிகர்கள் விலகி நிற்கிறார்கள். இதுவரை அந்த கோவில்களுக்குப் போனவர்களுமல்லோம், இனி போக நினைப்போமுமல்லோம். அவைதிகங்களான விவற்றை வைதிகங்களாக்குவோமென்கிற எண்ணம் வைதிகர்களுக்கு த்ரிகாலத்திலும் அஸம்பவி. இவ்விதமாகவே, தென்கலைக் கோவில்களெல்லாம் அவைதிகங்களென்னு மூறுதிகொண்டே நவீனர்களின் முன்னோர்கள் ஸூர்யசந்திரர்களேற்பட்ட காலம்முதல் கோவில்களில் விலகி வர்த்தித்தார்கள்; பரமவைதிக வ்ருத்தியைத் தாங்கள் பரிக்ரஹித்து பொங்கல்புளியோரைகளின் வாஸனையுமறியாமல், *ரேதஸ் ஸிஞ்சந், ப்ரஜா: ப்ரஜநயந், த்ரிம்சதஸ்யா ஜகநம் யோஜநாநி, आहतं गमे पसो निजल्गुलीति धाणिका....இத்யாதி சிந்தனைகளோடும் அவற்றின் திவ்யார்த்த பரிசீலனங்களோடும் காலம் கடத்திவந்தார்கள். பிறகு, "நாம் மாத்திரம் குளக்கரைகளிலே போது போக்கிக் கிடப்பதேன்? தென்கலையார் மாத்திரம் கோவில்களிலே மரியாதைகளையும் பஹுமானங்களையும் அநுபவிப்பதேன்? அவற்றை நாமும் அநுபவித்தாலென்ன?" என்று தோன்றி, அக்காலத்திலே தென்கலையார்கள் வேதாந்த தேசிகனிடத்தில் அத்வேஷம் மாத்திரமே கொண்டவர்கள் சிலரும், ஸாதாரண பக்தி கொண்டவர்கள் சிலருமாயிருந்தது கண்டு தாங்கள் அவரிடத்திலே விசேஷ

பக்தி கொண்டவர்களென்று காட்டத் தலைப்பட்டு கோவில்களிலே புகஆரம்பித்தார்கள். ஸாதுக்களாய்ப்புகுந்திருந்தால் நன்றே; ஆரம்பகாண்டமே யுத்தகாண்டமாயிற்று இவர்களுக்கு.

62. ஆனல் எல்லாருமே புகஆரம்பிக்கவில்லை. யாரோ சிலரே. பெரும்பான்மையான வடகலையார்கள், கோவில் நம்முடைய வைதிகாசாரத்திற்கு உற்றதன்று என்கிற கொள்கையையே கொண்டு விலகியேயிருந்தார்கள். அத்யாபி ஸ்மார்த்த மாத்வாதிகள் விஷ்ணுகோவில்களுக்கு வருவதுபோல அவர்களும் பிம்பதர்சனத்தை மாத்திரம் உத்தேசித்துக் கோவில்களுக்கு வந்து, ஆழ்வார்களை ஸேவிக்கக் கருதாமலும் திவ்யப்ரபந்த ஸேவைகளைக் காது கொடுத்துக் கேட்க விரும்பாமலும் ப்ரதக்ஷிண நமஸ்காரங்களை அபரிமிதமாகச் செய்து கொண்டு ப்ரஸாத விநியோக கோஷ்டிகளின் அருகுங்கூட வாராமலும் பவித்ரபாணிகளாகவே புறப்பட்டுப் போவர்கள். ஸன்னிதிகளில் உட்காரவேமாட்டார்கள். கதாசித் உட்கார நேர்ந்தாலும் கையை மூடிக்கொண்டு ஏதோ ஜபித்துப் போவர்கள். இவர்களிடத்திலே எல்லாருக்கும் அபரிமிதமான கௌரவபுத்தியுண்டு. ‘இவர்கள் அத்யயநசீலர்கள், அநுஷ்டாநபரர்கள், பூர்வாபரம் பண்ணிவைக்கக் கூடியவர்கள். நீட்டு நீட்டு சொல்லுவதிலே நிபுணர்கள்’ என்று தென்கலையாருட்பட மற்றெல்லாராலும் கொண்டாடப்பட்டிருப்பர்கள். அத்யாபி இப்படியிருப்பவர்களை ஸ்ரீரங்கம் முதலான அனேக திவ்யதேசங்களில் பார்த்து வருகிறோமல்லவா? இப்படிப்பட்ட சிறந்த கௌரவத்தையே இவர்கள் நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்களாகில் இவர்களுக்கு ஒருவிதமான அவத்யமும் வந்திராது. அந்தோ! வீணை பரிபவமடைந்தார்கள்; அடைந்துவருகிறார்கள். சோசநீயமான தலைவிதி!; அஸ்து; மேலே செல்லுவோம்.

63. ப்ரதிபர் எழுதுகிறார் (பக்கம் 69ல்)—தென்கலையார்கள் தேவப்பெருமாள் ஸன்னிதியிலும் வெகு மிராசுகளைப் புதிதாக ஆக்ரமித்துக் கொண்டார்கள்; ஆனல் பூர்த்தியாக ஆக்ரமித்துக்கொள்ள முடியாமற் போய்விட்டது; அதனல் இங்கு வடகலைநாமமே இன்றைக்குமுள்ளது—என்று. கோவில்களை ஆக்ரமிக்க ஆசை கொண்டவர்கள் இன்னாரென்பதை கீழே (20 முதலான பக்கங்களில்) கண்ட விவரணங்களினல் உலகம் தெரிந்து கொள்ளும். ரிகார்டுகளே வேண்டாம்; இவர்களுடைய ஹிஸ்டரி உலகப்ரஸித்தமாகவன்றோவுள்ளது. தேவப்பெருமாள் ஸன்னிதியில் சுண்ணும்பினல் போடுகிற நாமம் எது? கல்வெட்டான திருமண் காப்பு எது? அது எத்தனை? அவை இந்த தேவாலயத்தில் எப்படி ஏற்பட்டன? எப்போது ஏற்பட்டன? அவற்றை ஏன் இவர்கள் அழிக்க முயலவில்லை? இத்யாதிகளை ஆர அமர ஆராய்ச்சி செய்தால் ஆக்ரமண கர்த்தாக்களின் உண்மை உணரலாகும்.

64. இதற்குமேல் (ப. 70—முதல்வரியில்) ஒன்று எழுதுகிறார்—“தேசிகபாத்ரத் தனியனைச்சொல்ல வடகலையார்க்கு ஹக்கு இருக்கத்தானிருக்கிறது; இல்லாமற் போகவில்லை. ஆனலும் வடகலையார்கள் பரமஸாத்விகர்களாகையாலே சாந்தியில் விருப்பினலும் கலஹத்தில் வெறுப்பினலும் அந்த பாத்திரத்தைச் சொல்ல முயற்சி செய்யவில்லை” என்று. இவருடைய சுவடியில் இதுதான் பரமஸாத்விகமான வார்த்தை. ‘தேசிகபாத்ரத்தனியனைச்சொல்ல வடகலையார்க்கு ஹக்கு இருக்கத் தானிருக்கிறது’ என்கிறாரே; எந்த இடத்தில் சொல்ல ஹக்கு இருக்கிறது என்று கேட்க வேணும் இவரை. “देशिकपात्रपद्यानुसन्धानाधिकारो दत्त एव वडकलानाम्” என்று மொழிதழுக எழுதுகிறார். இந்த அதிகாரத்தை இல்லை செய்வாராரே தம்தம் இல்லங்களிலே சொல்லலாம்; திருவிருத்தப்ரஹ்மரத கோஷ்டிகளில் சொல்லிடம்

பஹிர்விதிகளிலே புதிது புதிதாகக் கட்டிக்கொண்டிருக்கிற தேசிகாலயங்களிலே சொல்லலாம். தடை செய்வாரார்? மற்றவிடங்களில் பட்ட பரிபவம் ஒரு மஹா பாரதமிறே.

65. இதற்குமேல் ஒன்று எழுதுகிறார்—கலியின் கொடுமையால் திவ்யதேசங்கள் அவைதிகர்களான ஏகதேசிகளின் ஆளுகையிலே யிருக்கின்றபடியால் அதனால் கெட்டுப்போன கோவில்களைக் கண்ணெடுத்தும் பாராமலிருப்பதுதான் ஸாத்விகர்களுக்கு உற்றது; ஆனாலும் ப்ரதிபக்ஷிகளான இந்த ஏகதேசிகள் கோவில்களில் அதிகமான மரியாதைகளை அநுபவித்து வருவதால் அதுகண்டு ஆறியிருக்கமாட்டாமல் கோவில்களிலே நாமும் புக்குக் கலஹம்பண்ண வேண்டியதாகிறது; இதைப் பற்றி நமக்கு வருத்தமே—என்று.

66. இது ஸத்யம்; வயிற்றினுள்ளேயிருப்பது வெளிவந்து விட்டது. 'கோவில்களெல்லாம் தென்கலையாருடைய ஆளுகையிலே யிருப்பதனாலே அங்கு நமக்குக் காரியமில்லை' என்று கொண்டே இவர்களது முன்னோர்கள் நெடுங்காலம் ஒதுங்கி வர்த்தித்தார்கள். அப்படியே வர்த்தித்தவர்கள், கோவில்களில் தென்கலையாருடைய விஜ்ரும்பணங்களைக் கண்டு பொறுத்திருக்கமாட்டாமல்தான் எவ்விதமான அக்ருத்யத்தைச் செய்தாகிலும் தங்கள் பெருமைக்குப் போக்குவீடு செய்து கொள்ளவே வேணுமென்று துணிந்து த்ருஷ்டர்களாய் விஷமங்கள் செய்து வருகிறார்கள். இதற்கு இவர் வருந்துவதாக எழுதுகிறார். இது உண்மையாயிருந்தால் குலிங்கசகுனி வ்ருத்தியை இவர் கைப்பற்றாமலிருப்பது தானுற்றது.

67. எழுதுகிறாரிவர் (பக்கம் 69ல்)—"ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதியில் ப்ரபத்தி பண்ணுவோமென்று புகுந்தால் அது செய்யக்கூடாதென்று அவ்விடத்து அதிகாரிகளான தென்கலையார்கள் தடை செய்கிறார்கள்! ஹாஹா! என்ன கஷ்டகாலம்!" என்று. "ப்ரபத்தி பண்ணுவோமென்று புகுந்தால்" என்கிறவிதற்கு என்ன அர்த்தமென்று இவரையே கேட்போம். "த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச்சக்ருர் ஜனார்த்தநம்" என்கிற வசனத்தை தேசிகன் ப்ரபத்திக்கு ப்ரமாணமாக எடுத்திருப்பதால் 'நமஸ்காரம் பண்ணுவோமென்று புகுந்தால்' என்கிற பொருள் விவக்ஷிதமாயின், இவர் அங்கே சென்று எத்தனை நமஸ்காரங்கள் செய்தாலும் தடுப்பாரில்லையே; அஸக்ருந் நமஸ்காரத்தில் அர்ச்சகர்களுக்குத் தடையேயொழிய இவர் ஆயிரந்தடவை விழுந்தெழுந்தாலும் கேட்பாரில்லையே. அல்லது, த்வயோச்சாரணத்தைத் தடுக்கிறார்களென்கிறாரா? அதையும் தடுப்பாரில்லையே. அசாஸ்த்ரீயமாக ஏதோ செய்யப்போனதாகவும், அதைத் தடை செய்ததாகவும் இவருடைய அழுகையிலிருந்து தெரியவருகிறது. அப்படிப்பட்ட தடை ஸகல ஸன்னிதிகளிலுமுண்டே. இவர்களுடைய நவீந துஷ்க்ருத்யத்தை எந்த கோவிலிலும் அநுமதிக்கமாட்டார்களே. அந்தோ! அர்த்தமில்லாதபடி ஏதுக்கழுகிறார்.

68. (பக்கம் 65ல்) ஆச்சரியமான விஷயமொன்று அத்புதமாக எழுதுகிறார். இவரெழுதுவதை இவரேதான் மெச்சிக்கொள்ளவேணும். இவ்விஷயமொன்றே போதும். கேண்மின்; ஸ்ரீரங்கதேவஸ்தானம் முழுவதும் தென்கலையாகக் காணப்படுவதற்கு உண்மையான காரணமொன்று கண்டு பிடித்து விட்டார். அங்கு எல்லாம் வடகலையாகவேயிருந்ததாம்; ஒவ்வொருவரையும் கட்டாயப்படுத்தித் தென்கலைத்திருமண்காப்பு சாத்திக்கொள்ளும்படியாகச் செய்து விட்டார்களாம். இது எப்படி தெரிகிறதென்னில்; இந்த ஸ்ரீரங்கதேவஸ்தாநத்தின் ஸர்வாதிகாரமும் முற்காலத்தில் ஒருவரிடத்தில் இருக்கையில் அவர் செய்தவொரு ச்ராத்தத்தில் தென்கலை ஸ்வாமியொருவனை நிமந்த்ரிக்க நேர்ந்து விட்டதாம்; ச்ராத்த முடிவில் "ஸகலம் ஸம்பூர்ணம் த்ருப்தோஸ்மி" சொல்ல வேண்டிய ஸமயத்தில் "ஸன்னிதித் திறவுகோலைக் கொடுத்தாலொழிய"- த்ருப்தி சொல்லமாட்டேனென்று அந்த தென்

கலை ஸ்வாமி சொல்லவே, அந்த ச்ராத்த கர்த்தாவானவர் ச்ராத்தம் கெட்டுப் போ[illegible] வொண்ணுதென்று கோவில் சாவிகளைக் கொடுத்து ச்ராத்தபூர்த்தி செய்து கொ[illegible] டார் என்று ஐதிஹ்யமிருப்பதால், இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தினாலேயே தேவ[illegible] தான நிர்வாஹ அதிகாரத்தை இவர்கள் ஆக்ரமித்துக் கொண்டவர்கள்; ஆ[illegible] யாலே ஸ்ரீரங்கதேவஸ்தான புருஷர்களையெல்லாம் இவர்கள் கட்டாயப்படுத்தியே வடகலை நாமத்தை மாற்றித் தென்கலையாக்கிக் கொண்டார்களென்பது எளிதாகத் தெரியவருகிறது —என்று.

69. ப்ராமாணிக மஹாநுபாவர்களே! இந்த வொரு விஷயத்தோடு ப்ரக்ருத விவாதம் முற்றிலும் முடிவு பெற்று விட்டதென்பதில் என்ன ஸந்தேஹம். ஸ்ரீரங்க தேவஸ்தானத்தைப்பற்றின மேலேகண்ட ஐதிஹ்யம் பொய்யானது என்று பழித்து விடாமல் ப்ராமாணிகமேயென்று இசைந்து கொண்டாரிவர். "விதத்தை திஹ்ய ஸஹஸ்ரவர்ணனே" என்றதில் இதையும் சேர்த்து விடாமல் இது உண்மை யான ஐதிஹ்யமே யென்பதை யொப்புக்கொள்ளுகிறார்; இவருடைய பங்க்தி களிவை —

"निर्बन्धादेव कृतपुण्ड्रविपर्यासाः श्रीरङ्गदेवस्थानपुरुषाः । इदं तत्क्षेत्रसम्बन्धि ऐतिह्यम् अनुवर्तते ।
श्राद्धे निमन्त्रितैः किल भोजनान्ते तृप्तिकथनावसरे भगवदालयकुञ्चिकास्तु दत्तास्त्वेव तृप्तोऽस्मीति
कथयिष्याम इति श्राद्धकर्तारं निर्बन्ध्य तस्मात् देवस्थानाधिकार आच्छिन्न इति" ॥ என்று.

ஸ்வாமி யெம்பெருமானார் நியமனத்தினால் கூரத்தாழ்வானே ச்ராத்த நிமந்த்ரணத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீரங்கதேவஸ்தானத் திறவுகோலை ஸதுபாயமாகக் கைப்பற்றி ஸ்வாமியிடம் கொணர்ந்து கொடுத்தார்; அன்று முதலாக ஸ்ரீரங்கநாத ஸந்நிதி ஸாம்ராஜ்யம் ஸ்வாமியின் கைப்பட்டது; அப்போதே தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்து ஸ்ரீரங்கஸ்ரீயை அபிவிருத்தி செய்தருளினார்—என்று கோயிலொழுகு முதலான பழைய நூல்களிலே விளங்குகின்ற ஐதிஹ்யத்தைத் தென்கலையார் வடகலையாரென்கிற வாசியில்லாமல் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் ஒருமிடறாகப் போற்றி வருகிறார்கள். வடகலையாயிருந்த தேவஸ்தானத்தைத் தென்கலையாக்குவதற்காகவே ஸ்ரீராமாநுஜரும் கூரத்தாழ்வானும் கூடி இப்படிப்பட்ட சூது செய்தார்களென்று இவருடைய ஸித்தாந்தத்தை இன்று உலகம் தெரிந்து கொண்டது.

70. இதுவரையில் நாமெல்லாரும் நினைத்திருந்தது என்னவென்றால், ஸ்ரீரங்க தேவஸ்தானம் ஸ்வாமி திருக்கையாட்சியில் வந்து சேருவதற்கு முன்னே அங்கு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ விசேஷமாகக் குடிகொள்ளாமலிருந்தது; ஆழ்வார்கள் பதின்மரும் ஆச்சரியமாக ஈடுபட்ட பூலோக வைகுண்டமான இந்த திவ்யதேசம் இப்படி ஸாமாந்யமாக இருக்கிறதே; இதை லோகோத்தரமாகத் திருத்த வேண்டாவா என்று ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளம்பற்றி ஸ்ரீரங்க நிர்வாஹ ஸாம்ராஜ்யமெல்லாம் தம் கைப்பட்டதாக ஆக்கிக்கொண்டு தம்முடைய சிஷ்யவர்க்கங்களையெல்லாம் தேவஸ்தானத்தின் நாநா கைங்கர்ய நிர்வாஹத்திலே அமர்த்தி இப்போது உலகமெல்லாம் அநுபவித்து ஆனந்திக்கிறவகையை யுண்டாக்கியருளினார்—என்று இவ்வளவே இதுவரையில் க்ரஹித்திருந்தோம். ப்ரஹ்மஸ்ருஷ்டி காலந்தொடங்கி வடகலையாயிருந்த இந்த தேவஸ்தானத்தைத் தென்கலையாக்குவதற்கே ஸ்ரீராமாநுஜர் இப்பாடுபட்டாரென்று இந்த தாதாசாரியர் இப்போது தெரிவிப்பது பொய்யாயிராது, மிகவும் ப்ராமாணிகமாகவே தானிருக்கும். இதனால், தென்கலை ஸம்ப்ர[illegible] [illegible] ஸ்ரீராமாநுஜரும் கூரத்தாழ்வானுமே [illegible]தலைவர்களாகவு[illegible] இருந்தவர்க [illegible]

acharya.org

ஸகல மிராசுகளிலும் தென்கலை
யிலே தென்கலை மயமாக ஆக்கினர்களென்றும், ஆழ்வானுமேயென்றும் இவ
யாரையே நியமித்தருளினது இந்த உடையவரும் ராமாநுஜதயாபாத்ரப்ரதய
ருடைய கையினாலேயே நன்கு தேறிவிட்டது. நாம் பதிலெழுதியிருப்ப
சரித்ரநூலிலே விரிவாக எழுதியிருந்த விஷயங்களுக்கு இவர்
தன்றேவிது.

71. நாம் எழுதியிருந்ததை இங்கே யெடுத்துக் காட்டுகிறோம் — தென்கலையே
"ஆழ்வார் ஆசார்யர்களுடைய திருவவதாரஸ்தலங்களுமெல்லாம் கிடையாதென்பது
யொழிய ஒன்றில் கூட வடகலைத் திருமணுக்கு ப்ரஸக்தியே மிகவும் முக்கிய
தவிர மற்றொரு விசேஷமும் கவனிக்க வேண்டும். அதுதான் ஸிம்ஹாஸ
மானது; அதாவது—ஸ்ரீ ராமாநுஜர் பல ஆசார்ய புருஷர்களை பலவகைப்
நாதிபதிகளாக நியமித்து, ஸ்ரீரங்கம் முதலான தேவஸ்தானங்களில் நைமித்திக
பட்ட ஸன்னிதி கைங்கரியங்களில் நிர்வாஹகர்களாக்கி நித்யமாகவும் நேராக
மாகவும் மரியாதைகளை யநுபவிக்கும்படி நிபந்தனை செய்திருக்கிறார். நியமிக்கப்
ஸ்ரீராமாநுஜர் நிபந்தனைகள் செய்தது ஸ்ரீரங்கத்தில். அங்கு அவரால் மரியாதைகளை
பட்டுக் கைங்கரியங்களை நடத்திவருகிறவர்களும் ஆச்சரியமான யாவரும் தென்
108. ப்ராக்ருதத்தில் என்ன விஷயம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறதோ இ விஷயத்தை யெடுத்துக் கொள்வோம். தென்கலையார்கள் பக்தி முதலானவற் உபாயமன்றென்று அநியாயமாய்எழுதிவைத்து இதனாலேயே ஸம்ப்ரதாயகுத்ருஷ் களாகி யொழிந்தார்கள்" என்று இவர் எழுதியிருக்கிறார். இப்படி இவர் எழுது தானது தேசிக திவ்யஸூக்தியை லவலேசமும் அறியாமையினாலத்தனை என்று நாம் சபதம் பண்ணிச் சொல்லுகிறோம். பக்தி முதலானவற்றை உபாயமன்றென்று அநியாயமாக எழுதி வைத்தவர்கள் தென்கலையார் மாத்திரமல்லர்; உங்களுடைய கபடபக்திக்கு இலக்கான தேசிகனும் இப்படித்தானெழுதி வைத்திருக்கிறார் என்று நாம் சொல்லுவதோடு நில்லாமல் கீதார்த்தஸங்க்ரஹத்தின் வியாக்கியானத்திலே நிஸ்ஸந்தேஹமாகவும் நிர்விவாதமாகவும் ஸ்வாமி யெழுதி வைத்திருக்கிற திவ்ய ஸூக்தியையும் எடுத்துக் கைமேலே தந்தோம். அதை மறுபடியும் இதோ அநு வதிக்கிறோம் கேண்மின்—"ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தரபாவி பலஸாதநத்வஅநுபபத்திதர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதா புத்தி ரபி ஸ்யாத் இதி பாவ꞉; அந்தத꞉ தைஸ்தைராராதிதோ பகவாநேவ ஹி ஸர்வத்ர உபாய꞉" என்று தேசிகன் திருக்கையிலிருந்து திருவவதரித்த பங்க்தியிது. இவ்வளவு கல்வெட்டாகத் தென்னாசார்யர்கள் எழுதி வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

109, மற்ற விஷயங்கள் கிடக்கட்டும்; இந்தவொரு விஷயத்தைப் பற்றிக்கொண்டு சர்ச்சை செய்து முடிப்போம். இந்த ப்ரதீபர் எழுதியிருக்கிற வாக்கியம்—"பக்த்யாதீநாம் அநுபாயத்வாதி ஸர்வசாஸ்த்ரஸம்ப்ரதாயவிருத்தம் அப்யுபகச்சந்தஸ் தே ஸம்ப்ரதாயகுத்ருஷ்டய இதி அபிதாநயோக்யதாம் பஜந்த꞉" என்பது. ஸர்வ சாஸ்த்ரஸம்ப்ரதாய விருத்தமென்று இவர் தாந்தோன்றியாகக் கருதுகிற அர்த்தம் ஆளவந்தாரால் ப்ரஸ்தாவிக்கப்பட்டு தேசிகனால் ஸுஷ்டு ப்ரதிஷ்டாபிதமானது என்னுமிடத்தை நாம் உள்ளபடி யெடுத்துக் காட்டியாயிற்று. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் இவர் வாயைத் திறந்து மூடுவதற்குள்ளே, எழுதின மசி உலருவதற்குள்ளே நாம் தேசிக திவ்யஸூக்தியைக் கொண்டே மறுபடியும் இவர் வாய் திறக்கவோ கைபேர்க்கவோ இடமில்லாதபடி செய்து வருகிறோமாகையால் இதனால் திக்குமுக்கலாடி நிற்குமிவர் நாம் நம்முடைய ஜீவிதத்தில் ஒவ்வொரு நிமேஷமும் தேசிகத்ரோஹமே செய்து வருவதாக எழுதாமல் வேறு என்ன எழுதுவர் பாவம்! ரகுவம்சம் மேகஸந்தேசம் தவிர தேசிக திவ்யஸூக்தியில் ஒரெழுத்தாகிலும் கற் வரோ இவர்? ஒன்றிரண்டு தேசிகஸூக்திகள் இவர் கண்ணில் தப்பிப்பட்டுவிட்ட "அத்ராஸ்தி பஹு அஸாமஞ்ஜஸ்யம்" என்றெழுதுவது தவிர வேறில்லை. இ னால் தேசிக ஸ்ரீஸூக்தி இவர்க்கு உண்மையான பொருளைத் தரவில்லையென்ப தேறி நிற்கிறதல்லவா? இந்த ப்ரகரணத்தில் நாம் அவச்யம் தெரிவிக்க வேண்டி விஷயங்களை ஸப்ரமாணமாகத் தெரிவிக்கிறோம். நம்முடைய திருபணங்களுக் நேர்நின்று விடைகூறமாட்டாதவிவர் தன் துக்கம் மறைவதற்காக தத்தக பித்த வென்று எழுதிவிட்டால் உலகம் அறிந்திருக்கிற வுண்மை மாறிவிடுமோ?

ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தாக்யு...
...முடைய நூல்களைப் புகழ்ந்தவர்களில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி, திருமலை திருப்பதி
...ணக்காகத் தேறுவர்கள். ஸ்ரீமத் வரவர முநீந்த்ர ஸம்ப்ரதாயஸ்தர்கள் மிகச்
...யர் ஸ்வாமி போன்ற ஸ்ரீமத் வரவர நினைப்பரிய பெருமைவாய்ந்த மஹாமஹோ
...கழ்ந்தவர்கள். நெஞ்சால் நினைப்பரிய பெருமைவாய்ந்த ரத்னம் ஸ்வாமி, ஸ்ரீபரகால
...ஸ்தலம் ஸ்வாமி, லக்ஷ்மீபுரம் பண்டித ரத்னம் ஸ்வாமி, ஸ்ரீபரகால
...ள் வித்வத்வரேண்யர்கள் ஆகிய ப்ரபல வித்வான்கள் பலர் நம்முடைய
...ளைக் கடாக்ஷித்துத் தங்களுக்குண்டான ஸந்தோஷத்தை உலகமறிய
...புள்ளார்களென்றால் இதனில் மிக்க அதிசயமுண்டோ? மேற்கூறிய மஹா
...ன்கள் புகழ்ந்தது நம்முடைய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களையே. மணிப்ரவாள
...யில் நாமெழுதிய ஸம்ப்ரதாயார்த்த தத்வபரங்களான க்ரந்தங்களை யுகந்து
...டாடினவர்கள் யாவரென்று உலகுக்கு நினைப்பூட்டவேண்டுவது இப்போது
...கமாகிறது. ஸ்ரீமதஹோபில மடத்தின் ஸகல யோக க்ஷேம நிர்வாஹக
...வதாந்த தீபிகைக்குப் பலகாலம் ஸம்பாதகராய் ந்ருஸிம்ஹ ப்ரியா தோன்
...நாள்முதல் தாம் திருநாட்டுக்கெழுந்தருளுகிற க்ஷணம்வரையில் அதற்கும்
...தகராய் எழுந்தருளியிருந்து பரம ப்ராமாணிகரென்று பெரும் புகழ்பெற்ற
...ஷி வாஸுதேவாசார்ய ஸ்வாமி நம்முடைய ஸாம்ப்ரதாயிகார்த்த தத்வபரி
...ா பரங்களான க்ரந்தங்களைப் பெரும்பாலும் பராமர்சித்துப் புகழ்ந்தெழுதி
...ாந்த தீபிகையிலும் ந்ருஸிம்ஹ ப்ரியாவிலும் வெளியிட்டிருக்குமவற்றை உல
...கண்டிருக்கிறது. அவர் திருநாட்டுக்கெழுந்தருளின பிறகுங்கூட ந்ருஸிம்ஹ
...ாவில் நம்முடைய க்ரந்தங்களைப் பற்றின மதிப்புரைகள் வெளிவந்ததை
... புதுக்கோட்டை ராஜஸம்ஸ்தானத்தில் தாநாதிகாரியாயிருந்து விச்ராந்தரா
...தக்கும் மதத்ரய நிருபக மஹாபண்டிதரான காளி ரங்காசார்ய ஸ்வாமி ஸகல
...வாசார்ய ஸமுதாயாவதாரரென்று நமக்குப் பெயரிட்டு இந்த விருதைக்கொண்டே
...வ்வொருவரும் வ்யவஹரிக்கவேணுமென்றுமெழுதியிருக்குமது தேசமறிந்தது.
... ஸிம்பஹா? இந்த ப்ரதிபரே நம்மோடு ஸாக்ஷாத்தாக விவாதப்பட்டுப்
111. ...ப்பட்டிருக்கிறரே யொழிய
பங்கமடையத்தொடங்கின பிறகு நிந்திக்கத்...லைப்பட்டிருக்கின்ற
அதற்கு மூன் தமது கையாலெழுதி உத்யாக பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்ற
மதிப்புரைகளைத் தாமே யெடுத்து வாசித்துப் பார்க்கலாமே. ஆதிசேஷன் பட்
மெடுத்தாடும்போது ஆனந்தமாகக் கண்டுகொண்டிருந்து, ஹாஹா என்ன தாண்
டவம்! என்ன நர்த்தனம்! என்று புகழுகிறவர்கள், போராத தலைவிதியினால்
சிறிது சேஷ்டை செய்து கடியுண்டு வையவுமடிக்கவும் முயல்வது போலவும்,
கண்ணபிரானிடத்தில் *யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசாः ப்ரதிபேதிரே* என்று
மஹர்ஷி கூறினபடி பரவசர்களாய் மரியாதை காட்டி நின்ற துர்யோதநாதிகள்
விதிவசத்தால் த்ரோஹிகளானுப்போலவும் *அலுப்தமூர்த்தம்யவிக்ரமத்வத்
தாலே பழைய நிலையை மறந்தும் மறைத்தும் தூஷிக்க முன்வந்து பங்கமடை
கிறார்களென்றால் இதில் வியப்புண்டோ?

112\. ஸ்ரீரங்கம் பெரியாச்ரமமென்கிற ஆண்டவனாச்ரமத்தில் ஸ்ரீமத் ஆக்கூராண்ட
வனுக்குப் பிறகு ஆஸ்தானத்தை யலங்கரித்தருளாநின்ற வர்த்தமான ஆண்டவன்
ஸ்வாமியோடு அடியேனுக்குப் பரிசயமின்றிக்கே நேரில் ஸேவிக்கப்பெற்றதுமின்
றிக்கே பத்ரவ்யவஹாரப்ரஸக்தியுமின்றிக்கே யிருந்தது ஸ்வல்பகாலத்துக்கு முன்பு
அந்த ஸ்வாமி ஸந்நிதியிலிருந்து அசிந்திதமாக வொரு ஸ்ரீமுகம் கிடைத்தது—
"தேவரீருடைய க்ரந்தங்களையும் வாக்விலஸிதங்களையும் ஸ்ரீஸ்வாமி கடாக்ஷித்தும்
கேட்டும் மிகவுமுகந்தருளியாச்சுது. தேவரீருடைய க்ரந்தங்களை யெல்லாம் கடா
க்ஷிக்க மிகுந்த குதூஹலமுண்டாகியிருக்கிறது, அப்போதைப்போதனுப்பிக்கொண்
டிருக்கும்படியாக நியமனம்" என்று ஸ்ரீகார்யதுரந்தரர் எழுதியிருந்தார். பிறகு
அனுப்பின நூல்களையெல்லாம் கடாக்ஷித்தருளி அநுக்ரஹித்த ஸ்ரீமுகம்.—
...மாமயும் பொன்னேபோல்

"ஸ்ரீஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதித்யாதி பிருதாலங்க்ருதாநாம் ப்ரதிவா... மத்தகஜ பயங்கர கண்டீரவாணாம் ஸ்ரீமதாம் அண்ணங்கராசார்யாணாம்.......... வா... ப்ரதிவாதக்ரந்தஜாலம் அதிகதம். ஸ்ரீமதாசார்யவர்யாணாம் கடாக்ஷபாத்ராஞ்... அபவத். ஸர்வம் ஆநுபூர்வ்யா கடாக்ஷிதவந்த: மஹாகுருவராஸ் தே ஆநந்ததுந்திலங்... ஸ்வாந்தாஸ் ஸந்த ஏவம் ப்ரசசம்ஸு:—பஹு ஸுதர்க்க ஸச்சாஸ்த்ராநுஸாரி ப்ர... மாண புஞ்ஜ மஞ்ஜுளம் ஸஹ்ருதய ரஸிக ஸுஹ்ருத்ரஞ்ஜக நிரதிசயாச்சர்யசைலீப்ரர்... கும்பித வாக்மணிமாலாலங்க்ருதாந் தர்சநாவஸரேஷு நவம் நவம் அத்யுத்ஸாஹ... ஜநகாந் விவித விசித்ர விஷய வர்க்காந் தர்சம்தர்சம் நிரவதிக துஷ்டிம் அலபந்த. ... கிஞ்ச ஏவமேவ யுஷ்மாகம் சேஷமாயுரபி நித்ய நிரவத்யகைங்கர்யோபயுக்ததே... ஹாரோக்ய தநதாந்ய ஸம்ருத்திசாலி பூயாதிதி ஸ்ரீரங்கநாயிகாஸமேதம் ஸ்ரீரங்கநாத... பரப்ரஹ்ம புந:புந: ப்ரார்த்தயே இதி". என்பதாக.

113. இந்த ஸம்ஸ்க்ருத வாக்யங்களின் கருத்தைச் சுருக்கம்—தேவரீரெழுதியுள்ள... வாத க்ரந்தங்களெல்லாம் சாஸ்த்ர ப்ரமாண உபபத்திகள் மலிந்தவை யென்றும் எத்தனை தடவை வாசித்தாலும் ஆராவமுதமாய் விளங்குகின்றனவென்றும் ஸகல ரஸிக பண்டிதர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றனவென்றும் ஆண்டவன் ஆனந்தம் பொங்கி ஸாதித்ததாக. நம்முடைய க்ரந்தங்களுக்கு ஒரு மதிப்புரை தந்தருளவேணுமென்று நாம் அபேக்ஷித்ததில்லை, எதிர் பார்த்ததுமில்லை. *துர்விஜ்ஞாநஸ்வஹ்ருதய மஹோ தைவமத்ர ப்ரமாணம்* (பாதுகாஸஹஸ்ரே.) என்று தேசிகனருளிச்செய்தபடி எம்பெருமானுடைய திவ்யஸங்கல்பமே யடியாகத் தோன்றிய ஸ்ரீமுகமிது என்பதில் ஸந்தேஹமுண்டோ?

114. இப்படிப்பட்ட ஸ்ரீமுகங்களையும் புகழுரைகளையும் பெறுதற்குக் கடல் சூழ்ந்த மண்ணுலகில் மற்றொருவர் பாக்கிய முடையரோ? *கோரமாதவஞ் செய்தனன் கொலறியேன்* யானே தவஞ்செய்தேன் * என்மதிக்கு...விண்ணெல்லாமுண்டோ விலை* மலக்கு நாவுடையேற்கு மாறுளதோ இம்மண்ணின் மிசையே* என்று ஆழ்வார்களும், * இல்லையெனக்கெதிரில்லையெனக்கெதிரில்லையெனக்கெதிரே* ப்ரபஞ்ச ப்ரஸித்தப்ரபந்தப்ரவக்தா விரிஞ்சிப்ரபஞ்சே மதந்ய: கவி:க:?* என்று ஆசாரியர்களும் சில ஸமயங்களில் தம்மையுமறியாமல் பேசியிருப்பனவுள. அப்படி நாமும் பேசி நிற்கும்படியாக பகவத் பாகவத மஹாக்ருபையைப் பெற்றிருக்கிறோமென்றால் வயிறுருகி முடிய வேண்டுவது தவிர வேறுண்டோ இவர்க்கு?

115. இப்படி யெழுதுமவற்றால் நமக்கு அபூர்வமான வொரு பெருமையுண்டாய் விட்டதாக நாம் நினைத்து இவற்றை யெடுத்துக்காட்டுகிறோமல்லோம். ப்ராமாணிகர்களின் நிலை இப்படிப்பட்டதென்பதையும், உலகில் அவரவர்கள் எழுதும் க்ரந்தங்களைப்போன்றவையல்ல நம்முடைய க்ரந்தங்கள்—என்பதையும், நாமெழுதும் விஷயங்களுக்கு மறுப்பெழுதத் தோன்றினால் வீணான அதிக்ஷேபபரிஹாஸ வார்த்தைகளை அறவேவிட்டிட்டு விஷய விமர்சத்தளவிலே நிற்கவேண்டுமென்பதையும் இந்த தூஷகரின் மனத்தில் ஊன்றவைக்கவே இவ்வளவு எழுத நேர்ந்தது.

116. ப்ரதீபர் எழுதுகிறார் (பக்கம் 7ல்) "இப்படி தென்னாசார்யர்களால் ஸத்ஸம்ப்ரதாயத்திற்கு விளைந்த மஹத்தான கெடுதலை ஸ்வாமி தேசிகன்கண்டு மிகவும் நொந்து ரஹஸ்யங்கள் முதலான அநேக க்ரந்தங்களை யருளிச்செய்து ப்ராசீந பத்... தியை ப்ரதிஷ்டாபநம் செய்தருளினர்" என்று. கேண்மின்; அந்த ரஹஸ்யங்களி... ஒன்றாகிய ஸாரார்த்த ஸங்க்ரஹரஹஸ்யத்தினால் தேசிகன் செய்தருளின ப்ரா... பத்ததிப்ரதிஷ்டாபநத்தை இத்தையிடத்தில் விரிவாகக் காட்டினோம். பக்தி முதலா... வற்றை உபாயமென்று நினைக்கவும் தகாதென்று தேசிகன் ஸ்தாபித்த ஸத்ஸம்... தாய பத்ததியை தூஷிக்கவன்றோ இந்த ப்ரதீபச்சுவடி யெழுந்தது. இதற்கு நேரா... விடையிறுக்க இவர்க்கு 15 நாள் அவதியிட்டிருக்கிறோம். [அவசிஷ்டம் பரிஷ்...

117. ப்ரஸங்காத் சில தத்துவங்களை இங்கு உணர்த்துவோம். தேசிகன்ரங்
கள் அபரிமிதங்களாகையாலே அவற்றை எவரும் பூர்த்தியாகப் பார்ப்பதில்லை.
ராபி ரஹஸ்யங்கள் திவ்யப்ரபந்த ஜடிலங்களாகையாலே, திவ்யப்ரபந்த வைதேசி
களும் தத்வித்வேஷிகளுமான நவீனர்கள் அவற்றைக் கண்ணெடுத்தும் பார்ப்ப
லை. பார்த்தாலும் இவர்களுக்குத் தலைவேதனையாயிருக்குமேயொழிய ஒன்றும்
பாது. விவேகியானவொருவர் தேசிகரஹஸ்யங்களையெல்லாம் ஒரக்ஷரம்விடா
ஆநுபூர்வியாக அதிகரிப்பரேல்—நாலாயிரத்தையும் வியாக்யானங்களோடு
னர்ந்தவொரு ஸதாசார்யரிடத்தில் கேட்பரேல் "நவீனர்களின் கோலாஹலங்கள்
வும் ஸர்வதா அஸ்தாநே, அஸ்தாநே, அஸ்தாநே" என்று சொல்லிக் கையுதறி
மாட்டாரோ? ஸ்ரீபாஷ்யத்தில், லகுபூர்வபக்ஷம் மஹாபூர்வபக்ஷம் போன்ற
ங்களை முன்பின் விமர்சியாமல் ஸேவித்துக்கொண்டு போமவர்கள் பூர்வ
க்ஷார்த்தமாக ஸ்வாமி உபந்யஸிப்பதையெல்லாம் ஸித்தாந்தார்த்தமாகவே
ண்ணி விடுவதுண்டு. அதுபோல தேசிகரஹஸ்யங்களிலும் ஆபாதப்ரதீதி
காண்டு பார்த்து முடிவான அபிப்ராயம் வரையில் சென்று காணகில்லாதே
டையிலேயே ஒருமுடிவு செய்துகொண்டு ஸம்ப்ரமிப்பவர்கள் நவீநர்கள். ஸார
ாகச் சிலவிடங்களை மட்டும் இங்கெடுத்துக்காட்டுவோம். ரஹஸ்யத்ரயஸாரத்தில்
ாத்யோபாய சோதநாதிகாரத்தில் "உபாஸநாதிகள் ஸ்வரூபவிருத்தங்களென்று
லர் சொல்லுவர்கள்; இதுவும் ப்ரபத்தியை ஸ்துதிக்கைக்காக அதிவாதம் பண்ணி
ர்களாமித்தனை" என்று தொடங்கிப் பலபக்கங்கள் எழுதிக்கொண்டுபோகிறார்.
அதன் முடிவு என்னவென்பதைப் பாராமலே "இதெல்லாம் ஸ்ரீவசநபூஷணாதிகளை
ரமரியாகக் கண்டிப்பவையான திவ்யஸூக்திகள்" என்று கொக்கரிப்பர்கள்.
முடிவாக என்ன சொல்லி நிற்கிறாரென்பதைப் பார்ப்பாரில்லை. என்ன முடித்
ிருக்கிறாரென்னில், "இவை *அகிஞ்சநஃ அநந்யகதிஃ* என்றிருக்குமதிகாரிக்கு
ஸ்வாதிகார விருத்தங்களே" என்று முடித்திருக்கிறார். மற்றொரு விஷயமும்
தெரிவிக்கிறேன். சிறுரஹஸ்யங்களுள் ரஹஸ்யமாத்ருகையென்று ஒரு ரஹஸ்யம்.
இதன் ஆரம்பத்திலும் அவஸாநத்திலும் தேசிகன்தானே சில விசேஷங்கள் தெரி
விக்கிறார். முடிவில் இரண்டு ச்லோகங்கள்; "பஹுச்ருதைஃ இயம் அதநா—
உதீரிதா ரஸாவஹா பவதி ரஹஸ்யமாத்ருகா". என்றொரு ச்லோகம். பஹுச்
ருதர்களிடத்திலே கேட்ட அர்த்தங்களையிட்டு இந்த ரஹஸ்யமாத்ருகை செய்யப்
பட்டதென்கை. அந்த பஹுச்ருதர்கள் எவ்விடத்திலுள்ளவர்களென்பதை
அடுத்த ச்லோகத்தினால் விவரிக்கிறார்—"ரஹஸ்யமாத்ருகா ஸேயம் வேங்கடேச
விபச்சிதா, விசுத்ததேசிகவதா ரங்கதாம்நி வ்யலிக்ய்த" என்று. "ரங்கதாம்நி"
என்பதனால் ஸ்ரீரங்கத்திலுள்ளாரென்று காட்டப்பட்டது. தமக்கு விசேஷணமாக
"விசுத்ததேசிகவதா" என்று இட்டிருப்பது விசேஷித்து நோக்கத்தக்கது. ஸ்ரீரங்கம்
சென்று அங்கே ஸம்ப்ரதாயசுத்தியுள்ள ஒரு ஆசார்யரைப்பெற்றதாக இதனால்
ஸ்பஷ்டமாகக் காட்டினாராயிற்று. இந்த ரஹஸ்யத்தின் ஆரம்பத்திலும் "ஏரார்
சுருதியொளியாலிருள் நீக்கும் தாராபதியனையார்தாம்—இப்படி யெம்முள்ளத்துள்
ளெழுதினர்" என்று பாசுரம் பாடிவைத்தார். இதில் திருமந்த்ரம் த்வயம் சரம
ச்லோகமாகிற ரஹஸ்யங்கள் மூன்றினுடையவும் ஸாரமான பொருள் ஒருவகை
யான விவாதத்திற்கும் இடமில்லாதபடியும் தூஷணகந்தமில்லாதபடியும் வெகு
அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் ஸங்க்ரஹமாகச் சொன்ன அர்த்தங்
களை மேலே ரஹஸ்யத்ரயசுளகமென்னும் ரஹஸ்யத்திலே, மூலமந்த்ராதிகாரம்
த்வயாதிகாரம் சரமச்லோகாதிகாரமென்று மூன்று அதிகாரங்களிட்டு விவரிக்கிறார்.
இது பிள்ளைலோகாசார்யருடைய ரஹஸ்யமே வேற்றுருக்கொண்டதாகக் காணப்
படும். [illegible] முன்னோர்மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல

போற்றுவம்'' (நன்னூல்) என்ற கணக்கிலே பிள்ளைலோகாசார்யருடைய ஸ்ரீஸூக்திகளும் பலபல புகுந்து ஸேவை ஸாதிக்குமிதில் இதிலிருந்து ஒரு விசேஷார்த்தமே இங்கெடுத்துக் காட்டுவோம். சரமச்லோகத்தில் 'மாமேகம்' என்ற விடத்தில் ஏகசப்தத்தினால் ஸ்வீகாரத்தில் [ப்ரபத்தியில்] உபாயத்வம் தவிர்க்கப் படுகிறதென்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசார்யர் ஸாதிக்கிறார். நவீனர்கள் இதை ப்ரபலமாக ஆக்ஷேபிக்கிறார்கள். ஏகசப்தமானது, தேவதாந்தரங்களைப் பற்றாமல் என்னை மாத்திரம் பற்று என்று காட்டுமேயொழிய உபாயமாக விதிக்கப் பட்ட ப்ரபத்தியில் உபாயத்வத்தை எப்படி தவிர்க்கும்? என்று (நவீனர்கள்) வலிதாக ஆக்ஷேபிக்கிறார்கள். தேசிகனோவென்னில் இந்த ரஹஸ்யத்ரய சுளகத்தில் சரமச்லோகாதிகாரத்தில் ஏகம் என்கிற பதத்திற்கு மூன்று நிர்வாஹங்கள் காட்டுகிறார். "ஏகசப்தம்—ப்ரபத்தியின் கர்த்தாவினை தன்பக்கலிலும், தன்க்ரியையான ப்ரபத்தியிலும் பிறக்கும் ப்ராதாந்ய புத்தியை பாரதீநத்வாதிகளாலே கழிக்கிறது'' என்பது மத்யஸ்த நிர்வாஹமாகக் காட்டப்பட்டது. ஸாரஸாரத்திலும் ஏகசப்தார்த்த விவரணத்தில் இங்ஙனமேயுள்ளது.

118 இன்னமும் கேளீர். விரோதபரிஹாரமென்று ஒரு ரஹஸ்யம். இது மிகவும் விபுலமானது. திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் சரமச்லோகத்திலும் தோன்றும் விரோதங்களைப் பரிஹரிக்கவே இந்த ரஹஸ்யமியற்றப்பட்டது. இதில் (92) லக்கமுள்ள விரோத பரிஹாரமாவது—"இங்கு வ்ரஜ என்று ப்ரபத்தியை உபாயமாக விதியாநிற்க 'மாமேகம் சரணம்' என்றும் 'த்தேகோபாயதாயாச்ஞா' என்றும் 'த்வமேவோபாயபூதோ மே' என்றும் சொல்லுகை கூடுமோவென்னில், ப்ரதாநமான ஸித்தோபாயம் ஸஹஜகாருண்யாதி விசிஷ்டனாய்க்கொண்டு பரஸ்வீகாரம்பண்ணாநிற்கிறவன் ஒருவனுமேயாகையாலும் அவனுடைய வசீகரணார்த்தமாக விதிக்கப்படுகிற வ்யாஜமாத்ரமான ஸாத்யோபாயத்தில் ப்ராதாந்யவிவக்ஷை பண்ணுகை உசிதமல்லாமையாலும் இப்படி வ்யபதேசிக்க விரோதமில்லை''— என்பது. இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை ஆழ்ந்து நோக்குமிடத்து பிள்ளைலோகாசார்யருடைய ஸித்தாந்தந்தான் தேசிகனுடைய ஸித்தாந்தமாக நிகமிக்கப்படுகிறதென்பது நிச்சயமாகத் தேறும். ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாத்யோபாய சோதநாதிகாரத்தில் "ஸ்ரீவிஷ்ணுசித்த வாதிஹம்ஸாம்புவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்'' என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. இதில் விஷ்ணுசித்தரென்றது எங்களாழ்வானை; வாதிஹம்ஸாம்புவாஹரென்றது ஸ்வாசார்யரான கிடாம்பியப்புள்ளாரை. இவர்க்குப் பிறகு வரதாசார்யரென்றது யாரை? என்று விமர்சிக்க வேணும். நடாதூரம்மாளுக்கு வரதாசார்யரென்று திருநாமமுண்டாகையாலே அவர் விவக்ஷிதராயிருக்கலாமென்னில், எங்களாழ்வானுக்கு சிஷ்யரும், வாதிஹம்ஸாம்புவாஹர்க்கு ஆசார்யருமான அவரை நிர்தேசிக்க வேண்டிய ஸ்தானத்தில் நிர்தேசியாமல் அஸ்தானத்தில் நிர்தேசிப்பது அஸமஞ்ஜஸமாகும். தவிரவும், ஸமாஸத்தில் *அல்பாச்தரம் பூர்வம்* என்ற வ்யாகரணாநுசாஸநப்படி 'விஷ்ணுசித்த வரதாசார்ய வாதிஹம்ஸாம்புவாஹ' என்றே சொல்லவேணும். அப்படி சொல்லாமல் வாதிஹம்ஸாம்புவாஹர்க்குப் பிறகு வரதாசார்யரென்றது யாரை? என்று விமர்சிக்கவே வேண்டும். அஹோபிலமடாஸ்தானத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் இஞ்சிமேடுஸ்வாமி தாமிட்ட வியாக்கியானத்திலே இந்த விமர்சத்தைச்செய்து 'தேசிகன் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்தபோது ரஹஸ்யார்த்த சிக்ஷைக்கு உசாத்துணையிருந்தவர் வரதராஜப்பெருமாளென்பவர்; அவர் வடக்குத்திருவீதிப்பிள்ளையின் பித்ருவ்ய பௌத்ரர்' என்று எழுதியிருக்கிறார். இது மடஸம்ப்ரதாயத்தில் மானத்தினெழுதப்பட்டதென்றும், அந்த வரதாசார்யர் வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு ஸம்பந்தப்பட்டவரல்லரென்றும், ஸ்ரீரங்கவாஸியான வேறொருவரென்றும் மநித்ரயத்தார் சொல்லுகிறார்களாம். இந்த வரதாசார்யர் நடாதூ

acharya.org

...ளல்லர்' என்பது நிச்சிதம். ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆசார்யரிடத்தில் தேசிகன் ...ஹஸ்யார்த்த சிக்ஷைபெற்றது அவருடைய உக்தியினாலேயே அப்ரகம்ப்யமாயிரா ...ன்றது. அவரால் தாம் விசுத்ததேசிகவானாய் ஆனதாக முக்தகண்டமாயருளிச் ...சய்கிறார் தேசிகன். விசுத்ததேசிக ஸம்பந்தம் பெருதகாலத்தில் சில அர்த்தங்களை ...திவாதமென்று கருதியிருக்கலாம். அதனாலென்ன? அதிவாதமென்னப்பட்ட ...ர்த்தவிசேஷங்களே பரமசாஸ்த்ரார்த்தமாகத் தம் திருக்கையினாலேயே எழுதப் ...ட்டுள்ள விடங்கள் அபரிமிதமாகக் காண்கையாலே நவீனர்களாதரிக்கு மர்த்தங் ...ளுக்கு தேசிகஸூக்த்யநுக்ரஹ லேசமுமில்லையென்று அறுதியிடக்கடவது.

119. தேசிகரஹஸ்ய ஸூக்திகளை ஆழ்ந்து ஆராயுமிடத்தில் அவரிடத்திலே இரண்டுவகையான ஸ்வபாவங்கள் அவசியம் அறியப்படும். இதை ஸப்ரமாணமாக நிரூபிக்கிறோம் கேண்மின்; இதராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் தமக்கு அநபிமத ...மாகத் தோன்றுமிடங்களில் அவற்றை யநுவதித்து இவை அநுபபந்நங்கள் என்று ஸஹஸா எழுதிவிடுவது ஒரு ஸ்வபாவம். ஸர்வஜ்ஞர்களான அந்த ஆசார்யர்கள் அநுபபந்நமாக ஒருகாலுமெழுதமாட்டார்களென்று உடனே தோன்றிவிடும்; அப் போது என்ன செய்வரென்றால், முன்பு அநுபபந்நமென்று எழுதின ஸ்ரீஹஸ்தத் தினாலேயே "உபபந்நம்" என்று எழுதிப்போவர்; இது மற்றொரு ஸ்வபாவம். அநுப பந்நமென்றதையே உபபந்நமென்று எழுதினால் நிரூபகர்கள் ஏசுவர்களேயென்று நினைத்து "அந்த ஆசார்யர்களுக்கு இப்படி திருவுள்ளம்" என்று ஸ்ரீமத்கம்பீர மாக எழுதிவிடுவர். இதற்குப் பலவிடங்கள் காட்டலாம்; இரண்டொரு இடங்களே காட்டுவோமங்கு. ப்ரபத்தியை அதிகாரி விசேஷணமாகவும் அநுமதிமாத்ரமாகவும் சித்த ஸமாதாநார்த்தமாகவும் சைதந்யக்ருத்யமாகவும் அருளிச்செய்தவற்றை அநுபபந்நமென்று எழுதி யுள்ள விடங்கள் ப்ரதீபர்க்குத் தெரியுமே. அப்படி யெழுதினதற்கு அநுதபித்து எழுதியுள்ளவிடம் கேண்மின்; ஸாரஸாரத்தில் சரம ச்லோகாதிகாரத்தில் "இப்படி விதேயமான ப்ரபதநத்தை சிலர் அதிகாரி விசே ஷணம், ஸம்பந்தஜ்ஞாநமாத்ரம், ஸித்தோபாயப்ரதிபத்திமாத்ரம், அநிவாரணமாத் ரம், அநுமதிமாத்ரம் அசித்வ்யாவ்ருத்திமாத்ரம், சைதந்யக்ருத்யம், சித்தஸமாதாநம் என்றாற்போலே சொல்லுமது இவ்விதிக்கும் இத்தை விவரிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் இவற்றுக்குச் சேர்ந்த உபபத்திகளுக்கும் பாஷ்யகத்யாதிகளுக்கும் நிபுணஸம்ப்ர தாயங்களுக்கும் அநுகுணமாக வேண்டுகையாலே *நானே நானாவித நரகம்புகும் பாவம் செய்தேனென்று நிற்கிற நம்மை ஈச்வரன் ரக்ஷிக்கிறவிடத்தில் *வந்தடைந் தேனென்று நாம் பண்ணுகிற அல்பமான வசீகரணயத்நம் *அதுவுமவனதின் னருளே* *இசைவித்தென்னை* இத்யாதிகளிற்படியே அவன்தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜமாத்ரமன்றோவென்று ஸித்தோபாய ப்ராதாந்யாநு ஸந்தானத்தில் அவர்களுக்கு தாத்பர்யம்" என்றெழுதப்பட்டுள்ளது. இந்தத் தெளிவு சிலஸமயங்களில் பிறவாதொழிவது முக்குணத்திரண்டவையகலாமையினா லென்று தத்வதர்சிகளின் தெளிவு. மற்றோரிடமும் காட்டுகிறோம். விரோத பரிஹாரரஹஸ்யத்தில் மூலமந்த்ராதிகாரத்தில் —"பக்திபோலே ப்ரபத்தியும் சோதித மான உபாயமாய் நின்றது; இது பகவத்ப்ரஸாதவ்யவஹிதமாகையாலே ஸாக்ஷாத் பலஹேதுவன்று என்னுமிடமும் வ்யாஜமாத்ர மென்னுமிடமும் பக்த்யாதிகளுக்கும் துல்யமாயிருந்தது. இப்படியிருக்க, ப்ரபத்தியை உபாயமன்றென்று விசேஷித்துச் சொல்லுகிறவர்களுக்கு தாத்பர்யமென்னென்னில்; சாஸ்த்ரங்கள் பக்தியைப் போலே ப்ரபத்தியையும் உபாயமாக விதிக்கச்செய்தேயும் இவ்வுபாயத்தினுடைய அநுஷ்டாநசரீரத்தைப் பார்த்தால் பரந்யாஸப்ரதாநமாய் நீயே உபாயமாக வேண்டு மென்று அபேக்ஷிக்கிறபடியே பரஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு உபாயாந்தர ஸ்தானத்திலே நிற்கிற ஈச்வரனுடைய நிரபேக்ஷோபாயத்வம் இவ்வித்யைக்கு வேத்யாகாரமாய் நிற்கையாலே வித்யாந்தரங்களிற்காட்டில் இவ்வாசியைப்பற்ற

ப்ரபத்தியை விசேஷித்து உபாயமன்றென்றார்கள்"—என்றுள்ளது தேசிகஸூக்தி. இது நல்ல தெளிவுடன் எழுதினதென்று நன்கு தெரிகிறதல்லவா? *முத்திறத்து வாணியத்திரண்டிலொன்றாதே பரமஸத்வத்தோடே அருளிச்செய்கிற புடைகள் இப்படிப்பட்டவையன்றோ. இப்படி தெளிந்தெழுதின அர்த்தத்தையேயன்றோ ந்யாஸதிலகத்தில் "ஹேது ர்வைதே விமர்சே பஜநவதிதரத், கிந்த்வநுஷ்டாநகாலே வேத்யஸ் த்வத்ருபைவதோ விவித:, இஹ ஸதுபாயதாந்யாநபேக்ஷா" என்கிற ச்லோகத்திலும், ந்யாஸஸித்தாஞ்ஜநத்தில்*இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா. ஸ்வஹேதுத்வதியம் ருந்தே* இத்யாதிகளிலும் பொருந்தவைத்தார்.

120. ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸித்தோபாய சோதநாதிகாரத்தின் முடிவில் அற்புதமானதொரு ச்லோகம் காண்மின்; "விச்ராம்யத்பிருபர்யுபர்யபி திவாநக்தம் பஹிர்தர்சநை: அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாயரஹிதை ரத்யாபி நாலக்ஷித:" இத்யாதி. அஸ்மதாசார்ய ஸம்ப்ரதாயத்தில் ஜனிக்கப் பெறாதவர்களாலே எம்பெருமான் இன்னமும் காணப்பட்டிலன்—என்கிறார் இந்த ச்லோகத்தில். இதைக் கொண்டு அவ்யுத்பந்நர்களான நவீநர்கள் கொக்கரிப்பது என்னவென்றால், "தேசிக ஸம்ப்ரதாய ரஹிதை ரத்யாபி நாலக்ஷித:" என்று தேசிகனே துணிந்து ஸாதிக்கிறார் பாருங்கள்" என்று கூத்தாடுவர்கள். மேலே மூன்றாவது பாதத்தில் என்ன சொல்லியிருக்கிறார்? இதன் கீழே பலகாரிகைகள் இயற்றி என்ன சொல்லியிருக்கிறார்? என்பதைச் சிறிதும் காணாமலே ஆகாச தாண்டவம் செய்கிறபடி; *ஸ்வப்ராப்தேஸ் ஸ்வயமேவ ஸாதநதயா ஜோகுஷ்யமாணச் ச்ருதௌ* என்பது மூன்றாவது பாதம். பகவத் ப்ராப்திக்கு பகவான் தானே ஸாதநம் என்று அறிய மாட்டாதவர்களையே ஸதாசார்ய ஸத்ஸம்ப்ரதாய ரஹிதர்களென்று முறையிட்டிருக்கிறார். கீழுள்ள காரிகைகளிலும்—"ப்ரஸாதநஸ்யோபாயத்வே சாஸ்த்ரீயேபி பலம் ப்ரதி, கர்த்ருத்வாவ்யவதாநாத்யைஸ் ஸித்தோபாய ப்ரதாநதா;...ப்ரபத்தேர் லக்ஷணே மந்த்ரே விதௌ வாக்யாந்தரேஷு ச, பாஷ்யாதௌ ஸம்ப்ரதாயே ச உபாயத்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்." என்று உண்மை விளக்கப்பட்டது. ஆகவே, சிறுபான்மை அப்ரஸங்கஹ்ருதயத்வமும் பெரும்பான்மை ப்ரஸங்கஹ்ருதயத்வமும் பொலியவிற்கு யிவர்படியை நவீநர்கள் நிர்ணயிக்க அநதிகாரிகள்.

अनाघ्रातावद्यप्रथितगुरुवर्योक्तिनिवहे कदाचिद्वैमत्यप्रकटनपरोऽप्येष गुरुराट् ।
पुनस्तत्त्वालोकप्रमुदितमनास्सन्ननुशयात् विधून्वन् कौटिल्यं व्यलिखदुपपत्तीरपि खलु ॥

यादृशीभिरुपपत्तिभिर्महाचार्यवर्यमणयो गिरो ददुः ।
तादृशीः प्रथमतत्त्वजानता दूषिताः तदनु भूषिताश्च ताः ॥

121. தேசிகன் ஸ்யூத்த்ய கலஹத்தில் மிகவும் அஞ்சினவராயிருந்தும், ஸ்யூத்த்யர்களால் ஸம்ப்ரதாயத்திற்கு நேர்ந்த கோரமான விப்லவத்தை ஸஹிக்க மாட்டாதவராய் நம்மாழ்வார் முதலானவர்களாலே ப்ரவர்த்திதமான வைதிக ஸித்தாந்தத்தை ஸம்ரக்ஷிக்கவேண்டி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலான ரஹஸ்ய க்ரந்தங்களையும் ஸ்தோத்ரபாஷ்யம் சதுச்ச்லோகீ பாஷ்யம் முதலான மற்றும் க்ரந்தங்களையு மருளிச்செய்து தத்வஹித மர்யாதையை அசைக்க வொண்ணாதபடி ஸ்தாபித்தருளினர் என்று ப்ரதிபரால் எழுதப்படுகிறது. இப்படி யெழுதுகிற விவேகியாயிருந்தால் முக்கியமாக வொரு காரியம் செய்யவேண்டும்; ஸ்யூத்த்யர்களாலே இன்ன அர்த்தம் இன்ன க்ரந்தத்திலே இன்ன விதமாக க்ஷேபம் செய்யப்பட்டது; அந்த க்ஷேபத்தைத் தேசிகன் இன்ன க்ரந்தத்திலே இன்னின்ன ஸூக்திகளாலே இன்னவிதமாக நிரஸித்தார் என்று உலக முணர்ந்து கொள்ள

ின் திருவடி நிழலிலே வாழ்ந்து அவர்களது திவ்ய ஸூக்திகளாலேயே ஸத்
ம்ப்ரதாயார்த்த தத்வங்களை யுணரப் பெற்றவர் தேசிகன் என்பது அவருடைய
ந்தங்களினாலேயே கீழே நிரூபிதம். இன்னமும் பரச்சத க்ரந்தங்களில் பரக்க
ரூபிதம். ஸாரநிதி பாஸ்கராதிகளில் விசிஷ்ய நிரூபிதம். அவ்வளவு தூரம்
ாகவேணுமோ? "பக்தி முதலானவை உபாயமல்லவென்று கூறினவர்கள்
ம்ப்ரதாயகுத்ருஷ்டிகள்" என்று கூசாமல் எழுதியுள்ளவிவர் 'பூர்வபக்ஷார்த்த
ன்னது, ஸித்தாந்தார்த்த மின்னது' என்பதை அணுமாத்ரமும் அறியகில்லாதவ
ரன்பது ஜகத் ப்ரஸித்தமாய்விட்டபடியால், சிலரால் ஸம்ப்ரதாய க்ஷேபம்,
லரால் ஸம்ப்ரதாய ரக்ஷை என்று ப்ரஸ்தாவிக்கவும் இவர் அநதிகாரி—என்று
டிந்தது. 15 நாள் அவதியிட்டோமிவர்க்கு. இரண்டு மாதமுமாயிற்றே.

122. பெரியவாச்சான் பிள்ளை தேசிகனை விட நாற்பதைம்பது வயது
த்தவராயிருந்தும், தேசிகனுடைய லோகவிலக்ஷணமான திறமையைக் கண்டு
யந்து ப்ரபத்தி விஷயத்தில் நிஷ்கல்மஷமான நிர்ணயத்தை அவரிடத்திலே பெற
ரும்பிச் சென்று ப்ரார்த்திக்க, தேசிகன் அந்த ப்ரார்த்தனைக்கிணங்கி ந்யாஸ
விம்சதியைச் சுருக்கமான வியாக்யானத்தோடு பணித்தார் என்று ப்ரதிபரால்
எழுதப்படுகிறது. "ஸ்ரீராமானுஜர் நஞ்சீயரிடம் வந்து ஸ்ரீஸூக்தத்தின் உண்மைப்
பொருளை எனக்கு உணர்த்தவேணும் என்றுவேண்ட, அதன்மேல் அவர்
ஸ்ரீஸூக்தபாஷ்யமிட்டருளினர் என்றும், திருக்குருகைப்பிரான் பிள்ளான் நடாது
ரம்மாளை நோக்கி ஸ்ரீபாஷ்யார்த்ததத்வத்தை எனக்கு நீர் எளிதாக வுணர்த்தவேணு
மென்று கேட்டுக்கொள்ள, அதற்கிணங்கி அம்மாள் தத்வஸாரமருளிச் செய்தாரென்
றும்" இப்படி பலகதைகள் எழுதிவைத்திருப்பாருமுளர். அவற்றிலே இதுவுமொரு
கதையாக இருக்கத்தகுந்ததே. பெரியவாச்சான்பிள்ளையின் திவ்யஸூக்திகளில்
இல்லாத விஷயம் ந்யாஸவிம்சதியில் இன்னது இருக்கிறது; இதிலுள்ள இன்ன
விஷயத்தினால் பெரியவாச்சான்பிள்ளை தெளிவுபெற்றார்; அதற்கு முன்னே பெரிய
வாச்சான்பிள்ளைக்கு இருந்த கலக்கம் இன்னபடிப்பட்டது—என்று விளக்கிக்
காட்ட சக்தியற்றவிவர் எதிலும் ப்ரதிஜ்ஞாமாத்ரத்தாலே பரமானந்தமடைவரேல்
அடைபட்டுமே. ந்யாஸதசக ந்யாஸதிலகங்கள் எப்படி தென்னாசார்ய ஸம்ப்ரதாய
ஸாரஸர்வஸ்வமாக விளங்குகின்றனவோ, அப்படியேதான் ந்யாஸவிம்சதியும்
விளங்குகின்றதென்று நம்முடைய வியாக்யானத்தினால் உலகமெல்லாம் உள்ள
படி யுணர்ந்திருக்கின்றது. இதற்குமேல் இங்கு வக்தவ்யமொன்றுண்டு; அதுவும்
கேண்மின். தேசிகன் பல க்ரந்தங்களை ஸ்வேச்சையாலே எழுதினார்; சில
க்ரந்தங்களைப் பிறருடைய வேண்டுகோளுக்காகவும் எழுதினார். வேண்டுகோளுக்
காக எழுதப்பட்ட க்ரந்தங்களில் அந்த வேண்டுகோளைத் தெரிவியாமலிருப்பது
கிடையாது. தத்வஸந்தேச மென்கிற ரஹஸ்யம் ஸ்வயமாக எழுதினதன்று,
ஒருவனுடைய வேண்டுகோளுக்காக எழுதினதென்பதை அதன் முடிவில் "இதமிதி
நிகமாந்த தேசிகேந ப்ரதிஸமதிச்யத மாதவாத்மஜஸ்ய" என்கிற ச்லோகத்தினால்
காட்டிவைத்தார். இது விளங்கவே தத்வ ஸந்தேச மென்று பெயரிட்டார். அதற்
கடுத்த ரஹஸ்ய ஸந்தேசமும் சிஷ்யப்ரார்த்தனையினால் செய்யப்பட்டதென்று
முடிவில் ச்லோகத்தாலே காட்டி வைத்தார். விரோத பரிஹார மென்கிற பெரிய
ரஹஸ்யமும் சிலருடைய கட்டளையினாலிட்ட தென்பதை "ஸதாம் ஆஜ்ஞாம் வஹதா"
என்று முடிவில் ச்லோகத்தாலே காட்டினார். முநிவாஹந போகம் ஒரு விரக்தர்
வேண்ட அவருக்காகச் செய்ததென்பர்; இதையும் அதன் உபக்ரம ச்லோகத்தில்
"விரக்த தோஷாய" என்பதனால் காட்டினார். ரஹஸ்யரத்நாவளீ ஹ்ருதயத்தின்
முடிவிலும் காணலாகும். ந்யாஸவிம்சதியில் இப்படி ஏதாவது காட்டியிருப்ப
தூண்டோ? உபக்ரமத்திலுமில்லை, உபஸம்ஹாரத்திலுமில்லை. முடிவில் வ்யவருணத்
ஸ்வீயாய ச்ரேயஸே வேங்கடேச:" என்று ஸாதித்திருக்கையாலே ஒருவருடைய

நியமனத்தாலன்றிக்கே விவேகிகளின் நன்மையைக்கோரித் தாமாகவே செய்த
தென்று காட்டப்பட்டிருக்கிறது. இந்த விம்சதியின் வியாக்கியானம் தொடங்கும்
போது "ஸ்வயம் வ்யாக்ர்ய தேஸ்மாபி: திங்மாத்ரேண ஸநிச்சயா" என்று காண
கிறது இதில் 'ஸநிச்சயா' என்றதைக்கொண்டு பெரியவாச்சான்பிள்ளை இச்சித்த
தாகச் சொல்லுகிறேரமென்னில், தாராளமாகச் சொல்லுக. ஆசார்யர்களின்
விருப்பத்தை சிஷ்யர்கள் நிறைவேற்றுவதுண்டாகையாலே இதை ஆக்ஷேபிக்க
ஆவச்யகதையில்லை. தேசிகனுடைய நாமாவளியில் 'ஸத்பதாச்ரித:' என்ற
விடத்திலும் ஸச்சப்தார்த்தம் பெரியவாச்சான் பிள்ளையே யென்னப் பொருந்தும்.

123. அஷ்டாதச ரஹஸ்யங்களை யருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர்
ஸாக்ஷாத்தாகவே தேசிகனையாச்ரயித்து அவரிடத்தில் ஸ்ரீபாஷ்ய மதிகரித்து அவர்
விஷயமாகச் 'சீரொன்று தூப்புல்' என்கிற தனியனை ஸாதித்தாரென்று ப்ரதிபரால்
எழுதப்படுகிறது. தத்வஜிஜ்ஞாஸுக்கள் இங்கே சில கேள்விகள் ப்ராமாணிகரீதி
யில் கேட்கக் கூடியவையுண்டு. லோகாசார்யர் தேசிகனிடம் ஸ்ரீபாஷ்ய மதிகரித்த
பிறகு அஷ்டாதச ரஹஸ்யங்களருளிச் செய்தாரா? அவையருளிச் செய்தபின்பு
ஸ்ரீபாஷ்யமதிகரித்தாரா? அஷ்டாதச ரஹஸ்யங்களுள் சேர்ந்த தத்வத்ரய தத்வ
சேகராதிகள் ஸ்ரீபாஷ்யார்த்த ஜடிலங்களா யிருக்கையாலே ஸ்ரீபாஷ்யம் ஸேவித்த
பின்பே ரஹஸ்யங்களருளிச் செய்தாரென்னவேணும். அப்போது, அந்த ரஹஸ
யங்களிலுள்ள அர்த்தங்களெல்லாம் தமக்கு ஸ்ரீபாஷ்யம் ஸாதித்த தேசிகனிடம்
கேட்டவையே என்றதாகத் தேறுமாதலால் தேசிகபக்தர்களுக்கு அவை உபாதே
யங்களே யாகவேணும். தூஷிக்க நியாயமில்லை 'முன்பு ஒருவிதமான ஸ்ரீபாஷ்ய
ஜ்ஞான மிருந்தது; அதைக்கொண்டு ரஹஸ்யங்களெழுதிவிட்டார்: பிறகு
யதார்த்த ஜ்ஞான ஸம்பாதனத்திற்காக தேசிகனை யாச்ரயித்து ஸ்ரீபாஷ்ய மதி
கரித்து, முன்பெழுதின ரஹஸ்யங்களைத்தாமே திருத்திக்கொண்டார்" என்கிறே
மென்னில், அப்போது, பிள்ளைலோகாசார்யருடைய ரஹஸ்யங்களை தேசிகன்
கண்டித்து விட்டாரென்று இவர்களேயெழுதுவது அசட்டுத்தனமாகும். இப்படி
விகல்பாஸஹங்களான விதத வசநராசிகளால் ஏடுபூரிப்பது அபஹாஸ்யமத்தனை.
'சீரொன்று தூப்புல் தனியன் பிள்ளை லோகாசார்யர் ஸாதித்தது ஸத்யமாயிருந்
தால் தேசிகன் அவர் திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்ஜீவித்தா ரென்பது ஸத்ய
மானதென்று தேறும். அந்தத்தனியன் அமைந்திருக்கிற ரீதியை நோக்குங்கால்
ஆசார்யன் சிஷ்யனைக் கொண்டாடிச் சொல்லுகிற வார்த்தை யாகவன்றே
வுள்ளது சிஷ்யன் ஆசார்யனை ஸ்துதிக்கும் சைலி அணுவளவுமில்லையே. பாட்
டைச் சொல்லிப் பார்க்கலாமே. மேலும், ஸ்ரீபெரும்பூதூர் முதலான ஸ்தலங்களில்
அந்நாள் தொடங்கி இந்நாள் வரை அவிச்சின்ன லேசமாக ஸ்ரீலோகாசார்யருடைய
திருவடி நிலைகளைத் திருவோணந்தோறும் சிரோ பூஷணமாகப் பெற்றுவருகிற
தேசிகன் ஸ்வாசார்யரிடத்தில் 'சீரொன்று தூப்புல் தனியனைப் பெற்றதும்
சிஷ்யபாவோசிதமேயென்று உலகமுகந்துகொள்ளும்.

124. பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாரான ஆசார்ய ஹ்ருதய
கார் மாத்திரம் தேசிகனிடத்தில் மிகவும் பொறாமை கொண்டிருந்தாரென்று
அவரே கவித்வத்தில் தேசிகனோடு போட்டியிட்ட தனல் மிகச்சிறந்த காவ்யம
பாதுகாஸஹஸ்ரம் அவதரித்தது என்றும் ப்ரதிபரால் எழுதப்படுகிறது. பாது
ஹஸ்ராவதார தத்வம் முதலான பரச்சத க்ரந்தங்களிலே ஸர்வாத்மநா அஸம்ப
ப்ரலாப மிதுவென்று பலகால் நம்மால் கண்டிக்கப்பட்டொழிந்த விதனை நிர்லஜ்
கள் மீண்டு மீண்டுமெழுதிக் கொண்டிருப்பதனல் பாமரர்களும் மோசமடையா
'ப்ரக்ருயாதாராம் பரிஷதி ஸகாம் காரயித்வா ப்ரதிஜ்ஞாம்' என்கிற பாதுக
ஹஸ்ரஸ்லோகத்துக்கும் பாதுகாஸஹஸ்ரவ்யாக்யா நோக்திகளுக்கும் ஆசார்ய

ற்கும் நேர்விருத்தமாக இவர்கள் எழுதிவருவது இவர்களுக்குள்ளேயே பரஸ்பர
பாஹதமாக எழுதப்பட்டு அவற்றால் வத்ஸ கபித்த ந்யாயேந மாண்டு முடிந்து
பானது. இங்கே ஒரு மருமம் யாவரும் கவனிக்கத் தக்கதுண்டு; கவித்வத்தில்
சிகனோடு போட்டியிட்டவர் இன்னாரென்று அவருடைய திருநாமத்தைக் குறிப்
ட வேண்டாமா? "லோகாசார்யா ராஜ:" என்று, திருநாமத்தைத் தொடாமலே
ழுதப்பட்டிருக்கின்றது. இதன் மருமத்தை விவரிப்போமிங்கு. "லோகாசார்யா
ஜோ வாதிகேஸரீ" என்று இதற்குமுன் பலகால் எழுதிவந்தார்கள். (அதாவது)
ள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாரான / வாதிகேஸரியென்பவர் தேசிக
னோடு கவித்வத்தில் போட்டியிட்டதாக எழுதிவந்தார்கள் 'லோகாசார்யருடைய
திருத்தம்பியாரும் வாதிகேஸரியென்பவரும் வெவ்வேறு வ்யக்திகள், லோகாசார்ய
ருடைய திருத்தம்பியார் அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரென்பவர் நைஷ்
டிகப்ரஹ்மசாரி; வாதிகேஸரியென்பவர் அழகிய மணவாளச் சீயரென்னும் உத்த
மாச்ரமி. இவர்களுக்குள் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது என்கிற தத்துவத்தை
நாம் பல நூல்களில் வெளியிட்டபடியால் திருநாமத்தை யெழுதக்கூசி 'லோகா
சார்யா ராஜ:' என்றும் 'ஆசார்யஹ்ருதயகர்த்தா' என்றும் எழுதத் தலைப்பட்
டார்கள். பரமஸாத்விகாக்ரேஸரான எந்த ஆசார்யரும் கவித்வத்தில் ஊன்றினது
மில்லை, அதில் ஸ்பர்த்தை செய்ய வந்ததுமில்லை. தேசிகன் ஸ்ரீரங்கத்திற்கெழுந்
தருளின காலத்திலே லோகாசார்யரோ அவருடைய திருத்தம்பியாரோ அவ்விடத்
திலெழுந்தருளியிருந்ததுமில்லை. அவர்களின் திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்
ஜீவித்த வரதாசார்யாதிகளான சில மஹான்களின் திருவடி நிழலிலே தேசிகன்
ஒதுங்கியிருந்து "ரங்காஸ்தானே ரஸிகமஹிதே ரஞ்ஜிதா சேஷசித்தே வித்வத்ஸேவா
விமலமனஸா வேங்கடேசேந" என்றருளிச் செய்தாரத்தனை. ஸ்ரீவைஷ்ணவாசார்யர்
களோடு ஸ்பர்த்தை செய்யும்படியான தௌர்ஜந்யம் (அதவா) அநாத்மகுணம்
முன்னம் தேசிகனிடத்தில் கிடையாது. கோயிலில் ஆசார்யகம் செய்த மஹா
சார்யர்களிடத்தில் இது ஸம்பாரம் கிடையாது. அறுநூறு ஆண்டுகட்கு முன்பு
நடந்த செய்தியை உள்ளபடியுரைக்க வேண்டுமாகில் ப்ராமாணிகமானதொரு
க்ரந்தத்தை முன்னிட்டு உரைக்கவேணும். கடல் மங்கலம் வீராச்சியென்பவர்
கல்பித்ததென்று இவர்களே நிலைநாட்டியிருக்கிற மூவாயிரப்படியொன்றுதானே
இப்படிப்பட்ட அபத்த அஸம்பத்தங்களுக்கு ஆகரம். இனிமேல் அதை ப்ரமாண
மென்றுகூற இவர்களுக்கு வாயெழாது. ஆகவே தொலைந்ததிந்த துர்வாதம்.

125. தேசிகன் "ஆபாதசாந்திமதுராந் புநராஸ்மதீயாந் அந்யோந்யவைர
ஜநநீ விஜஹாத்வஸூயா" என்று ஆசாஸித்திருக்கையாலே அக்காலத்திலிருந்த
ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் யாவரும் அவரிடத்தில் பொறுமை கொண்டிருந்ததாக
ஸ்பஷ்டமாகிறது—என்று அஸூயா பிண்டமான ப்ரதீபர் எழுதியுள்ளார்.
ஸ்ரீரங்கவாஸத்தையிழந்து வெளிநாட்டிலே குடியேறி மிகவிஷண்ணராய் அலற்று
கிற தேசிகன் [அபீதிஸ்தவத்திலே] "நிரஸ்தரிபுஸம்பவே க்வசந ரங்கமுக்யே
விபோ! பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய" என்று வாய்வெருவியிருப்பது
பேர்க்கவும் பேராமலிராநின்றது. ஸ்ரீரங்கவாஸிகளான மஹான்களைப் பரஸ்பர
ஹிதைஷிகளென்று கொண்டாடி, அன்னவர்களின் திருவடிநிழலிலே தாம் வாழ
விரும்பியிருப்பதை உள்ளபடி வெளியிட்டிருக்கின்ற தேசிகன் ஸ்ரீவைஷ்ணவ
ஆசார்யர்களை அஸூயாவிஷ்டர்களாகக் கூறினாரென்கை ப்ராமாணிககோஷ்டியில்
விலைசெல்லுமதன்று. இங்கு "அஸூயா விஜஹாது" என்றால் போதுமே;
அஸூயைக்கு 'அந்யோந்ய வைரஜநநீ' என்கிற விசேஷணமிட்டது எதற்காக?
இதன் பொருள் யாது? அஸூயையினாலே யாருக்கும் வைரமுண்
டானதாகச் சொல்லுகிறார்? என்று கேட்டால் வாய் திறக்கவல்லரோவிவர்?
இந்தப் பகுதியின் விரிவு அந்யத்ர காணத்தக்கது.

நான்காவது மயூகம் முற்றிற்று.

126. மணவாளமாமுனிகள் ஸ்ரீபாஷ்யத்திலே ஆழ்ந்த ஞானம் ஸம்பாதிக்க
விரும்பி அதற்கு ஸ்வஸம்ப்ரதாயத்தில் ப்ரவசநாதிகாரிகளில்லாமையாலே தேசிக
னுடைய ப்ரசிஷ்யரான கிடாம்பிநயினாரை யாச்ரயித்து அவரிடத்திலே ஸ்ரீபாஷ்
யத்தையதிகரித்தார்—என்று ப்ரதிபரால் எழுதப்படுகிறது. இந்த ப்ராமாணிகர்
களுக்குப் பரமத்ருப்திகரமாகச் சொல்லுகிறோம். முற்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவா
சார்யர்களுக்குள் ஒருவகையான பேதமும் இருந்ததில்லை. அக்காலத்தில் நடா
தூரம்மாள் ஸ்ரீபாஷ்யப்ரவசநத்தில் நிகரற்று விளங்கினர். அவர் காஞ்சிப்ராந்தத்
தில் ஜனித்திருந்தும் வித்வத்புத்ரராக அவதரித்திருந்தும் தமக்கு த்ருப்திகரமாக
ஸ்ரீபாஷ்யம் சொல்லுவாரைக் காஞ்சீ ப்ராந்தங்களில் காணாமல் “தினவடங்கச்
சொல்லுவர் திருவெள்ளறைச் சோழியர்” என்று கேள்விப்பட்டு எங்களாழ்
வானைத் தேடித் திருவெள்ளறைக்குச் சென்று அங்கே பலஸம்வத்ஸரங்கள்
வாழ்ந்து லோகோத்தரமான குருசுச்ரூஷைகளைச் செய்து ஸ்ரீபாஷ்யமதிகரித்தா
ரென்று ஸர்வஸம்ப்ரதிபந்நமாகச் சொல்லப்பட்டு வருகிறது. எங்களாழ்வான்
உச்சிக்குடுமி ஸ்ரீவைஷ்ணவமரபில் சேர்ந்தவரென்பது யாவருமிசைந்தது. அந்த
மரபினர் இப்பூதலத்தின்கண் எங்கும் மலிந்துள்ளார்கள். இவர்களுடைய வகுப்
பிலும் மண்டயத்தாரென்பாருடைய வகுப்பிலும் எந்தஇடத்திலும் எந்த நாளிலும்
தென்கலை ஸம்ப்ரதாயஸ்தர்கள்தவிர வடகலை ஸம்ப்ரதாயஸ்தர் ஒருவர்கூடக்
காணக்கிடையாரென்பது நிர்விவாதமானது. அந்த எங்களாழ்வானிடமிருந்து
தான் ஸ்ரீபாஷ்யதீபம் உலகில் ஒளிமல்கி வருகின்றது. அவரையே தெய்வமாகக்
கொண்டிருந்த அம்மாளும், அவரையே பரதெய்வமாகக் கொண்டிருந்த அப்புள்
ளாருர், அவரையே மஹாதெய்வமாகக் கொண்டிருந்த தேசிகனும் வேறு ஸம்ப்ர
தாயஸ்தர்களாக இருந்தார்களென்றால் இதை ஒருவராவது நம்ப முடியுமோ? இந்த
வினாவுக்கு விடையிறுத்தல் அஸாத்யமே யென்று தெரிந்துகொண்டவிந்த ப்ரதிபர்
எங்களாழ்வானையே வடகலையென்று எழுதிவிட்டோமானால் சங்கடமேயில்லை
யென்று துணிந்து மேலே (பக்கம் 65ல்) எங்களாழ்வானும் வடகலையே யென்று
எழுதியுள்ளார். “ஸூர்யன் சீதகிரணன் தான், கடல் வெந்நீர்தான், ஸூர்ய
க்ரஹணம் ஏகாதசியன்று தான், சந்த்ரக்ரஹணம் த்வாதசி யன்றுதான்” என்
றெழுதிக்கொண்டே போவாரைத் தடை செய்வாருண்டோ? “எங்களாழ்வான்
பெரிய வாச்சான்பிள்ளை முதலானவரெல்லாரும் வடகலைதான்” என்று எழு
தினவிவரே “உடையவரும் கூரத்தாழ்வானும் சேர்ந்து நிர்ப்பந்தப்படுத்தி வட
கலையாரைத் தென்கலையாராக மாற்றிவிட்டார்களென்று அதே பக்கத்திலே
யெழுதுகிறார். ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் மனம் போனபடியே
யெழுதுகிற விவர்க்கு மணவாளமா முனிகள் ஸ்ரீபாஷ்யமதிகரித்தவிடம் எதுவா
யிருந்தாலென்ன? தேசிகனிடத்திலேயே அதிகரித்தாரென்றாலும் அவருடைய
திருக்குமாரரிடத்திலே அதிகரித்தாரென்றாலும் இது ஆக்ஷேபிக்கத் தக்க விஷயமே
யன்று. உடையவர் ஒரு ஆசார்யரிடத்திலேயே ஸகலார்த்தங்களும் க்ரஹிக்கலா
மாயிருக்க, ஒவ்வொரு வரிடத்திலே ஒவ்வொன்று க்ரஹித்து ‘பஞ்சாசார்யபதாச்ரித:’
என்று விருது பிடித்தது எதற்காக வென்று கேட்டால் இவர் விடை சொல்
வல்லரோ? யாதவப்ரகாசரிடத்திலே வாசித்த வேதாந்த க்ரந்தங்களை ஆளவந்தா
போல்வாரிடத்திலே வாசிக்கக் குறையுண்டோ? அபார்த்தம் சொல்லுகி
அவரிடத்திலேயே மீண்டு மீண்டும் சென்று சேர்ந்து எதற்காக வாசித்தாரென்
கேட்டால் இதற்குத்தான் விடையிறுக்கவல்லரோ இவர்?

127. மாத்ஸர்யம் முற்றின இக்காலத்திலுங்கூட ஸ்ரீபாஷ்ய காலக்ஷே
பத்தைத் தென்கலையார்கள் வடகலையாரிடத்தே செய்வதும், வடகலையார்க

தென்கலையாரிடத்தே செய்வதுமான நடத்தையைக் கட்கூடாகக் காண்கிறோம். வடகலை ஸம்ப்ரதாயத்தில் ப்ரமுகராயிருந்த ஸ்ரீமத் திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யர்ஸ்வாமி கோயிலில் வாழ்ந்து ந்யாய வேதாந்த வித்வச்சிகாமணி யாயிருந்த ஸ்ரீமத் எம்பார் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி பக்கலிலேயே ஸாமாந்ய சாஸ்த்ரங்களை மாத்திரமன்றிக்கே அத்யாத்ம சாஸ்த்ரங்களையும் அதிகரித்தாரென்பது ஸர்வவிதிதம். அவர் அஹோபில மடத்து ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவராயிருந்தும் இதற்காகவே மடத்தாரால் விலக்கப்பட்டிருந்தார். மட ஸ்வாமியிடம் வந்து காலக்ஷேபம் பண்ணாமல் தென்கலையாரிடத்தில் பண்ணினாரென்கிற காரணங் கொண்டே அவரை மடத்தில் சேர்க்காமலிருந்தார்களென்பது உலகமறிந்தவிஷயம்.

128. இங்ஙனே பல விஷயங்களுண்டு. இதாநீந்தந விஷயம் கிடக்கட்டும். ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு மாச்சரியமென்பது இப்படியிருக்குமென்றே அறியாதிருந்த காலம். ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் பரஸ்பரஹிதைஷிகளாய் ஒத்து வாழ்ந்த காலம். அப்போது, மணவாளமா முனிகள் கிடாம்பி நயினாரிடத்தில் ஸ்ரீபாஷ்யம் கேட்டாரென்பது கொண்டு என்ன ராஜ்யம் பிடிக்கப்பார்க்கிறாரோ விவர் அறிகின்றிலோம். கிடாம்பிவம்சத்தவர்கள் அத்யாபி தென்கலையாயிருந்து கொண்டே ஸ்ரீரங்காதி திவ்ய தேசங்களில் மரியாதைகளை யநுபவித்து வருகிறார்கள் ஒன்றான தேசிகனே தென்கலை ஸம்ப்ரதாயஸ்தரென்றும், வடகலை ஸம்ப்ரதாய கந்தமுமறியாதிருந்தவரென்றும் பல பல ஆதாரங்களால் அசைக்க வொண்ணாதபடி ஸ்தாபிக்கப்பட்டிருக்க, அதில் வாய் திறக்கமாட்டாதே அநுபயுக்தங்களான வேறு விஷயங்களிலே காடு பாய்வது என்னே!

129. தேசிகனுடைய காலத்தில் உண்மையில் ஸம்ப்ரதாயபேதமே யிருந்ததில்லையென்றும், எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் பற்றியிருந்த ஸம்ப்ரதாயம் ஒன்றேயென்றும் அது தேசிக ப்ரதிஷ்டாபிதமான தென்றும் இவ்விதமாகவும் ப்ரதிபர் எழுதுகிறார் இதில் ஓரக்ஷரமும் தூஷணீயமன்று. ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் கைப்பற்றியிருந்த ஸம்ப்ரதாயம் ஒன்றே யென்பதிலும் ஸம்ப்ரதாயத்தில் பேதமிருந்ததில்லை யென்று சொல்லுவதிலும் யாருக்கும் விப்ரதிபத்தியிருக்க நியாயமில்லை. அந்த ஸம்ப்ரதாயம் தேசிக ப்ரதிஷ்டாபிதம் என்றால் உண்மையான ஸ்ரீவைஷ்ணவர்கள் கரகோஷம் செய்யவேண்டுமே யொழிய இதில் வைமத்யங் கொள்ள விஷயமேது? அவரிடத்தில் எந்த யோக்யதைக்குக் குறையிருந்தது? குறையொன்றுமில்லாத அவ்வாசார்ய சிகாமணி நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அவதரித்தது எவ்வளவோ பாக்யமல்லவா? சில விஷயங்களில் அபிப்ராய பேத மிருப்பது வித்வான்களுக்கு ஸஹஜமானது. அந்தரீதியில் தேசிகனுக்குச் சில விஷயங்களில் அபிப்ராய பேதமிருந்த தென்றே வைத்துக் கொள்வோம். வாதிகேஸரி முதலான சில ஆசாரியர்களுக்கும் அப்படி சில அபிப்ராய பேதங்களிருந்தன வென்பதை அவரவர்களின் நூல்களிலே காணுகின்றோம். அதுகொண்டு அவர்களை வேறு ஸம்ப்ரதாயஸ்தர்களென்று கொள்ளுவாராருமில்லை.

130. இக்காலத்தில் தென்கலை வடகலை யென்கிற பேதம்மாத்திரமேயா தோன்றியிருக்கிறது. வடகலைக்குள் முநித்ரய ஸம்ப்ரதாயம், மடஸம்ப்ரதாயம், மன்ஸாலகட்ட ஸம்ப்ரதாயம், ஸோமாசியாண்டான் ஸம்ப்ரதாயம்...என்று எத்தனையோ பேதங்களைக் கண்டு வருகிறோமல்லவா? இந்த பேதம் நாமமாத்திரத்திலல்லவே; அர்த்தங்களிலும் அநுஷ்டானங்களிலும் எத்தனையோ பேதங்களைப் பார்த்து வருகிறோமே. மடத்தாருக்கு மோக்ஷம் கிடையாதென்று முநித்ரயத்தாரெழுதி யிருப்பதையும், முநித்ரயத்தாருக்கு மோக்ஷம் ஏழேழு ஜன்மத்திலும் கிடையாதென்று மடத்தாரெழுதி யிருப்பதையும் பேர்க்க முடியாதபடி பார்த்து வருகிறோமே. ஏதாவது, இவர்களுக்குள் ஸம்ப்ரதாயபேத வ்யவஹாரமில்லையே. இவ்விதமாகவே ப்ராசீந காலத்திலும் சில ஆசார்யர்களுக்குள் ஸ்வல்ப அபிப்ராய பேத மிருந்தவளவால் ஸம்ப்ரதாய பேதமென்கைக்கு அவகாச லேசமுமிருக்கில்லை

acharya.org

பேதம் எப்போது உண்டாயிற்று? எதனாலுண்டாயிற்று? என்று விமர்சிக்கு
மளவில் கோவில் சண்டைகள் முற்றினதிலிருந்துதான்—என்று ஏற்கெனவே
ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரதிபச் சுவடியிலும் (பக்கம் 16ல்) ஒருவாறு
இது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த சண்டை எப்போது முற்றிற்று? யாரால்
முற்றிற்று என்பதும் புதிதாக நிர்ணயிக்கப்படவேண்டிய விஷயமன்று. தேசி
காதிகளின் காலத்தில் கோவில் சண்டைக்கு ப்ரஸக்தியில்லாமையால் ஸம்ப்ரதாய
பேத மென்கைக்கு அவகாசமில்லாமலே போயிற்று. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய
மென்கிற ஒரே வ்யவஹாரந்தான் நிகழ்ந்து வந்தது. அந்த ஸம்ப்ரதாயம் தேசி
கனால் ப்ரதிஷ்டாபிதமாயிற்று என்று இவரெழுதுவதைக்கண்டு சில அவிவேகி
களின் உள்ளத்தில் உத்வேகமுண்டாகக்கூடும். க்ரந்தங்களிலே ப்ரவேசமில்லாமல்
கோவில் சண்டைகளில் மாத்திரமே உழன்று கிடப்பவர்கள்தாம் தேசிக
த்வேஷத்தையும் லோகாசார்ய வரவரமுநி த்வேஷத்தையும் பாராட்டி நிற்பர்கள்.
கோவில் சண்டையிலே சிறிதும் கண்வைக்காமல் ஆசாரியர்களின் அரிய பெரிய
க்ரந்தங்களிலே மாத்திரம் கண்வைக்குமவர்கள் நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்பது
தவிர வேறொன்று மறியார்கள். தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளைப் பார்க்கிற
போது 'இவ்வளவு மஹோபகாரம் வேறு யாரேனும் செய்திருப்பதுண்டோ!'
என்று வியக்கும்படியாயிருக்கும். ஈட்டையும் ஸ்ரீவசநபூஷண ஆசார்யஹ்ருதயாதி
களையும் காணும்போது 'இப்படிப்பட்ட திருவாக்குகள் அவதரியாவிடில் இவ்வுலகில்
இருளும் மருளும் தவிர வேறு என்னவுண்டு?' என்றே சொல்லும்படியாகிறது.
மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளை யநுபவிக்க இழிந்தாலோ 'இந்த
மஹாசார்யரொருவர் அவதரியாவிடில் மற்ற ஆழ்வார்களுமாசாரியர்களும் அவதரித்
தும் இவ்வுலகம் பாழ்பட்டேயிருக்குமன்றோ' என்றே தோற்றவிருக்கும். இக்
தோற்றங்களில் ஒவ்வொன்றும் ஸமப்ரதானமே.

131. அவ்வோ ஆசாரியர்கள் செய்தருளின திவ்ய க்ரந்தங்களை ஆர அமர
அநுபவிக்க பாக்யமில்லாதவர்கள் க்ராந்திக விஷயஜ்ஞாந தரித்ரர்களாய் அர்த்த
மில்லாத அபிமானத்தினால் ஆசாரியர்களைப் பங்கிட்டுக்கொண்டு தூஷிப்பதும்
பூஷிப்பதுமாயிருக்கிறார்கள். ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை தேசிகன் ஒருவர்தாம்
ப்ரதிஷ்டாபநம் செய்தாரென்று ஒருவர் கூறினாலும், நம்பிள்ளை பிள்ளை லோகா
சார்யர் மணவாள மாமுனிகளே பிரதிஷ்டாபநம் செய்தார்கள் என்று மற்றொருவர்
சொன்னாலும், தசோபநிஷத்பாஷ்யகாரரான ரங்கராமாநுஜ ஸ்வாமியே ஸூஷ்
ப்ரதிஷ்டாபநம் செய்தாரென்று இன்னொருவர் சொன்னாலும் உண்மையான
ஸ்ரீவைஷ்ணவர்கள் காது குளிரக் கேட்டுக்கொண்டிருப்பர்களே யல்லது ஆக்ஷே
பிக்க நெஞ்சிலும் நினையார். *ராமாநுஜதயாபாத்ரமென்று ஒரு நவீந ச்லோ
கத்தைக் கல்பனை செய்துகொண்டு கோவில்களில் சண்டையை யுண்டாக்
வளர்த்தது அனேகவிதமான க்ஷேபங்களுக்கு ஆஸ்பதமாயிற்று—என்
பரமார்த்தத்தை யுணர்த்தியவிடத்து இதற்கு நேர்நின்று ருஜுவான விடை கூ
மாட்டாமல் அத்யந்தம் அநுபயுக்தங்களை யெல்லாம் எழுதிக்கொண்டு போவது
அஸமஞ்ஜஸம்.

132. தேசிகனுக்கு உள்ள மஹிமைகளை இல்லை செய்வார் ஆரோ
முளரோ? இவரறிந்தது அல்பம்; நாமும் நமருமறிந்தது அநல்பம். அந்
மஹிமையைக் கொண்டு நாம் என்ன செய்து விடலாம். நியாயாலயத்தில் ஒருவ
உந்நதபதவியில் நியமிக்கப்படுகிறார். நியமிக்கப்பட்டவருடைய யோக்யதை நி
மித்தவர்க்குத் தெரியும். அவரையொத்த யோக்யதையுடையவர், அவரின்
மேம்பட்ட யோக்யதையுடையவர் இன்னாரிருக்கிறாரே என்று சிலர் சொல்
கொண்டிருந்தால் இதற்கு ஏதேனும் லாபமுண்டோ? நியமித்த அதிகாரியான
[illegible]

யத்தையுண்டே, அவரை ஏன் பதவியில் அபிஷேகம் செய்திருக்கக் கூடாது?' என்று
சொல்லிக்கொண்டு திரிவதனால் காசுக்கு லாபமுண்டோ? நம்பெருமாள் திருவுள்ள
முகந்து ப்ரதமபூஜ்ய பதவியில் நியமிக்கப் பெற்றவர் மணவாளமாமுனிகள் என்று
அப்ரகம்ப்யமாகத் தீர்ந்தபிறகு மற்றையோருடைய யோக்யதைகளைப் பன்னிப்
பன்னிப் பேசுவதனால் அணுவளவேனும் லாபமுண்டோ?

133. 'ராமாநுஜாபாத்ரம் சொல்லக்கூடாது' என்று ப்ராமாணிகர்கள்
ஆக்ஷேபிப்பதானது தேசிக த்வேஷத்தினாலன்று. தேசிகனுடைய தனியனைவிட்டு
ஸர்வஜநாதரணீயரான வேறொருவருடைய தனியனைச் சொல்ல முயன்றாலும்
ஆக்ஷேபமுண்டாகியே தீரும். அவ்வாக்ஷேபம் அவ்வாசார்யரிடத்து த்வேஷத்தின
லென்று ஒரு விவேகியும் நினையார். சில பாசுரங்களையும் ச்லோகங்களையும்
இரட்டித்துச் சேவிப்பதுபோல ஸ்ரீசைலேசத் தனியனை அதன் பெருமைக்குச்சேர
இரட்டித்து ஸேவிக்கவேணுமென்று ஒருவர் முன்வருகிறாரென்று வைத்துக்
கொள்வோம். ஸாத்விகர்கள் இதையும் ப்ரபலமாக ஆக்ஷேபிப்பவர்களே யொழிய
ஆமோதிப்பவர்களல்லர். இது ஸ்ரீசைலேசத்தனியனிடத்திலோ தத்ப்ரதிபாத்ய
ரான மாமுனிகளிடத்திலோ த்வேஷத்தினாலென்று ஒருவரும் நினையார். நவீந
நடத்தை யென்கிற காரணமொன்றுதான் எங்கும் ஆக்ஷேபத்திற்கு பீஜம். இதே
காரணத்தினால் தான் ராமாநுஜாபாத்ரம் அந்நாள் தொடங்கி இந்நாள் வரை
எங்கும் ஒரே ரீதியாக ஆக்ஷேபிக்கப்பட்டு ஒரே ரீதியாய் பங்கமடைந்து வருகிறது.
இதனால் தேசிகனுடைய அப்ரதிமமான ப்ரபாவத்திற்கு யாதொரு குறைவும்
ஏற்பட்டுவிடாது.

134. தேசிக ப்ரதிஷ்டாபிதமான ஸம்ப்ரதாயமே நிஷ்ப்ரதித்வந்த்வமாய்
நடந்து வருகையில், கலிகோலாஹலக்ரீடையாகச் சில ஆஸுரப்ரக்ருதிகள்
தோன்றி ஏற்கெனவே தேசிகனாலே கண்டிக்கப்பட்டொழிந்துபோன அபார்த்
தங்களை அபிநிவேச பலத்தாலே கைப்பற்றி அவற்றையே ஸித்தாந்தார்த்தமாக
கோஷித்துக்கொண்டு சாஸ்த்ரத்துக்கும் தைவத்துக்கும் அஞ்சாதவர்களாய்,
ஆங்காங்கு தேவாலயங்களிலே நடந்துகொண்டிருந்த தேசிக விக்ரஹாராதனத்
தையும் தேசிகபத்ய படனத்தையும் அடியோடு ஸஹியாதவர்களாய், தேசிக
னுடைய சிஷ்யகோடியில் சேர்ந்திருந்த மணவாள மாமுனியை தேசிகனுக்கு
எதிரியாக ஆக்கி ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் மஹத்தான க்ஷோபத்தையுண்டு
பண்ணிவிட்டார்கள் — என்று ப்ரதிபரெழுதுகிறார். இதெல்லாம் பாமரர்களும்
ஏமாறமாட்டாத வஞ்சக வார்த்தைகள். 'தேசிகனுடைய காலத்திற்குப் பிறகு
இடையில் நானூறு வருஷகாலம் இந்த நவீனர்கள் இருந்தவிடம் தெரியாது' என்று
நாம் ப்ராமாணிகமாக எழுதியிருப்பதற்கு பதிலுரைகளாம் இவை. பரமஸாத்விகர்
களான தேசிக பக்தர்களை ஆஸுரப்ரக்ருதிகளான தென்கலையார்கள் அநியாய
மாய் அடித்துத் துரத்திக் குளக்கரைக்கு ஓட்டி விட்டார்கள் என்கிற ரோதநமே
இந்த வாக்ய ராசியில் உறைந்து கிடக்கிறது. இந்த ப்ரதிபர் ப்ராமாணிகரும்
விவேகியுமாக இருந்தால் ஆஸுரப்ரக்ருதிகளாலே இப்போது பரிக்ரஹிக்கப்
பட்டிருக்கிற சாஸ்த்ர விருத்தங்களான அர்த்தங்கள் இன்னவை; இவற்றை
தேசிகன் இன்னின்ன க்ரந்தங்களிலே இன்ன விதமாகக் கண்டித்தொழித்தார்—
இத்யாதிகளை யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளும்படி நிரூபிக்கவேணும்.
அசக்த தூர்ஜந்துக்களால் ஆஸுரப்ரக்ருதிகளென்று தூஷிக்கப்படுகிற ஸத்ஸம்ப்ர
தாய நிஷ்டர்களாலே ஆதரிக்கப்படுகிற அர்த்தங்களேதான் தேசிகக்ரந்தங்களில்
[illegible] பிக்கப்பட்டிருப்பது இந்த
மலிந்து கிடக்கின்றனவென்று நம்மால் பல [illegible] செய்தாலும் மறுக்கமுடியாமல்
நவீனர்களுக்கு ஏழ்மபிறவி கோரமாகவும் [illegible] இன்றைக்கும் திவ்ய தேசங்களிலே தேசிகன்
வலிமை பெற்று விளங்குகின்றது. [illegible] இந்த நவீனர்கள்
[illegible] வருபவர்கள் தென்கலையார்களே [illegible]

தாடுகிற[illegible]கள். "நிஜமுகதோஷம் நிர்மலேஷ்வபி தர்ப்பணேஷு ஸமர்ப்பயந்தி ஹாஹந்த.

135. மணவாளமாமுனிகள் தேசிகனுடையசிஷ்ய கோடியில் சேர்ந்தவராகவே யிருக்கட்டும். இது மறுக்க வேண்டியதன்றென்று முன்பே சொன்னோம். "விசுத்த தேசிகவதா ரங்கதாம்நி" என்று (பாரா 117ல்) கீழேயெடுத்துக் காட்டிய ச்லோகத்தினால் விசுத்தாசார்யனை யாச்ரயித்து விசுத்த ஸம்ப்ரதாய நிஷ்டரான தேசிகனுடைய சிஷ்ய கோடியிலே மாமுனிகள் சேருவதற்கு என்னதடை? "ஸ்ரீதேசிகப்ரப்ரசிஷ்யம் ஸந்தம் வரவரமுநிம் தத்ப்ரதித்வந்த்விபதே க்ருத்வா" என்று இவரெழுதுவது ஒரிழவுமறியாமை. மணவாளமாமுனிகளை தேசிகனுக்கு எதிரியாக யாரும் ஆக்கவில்லை. பரமஸாத்விகாக்ரேஸரரானமாமுனிகள் தமக்குரிய ஸ்தானத்திலேதான் எப்போதும் ஒரேரீதியாக எழுந்தருளியிருக்கின்றார்.

136. ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை முதலான ஆசார்யர்களின் வருஷத்திருநக்ஷத்ர தினங்களிலே அவரவர்களின் தனியன்களைச் சொல்லி வருவது போல தேசிகனுக்கும் அவருடைய உண்மைத் தனியனாகிய "ஸ்ரீமாந் வேங்கடநாதார்யபத்யத்தைச் சொல்லியே வருகிறார்கள். மற்ற ஆசார்யர்களுக்குப்போல தேசிகனுக்கும் வருஷத்திருநக்ஷத்ரத்தன்று ஒருநாள் சொல்லக்கூடியதாக வாழித்திருநாமம் அக்காலத்திலேயே ஏற்பட்டதுண்டு; அது இந்த பாஸ்கரனில், கீழே வெளிவந்திருக்கிறது; இங்கும் அதைக் காட்டுவோம்—

கன்னிதனி லோணத்தில் கச்சிவந்தோன் வாழியே
 கலைபலவும் திருநாவில் கமழநின்றோன் வாழியே
மன்னுபுக ழுலகார்யன் மலரடியோன் வாழியே
 மதிளரங்கர் மலரடியின் மாண்புரைத்தோன் வாழியே
துன்னுபுக ழாழ்வார்கள் தூய்மை சொல்வோன் வாழியே
 தூயவர்சேர் அயிந்தைமெய்ய னடி பணிந்தோன் வாழியே
மின்னிலகுமணி மகுடத் தொப்பாரம் வாழியே
 வேதாந்த வாசிரியன் விரிபுகழும் வாழியே.

என்கிற இந்த வாழிதிருநாமமே ஆழ்வாராசாரியர்களுக்கெல்லாம் வாழி திருநாமம் ஸாதித்த ஆசிரியரால் ஸாதிக்கப்பட்டு அநுஸந்திக்கப்பட்டும் வந்தது. விச்வாமித்ரஸ்ருஷ்டியாய் வேறொரு வாழிப்பாட்டு கிளம்பிக் கோவில்களில் விவாதம் முற்றத் தொடங்கினபிறகே இந்த வாழிதிருநாமத்தின் அநுஸந்தானம் நிறுத்தப்பட்டதென்று பெரியார் சொல்லக் கேள்வி. மேலேகாட்டின வாழிதிருநாமத்தின் அமைப்பு எவ்வளவு அழகாக இருக்கிறது! என்ன செவிக்கினிய செஞ்சொல்! "வஞ்சப்பரசமயம் மாற்றவந்தோன்வாழியே" என்பது வைக்கோல்புரியையிட்டுக் கட்டுப்பது போலில்லையா? இலக்கணப்பிழை காட்டத் திருத்திக்கொள்வதும் செய்கிறீர்களே. "திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே" என்பது அஸம்பத்தமாக இல்லையா? திருமலைமால்திருமணியானது தேசிகனாக வந்ததேயொழிய, தேசிகன் திருமலைமால்திருமணியாய் வரவில்லையே. என் தாயார் ஆசார்யன் திருவடியடைந்தாளென்று எழுத நினைத்தவொருவர் "என் ஆசார்யர் தாயார் திருவடிகளையடைந்தார்" என்றெழுதியதுபோல ஏதுக்கு இப்படி அபத்தம் கோஷிக்கிறீர்களென்று கேட்டால் 'சேஷம் கோபேநபூரயேத்' தவிர வேறில்லையே. இதெல்லாம் எப்படியாவது கிடக்கட்டும். ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் மஹத்தான க்ஷோபத்தை விளைத்தவர்கள் இவர்களேயென்பது த்விபாந்தரம் வரைக்கும் சென்று முடிந்த வ்யவஹாரங்களினால் விளங்குகின்றதே.

137. இக்காலத்தில் வேதமும் வைதிகாசாரங்களும் ஆஸ்திக்யமும் மலினமாகியிருக்க, இந்த மாலின்யத்தைப் போக்கக்கூடிய வழியைச்சிந்திக்க வேண்டியதாகயிருக்க, அதை செய்யாதே சிலர் ப்ரதிபருண்டியை வகுபினர்க[illegible]

[illegible]

யெல்லாம் இந்த ப்ரதிபர்தாம் கண்டித்து விட்டதாகவும், அப்படி கண்டிக்கப்பட்ட
விஷயங்களையே இன்னமும் எழுதிக்கொண்டிருப்பதாகவும், ஸமீபகாலத்தில்
ராமாநுஜதயாபாத்ரபத்யசரித்ரமென்கிற பொல்லாத புஸ்தகத்தை வெளியிட்டிருப்பதாக
வும், அதில் [illegible]ர்களை மயக்குவதற்காக எழுதப்பட்டுள்ள பொய்யான விஷயங்
களைக் கண்டிப்பதற்[illegible] ஸாதுஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கித் தாம்
ப்ரவர்த்திப்பதாகவும் (ப்ரதீபம்—பக்கம் 9ல்) எழுதப்பட்டிருக்கிறது. இக்காலத்தில்,
வேதமும் வைதிகாசாரமும் ஆஸ்திக்யமும் நிலைகுலைந்து வருவது வாஸ்
தவமே. இதற்காகச் செய்யவேண்டிய முயற்சிகளைக் காஞ்சிகாமகோடி பீடாதிபதி
சங்கராசார்ய ஸ்வாமிகள் போல்வார் விசேஷமாகச் செய்து வருகிறார்கள். நாமும்
அவர்களோடொப்ப அபரிமிதமாகச் செய்துவருவது ஜகத்ப்ரஸித்தம். வைதிகர்
களுக்கும் ஆஸ்திகர்களுக்கும் விசேஷஸத்காரங்களைச்செய்து வேதமார்க்கம் லோப
மடையாமல் அபிவிருத்தியையடையும்படியான முயற்சிகளை யதாசக்தி செய்து
வருகிறோம். வைதிக வித்யாபிவிருத்திக்காகவும் ஆஸ்திகஸாத்விகப்ரோத்ஸாஹ
நார்த்தமாகவும் மாதந்தோறும் ஆயிரம்ருபாய்களுக்கு மேல் நாம் செலவு செய்து
வருவது ஸர்வஸஜ்ஜனவிதிதம். ஸமீபகாலத்தில் வெளிவந்த ஸத்ஸம்ப்ரதாயார்த்த
ஸாரநிதியின் முன்னுரையிலே [ஸ்வாபிப்ராய ப்ரகாசநே 9ஆம் பக்கத்தின் முடிவில்]
நாமே எழுதியுள்ள வாசகங்களுமிவை—

"வைதிகர்களிடத்திலே கௌரவாதிசயமும் ஆதராதிசயமும் ஹார்தஸ்நேஹ
முங்கொண்டு *ஐயமும் பிச்சையு மாந்தனையும் கை காட்டி யென்கிறபடியே
யதாசக்தி ஸத்காரத்தை இளமையிலிருந்தே செய்து வருகிறோம். விசேஷமாக
தனம் படைத்திலோமாகிலும் வைதிகர்களை ஸ[illegible]ரிப்பதில் ஆஸ்தையுடையோம்
யாம் என்பதை யறிந்து வைதிகர்களும் வித்வான்களும் நம்மிடம் ஸத்காரம்
வேண்டி அடிக்கடி யெழுந்தருள்வதும் அவர்களை நாம் பரமப்ரீதியோடு நமது
பாடசாலையிலே வைத்து ஆதரிப்பதும் ஸத்கரிப்பதும், அப்படி ஸத்காரம் பெறு
மவர்களில் இந்த நவீனவகுப்பினர்களே முக்கால்பங்கு என்பதும் உள்ளபடி
விஜ்ஞாபிக்கப்படுகிறது. இது உலகமறிந்த விஷயம். ப்ரக்ருத ஸம்ப்ரதாய
ப்ரதீபச்சுவடிக்கு முகவுரை தந்திருக்கிற மதுராந்தகம்ஸ்வாமி அடியேனிடம்
ஸத்காரம் பெறுமவர்களில் தலைவராவர்" . இத்யாதி.

138. ஆவச்யகமான விஷயங்களில் நம்முடைய க்ருஷி இடையறாது விளங்கி
வருகிறது. இந்த ஸஞ்சிகை வெளிவந்து உலகம் களித்து வாசிக்க நேரும்போது
அவரவர்கள் நமது க்ருஹத்திற்கு வந்து அங்கு எத்தனை வைதிகர்கள் எத்தனை
ஆஸ்திகர்கள் எத்தனை வித்வான்கள் கூடியிருக்கிறார்களென்பதையும் அவர்கள்
எப்படி ஸத்கரிக்கப்படுகிறார்களென்பதையும் ஒவ்வொருவரும் ப்ரத்யக்ஷமாகப்
பார்க்கலாம். இந்த பங்குனித்திங்களில் முதல் தேதியிலிருந்து முடிவு தேதிவரையில்
அஹோராத்ரமும் சதுர்வேத கோஷங்களும் ஆஸ்திக வைதிக ஸாத்விக ஸஜ்ஜந
ஸாது ஸமாராதனங்களும் எவ்வளவு நடக்கின்றனவென்பதைக் காண இந்த
ப்ரதிபர்க்கு பாக்யமில்லையாகிலும் காதுகுளிரக் கேட்கவும் பாக்யமில்லையோ.
இவர்தமக்கு வைதிகச்ரேணியில் அந்வயலேசமுமில்லாமையாலே நம்மிடத்தில் இவர்
ஸத்காரங்களை இழந்து கிடக்கவேண்டியதாயிற்று. *அபாக்யச்சத்ரஸஞ்சங்கே மயி
நாயாந்தி பிந்தவ:* என்று பரிதபிக்குமிவர் பரிதாபமுள்ளடங்காமல் *சோக
க்ஷோபே ச ஹ்ருதயம் ப்ரலாபைரேவ தார்யதே* என்ற கணக்கிலே ப்ரலாபங்
களைச் செய்து வருகிறார். அவனால் யாருக்கு என்ன ஹாநி?

139. ஸ்வாமி தேசிகன் பரமஸாத்விகராயிருக்கச் செய்தேயும் ஒப்பதிவிமத
நிரஸநம் செய்ய ப்ராப்தமாகும்போது நிர்தாக்ஷிண்யமாகவே தம்முடைய திரு
வாக்குக்களைச் சரமாரியாகப் பொழிகிறார். ஸச்சரித்ரரக்ஷையின் ஆரம்பத்திலே
"ப்ரஹராமி [illegible]" என்று மூர்க்கர்களை உதைபோட்டுக் கொலைத்து விடுகிறே
னென்கிற [illegible] [illegible] ஸ்ரீஸம்[illegible] [illegible]
[illegible]

